Digitization by Hindu-Heritage-Foundation of America (HHFA(USA))

சிவரகசியம்

நான்காம் அம்சம் சிவம் வெளிப்படுகிறது

இறைவனால் அருளப்பட்ட

சித்தம் சிவமயம்

ஞானதான அறக்கட்டளை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

CENTRE FOR SHAIVA STUDIES Puducherry

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

சிவாய நம:

சிவரஹஸ்யம்

நான்காம் அம்சம் - "சிவம்"

"மஹேதிகாஸம்"

இஃது மருவூர்
பிரம்ஹஸ்ரீ கணேச சாஸ்திரியார் அவர்களால்
மொழிபெயர்த்து வெளியிட்டது.

பெருங்குளம்,
செங்கோல் ஆதீனம் 103-ஆவது குருமகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச தேசிக சத்திய ஞான பரமாச்சார்ய சுவாமிகள்
ஜன்ம நட்சத்திர வெளியீடு.

ஆடி - பூரம் [22-07-2023]

வெளியீடு நாள் : 15-08-2023

110 ஆண்டுகளுக்குப் பிறகு மீள்பதிப்பும், வெளியீடும்

இறைவனால் அருளப்பட்ட சித்தம் சிவமயம் ஞானதான அறக்கட்டளை
மதுரை

சோபகிருது - ஆடி - 2023

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நூல் விவரங்கள் :

நூல் பெயர் : சிவரஹஸ்யம் - நான்காம் அம்சம்
'மஹேதிகாஸம்' பூர்வபாகம்

நூல்உரையாசிரியர் : மருவூர் - பிரம்மஸ்ரீ கணேச சாஸ்திரியார்

நூலின் வகை : சைவசமயம் / சித்தாந்த சாஸ்திரம்

© வெளியீட்டு உரிமை : நூலாசிரியர் சந்ததியினருக்காக
ஸ்ரீகணநாத நாயனார் நூலகம், திருச்சிராப்பள்ளி

மீள் பதிப்பு : சோபகிருது வருடம், ஆடி-பூரம் 15-08-2023

நூலின் அளவு : 1/8 டெம்மி பக்கங்கள் : 36+148=184

தாள் : 18.6 கி.கி. மேப்லித்தோ/எழுத்து: 12 புள்ளிகள்

படிகள் : 1000

© வெளியீடும் கிடைக்குமிடங்களும் :

சித்தம் சிவமயம் ஞானதான அறக்கட்டளை
மூவேந்தர் நகர் 2-வது வீதி,
விஸ்வநாதபுரம், மதுரை - 625 014.
செல்லிடப்பேசி : 98423-35085,
99521-58359, 98431-31353.

கோ.சி.ஆடலரசு
ஒருங்கிணைப்பாளர்-அறுபத்துமூவர் மாத இதழ்
7/120, மெயின்ரோடு, (SBI ATM எதிரில்)
கொட்டாரம்-629 703. கன்னியாகுமரி (மா)
செல்லிடப்பேசி : 89037-33537

நூல் அமைப்பும், பதிப்பும் : ஸ்ரீகணநாத நாயனார் நூலகம்,
39/22, கிருஷ்ணாபுரம், முதல்தெரு,
திருச்சிராப்பள்ளி-620 008.
செல்லிடப்பேசி : 99528-06121.
Email : gnanam.tcy@gmail.com

நூலின் விலை : நூலினைப் பெற்று, படித்து உணர்வதும், அதன்படி நடப்பதும், ஸ்ரீபார்வதி பரமேஸ்வரனின் திருவருளைப் பெற முயற்சிப்பதும் உண்மை விலையாகும்.

அச்சாக்கம் : ஆர்.ஜி.பிரிண்டர்ஸ், சின்னக்கடைத்தெரு,
திருச்சிராப்பள்ளி-2. போன் : 0431-2700417

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

ஸ்ரீ கணேசாய நம:

பொருளடக்கம்

அறக்கட்டளை அறிமுகமும் - பணிகளும்

முன்னுரை

வாழ்த்துரை

1. ஜைகிஷவ்யர் பிரார்த்தனை 01
2. சாம்பவர் மகிமை 05
3. சிலாத முனிவர் சரித்திரம் 09
4. நந்திகேசர் உற்பத்தி 14
5. நந்தீசர் சிவபெருமானைத் துதித்தல் 19
6. நந்தீசருக்குப் பட்டாபிஷேகம் - திருக்கலியாணம் 21
7. சண்டீச உபாக்யானம் 24
8. சண்டீச கணாபத்யதானம் 31
9. பிருங்கி கணாபத்திய பிரதானம் 34
10. பிருங்கிஸ்தவம் 39
11. உபமன்யு தபஸ்சரணம் 47
12. உபமன்யு வரப்பிரசாதம் 54
13. மார்க்கண்டேய சரிதம் 59
14. மார்க்கண்டேய வரப்பிரசாதம் 65
15. யமானுசாஸனம் 69
16. இதுவுமது 73
17. இதுவுமது 75
18. கவுதமமுனிவர் அன்னதாதாவாகியது 78
19. அந்தணர்களுக்குக் கவுதமமுனிவர் சாபமிட்டது 82
20. சுகமஹிமாப்பிரகாசம் 87

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

21. அகஸ்திய சரிதம் 98

22. ததீசி முனிவர் சரிதம் 101

23. இதுவுமது 107

24. ரிடி சரிதம் 111

25. கண்வாதி சரிதம் 113

26. பிரமகர்வ ஹரணசரிதம் 115

27. ருத்திர விஜயம் 119

28. பிரமபாப விமோசனம் 124

29. இந்திர பிரம்மஹத்தி விமோசநம் 127

30. விஷ்ணு முனி சம்வாதம் 130

31. விஷ்ணு சக்கரப்ரதானம் 136

32. கங்காவதரணம் 138

33. விருஷப வரப் பிரதானம் 141

34. வருணாதிசாப விமோசனம் 143

35. விஸ்வாவஸு முதலாயினார்பேறு 145

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

சிவமயம்

இறைவனால் அருளப்பட்ட
சித்தம் சிவமயம் ஞானதான அறக்கட்டளை

மூவேந்தர் நகர் 2–ஆவது வீதி, விஸ்வநாதபுரம், மதுரை–14.
e-mail id : gnanathaanam@gmail.com

அறிமுகமும் - பணிகளும்

R. செந்தில்குமார்-நிறுவனர்-தலைவர், 98423 35085
S. ஆனந்த்,மேலாண்மை அறங்காவலர், 98431 31353

அறங்காவலர்கள்:

S. இராஜமாணிக்கம், R. குணசுந்தரி, A. மலர்மதி,
T.R. இராமதாஸ், G. நெடுஞ்செழியன்

கௌரவ ஆலோசகர்கள்:

சிவ. பொன்.முத்துவிநாயகம் ஓதுவார், S. கற்குவேல்,
சிவ. சு.அனந்தசுப்பு, B. கார்த்திக்ராமர், TRS. ரமேஷ்கண்ணன்,
J. சிவலிங்கம், M.சுகுமார், திருமதி. பிரபாவதி சுகுமார்,
கைலைமணி சசிகலா, 'அகோர சிவகணன்' மு.ஜெயக்குமார்

சைவசமயம் சம்பந்தமான கிடைத்தற்கரிய பழைய நூல்களையும், வேத சிவாகமத்தின் ஞானபாத நூல்களையும் மீள்பதிப்புச் செய்து ஞானதானமாக வழங்குதல்.

எங்களது வெளியீடுகளைப் பார்க்கவும், பெறவும் எமது முகநூல் பக்கமான (www.facebook.com / siththamsivamayam-பக்கத்தினை பார்வையிடலாம். சிவஞானதானத்தில் சிவபுண்ணியத்தில் அவசியம் தாங்கள் பங்குபெற வேண்டுகிறோம்.

விரும்புவோர் கீழ்க்கண்ட கணக்கில் பணம் அனுப்பலாம்.

பெயர்	:	சித்தம் சிவமயம் ஞானதான அறக்கட்டளை
Bank	:	**Tamilnad Mercantile Bank Ltd.**
Branch	:	**Madurai Main**
C/Ac. No.	:	**002100019741975**
IFSC Code	:	**TMBL0000002**

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

சிவமயம்

இறைவனால் அருளப்பட்ட சித்தம் சிவமயம் பொதுநல அபிவிருத்தி அறக்கட்டளை

e-mail id : gnanathaanam@gmail.com

அறிமுகமும் - பணிகளும்

சிவாலயங்களுக்கு அபிஷேகப் பூஜைப்பொருட்கள் வழங்குதல், பசு விபூதி, உருத்திராக்க மணி வழங்குதல், வில்வக் கன்றுகள் வழங்குதல், தலவிருட்சங்கள் வைக்க உதவுதல், விபூதி வைக்கும் வில்வஓடு வழங்குதல், மாதந்தோறும் திருவாதிரை நட்சத்திரத்தில் நடராஜருக்கு புஷ்பாஞ்சலி, வருடந்தோறும் சித்திரைப் பெருந் திருவிழாவில் நீர்மோர், பானகம், கைவிசிறி பக்தர்களுக்கு தந்துதவுதல், புரட்டாசி மஹாலய அமாவாசை அன்று முன்னோர் களுக்கு பிதிர்த்தர்ப்பணம் செய்திட உதவுதல், மார்கழி மாத அஷ்டமீ ப்ரதக்ஷிணத்தன்று கத்தரிக்காய் சாதம் பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்குதல்.

R. செந்தில்குமார்
நிறுவனர் - தலைவர், **98423 35085**

திருமதி. செல்வி செந்தில்குமார்
மேலாண்மை அறங்காவலர்

கௌரவ ஆலோசகர்கள் :
பாலமுருகன் - திருமதி. பாலமுருகன்,
K.நடராஜன், M.மகேஷ்குமார்

அன்னதான வஸ்திரதான அறக்கட்டளை
V.வெங்கட்ராமன், 99521 58359
மேலாண்மை அறங்காவலர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

திருச்சிற்றம்பலம்

இறைவனால் அருளப்பட்ட **சித்தம் சிவமயம்** ஞானதான அறக்கட்டளை

''எல்லாம் உனதுபதம்! எல்லாம் உனது செயல்!
எல்லாம் உனதருளே என்றிருந்தால் – பொல்லாத
மாதுயரம் நீங்கும் மருவும் உனதடிக்கே
ஆதரவாய்ச் சொக்கநா தா...''

- சொக்கநாத வெண்பா 62

சொக்கநாதா!!! சோமசுந்தரக்கடவுளே!!! மதுரையம்பதி அரசே!!!
வெள்ளியம்பலக்கூத்தனே!!! ஆலவாய் அண்ணலே!!!
எல்லாம் வல்ல சித்தனே!!!

ஓம் நமசிவாய நம: ஓம் நமசிவாய நம: ஓம் நமசிவாய நம:

அருள்மிகு சுந்தரேஸ்வரர் உடனமர் அருள்தரு மீனாட்சியம்மை முன்னிலையில் அதிசயக் கூத்தன் கூத்தாடும் வெள்ளியம்பலச் சபையில் கூடியிருக்கும் சிவச்செல்வர்கள் அனைவரையும் பணிந்து வணங்குகிறேன்.

குரு வடிவில் இறைவன் :

மனிதரிலும் பறவையுண்டு கல்லுண்டு மரமும்உண்டு
மனிதரிலும் நீர்வாழுஞ் சாதிஉண்டு அனேககுல மனிதருண்டு
மனிதரிலும் மனிதருண்டு வானவரும் மனிதராய் வருவதுண்டு
மனிதரிலே பிறப்பறுக்க வந்ததே அருமையென வகுத்தார் முன்னோர்.

- சிவானந்த போதம் 6-ஆம் பாடல்

வானவருள் மனிதராய் வந்துதித்த சாநித்திய குரு, 'எம்மை எதுவாக கருதி வழிபடுகிறீர்களோ யாம் அதுவாகவே இருந்து அனைத்து நன்மைகளையும் வழங்குகிறோம் (அப்படியே ஆகட்டும்)' என்ற ரிபுகீதையின் வாக்கியத்திற்கு நிலைப்பாடாக வாழ்ந்தவர் சாநித்திய குரு கார்வார் பூஜ்ய ஸ்ரீ புஷ்பவிநாயகம் ஆண்டவர் அடியேனது முதல்குரு ஆவார். சிந்தையில் சிவஞானத்தை ஊற்றி வளர்த்த அவரது உபதேசங்களில் சிவகீதை, குருகீதை, ரிபுகீதை, திருமூலரின் திருமந்திரம் ஆகியன முக்கிய

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இடம் வகித்தன. தீட்சைகள் பல அளித்து செயல்முறை பயிற்சியாக ஆத்மார்த்த பூஜைக்கு பயிற்சி அளித்த அவரே அடியேனை குகானந்த குருபீடத்தின் ஞானதான அறக்கட்டளைகளுக்கு ஸ்ரீ குருவாக பயிற்சி கொடுத்தவர்.

ஆகஸ்டு 15, 2007-ல் விருதுநகரில் நடைபெற்ற மகா மகேசுவர பூஜையில் தான் கார்வார் பூஜ்யஸ்ரீ புஷ்ப விநாயக ஆண்டவர் அவர்களை இரா. செந்தில்குமார் ஆகிய அடியேன் சந்தித்தேன். அவர்களின் அவதாரத் திருநாள் ஆகஸ்டு 15 ஆகும். அவர் காலத்துக்கு பின் சித்தம் சிவமயம் ஞானதான அறக்கட்டளை இறைவனால் அருளப்பட்ட நேரத்தில் எங்களின் நோக்கத்தினை அறிந்து எங்களை அழைத்து ஆசியளித்த செங்கோல் ஆதீனம் குருமகாசந்நிதானம் அவர்களை அடியேன் சந்தித்தது ஆகஸ்டு 15/ 2017 அன்று. அவர்களின் அவதாரத் திருநாளும் ஆகஸ்டு 15.

வழிவழியாய் குருமரபு எங்களை ஆட்கொண்ட விதம் இறைவன் அருளியதே!!! அடியேனது வாழ்வின் ஆன்மீக அருள் அனுபவங்களை ஏற்படுத்திய அனைத்து குருமார்களுக்கும் அடியேனது வணக்கங்கள்.

அறக்கட்டளையின் முதல் வெளியீடு சிவகீதை (11-02-2018) :

சித்தம் சிவமயம் ஞானதான அறக்கட்டளையின் முதல் வெளியீடான சிவகீதையானது 18 புராணங்களில் ஒன்றான பத்ம புராணத்தில் உத்திர பாகத்தில் 4வது பாதாள கண்டத்தில் 23-ஆம் சூசியில் சிவகீதை என்னும் உபநிடதமாக உள்ளது. தண்டகாருண்யத்தில் சீதையை இழந்து இராமர் துயருற்ற போது அகத்திய முனிவர் (சிவதீட்சை) விரஜாதீட்சை அளித்து சிவவிரதமிருந்து சிவபூஜை செய்ய வழிகாட்டினார். அகத்தியரின் வழிகாட்டுதலின் படி சிவபூஜை செய்த இராமரின் சிவ விரதத்திலும் சிவபூஜையிலும் மகிழ்ந்த சிவபெருமான் அவர்முன் தோன்றி பாசுபத அஸ்திரத்தை வழங்கிச் செய்த உபதேசமே சிவகீதை ஆகும்.

இராமருக்கு கீதையை சிவபெருமான் உபதேசிப்பதை கேட்டுக்கொண்டிருந்த முருகப்பெருமான் அதை ஸனத்குமாரருக்கு உபதேசித்தார். ஸனத்குமாரர் வேதவியாசருக்கு உபதேசித்தார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வேதவியாசர் சூத முனிவருக்கு உபதேசித்தார். சூத முனிவர் மற்ற முனிவர்களுக்கு உபதேசித்தார்.

112 ஆண்டுகளுக்கு பின் மறுவெளியீடாக இறைவனின் சித்தப்படி வெளியிடப்பட்ட இந்த நூல் நமது அறக்கட்டளையின் நோக்கத்தின்படி ஆயிரம் புத்தகங்கள் ஞானதானமாக வெளியிட முடிவு செய்து 11-02-2018 அன்று பெருங்குளம் - செங்கோல் ஆதீனம் - குருமஹாசந்நிதானம் அவர்களது பொற்கரங்களால் ஆன்றோர்கள் சான்றோர்கள் முன்னிலையில் வெளியிடப்பட்டது.

அறக்கட்டளையின் இரண்டாவது வெளியீடு
மஹா இதிகாசமாகிய சிவரகசியம் [15–08–2018]

சிவரகசியம் என்பது ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட க்ரந்தங்களை உடைய பரம இதிகாசமென பெயர் பெறும். ‘இதிகாசம்பரதராமாயணம்’ என்ற சொற்றொடரில் இதிகாசம் என்பது மஹாஇதிகாசமாகிய சிவரகசியத்தைக் குறிக்கும். ஸ்காந்த புராணத்துள் சிவரகசியகண்டம் என்று ஒன்று உள்ளது. புராண தர்க்கதமாகிய சிவரகசியத்திற்கும் இதிகாசமாகிய சிவரகசியத்திற்கும் வேறுபாடுகள் உணராது பெரும்பாலோர் மயங்குகின்றனர்.

மஹேதிஹாஸமாகிய சிவரஹஸ்யம் பூர்வம் பரமசிவனால் உமாதேவியார்க்கு மஹா கைலாஸத்திலும், முருகக்கடவுளால் மஹாதபஸ்வியாகிய ஜைகிஷவ்ய முநிவர்க்கு ஸ்கந்தகிரியிலும், அதிரஹஸ்யமாய் உபதேசிக்கப்பட்டது. பின்னர் அது, முருகக் கடவுளால் நந்திதேவருக்கும், அவர் தம்மை வழிபட்ட நாராயண மூர்த்திக்கும், அவர் தமது புதல்வராகிய பிரம்மதேவருக்கும், அவர் தமது புதல்வர்களாகிய ஸநகாதியர்களுக்கும், அவர் நாரத மஹாமுனிவருக்கும், அவர் வியாஸ முனிவருக்கும், அவர் சூதபௌராணிகர்க்கும் முறையே உபதேசிப்ப நிலவுலகில் வந்து நிலவியது.

இப்பரம இதிஹாஸம், ஓரிலக்கத்துக்கு மேற்கொண்ட கிரந்த ஸங்கியை உடையதாயும், ‘ஸஹஸ்ராத்யாயி’ என்னும் ஆயிரம் அத்தியாயங்களாலான மஹேஸம், பவம், ஹாரம், சிவம், பர்க்கம், சங்கரம், உக்ரம், பீமம், ஸதாசிவம், ஈஸ்வரம், மஹாதேவம், ஈஸம் எனப் பெயரிய பன்னிரண்டு அம்சங்களையுடையதாயும் சொல்லப்பட்டிருக்கிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

குரு வடிவாய் வந்து எங்களை ஆட்கொண்ட இறைவனுக்கு அவதாரத் திருநாளாகிய ஆகஸ்டு 15, 2018 அன்று முப்பெரும் விழாவாக கொண்டாடப்பட்டது. அதில் சிவரஹஸ்யம் முதலாம் அம்சம் மஹேஸமும், சிவகீதை இரண்டாம் பதிப்பும், செங்கோல் ஆதீன வரலாறு ஆகிய நூல்கள் வெளியிடப்பட்டன.

அறக்கட்டளையின் மூன்றாவது வெளியீட்டில் 11-01-2021 வெளியிடப்பட்ட நூல்.

இரத்தினகிரி (எ) திருவாட்போக்கி புராண வசனச் சுருக்கம்.

கமலை மாநகர் வைத்தியனாத தேசிகரால் இயற்றப்பட்ட மூல நூலிற்கு அலகரை - வரகவி - அ.சுப்பிரமணிய பாரதியார் எழுதிய வசனச் சுருக்கமும் சில போற்றிப் பாடல்களுடன் வெளியிடப் பட்டது.

நமது நான்காவது வெளியீடு பங்குனி உத்திரம் 28-03-2021 அன்று வெளியிடப்பட்ட நூல்கள்.

1. இறைவனின் அருள்ஆணைப்படி மஹா இதிகாச மாகிய சிவரஹஸ்யம் - இரண்டாம் அம்சம் பவம் வெளியிடப்பட்டது.

2. இறைவனின் அருள்ஆணைப்படி மஹா இதிகாச மாகிய சிவரஹஸ்யம் - மூன்றாம் அம்சம் ஹாரம் வெளியிடப் பட்டது.

3. பிருங்கிரிடி சம்ஹிதையில் உள்ள வில்வ அஷ்டோத்ர சத நாமாவளி கிரந்தம், நாகரம்,தமிழ் உச்சரிப்பு, தமிழ்விளக்கத்துடன் வெளியிடப்பட்டது.

4. ஸ்ரீ ருத்ர சஹஸ்ர நாம ஸ்தோத்ரம் தேவ நாகரி - தமிழ் - தமிழுரை : சிதம்பரம் 'சது: சாஸ்திர சிரோண்மணி' பண்டிதராஜ பிரம்மஸ்ரீ சோம. ஸேது தீக்ஷிதர் அவர்கள் உரை எழுதி சென்னை சங்கரனடிமை ஆங்கிரஸ. எஸ்.வேங்கட சர்மா அவர்கள் பதிப்பித்த நூலின் சிறு திருத்தங்களுடன் கூடியது வெளியிடப் பட்டது. ருத்ர உபாசகர்களுக்கு ஏற்ற வகையில் அங்ககரநி யாசத்துடன் தயாராகி உள்ளது. தகுந்த குரு மூலமாக தியான ஸ்லோகம் பிராண பிரதிஷ்டை ஸ்லோகம் ஆகியவற்றை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உபதேசமாக பெற்று உபாசனை செய்ய ருத்ரஅம்சம் பெறுவர் என்பது திண்ணம்.

5. பூப்பிள்ளை அட்டவணை + சிவபராக்கிரம போற்றி அகவல் ஒறே நூலாக வெளியிடப்பட்டுள்ளது.

6. வேதசார விளக்கம் - மருவூர் பிரம்மஸ்ரீ கணேச சாஸ்திரியார் அவர்கள் இயற்றியது.

அறக்கட்டளையின் ஐந்தாவது வெளியீட்டில் திருக்கயிலாயப் பரம்பரை செங்கோல் ஆதீன 103வது குருமஹாசன்னிதானத்தின் ஜெயந்தி நாளான ஆடிப்பூரத்தன்று 31-07-2022 வெளியிடப்பட்ட நூல்கள்:

1. ஸ்ரீசிவநாம அஷ்டோத்ர சதநாமாவளி (க்ரந்தம்-நாகரம்-தமிழ்-தமிழுரையுடன்) வெளியிடப்பட்டது.

2. சிவகீதை மூன்றாம் பதிப்பாக 1000 நூல்கள் வெளியிடப்பட்டது.

அறக்கட்டளையின் ஆறாவது வெளியீடு : மார்கழி தேய்பிறை அஷ்டமி அன்று 16-12-2022 வெளியிடப்பட்ட நூல்; அஷ்டமி பிரதக்ஷிண மாஹாத்மியம் திருப்பரங்குன்றம்-ஸ்கந்தகுரு வித்யாலய ஆகம அத்யாபகர் சிவஸ்ரீ க.கார்த்திகேய சிவம் அவர்கள் இயற்றிய தமிழ் உரை - மூல க்ரந்தத்துடன் வெளியிடப்பட்டது.

இவைகளைத் தொடர்ந்து,

1. ஸ்ரீசிவகீதை அடுத்தடுத்து ஆயிரம் பதிப்புகளாக வெளிவந்து கொண்டேயிருக்கும். அதில் கருத்துக்களை தெளிவுபடுத்தத் தேவையான வண்ணப்படங்களுடனும், மூலம் க்ரந்தம் + தேவநாகரி + தமிழ் எழுத்துக்களையும் அதற்கான தமிழ் உரையும் சேர்த்து வெளியிடப்படும்.

2. மஹாஇதிஹாஸமாகிய சிவரகசியம் (1-12) : ரிபுகீதையினை வெளியிட்டு சாநித்ய குருவிற்கு நன்றி காணிக்கையை செலுத்த விரும்புகின்றோம். ரிபுகீதை என்பது கைலாயத்தில் பரமசிவனால் உமாதேவிக்கு சம்பாவனையாக (உரை நடையாக) உபதேசிக்கப்பட்ட பன்னிரண்டு அம்சங்கள் கொண்ட மஹா இதிகாசமான சிவரகசியத்தில் ஆறாவது அம்சமாக உள்ளது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அந்த மஹாஇதிகாசமகிய சிவரகசியம் பன்னிரண்டு அம்சங்களையும் தனித்தனியாக (12) வெளியிட உள்ளோம். இதன் வடமொழி மூல ஸ்லோகத்திற்கான தமிழ் உரை தமிழ் போற்றும் சைவ உலகிற்கு கிடைக்கவில்லை. சிவனடியார்கள் அனைவரின் வேண்டுதலுக்கு இணங்க சிவபெருமானின் கருணையால் நிச்சயம் வழி கிடைக்கும். அது போலவே மற்ற சிவஞான விசயங்களும் வெளியிட உள்ளோம்.

3. சிவபராக்கிரமம் (1-64): ஸ்காந்த புராணத்திலுள்ள சிவபெருமானின் சிவபராக்கிரமம் என்னும் 64 வடிவங்கள் பற்றி விரிவான தத்துவ விளக்கத்துடனும், பல வண்ணப்படங்களுடனும் வரலாறுகளுடனும் தனித்தனி (64) நூல்களாக வெளியிடுதல்.

4. வளம் பல நல்கும் மதுரை பஞ்சபூத ஸ்தலங்கள்.

5. விரஜாதீட்சை : பத்ம புராணத்திலுள்ள வேதசார சிவ சஹஸ்ர நாமம் , அகத்தியர் இராமருக்கு அருளிய விரஜா தீட்சை விளக்கத்துடன் வெளியிடப்படும்

6. சிவ அஷ்டோத்ரம் - தமிழ் விளக்கம்

7. சைவ பூசனம் - கிரந்தம் + நாகரம் + தமிழுரையுடன்.

8. மாகேஸ்வர சூத்திரம்

9. கிரந்தம் பால பாடம் - கற்க, கற்பிக்க

வாரீர்! ஊர் கூடித் தேர் இழுப்போம் வாரீர்!!
வாரீர்! சிவனருள் பெறுவோம் வாரீர்!!

''யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
வான்பற்றி நின்ற மறைபொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான்பற்றப் பற்றத் தலைப்படும் தானே''.

என்ற திருமூலரின் வரிகளுக்கு ஏற்ப இறைத்தன்மையை பற்றி பேசப்பேச எழுத எழுத நினைக்க நினைக்க இறைவன் நம் மூலம் வெளிப்பட்டு நம் உயிர் இறைத்தன்மை பெற்று வருகிறது.

ஆகவே இந்த சிவபுண்ணியங்களை வழி நடத்திட, பெரியோர்களின் நல்லாசிகளையும், நல்லாதரவையும் வழங்கிட வேண்டுகிறோம். இந்த சிவபுண்ணியங்களில் பங்கு பெற

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

விருப்பம் உள்ள அன்பர்கள் எங்களைத் தொடர்பு கொள்ளலாம். இந்த சிவபுண்ணியங்களுக்கு (ஞானதானத்திற்கு) தேவையான பொருள்களை தானமாகத் தரலாம். வரைபடக் கலைஞர்கள், DTP டிசைனர்கள், தங்கள் திறமையை தானமாகத் தரலாம்.

புத்தக வெளியீட்டாளர்கள் எங்களோடு இணைந்து செயல்பட வேண்டுகிறோம்.

ஏற்போர் இணைந்து வாருங்கள் அதுவே இறைவனின் ஆசியைப் பெற எளிய வழியாம்.

அறக்கட்டளையினரின் அன்பான வேண்டுகோள் :

அறக்கட்டளையின் வெளியீடுகள் அனைத்தும் ஞான தானமாக வழங்கப்பட்டு வருகிறது. இனிவரும் காலங்களில் மேலும் பல பதிப்புகள் (80) எண்பது தலைப்புகளில் தனித்தனியாக வெளியிடயிருக்கும் நமது நோக்கத்தினை நிறைவேற்ற தேவையான நிதியினைத் திரட்ட அடுத்தடுத்த வெளியீடுகளில் தங்களின் பங்களிப்புத் தொகையினை அளிக்கலாம். மற்றும் நூலினை பெற்றுக்கொள்பவர்கள் விருப்பமும் வாய்ப்பும் உள்ளவர்கள் அறக்கட்டளைக்கு குறைந்தபட்ச நன்கொடையினை அளித்து நூல்களைப் பெற்றுக் கொள்ளலாம் என அறக்கட்டளை நிர்வாகிகளினால் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பெயர்	:	சித்தம் சிவமயம் ஞானதான அறக்கட்டளை
Bank	:	Tamilnad Mercantile Bank Ltd.
Branch	:	Madurai Main
C/Ac. No.	:	002100019741975
IFSC Code	:	TMBL0000002

சித்தம் சிவமயம் ஞானதான அறக்கட்டளை இறைவனின் அருள் மழையில் நனைந்து நனைந்து அதிசயித்துக் கொண்டே இருக்கிறது. அதிசயங்களும் ஆற்றல்களும் இறைவனின் ஆசி வழியே என்ற குருவின் வாக்கு மெய்ப்படுகின்றது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நன்றியுரை.

''சிவரஹஸ்யம் - நான்காம் அம்சம்'' நூலிற்கு வாழ்த்துரை வழங்கியுதவிய குளித்தலை - சீகம்பட்டி - சிவபூஜாதுரந்தரர் - சைவ. சு. இராமலிங்கம் ஐயா அவர்களுக்கு மனம்மெய் மொழிகளாலான வணக்கங்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்நூல் வெளியீட்டிற்கு நிதியுதவி உதவிய இந்நூலாசிரியர் குடும்பத்தினர் சென்னைவாழ் நடராஜன் ஐயா மற்றும் சகோதரர்கள் குடும்பத்தினர் அனைவருக்கும் வணக்கங்கள். நன்றிகள். வாழ்த்துகள்.

இந்நூலினை பதிப்பித்துக் கொடுத்த நமது அறக்கட்டளை யின் நூல்கள் பதிப்பாளர் திருச்சிராப்பள்ளி, 'ஸ்ரீகணநாதநாயனார் நூலகம்' - போற்றுநர் - அகோரசிவகணன் மு.ஜயக்குமார் அவர்களுக்கும்,

இந்த அற்புதநூலை சிறந்த முறையில் அச்சிட்டுக் கொடுத்த ஆர்.ஜி.பிரிண்டர்ஸ் உரிமையாளர் உயர்திரு. இரா. ஞானசேகரன் அவர்களுக்கும், அவர்தம் பணியாளர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இதுவரை எமது வெளியீடுகள்:

1. சிவகீதை
2. சிவரகசியம் - முதலாம் அம்சம் - மகேசம்
3. சிவரகசியம் - இரண்டாம் அம்சம் - பவம்
4. சிவரகசியம்-மூன்றாம் அம்சம் - பூர்வபாகம்-ஹாரம்
5. பில்வாஷ்டோத்தர சதநாம ஸ்தோத்திரம் (கிரந்தம், நாகரம், தமிழ் எழுத்துக்கள்+தமிழ் உரையுடன்)
6. இரத்தினகிரி (எ) திருவாட்போக்கிப் புராண வசனச் சுருக்கம்
7. ஸ்ரீருத்ர ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம் (தேவநாகரி-தமிழ்-தமிழுரையும்)
8. வரலாற்றுச் சிறப்புமிக்க செங்கோல் ஆதீனம் (ஆதீனவரலாறு)
9. வேதசார விளக்கம்.
10. சிவபராக்கிரம போற்றித் திருஅகவல்
11. ஸ்ரீசிவநாம அஷ்டோத்திர சதநாமாவளி
12. அஷ்டமி ப்ரதக்ஷிண மாஹாத்ம்யம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.
ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத சிதம்பரேஸ்வரர் துணை.
ஸ்ரீபதஞ்சலி வியாக்ரபாத இரண்யவர்ம தில்லைவாழந்தணர்
சமயாச்சார்ய சந்தானாச்சாரிய மூர்த்திகள் துணை.
ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் துணை.
திருச்சிற்றம்பலம்.

'தத்புருஷதேவநாம' **சைவ.சு.இராமலிங்கம்**
கணித சோதிடர்,
சித்தாந்த சைவ செம்மணி, குளித்தலை

வாழ்த்துரை.

''பதஞ்சலி வியாக்ர பாதர் பாதம்
இதம்பெற நன்மலர் தூவி யேத்துவாம்''.

- திருநாவுக்கரசர் தேவாரம்.

''நூலால் நன்றா நினைமின்கள் நோய்கெடப்
பாலா னைந்துட னாடும் பரமனார்
காலா லூன்றுகந் தான்கடம் பந்துறை
மேலா னாஞ்செய்த வல்வினை வீடுமே''.

அருட்கடலாகிய அம்பலவாணருடைய திருவருளால் சித்தம் சிவமயம் ஞானதான அறக்கட்டளை வாழ்க. வளர்க.

ஞானமே வடிவமான சிவபெருமானுக்கும் ஞானமே இல்லாத நமக்கும் உறவு செய்து வைப்பது, ஞானநூல்கள். உறவாகிய அன்பு அதிகமானால் சிவபெருமான் காட்சிதந்து அருள் வழங்குவார்.

திருக்களிற்றுப்படியாரில்,

''நல்லசிவ தன்மத்தால் நல்லசிவ யோகத்தால்
நல்லசிவ ஞானத்தால் நான்அழிய வல்லதனால்
ஆரேனும் அன்புசெயின் அங்கே தலைப்படுங்காண்
ஆரேனும் காணா அரன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்றருளியபடி. மனிதர்களுக்கு உலகப் பொருள்களிலே அன்பு, பள்ளமடையிலே தண்ணீர் செல்லுவதுபோல செல்லும். சிவபெருமானிடத்திலே அன்பு இயல்பாகச் செல்லாது, செல்ல வேண்டுமானால் நல்ல ஞானநூல்களைக் கற்பதினாலும், அநுபவ முள்ள ஆசிரியரிடத்திலே கேட்பதினாலும் சிவபெருமானிடம் அன்பு செல்லும். அதனாலேதான், ''கற்றல் கேட்டலுடையார் பெரியோர்'' என்றார் திருஞானசம்பந்தர்.

கற்றலுக்கும் கேட்டலுக்கும் ஆதாரமாக இருப்பது நூல்கள். நூல்கள் மூன்று வகையாக உள்ளது. பாசநூல் உலகப் பொருளைப் பற்றிச் சொல்லுவது, பசுநூல் உயிர்களின் வரலாறு கதையைப் பற்றி சொல்லுவது, பதிநூல் சிவபெருமானைப் பற்றிச் சொல்லுவது.

பாசநூல் பசுநூல் இரண்டும் மயக்கத்தை உண்டு பண்ணி அதனால் பிறப்பை உண்டு பண்ணும். பதிநூல் மயக்கத்தை நீக்கி பிறப்பு இல்லாமல் செய்யும்.

நாம் வாழ்கிற காலம் கொஞ்சம், அதிலே விவேகம் சிவபத்தி செய்யப் பொருத்தமான காலம் மிகக் கொஞ்சம். அதனால் அந்தக் காலத்தில் பாசநூல் பசுநூல்களைப் படித்து காலத்தை வீணாக்காமல் பதிநூலாகிய சிவஞான நூல்களை கற்றுக் கேட்டு திருவருளைப் பெற வேண்டும், இல்லையேல் பிறவி வீணாகிவிடும்.

திருவிசைப்பாவில்,

''எச்சனைத் தலையைக் கொண்டு செண்டடித் திடபம் ஏறி
அச்சங் கொண்டமரர் ஓட நின்றஅம் பலவர்க் கல்லா
கச்சரைக் கல்லாப் பொல்லாக் கயவரைப் பசுநூல் கற்கும்
பிச்சரைக் காணா கண்வாய் பேசாதுஅப் பேய்க ளோடே''.

என்றருளியபடி. பாசபசு நூல்களை விட்டுப் பதிநூல்களைக் கற்பதே சிவனருளைப் பெறுவதற்கு ஆதாரமாகும். சிவநூல் களிலே சிவபெருமான் கலந்திருக்கிறார். அருணகிரிநாத சுவாமிகள் திருச்செந்தூர்த் திருப்புகழிலே,

''நூலனந்த கோடிதேடி மால்மிகுந்து பாருளோரை
நூறுசெஞ்சொல் கூறிமாறி விளைதீமை
நோய்கலந்த வாழ்வுறாமல் நீகலந்து ளாகுஞான
நூலடங்க ஓதவாழ்வு தருவாயே''.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சைவசமயமல்லாத மற்றச் சமயங்கட்கு மனிதர்களால் செய்யப்பட்ட நூல் முதனூலாகும். சைவசமயத்திற்கு முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் அருளிய வேத சிவாகமம் முதனூலாகும்.

சிவஞானசித்தியாரில்,

''வேதநூல் சைவநூ லென்றிரண்டே நூல்கள்
வேறுரைக்கு நூலிவற்றின் விரிந்த நூல்கள்
ஆதிநூ லநாதி யமலன்றருநூ லிரண்டும்
ஆரணநூல் பொதுசைவம் அருஞ்சிறப்பு நூலாம்
நீதியினா லுலகர்க்குஞ் சத்திநி பாதர்க்கும்
நிகழ்த்தியது நீண்மறையி னொழிபொருள் வேதாந்தத்
தீதில்பொருள் கொண்டுரைக்கும் நூல்சைவம் பிறநூல்
திகழ் பூர்வஞ் சிவாகமங்கள் சித்தாந்தமாகும்''.

என்றபடி சிவபெருமான் அருளிய வேத சிவாகமத்தை முதனூலாக உடைய சைவசமயத்தில் சேர அனுட்டிக்க அளவற்ற சென்மங் களிலே பண்ணின புண்ணியம் இருப்பவர்களுக்கு அமையும்.

⋆சிவஞான நூல்களை ஓதுதல், ஓதச்செய்தல், கேட்டல், கேட்கச் செய்தல், சிந்தித்தல் ஆகிய ஐந்தும் ஞானபூசை என்றும் இது செய்தோர் சிவபெருமான் திருவடியைச் சேர்வார் என்றும் பஞ்ச மகாயக்ஞும் என்றும் சொல்லப்படும்.

சிவஞானசித்தியாரில்,

''ஞானநூல் தனைஓதல் ஓது வித்தல்
நற்பொருளைக் கேட்பித்தல் தான்கேட்டல் நன்றா
ஈனமிலாப் பொருளதனைச் சிந்தித்தல் ஐந்தும்
இறைவனடி அடைவிக்கும் எழில் ஞானபூசை
ஊனமிலாக் கன்மங்கள் தபஞ்செபங்கள் தியானம்
ஒன்றுக்கொன்று உயரும்இவை ஊட்டுவது போகம்
ஆனவையான் மேலான ஞானத்தா லரனை
அருச்சிப்பர் வீடெய்த அறிந்தோ ரெல்லாம்''.

- என்றும்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிவதருமோத்தரத்தில்,

"ஒப்பி லமலன் றனையுணர்த்து
முரையை யோதல் ஓதுவித்தல்
செப்பும் பொருளைத் திரிவுமறத்
தெளிகை பிறரைத் தெளிவிக்கை
தப்பாது அதனை மனத்தகத்தே
தரிக்கை யெனவுந் தானைந்தாம்
வைப்பா யருந்தா மருந்தாகிச்
சிறந்த ஞான மகவினையே". - என்றும் காண்க.

சிவாகம ஞானபாத வழிவந்த ஞானபூசை ஞானோபதேசம் என்கிற முறையில் திருக்கைலாசத்தில் சிவபெருமான் உமாதேவிக்கு உபதேசம் செய்தருளிய "**சிவரஹஸ்யம்**" என்னும் இந்த நூல் சைவ சமயிகளுக்கு கிடைத்த பேரருட் செல்வம். உபதேசமுறையில் வருகிற நூல் மிக உயர்ந்ததாகும். அதுவும் சிவபெருமான் உபதேசம் செய்து அதன் வழியாக நூல் வருகிறதென்றால் அதனுடைய உயர்வு சொல்லமுடியாது.

திருமுறையிலே எட்டாந் திருமுறையாகிய திருவாசகம் சிவபெருமான் மாணிக்கவாசகருக்கு உபதேசித்த முத்தி பஞ்சாட்சரத்தின் விரிவுரையாக வந்தது. அதனால் திருவாசகம் உபதேச நூல். அதன் பெருமையை அளவிட முடியாது. அந்த வகையில் சிவரஹஸ்யம் முதலாம் அம்சம் மகேசம் என்ற ஞானநூல் சிவஞான சம்பந்தமாக அரிய பெரிய விஷயங்களை அள்ளித் தருகிறது.

சிவலிங்க பூசையாகிய தவம் மிக உயர்ந்தது. எல்லாத் தவங்களும் சிவபூசைக்குள்ளே இருக்கிறது. சிவபூசையில்லாமல் மற்றத்தவங்கள் பயனற்றதாகும். சிவபூசையோடு மற்றத் தவங்கள் இருந்தால் பலனுண்டாகும்.

பதின்மூன்றாம் அத்தியாயத்தில் சிவபெருமான் அம்பிகையைப் பார்த்து, "கிரிராஜதநயே ஸகல சராசரங்களுக்கும் தாயாகிய அம்பிகே யாம்இக்கைலாசேஸ்வர லிங்கத்தை பல கோடிகாலம் பூஜித்திருக்கின்றேம்" என்று சொல்ல உமாதேவி சுவாமியைப் பார்த்து, "உம்மாலும் பூஜிக்கப்படுகின்றதே எனக்கது மிக்க ஆச்சரியமாயிருக்கின்றது. உமக்கும் லிங்கபூசையாலாக வேண்டியது ஒன்றுண்டோ. அவ்வுண்மையைக் கூறுங்கள்" என்று வேண்டிக் கொண்டனள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அதனைக் கேட்ட பரமேஸ்வரன், ''ஒ தேவி! கர்மங்களாலும் ஸமாதிகளாலும் ஜபங்களாலும் தபங்களாலும் நியமங்களாலும் அடையக்கூடியது யாதுமில்லை. அவைகள் எனது பாதாரவிந்த பூசையோடு கூடச் சேர்ந்தாலன்றி பயன்படா. ஆதலால் எனது பூசையே சகல பயன்களையும் தந்து முத்தி ஹேதுவுமாகும் என்ற உண்மையை லோகங்கள் தெரிந்து கொள்வதின் பொருட்டு யான் பூசிக்கின்றேன். இது எனக்கு மிக்க சந்தோஷ ஹேதுவே'' என்று கூறுவதாகக் கூறப்பட்டுள்ளது.

திருக்காளத்திப்புராணத்தில்,

''பழிப்பில் விரதந் தவந்தீர்த்தம் வேள்வி முதலாற் பயனென்னே
இழைக்கின் றனவா மவைமுழுதும் லிங்க பூசை யில்லார்க்கு
வழுக்குஞ் செயல்க ளாய்ப்பவிக்கும் மிதனோ டவையும் வந்தக்கால்
விழுப்பம் பெரிதும் விரைந்தளிக்கும் மிதனிற் பணிவோர் மிகச்சதுரர்''.

என்று சிவலிங்க பூசையை சிறப்பாகக் கூறப்பட்டது. நாற்பத் தெட்டாம் அத்தியாயத்தில், ''ஒ தேவி! எந்தக் கிராமத்திலாவது நகரத்திலாவது சிவலிங்க மில்லையோ அது அமங்கலமேயன்றோ சிவலிங்கம் எங்கிருக்கின்றதோ அவ்விடமே மங்கலமுள்ளது''.

''எங்கு லிங்கார்ச்சனையில் பிரியமுடையவர்களும், விபூதி ருத்ராக்ஷந் தரிப்பவர்களுமாகிய சாம்பவப்பிராமணர் இருக்கின் றனரோ, எங்கு ருத்ர செபத்தில் பிரியமுடையவர் இருக்கின்றனரோ, எங்கு பஞ்சாட்சர செபம் செய்கின்றவர் இருக்கின்றனரோ, எங்கு பில்வ வனமுளதோ, ஒ தேவி! அஃதே பரம புண்ய ஸ்தலமாம். அதனைத் தரிசித்தாலும் சகல பாதகங்களும் நீங்குகின்றன.''

''விபூதியற்ற நெற்றியைச் சுடுக, ஆலயமற்ற கிராமத்தைச் சுடுக, சிவார்ச்சனை இயற்றாத ஜன்மத்தைச் சுடுக, சிவசம்பந்த மில்லா வித்தையையுஞ் சுடுக''.

விபூதி திரிபுண்டரம் அற்றவனும் என்னை அர்ச்சிக்காதவனும் எனது கதையை சிரவணம் செய்யாதவனுமாகிய அதமன் எப்போதும் நரக யாதனைக்கே அருகனாவான்.

அறுபதாம் அத்தியாயத்தில், ''எல்லோருக்கும் பொதுவாய் உபாஸனையையுங் கூறுகின்றேன். ஆவின் சகல சரீரத்திலும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

க்ஷீரமிருப்பினும் முலைக்காம்பில் காணப்படுவதுபோல யான் சர்வ வியாபியாயினும் சிவலிங்கத்தில் காணப்படுகின்றேன். ஆன்ம லிங்கத்தை ஞானயோகத்தினால் காணச்சத்தியற்றவர்க்கு லிங்கத்தில் பூசை விதிக்கப்பட்டது. விபூதி, ருத்ராக்ஷதாரணம் பஞ்சாட்சரஜபம், ருத்திராவர்த்தி ஆகிய இவைகளைச் செய்து கொண்டு ஓர் பில்வ பத்திரத்தை எனது சிரசில் வைப்பவனுக்கு ஞானமளிக்கின்றேன் அது எனக்கு பிரதிக்ஞை''.

மிக அதிநுட்பமான சிவபரத்வம் சிவபூசை விபூதி பஞ்சாட்சரம் உருத்திராக்கம் ஆகியவற்றைப்பற்றி சிறப்பாக இந்த சிவரகஸ்யம் என்ற ஞானநூல் தெரிவிக்கிறது. இவ்வளவு சிறப்பான நூலை கண்டெடுத்து, பதிப்பித்து அடியார்களுக்கு வழங்குகின்ற சித்தம் சிவமயம் ஞானதான அறக்கட்டளை அன்பர்கள், மீனாக்ஷி சுந்தரேசுவரர் திருவருளால் மண்ணில் நல்ல வண்ணம் வாழவும், எண்ணில் நல்ல கதியைப் பெறவும் வாழ்த்துகிறேன்.

தானத்திலே மிக உயர்ந்தது. ஞானதானம் அன்னதானம் எல்லோருக்கும் தெரியும். ஞானதானம் தெரியாது. சிவஞான நூலைத் தானம் செய்பவர் சிவாலயங்கட்டி கும்பாபிஷேகம் செய்த பலனை அடைவார்கள். அதற்கு உதவி செய்தவர்கள் திருக்கைலாசத்திலே சிவகணங்களாக இருப்பார்கள்.

தில்லைப்புராணத்தில்,

''ஞான தானம் மிகவு முயர்ந்து
ஞான நூல்களை நம்ப னடியருக்கு
ஆன தலத்தினில் அன்புட னீந்திடில்
தானம் யாவையும் செய்த நன்மையாம்''. - என்று உணர்க

''சித்தஞ் சிவமயம் சிவஞான தானம்
செய்கின்ற அன்பர்கள் நீடூழி வாழ்க
அத்தன் சிவனார் ஒருவனே கடவுள்
அவனடி அன்புடன் நீர்மலர் கொண்டு
நித்தமும் அவனைப் பூசனை செய்து
நேசர்தம் திருவடி சிரத்தினிற் சூடி
உத்தம மான சிவஞானம் பெற்று
ஒழிவிலாப் பேரின்பப் பயனடை வீரே''.

Digitization by Hindu-Heritage Foundation of America. HHFA(USA)

தேவ வர்க்கங்களிலே மிக உயர்ந்தவர் மகாவிஷ்ணு. சிவபக்தர்களிலே முதன்மையானவர். எல்லா அவதாரங்களிலும் சிவபெருமானை பூசை செய்திருக்கிறார். அவர் பூசை செய்த தலங்கள் நிறைய இருக்கிறது. பிரபலமான அவதாரம் இரண்டு. ராமன், கிருஷ்ணன். இராமாவவதாரத்தில் அகத்திய முனிவரிடம் தீக்ஷைபெற்று சிவபூசை செய்தார். கிருஷ்ணாவதாரத்தில் உபமன்யு மகாமுனிவரிடம் தீக்ஷைபெற்று சிவபூசை செய்தார்.

சிவதத்துவ விவேகத்தில்,

''அளவிலுன் பெருமை யறியவும் நின்றாட்கு
அழிவிலா அன்புவைத் திடவும்
தளமல ரெடுத்துன் அருச்சனை யாற்றிச்
சாலநின் றிருவருள் பெறவும்
வளமலி புலியூ ரம்பலத் தமுதே
மலர்தலை யுலகினுட் சுரும்பர்
உளர்துழாய்ப் படலை மார்புடை யண்ணல்
ஒருவனே வல்லனா மன்றே''. - என்றும்,

''கோடிமா தவங்கள் செய்து குன்றினார் தம்மை யெல்லாம்
வீடவே சக்கரத் தால் எறிந்துபின் அன்பு கொண்டு
தேடிமால் செய்த கோயில் திருவி ராமேச் சுரத்தை
நாடி வாழ் நெஞ்சமேநீ நன்னெறி யாகு மன்றே''.
- என்றும் காண்க.

தீக்ஷை முக்கியம்

''தீக்கையின்றிப் பூசைசெய்தால் பயனொன் றில்லை
தெரியாமல் கண்ணனுஞ் செய்து வந்தான்
ஊக்க முடன் அவனுக்கு உபதேசித்து
உறுதியுள்ள சிவலிங்கம் தந்து காத்த
பாக்கியவான் உபமன்யு தன்னைப் பெற்ற
பலசாலி புலிமுனியின் பாதம் போற்றி
ஆக்கமுள பதஞ்சலியின் பாதம் போற்றி
அரனருளை எளிதாக அடைய லாமே. - என்று

ஸ்ரீபதஞ்சலி வியாக்ரபாத மகத்துவ பாதத்தில் கூறப்பட்டுள்ள பாடல். பதஞ்சலி வியாக்ரபாத திருவுருவம் நடராசர் சந்நிதியில் எழுந்தருளப் பண்ணினால் சிவாலயங்கட்டி கும்பாபிஷேகம் செய்த பலன் கிடைக்கும். அன்பர்கள் மேலான சிவபுண்ணியத்தைச் செய்வார்களாக.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

திருச்சிற்றம்பலம்.

பதிப்பாளரின் நன்றியுரை.

ஸ்ரீ கணநாத நாயனார் நூலகம்

திருச்சிராப்பள்ளி.

மெய்யன்புடையீர், வணக்கம். சிவநெறிச் செல்வர்களுக்கும், சிவநேயச் செல்வர்களுக்கும் சிவபுண்ணியச் செல்வர்களுக்கும் வணக்கங்கள். "சிவரஹஸ்யம் - நான்காம் அம்சம் - சிவம்" என்கிற இவ்வற்புத நூலை வெளியிட வைத்த எல்லாம்வல்ல திருவருளுக்கும் குருவருளுக்கும் முதற்கண் அடியேனது மனம்மெய் மொழிகளாலான வணக்கங்களையும் நன்றிகளையும் சமர்ப்பிக்கின்றேன்.

"சிவரஹஸ்யம் - நான்காம் அம்சம்" நூலிற்கு வாழ்த்துரை வழங்கியுதவிய குளித்தலை - சீகம்பட்டி - சிவபூஜாதுரந்தரர் - சைவ. சு. இராமலிங்கம் ஐயா அவர்களுக்கு மனம்மெய் மொழிகளாலான வணக்கங்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அரியநூலினை பதிப்பித்துத் தருமாறு கேட்டுக் கொண்ட மதுரை, சித்தம் சிவமயம் ஞானதான அறக்கட்டளை நிறுவனர் - தலைவர் திரு. இரா.செந்தில்குமார், மேலாண்மை அறங்காவலர்கள் : திரு. S.ஆனந்த், திரு. V.வெங்கட்ராமன், திருமதி. செல்வி செந்தில்குமார் ஆகியோருக்கு எமது வாழ்த்துகள். நன்றிகள்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இந்நூலினை பதிப்பிக்கும் சிவபுண்ணியச் செயலுக்கு பொருளுதவி வழங்கிய இந்நூலாசிரியர் மருவூர் பிரம்மஸ்ரீ கணேச சாஸ்திரிகள் அவர்களின் குடும்பத்தினர் சென்னைவாழ் கே.நடராஜன் ஐயா அவர்தம் சகோதரர்களுக்கும், குடும்பத்தினர்களுக்கும் எல்லாம்வல்ல பார்வதி பரமேஸ்வரரின் திருவருளால் எல்லா நலங்களும் வளங்களும் கிடைத்திடவும், மேன்மேலும் சிவபுண்ணியங்களைச் செய்திடவும், இதுபோல இன்னும்பல அரியநூல்களை மறுபதிப்புச் செய்து வெளியிடவும், சிவபுண்ணியச் செயல்கள் இன்னும்பல செய்திடவும் அறக்கட்டளையினருக்கு துணைநிற்க வேண்டுமாய் எல்லாம்வல்ல பார்வதி பரமேஸ்வரரைப் பிரார்த்திக்கின்றேன்.

இந்த அற்புதநூலை சிறந்த முறையில் அச்சிட்டு கொடுத்த திருச்சிராப்பள்ளி, ஆர்.ஜி.பிரிண்டர்ஸ் உரிமையாளர் உயர்திரு. இரா. ஞானசேகரன் அவர்களுக்கும், அவர்தம் பணியாளர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

– அடியார்க்கடியேன்,
அகோர சிவகணன் மு. ஜயக்குமார்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மருவூர் சிவஸ்ரீ கணேச சாஸ்திரிகள் அவர்களின்
பேரன்கள் - பேத்திகள்

நடுவில் : திரு. K.நடராஜன் அவர்தம் மனைவி மைதிலி அவர்கள்
இடமிருந்து வலம் : திருமதி. Dr.சசிகலா அவர்தம் கணவர் இராமநாதன் அவர்கள்
வலமிருந்து இடம் : திருமதி. N.கார்த்திக் அவர்தம் மனைவி திருமதி. லூஸி அவர்கள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முன்வரிசையில்

பேரன் : திரு. K.இராமச்சந்திரன் கொள்ளுப்பேரன் : திரு. M.G.ராமச்சந்திரன்

பின்வரிசையில் பேரன் : திரு. M.K.சுந்தரம், திரு. K.நடராஜன்



கொள்ளுப்பேரன்

திரு. M.G.இராமச்சந்திரன் அவர்தம் மனைவி திருமதி. பத்மா அவர்கள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

CENTRE FOR SAIVA STUDIES Pondicherry

சிவாய நம:

ஸ்ரீ சிவரஹஸ்யம். (மூன்றாவது புஸ்தகம்)

சிவம் என்ற நான்காவது அம்சம்

நன்றிகள் : தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரஸ்வதிமஹால் நூல் நிலையம் - ஆய்வு மையம், தஞ்சாவூர் வெளியிட்ட, ஸ்ரீ சிவரகசியம் அம்சங்கள் 4-5-6 நூலிருந்து எடுத்தாளப்பட்டது.

உரைநடை ஆக்கியோர் :
"சிரோமணி" வெ.சுவாமிநாத ஆத்ரேயன் அவர்கள்

"சகமெவையும் கற்பித்த பரேசன் இந்தச்
சகத்திலுள சீவரெல்லாம் உய்யவேண்டி
வெகுவிதமாம் கருமம் உபாசனைகள் ஞானம்
விளம்பியிடும் வேதத்தை முன்பு உண்டாக்கி
மிகவும் மகா நுண்மையதாம் அவ்வேதத்தின்
மெய்பொருளை நன்ஹாக உணரும் வண்ணம்
பகர்(ஸ்) மிருதி புராணம் இதிகாசம் மற்றும்
பலவிதமா நூற்களையும் படைத்தானன்றே. 1

அகில வித நூற்களிலும் மேலாய் நின்ற
அருமறையின் முக்கிய தாற்பரியமான
விகலமுறா-அத்துவித நிர்ணயத்தை
விளம்பியிடும் புராணம் இதிகாசங்கட்குள்
இகழ்வில் சிவரகசியம் என்றுரைக்கும் நாமம்
இசைந்த ஒருஇதிகாசம் மிகவும் மேலாம்
புகலிய இவ்விதிகாசம் பன்னிரெண்டம்சம்
பொருந்தியதாம்; மெத்தவுமே புனிதமாகும். 2

பரவிய இவ்விதிகாசம் தன்னை முன்னம்
பரமசிவன் பரமசிவைக்கு உபதேசித்தான்;
அருள்வடிவாம் அம்பிகை மற்றிந்த நூலை
அருளுடனே சண்முகனுக்கு உபதேசித்தாள்
உரிய சிவபக்திமிகும் சைகீஷவ்யற்கு
உவகையுடன் கந்தன் இதை உபதேசித்தான்
விரவு சிவ கருணையினால் அனைத்தும் பெற்ற
வியாசன் இதைச் சூத முனிக்கு உபதேசித்தான். 3

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சூதமுனி மற்றை மகா முனிவர்க்கெல்லாம்
சூட்சு மமாம் இந்நூலை யுபதேசித்தான்
ஓதிய இவ்வகையாக உலகத்தின் கண்
உத்தமமா யுள இந்நூல் விளங்கலாயிற்று...''

இவ்விதம் பிறந்த இந்த இதிகாசம் பனிரெண்டு அம்சங்களான பிரிவில் சுமார் லட்சம் ச்லோகங்கள் கொண்டு விரிந்தது. இதன் மூன்றாவது புத்தகம் இது.

மூன்றாவது அம்சம் மட்டும் கொண்ட இரண்டாவது புத்தகம் கி.பி.1971ல் இந்த நூல் நிலையத்தின் பதிப்பாக முதன்முதலில் தேவநாகரி லிபியில் வெளியிடப்பட்டது. ஹரம்-என்று பெயரிட்ட அந்த மூன்றாவது அம்சம் முப்பத்து மூவாயிரம் ச்லோகங்கள் உடையது.

சிவகுமாரன் கந்தன், ஜைகீஷவ்யர் என்ற முனிவருக்கு தன் தந்தை பரமேச்வரனுடைய பெருமையை எடுத்துச் சொன்ன வரலாறு. இதை நைமிசம் என்ற காட்டில் ஆச்ரமத்தில் சூதபுராணிகர் சௌனகர் முதலிய ரிஷிகளுக்கு எடுத்துச் சொன்னார்.

இதன் மூன்றாவது அம்சத்தில்,

பரமசிவன் பெருமையறிய பேராவல் கொண்ட ஜைகீஷவ்ய மாமுனிவர் ''பரமசிவனிடம் நித்ய சேவைபுரியும் நந்தியெம் பெருமான் முதலியவர்கள் எப்படி அந்தப் பேறு பெற்றார்கள்?'' என்று முருகப்பெருமானிடம் கேட்டார்.

முருகப்பெருமான் சொல்லுவார். ''நந்தி முதலானோர் அப்படிப்பட்ட பேறு பெற்றதில் வியப்பு ஒன்றுமில்லை. கருணை வள்ளலான பரமசிவன் தன்நிகரில்லாத பெருமான். அடியார் களிடம் பேரன்பு கொண்டவர். தனக்குத் தேவையொன்றும் இல்லாதபோதிலும் சேவை செய்வதில் பேரார்வம் கொண்டிருக்கும் அடியார்கள் மனது குதூகலித்திருக்கவே அவர்களுடைய சேவையை ஏற்றுக்கொள்கிறார். ஆண்டவனுடைய பெருமையையாவது கருணை என்ற நிறைவினால் அளவிடலாம். ஆனால் அடியார்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

களுடைய பேரன்பை அளவிடவே முடியாது. ஆண்டவனுக்கு சேவை செய்வது தவிர தன்னலமே கருதாத அப்படிப்பட்ட அடியார்களிடம் தோற்றுப்போய் ஆண்டவன் அவர்கள் விரும்பாமலேயே இகத்தில் எல்லா சுகங்களையும் மறுமையில் முக்தியையும் கொடுக்கிறான்''. இந்த உண்மையை பல பக்தர்களின் சரித்திரங்களை எடுத்துச் சொல்லி சிவரஹஸ்யத்தின் மூன்றாவது அம்சம் நிறைவு பெறுகிறது.

''சிவம்'' - நான்காவது அம்சம்:

நான்காவது அம்சத்தில் முதலில் ஜைகீஷவ்யர் முருகப் பெருமானிடம் சிவபக்தர்களில் முன்னடியார்களான நந்திகேச்வரன், சண்டீகேச்வரன் முதலியவர்கள் சரித்திரத்தை விஸ்தாரமாக எடுத்துரைக்க வேண்டும் என வேண்டிக்கொள்கிறார். முருகப் பெருமான் சிவனடியார்களின் சரித்திரங்களைச் சொல்ல ஆரம்பிக்கிறார்.

முதலில் நந்திகேச்வரன் சரித்திரம் [3–6]*

''மாகேச்வரகல்பம்'' (காலக்கணக்கிலே பலஆயிரம் வருஷங்கள் - வடமொழி மரபில் - பல யுகங்கள் முன்பு) மால்யவான் என்ற மலையில்-யோகப் பயிற்சியினால் ஆயுளை வளர்த்துக்கொண்டு - மனதை நிலைநிறுத்தி - தவத்தில் ஈடுபட்டிருந்தார் வீதஹவ்யர் என்ற முனிவர். அவர் ஆண்டவன் படைப்பில் எதுவும் உகந்ததுதான் என்ற எண்ணத்தோடு கற்களை உணவாகக் கொண்டிருந்தார். ஆகவே அவருக்கு சிலாதர் என்ற காரணப் பெயரும் உண்டு. அவர் மனைவி சித்ராவதி. ஆண்டவன் அவர்கள் முன் தோன்றினான். பிள்ளை வரம் கேட்டனர். ''இனி ஒருநாள் எனக்காக நீங்கள் யாகம் செய்யும்போது - அதற்காக பூமியை உழுங்கால் அந்த கலப்பை நுனியிலே உமக்கு ஒரு புதல்வன் கிடைப்பான்'' என்று பரமேச்வரன் அருளினார்.

---

*இங்கே குறிப்பிடப்படும் எண்ணிக்கைகள் அந்த எண்ணுள்ள அத்யாயங் களைக் குறிப்பிடுகின்றன.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தௌம்ய முனிவரை ஆசிரியராக கொண்டு யாகத்திற்கு ஆரம்பித்த சிலாதர் யாக பூமியை உழுதபோது கலப்பை நுனியில் பூமியிலிருந்து வெளிப்பட்ட ஒரு பெட்டியை எடுத்தார். அதில் ஒரு குழந்தை. அதை எடுத்து மனைவியிடம் கொடுத்துவிட்டு செய்நன்றியுடன் யாகத்தைச் செய்து முடித்தார். குழந்தையும் விளையாட்டுப் பருவத்திலேயே சிவபூஜையில் ஈடுபட்டது. உபனயனம் ஆகி வித்யைகள் கற்றபின் திருமணத்தை பெற்றோர்கள் வற்புறுத்த - பையன் சிவனைக் குறித்து தவஞ்செய்ய விரைந்தான்.

''உன்னை எனக்கு அர்ப்பணம் செய்துவிட்ட உன் மேனி நுடங்கலாகாது. எதற்குத் தவம்?'' என்று பரமேச்வரன் அவனுடைய தவத்தைக் கலைத்தார். ''எனக்குப் பூஜை செய்வதிலேயே உனக்கு ஆனந்தம். அதனால் எனக்கு ஆனந்தம். உலகுக்கும் ஆனந்தம் ஆகவே உனக்கு நந்தி என்ற பெயர் பொருந்தும். உன்னுடைய இடைவிடாத ஈடுபாடு உனக்கு என் உருவத்தையே அளிக்கும். என்னைப்போல நீயும் நான்கு கைகள், நெற்றிக்கண், கைகளில் மான் மழு அக்னி சூலம், சந்திரப்பிறை பெற்று என்னுடைய சிவ கணங்களுக்கு முதல்வனாக நாயகனாக நந்திகேச்வரன் என்று பெயர்பெற்று விளங்குவாயாக'' என்று அருள்செய்து அவரை கணாதிபதி பட்டம் அளித்து அபிஷேகம் செய்வித்தார். பித்ரு தேவர்களின் புதல்வியான ஸுயஞ்ஞா என்ற பெண்ணை மணம் செய்வித்து, கணபதி முருகன் இவர்களுக்கு ஈடான அந்தஸ்தை அளித்தார்.

அடுத்து சண்டிகேச்வர நாயனார் சரிதம் (7.8)

கர்க்க கோத்திரத்தில் பிறந்த கர்ணபத்ரர் என்ற பிராமணன் ஸுநீதி என்ற மனைவியுடன் மால்யவான் என்ற மலையில் இல்லறம் நடத்தினார். குருகுலத்தில் அவருடன் சேர்ந்து படித்த விதர்ப்ப அரசன் அச்வமேத யாகம்செய்து அதில் கர்ணபத்ரரை ஹோதாவாக நியமித்து யாகமுடிவில் உயர்ந்த ஜாதிப் பசுக்களை அவருக்கு தக்ஷிணையாக அளித்தார். அந்தப் பசுக்களை அவருடைய குமாரன் சண்டீசன் மேய்த்துவந்தான். வேத

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வேதாங்கங்கள் கற்றுத்தேர்ந்த சண்டீசனுக்கு காட்டில் லிங்கம் போன்ற கற்களைக் கண்டுவிட்டால் சிவபக்தி மேலிட்டுவிடும். தான் மேய்க்கும் பசுக்களின் பாலை சுரைக்குடுக்கைகளில்கறந்து அந்த லிங்கங்களுக்கு அபிஷேகம் செய்து இலைகளைப் பறித்து பூஜை செய்து சிவநாமம் சொல்லி நர்த்தனம்செய்ய ஆரம்பித்து விடுவான்.

மாலை வீடு திரும்பிய பசுக்கள் வற்றிய மடியுடன் வருவதைப் பார்த்து தகப்பனார் ''ஏனிப்படி?'' என்று கேட்பார். ''பசுக்கள் ஈன்று வெகுநாட்கள் ஆகிவிட்டன; பசுக்கள் மரத்துவிட்டன'' என்பான். ''பசுக்கள்கூட உலக இயலில் இருந்து விடுபட்டு ஆண்டவன்பால் ஈடுபட்டுச் செயலிழந்து நிற்கின்றன'' என்று குறிப்பால் உணர்த்துகிறான்.

தகப்பனார் சந்தேகத்துடன் அவன் மாடுமேய்க்கும் இடம் சென்று மறைந்து நின்று பார்க்கிறார். பாலைக்கறந்து பரமசிவனுக்கு அபிஷேகம் செய்து பரவசமாக பாவனையில் ஆழ்ந்துவிட்ட புதல்வனையும் அந்த லிங்கத்தையும் பார்த்து மிகுந்த கோபத்துடன் அந்த லிங்கத்தை காலால் உதைத்துவிடுகிறார். பதைத்தெழுந்த புதல்வன் பக்கத்தில் கிடந்த கோடரியை எடுத்து தந்தையின் காலை வெட்டி விடுகிறான். தந்தை இறந்து வீழ்கிறார்.

தன் நினைவுபெற்ற புதல்வன் நிகழ்ந்ததைக் கண்டு வருந்தி சிவனை வேண்டுகிறான். பார்வதி அவனுடைய பக்திப் பரவசத்தை பரமசிவனுக்கு எடுத்துச் சொல்கிறாள். கருணாமூர்த்தியான பரமேச்வரன் பிதாவுக்கு உயிர்கொடுக்கிறார். அவனையும் தன்னுடைய கணங்களுக்கு அதிபனாக நியமித்துக் கொள்கிறார்.இது சண்டேசர் சரிதம்.

ப்ருங்கி சரிதம் [9–10]

மந்தர பர்வதத்தில் ப்ருங்கி முனிவர் பரமசிவனைப் பூஜித்து வருகிறார். அவருக்கு ஒரு அசரீரி கேட்கிறது. 'விச்வனாதனான பரமேச்வரனை வலம் வருவது விசேஷம்' என்று அதன்படி வேதத்தில் உள்ள ஸ்ரீருத்ரத்தை இடைவிடாமல் சொல்லிக்கொண்டு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிவலிங்கத்தை பிரதட்சினம் செய்து வந்தார், பிருங்கி முனிவர்-வண்டு பூவை வலம் வருவதுபோல. பரமசிவன் பார்வதியோடும் கணேசன் முருகன், நந்தி, சண்டிகேசர் முதலிய பரிவாரங்களுடன் அவர் முன் தோன்றினார்.

பார்வதியைப் பார்த்து ''இந்த முனிவருக்கு அருள் செய்வாயாக'' என்று கனிந்து மொழிந்தார். தேவிக்கு கோபம். பிரதட்சிணஞ் செய்த முனிவர் தன்னைப் பரமனிடமிருந்து பிரித்து வைத்து பரமனை மட்டும் வலம் வந்தாரே என்று. ஆகாசவாணியைக் கேட்டு அதன் ஆணையை அப்படியே கடைபிடிக்க முனைந்த முனிவருக்கு பரமனும் பார்வதியும் பிரிக்க முடியாதவர்கள் என்பது தெரியாது. பிரிப்பது குற்றம் என்பதும் தெரியாது. பக்தியில் செய்த பிழை ஆதலால் பொருத்தருளுவது தான் முறை. இந்த உண்மையை பரமசிவன் பார்வதிக்கு எடுத்துரைக்க பரமனும் பார்வதியும் அவருக்கு ''தாம் இணை பிரியாத தத்துவம்'' என்று எடுத்துச் சொல்லி அவரையும் தமது கணங்களில் சேர்த்துக் கொள்கிறார்கள்.

உபமன்யு சரிதம் [11-12]

புமன்யு என்ற ருஷியின் குமாரர் ஹுமன்யு. அவருடைய மனைவி வஸிஷ்டருடைய சகோதரி. இவர்களுக்கு ஒரு குழந்தை உபமன்யு. ஏழைகள் கிடைத்ததைக் கொண்டு திருப்தியோடு வாழும் அந்த தம்பதிகள். தாயார் குழந்தைக்கு அரிசிமாவை தண்ணீரில் பிசைந்து பாலாக்கி அதைக் காய்ச்சிக் கொடுத்தாள். தாயின் அன்போடு கிடைத்த அந்தப் பாலை குழந்தை குடித்து வளர்ந்தது.

ஒரு சமயம் மாமனான வஸிஷ்டர் ஆச்ரமத்திற்கு தாயாரோடு சென்றது குழந்தை. வஸிஷ்டர் ஆச்ரமத்தில் பசுக்கள் அதிகம். வஸிஷ்டர் மனைவி அருந்ததி மருகோன் உபமன்யுவுக்கு நல்ல பசும்பாலைக் காய்ச்சிக் கொடுத்தாள். குழந்தை அதைக்குடித்ததும் சுத்தமான பாலின் ருசி தெரிந்தது. பிறகு தன் ஆச்ரமத்திற்கு வந்த குழந்தை - மாப்பால் வேண்டாம். பசும்பால்தான் வேண்டுமென்று

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அழுதது. பிடிவாதம் பிடித்தது. தாய் சொன்னாள். ''குழந்தாய் பசுபதியை பூஜிக்காதவர்களுக்கு பசுக்கள் கிடைக்காது. கிடைத்தாலும் காப்பாற்றமுடியாது. நமக்கு பசுக்கள் இல்லாமல் இருப்பதிலிருந்தே பரமேச்வரனின் அருளுக்கு நாம் தகுதிபெற வில்லை என்று தெரிகிறது'' என்று சொன்னாள்.

தகப்பனார் சொன்னார் ''பரமேச்வரன் பரம கருணாமூர்த்தி. எனக்கு அவனை பூஜிக்கும் பாக்கியம் இல்லாமல் போய்விட்டது. உனக்கு அவனை அர்ச்சிக்கும் வழி சொல்லித் தருகிறேன். அதன்படி செய்வாய்'' என்று சொல்லி குழந்தைக்கு வழி சொல்லிக் கொடுத்தார்.

கபடமில்லாத குழந்தையின் உண்மையான பக்திக்கு உடன் வசப்பட்ட பரமசிவன் குழந்தையை தன் கணங்களில் சேர்த்துக் கொள்ள விழைந்தார். குழந்தை முதலில் பாலும் சோறும் தான் வேணுமென்று கேட்டான். பரமசிவன் அவன் இருக்கும் இடத்திற்கு பாற்கடலையே தருவித்துக் கொடுத்தான்.

மார்க்கண்டேய சரிதம் [13–17]

காலஞ்ஜர பர்வதத்தில் மிருகண்டு மஹரிஷி விசாலாக்ஷி என்ற பத்னியோடுகூட பரமசிவனை ஆராதித்து வந்தார். அங்கு நாரதர் வந்தார். அவர்களுக்கு, 'அண்மையில் அருமையான புத்திரன் பிறப்பான் என்றும் அவனுக்கு ஆயுள் பதினாறு ஆண்டுகள் தான்' என்றும் சொல்லிப் போனார். பிள்ளை பிறந்தது. பரமசிவ பக்தனாகவே வளர்ந்தது. பதினைந்தாவது வயதில் கலக்கமுற்றிருந்த பெற்றோர்களிடம் இருந்து முதன்முதலாக தனக்கு மரணம் சமீபித்திருப்பதை அறிகிறான் மார்க்கண்டேயன். மிகுந்த ஆயுளை காலகாலனான பரமேச்வரனை ஆராதிப்பதில் செலவழிப்பதுதான் பெரும்பேறு என்று பேரார்வத்துடன் சிவனை ஆராதித்தான்.

குறிப்பிட்ட நேரத்தில் -சிவனை வழிபட்டுக் கொண்டிருக்கும் மார்க்கண்டேயனுடைய உயிரைப்பிரிக்க வருகிறான் யமதர்மராஜன். பரமசிவன் சூலத்திற்கு பலியாகிறான். மார்க்கண்டேயன் சிரஞ்ஜீவி வரம் பெறுகிறான். தேவர்கள் பரமேச்வரனை வேண்ட-சிவன்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

யமனை மறுபடியும் பிழைக்க வைத்து ''சிவபக்தர்களிடம் உன் ஆணை செல்லாது. மற்ற உயிர்களிடம் உன் ஆணையைச் செலுத்துவாய்'' என்று அருளி மறைகிறார்.

கௌதம சரிதம் [18–19]

சிவபக்தரான கௌதம முனிவர் குசாவர்த்தத்தில் இருந்து கொண்டு இந்திரனிடம் மோகித்துக் கெட்டுப்போன மனைவியை மீண்டும்பெற்று அவளை தனக்கு தகுதியாக்கிக் கொள்ள-கோதாவரி ஸ்னானம்செய்து, ஆயிரக்கணக்கான சிவபக்தர்களுக்கு அன்னதானம் செய்ய விழைந்தார். அன்னதானம் செய்வதற்காக பூமியை உழுது பயிரிட்டு வந்தார். அவரிடம் பொறாமை கொண்டவர்கள் அந்த நிலத்தில் மாடுகளை மேயவிட்டனர். அந்த மாடுகளை விரட்டினபோது - ஒரு மாடு அடிபட்டு வீழ்ந்து இறந்தது. பசுவதை செய்துவிட்ட மஹாபாதகர் என்று சொல்லி பக்தர்களை''அவர் கையால் அன்னமிட்டுச் சாப்பிடுவது தவறு'' என்று தடுத்துவிட்டார்கள். அவர்களை ''சிவபக்திக்குத் தகுதியில்லாமல் போவீர்கள்'' என்று சபித்துவிடுகிறார் கௌதமர்.

சுகமுனிவரின் சரிதம் [20]

மித்ராவருணருடைய குமாரர்கள் வஸிஷ்டரும் அகஸ்தியரும். வஸிஷ்டர் பிள்ளை சக்தி, சக்தியின் பிள்ளை பராசரர், பராசரரின் பிள்ளை வ்யாஸர். வ்யாஸருக்கு சுகர் பிறந்தார். சுகர் தாயின் கர்ப்பத்தில் இருந்தபோதே - பரமசிவன் அவருக்கு பரஞானத்தை அருளினார். குழந்தை ஞானியாகவே பிறந்தது. அந்தக் குழந்தையின் வாக்கிலே பிறந்த ஸ்தோத்ரம் ''சுகமஹிம்ந:'' ஸ்தோத்ரம்.

அகஸ்தியர் கடலைக் குடித்தது [21]

லோபாமுத்திரையின் கணவரான அகஸ்தியர் காசியில் ''அகஸ்த்யேச்வரர்'' என்ற லிங்கத்தை பிரதிஷ்டை செய்து பூஜித்து வந்தார். தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் சண்டை மூண்டது. தோல்வியடைந்த போதெல்லாம் அசுரர்கள் கடலில் மூழ்கி மறைந்து தங்கள் பலத்தைப் பெருக்கிக் கொண்டனர். மீண்டும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

புறப்பட்டு தேவர்களுக்கு இன்னல்விளைவித்தனர். தேவர்கள் அகஸ்தியரிடம் முறையிட்டனர். அவர் சிவனை நினைத்து கடலைக் கைத்தலத்தில் வாங்கி குடித்துவிட்டார். வற்றின கடலில் ஒளிந்திருந்த அசுரர்களை தேவர்கள் வென்றனர்.

ததீசி க்ஷுபர்கள் சரிதம் [22–23]

ப்ருகு வம்சத்தில் பிறந்த துந்துமூகர் ததீசி-தகப்பனாரிடம் ஸகல வித்யைகளையும் கற்றார். அவரோடு சூரிய வம்சத்தில் பிறந்த சர்யாதியின் குமாரர் க்ஷுபன் என்ற ராஜகுமாரனும் படித்தார். மாணவ நண்பரான ததீசிக்கு தான் பதவிக்கு வந்தபிறகு நிறையப்பொருள் தருவதாக க்ஷுபன் வாக்குறுதி அளித்தான். அவன் பதவி ஏற்றபிறகு ததீசர் அரசனைக் கண்டு அவனுடைய வாக்குறுதியை நினைவு மூட்டினான். க்ஷுபன் சிரித்தான். ததீசிக்கு ரோஷம் பிறந்தது. சிவனைக் குறித்து தவஞ் செய்தார். அவன் அருளால் பெருஞ் செல்வம் பெற்றார். காட்டில் வாழ்ந்து வந்தார். அவரைப் பார்க்கவந்தான் க்ஷுபன். அவனை வரவேற்று உபசரித்தார் ததீசி. அந்த ராஜோபசாரத்தில் திருப்தி அடையவதற்கு பதில் அரசன் பொறாமைப்பட்டான். சண்டைக்கு இழுத்தான். தர்ப்பை வீச்சினால் அவனைத் தேக்கினார் ததீசி. விஷ்ணு பகவான் க்ஷுபனுக்கு உதவி செய்ய வந்தார். 'சிவபக்தர்களிடம் விஷ்ணு பராக்ரமம் செல்லாது' என்ற அறிவுரை கூறினார் ததீசி.

ரிடி சரிதம் [24]

உத்தாலகருடைய குமாரர் ரிடி. அவனை அறிவற்ற மூடன் என்று பிதா இகழ்ந்தார். நீலமலையில் ஏறி நீலேச்வரன் என்ற சிவலிங்கத்தை பூஜித்து சிவபெருமான் அருள் பெற்று சிவகணங்களில் ஒருவனாகும் பேறு பெற்றார்.

இருபத்தைந்தாவது அத்யாயத்தில் கண்வர், விச்வாமித்ரர், கபிலர், துர்வாஸர், ப்ருகு, ஸநந்தர், ஸநந்தனர் முதலியவர்கள் தவஞ்செய்து சிவனருள் பெற்று சிவஸாயுஜ்யம் அடைந்த சரிதம் சொல்லப்படுகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பிர்ம்மாவுக்கு சிவனருள் கிடைத்த வரலாறு [26–28]

உலகத்தை ச்ருஷ்டிக்கும் கர்வம் மிகுந்துவிட்டது பிரம்மனுக்கு. சிவநிந்தையில் இறங்கினார். சிவன் ருத்ரனை ஏவினார். ருத்ரன் பிரம்மனுடைய ஐந்துதலைகளில் ஒன்றைக் கொய்தார். அந்த பிரம்ம கபாலம் ருத்ரன் கையில் ஒட்டிக்கொண்டு விட்டது. ''ஸ்ரீ ருத்ரத்தை ஜபம் செய்துகொண்டு க்ஷேத்ரங்கள் தோறும் சுற்றிவா. எங்கு அது (பிரம்ம கபாலம்) விடுபடுகிறதோ அதுவே முக்திக்ஷேத்ரம்'' என்று அருளினார் சிவபெருமான். கர்வம் குலைந்த பிரம்மனையும் ''சிவபூஜை இடைவிடாது செய்க'' என்று அருளி மறைந்தார்.

ருத்ரன் க்ஷேத்ராடன முறையில் வைகுண்டம் சென்றபோது விஷ்வக்ஸேனரால் தடுக்கப்பட்டார். சூலத்தினால் அவரை மாய்த்து உள்ளே சென்றார் ருத்ரன். விஷ்ணு அவரை வரவேற்று பிட்சை அளித்தார். அதனால் திருப்தி அடைந்த ருத்ரன் விஷ்வக்ஸேனரைப் பிழைப்பித்தார். அங்கிருந்து காசி வந்து மணிகர்ணிகாக் கரையில் அவருடைய கையில் இருந்த பிரம்ம கபாலம் கீழேவிழ அங்கு மூழ்கி பரமேச்வரனை மணிகர்ணிகேச்வரனாக பூஜித்து சிவஸாயுஜ்யம் அடைந்தார். பிரம்மனும் அந்த கபாலமோசன தீர்த்தத்தில் மூழ்கி சிவநிந்தை என்ற பாபம் நீங்கி தன் நிலை சேர்ந்தார்.

இந்திரனுக்கு பிரம்மஹத்தி நீங்கின சாரம் [29]

இந்திரன் வ்ருத்ரன் என்ற (அசுரனானாலும் தன்னுடைய தவவலிமையினால் பெருமை பெற்ற) அசுரனைக்கொன்ற பாவம் நீங்க மதுரை மீனாட்சிசுந்தரேசர்களை வழிபட்டான்.

திருவீழிமிழலை சரிதம் [30–31]

அசுரர்களை வென்று தங்களைக் காப்பாற்ற வேண்டும் என்று தேவர்கள் வேண்ட மஹாவிஷ்ணு திருவீழிமிழலையில் சிவனை உபாசித்தார். அவருக்கு உதவிசெய்யக் காவேரியும் அவ்வழியே வந்தது. லக்ஷ்மீதேவி உதவிசெய்ய-தேவர்களும் முனிவர்களுடன் ஆச்சரியத்துடன் பார்த்து நிற்க - தேஜினீவனநாதருக்கு மஹா

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

விஷ்ணு ஆயிரம் தாமரைகள் கொண்டு அர்ச்சனை செய்தார். கடைசி அர்ச்சனைக்கு ஒரு பூ குறைந்தது. எப்போதும் எல்லோராலும் புகழப்பட்ட தமது தாமரைக் கண்ணைப் பறித்தெடுத்து அர்ச்சனை செய்தார். சிவபெருமான் பெருமகிழ்வு எய்தி பறித்த கண்ணைச் சேர்த்துவைத்து மஹாவிஷ்ணுவுக்கு ஸுதர்சனம் என்ற சக்ரத்தை அருளினார். அதன் உதவிகொண்டு அசுரர்களை வென்று தேவர்களைக் காப்பாற்றினார்.

பகீரத சரிதம் (32)

ஹிமவத்பர்வதத்தில் பகீரதன் தவம்செய்து சிவபெருமான் அருளால் கங்கையைப்பெற்று பித்ருக்களைக் கரை ஏற்றினான்.

முப்பத்து மூன்றாவது அத்யாயத்தில் தர்மதேவதை வ்ருஷப உருக்கொண்டு கோமுக்தீச்வரம் என்ற திருவாவடு துறையில் சிவபெருமானைக் குறித்து முதலில் நான்கு கால்களால் நின்று - பிறகு மூன்று கால்களால் பிறகு இரண்டு கால்களால் - பிறகு ஒரே காலில் நின்று தவஞ்செய்து அவன் அருளைப் பெற்று நந்தா, ஸுநந்தா, காமா, ஸுபத்ரா என்று நான்கு பசுக்களை மனைவியாகப் பெற்று சிவனுக்கு வாகனமாகியது என்ற சரிதம் சொல்லப்படு கிறது.

முப்பத்து நான்காவது அத்யாயத்தில் வருணனுக்கு கண்வர் நீர்ரோகம் வரட்டும் என்று சாபமிட்டார். அவர் ஸ்ரீ சைலநாதரை வழிபட்டு சாபவிமோசனம் பெற்றார்.

அக்னியை பிருகு மஹரிஷி எதையும் சாப்பிடு என்று சபித்தார். அவர் ஸோமநாதனை பூஜித்து விடுதலை பெற்றார். வாயுவை மதங்கருஷி வலுவிழந்து போ என்று சபித்தார். அவர் த்ரயம்பகேசனை வழிபட்டு வீர்யம் பெற்றார். ஆனி மாண்டவ்யரிடம் சாபம் பெற்ற யமன் கோகர்ணேசனை வழிபட்டு சாபத்திலிருந்து விடுபட்டார். குபேரன் சிவபெருமான் மடியில் உட்கார்ந்து இருந்த பார்வதிதேவியை காமக்கண்ணோடு பார்த்தான். கண்களில் பூ விழுந்துவிட்டது. கேதாரம் சென்று கேதாரேசனை வழிபட்டு பார்வை பெற்றான். சூரியனுக்கு இரு மனைவிகள்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சாயா, ஸம்ஞா. அவர்களில் ஒருத்தியைப் புறக்கணித்து ஒருத்தியுடன் ஸல்லாபித்த ஸூர்யனை த்வஷ்டா ''ஒளி இழந்து போவாய்'' என்று சபித்தார். காஞ்சியில் ஏகாம்பரநாதனை வழிபட்டு இழந்த ஒளியை மீண்டும் பெற்றார் சூரியன். மாமனாரான தக்ஷனால் சபிக்கப்பட்ட சந்திரனுக்கு தொழுநோய் வந்தது. சிதம்பரத்தில் வந்து நடராஜப் பெருமானை வழிபட்டு வளர்பிறைகளைப் பெற்றான். இப்படி தேவர்களை எல்லோரும் சிவனை வழிபட்டு துன்பம் துலைத்து இன்பம் பெற்றனர் என்ற வரலாறு கூறப்படுகிறது.

முப்பத்தைந்தாவது அத்யாயத்தில் விச்வாவஸு காநபந்து ஸுபந்து நாரதர் பர்வதர் முதலியவர் பரமேச்வரனை வழிபட்டு கானவித்யையில் தேர்ச்சி பெற்றனர்.

எட்டுவஸுக்கள் எட்டு மருத்துக்கள் பனிரெண்டு ஆதித்யர்கள் அச்வினி தேவர்கள் பித்ருக்கள் கிரஹங்கள் இவர்கள் கும்பகோணம் திருவிடைமருதூர் திருச்சாய்க்காடு முதலிய க்ஷேத்ரங்களில் பரமசிவனை வழிபட்டு பேறு பெற்றார்கள்.

இங்கு எவ்வளவு சுருக்கமாக சரிதங்கள் கூறப்பட்டிருக் கின்றனவோ அவ்வளவு சுருக்கமாகத்தான் கிரந்தத்திலும் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனால் அவரவர்கள் சிவபெருமானை நினைத்து ஸ்தோத்திரங்கள் செய்திருக்கிறார்களே அவைகள் விஸ்தாரமாக இருக்கின்றன. ஒவ்வொரு துதியிலும் புதிய புதிய கருத்துக்கள். வந்தது வராமல் சந்தமும் விருத்தமும் மாறி மாறி சொற்சிலம்பங்களாகவே அமைந்திருக்கின்றன.

முக்கியமாக நான்காவது, ஐந்தாவது அத்யாயங்களில் நந்திகேச்வரனுடைய துதியும் பின்பு சண்டீசன், ப்ருங்கி, உபமன்யு, மார்க்கண்டேயன் துதிகள் சுகமஹிம்நஸ்தோத்ரம் இவை கருத்துச் செரிவாலும் சொல்லாட்சியாலும். சிறந்தவை. மார்க்கண்டேயன் பாடும் சந்திரசேகர அஷ்டகம் பாரதநாட்டில் மூலை முடுக்குகள் எல்லாம் வீடுகள் தோறும் பாடப்பெறுகிறது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

சிவாய நம:

சிவரஹஸ்யம்

நான்காம் அம்சம் - ''சிவம்''

''மஹேதிகாஸம்''

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

முதல் அத்தியாயம்.

ஜைகிஷவ்யர் பிரார்த்தனை.

ஜைகிஷவ்ய முனிவர் ஸ்கந்தமூர்த்தியை வணங்கி, ''சிவ பெருமானாகிய வெண்டாமரைமலரை மலரச்செய்யும் சூரியனும், தாரகமாரகனுமாகிய ஒ சுவாமின்! தேவரீராற் கூறப்பட்ட பரமபாவனமாகிய சிவசரித்திரங்களை இதுகாறும் செவியாரக் கேட்டுவந்தேன். இன்னமும் அச்சிவசரித்திரங்களையே கேட்கும் விருப்பமிக்குடையனாய் இருக்கின்றேன் ஆகலின், சைவ சிரோம்ணி யாகிய சிவதுண்டியின் சரித்திரமும், பரமாத்புதமாகிய கணங்களது சரித்திரங்களும் அடியேனுக்குக் கூறவேண்டும்''.

''எம்பெருமானே, சிவகணங்கள் கணத்வத்தையடைந்த காரணம் யாது? நந்திகேசர் முதலிய கணாதிபர்களும், விண்டு பிரமன் முதலிய தேவர்களும். ததீசி, மார்க்கண்டேயர், கவுதமர், கடோத்பவர், உபமன்னியு, பிருகு, தூர்வாசர் முதலிய முனிவர்களும், தேவதேவரும் உலகிற்குச் சுகமளிப்போரும் மகேஶ்வரருமாகிய சம்புவையுபாசிக்க, அவர் பிரசன்னராய் வந்தபொழுது அவரிடம் இவரெல்லாம் சகலவரங்களையும் பெற்றது எவ்விதம்? இவற்றைக் கருணையுடன் கூறவேண்டும்''.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

"ஓ கருணைக்கடலே! உலகிலுள்ள ஆசிரியன்மார்களெல்லாம் முக்குணவயப்பட்டு உழல்கின்றவர். எனக்கு ஆசிரியராயுள்ள தேவரீரோவெனின் பரம்பொருளும், நிர்க்குணராகிய இறைவரும், ஷாட்குண்ணிய பரிபூரணரும், சிவனாரது புத்திரருமாய் உள்ளவர். ஆகலான் தேவர்களுக்குச் சம்புவினிடம் பக்தி உதிப்பதற்கு ஏதுவாயும் பரம சுபகரமாயுமுள்ள சிவபக்தர்களது சரித்திரத்தைத் தங்களிடமிருந்து கேட்க விரும்புகின்றேன்".

"ஏனெனின், தேவதேவனும் விரூபாக்ஷனும் சங்கரனும் சகல காமங்களை அளிப்பவனும் பேரானந்தனுமாகிய மகாதேவனிடம் பக்தியுதிப்பதற்குச் சிவபக்தர்களது சரித்திரமே பரம ஹேது வாயுள்ளது. எவனுடைய பக்தியினாலும் ஞானத்தினாலும் எல்லாம் அறியப்படுமோ, எந்த ஆன்மாவையறிந்தால் சிவமயமாகலாமோ, எவன் குணங்களைக் கடந்தவனாய்ப் பரமகலியாண குணங் களோடுங்கூடி யாவர்க்கும் அனுக்கிரகஞ் செய்கின்றானோ, எந்த இறைவனைத் தியானித்து முனிவர்கள் சகலத்தையும் துச்சமென்று தள்ளி முத்தியடைகின்றனரோ அந்தச் சிவனே சநாதனமாயுள்ளவன். ஆகலான் நாமரூப கதாசாரங்களால் சிரவணஞ் செய்ய வேண்டியவனும் மனனஞ் செய்யவேண்டியவனும் அவ் விறைவனே. சிவானந்த சமுத்திரத்திற்குப் பரமானந்தமளிக்கும் சந்திரனும் அவ்விறைவனே".

"சேனானீ என்று சுருதியால் கோஷிக்கப்படுகின்றவரும் தேவசேனாபதி என்று தேவர்களால் போற்றப்படுகின்றவரும் தேவரீரே யன்றோ? ஓ சுவாமின், அபாரகிருபாசாரமாகிய பனித் திவலைகளாயும் சம்பு பக்தியைச் செழிக்கச் செய்கின்றனவாயுமுள்ள சம்புவினுடைய கதாவசனங்களால் என்னை குளிரச்செய்வீராக".

"ஓ கங்காபுத்திரரே, அடியேனிடம் கிருபைகூர்ந்து சிவபக்திக்கு ஏதுவாகிய சரித்திரங்களை அருள்செய்யவேண்டும். ஏனெனின் சிவபக்தியொன்றே சிரேயசைக் கொடுப்பதாயும் முக்திக்கு ஏதுவாயுமுள்ளது. ஆகலான் பக்தி முக்யமேயன்றி ஞானம் முக்கியமன்று. ஞானமோ மனோவாக்குக்கு எட்டாதது. எட்டாத தாகிய ஞானம் மனிதர்களுக்கு எட்டுவது துர்லபமன்றோ? ஆகவே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிவபக்தியால் சிவப்பிரசாதமும் சிவப்பிரசாதத்தால் சிவஞானமுமுண்டாம்''.

★□''இம்முறையான் அடையவேண்டிய சிவப்பிரசாதம் அற்றவர்களுக்கு முக்குணச் செய்கைகளே மிகுதியாயிருக்கும். எங்ஙனமெனின், ராஜஸகுணமுடையோர்களது மனம் எப்பொழுதும் விஷயவாசனைகளிலும், தாமதகுணமுடையோர்களது மனம் இம்சித்தல் முதலிய பாவச்செயல்களிலும், சத்வகுணமுடையோர்களது மனம் பசுபுண்ணியங்களாகிய யாகதான முதலிய தருமங்களிலுஞ் செல்லுகின்றன''.

★□ ''இம்முக்குணங்களையும் இக்குணங்களின் செயல்களையும் தேவர், அசுரர், மனிதர் ஆகிய மூவர்களும் உடையவர்களே. இவர்களுக்குப் புண்ணியங்களால் தேவத்வமும் பாவங்களால் விலங்கு பறவை ஊர்வனவாதியாகச் சொல்லப்பட்ட திரியக் ஜன்மங்களும் வருவனவாம்''.

''இனித் திரிநேத்திரனாகிய இறைவனிடம் உண்டாகவேண்டிய பக்தியானது முக்குணங்களையுந் தாண்டத்தக்கவரிடத்தே உண்டாகின்றது. அதுவேயமன்றிச் சமம்,தமம், உபாதி, திதீக்ஷை, சிரத்தை, சமாதி அஹிம்சை, பிரம்மசாரியம், சகல பூதங்களிடத்துங் கருணை, நல்லோராயினும் தீயோராயினும் மற்றை எவராயினும் அவரிடத்தெல்லாம் சிவத்தோற்றம், பக்தியுடன் கூடிய ஞானம், சிவார்ச்சனம், பஸ்மருத்திராக்ஷதாரணம், சிவகதாஸ்ரவணம் ஆகிய இவைகளும் உண்டாகின்றன''.

''ஒ வல்லிநாதனே! சகுணனாக வுபாசிக்கப்படும் இறைவனே நிர்க்குணனாய் அறிய வேண்டியவன் எனவும், நிர்க்குணனாய சிவனையறிய வேண்டுமாயின் உபாசனையின்றி யமையாதெனவும் பிரமாணங்கூறுதலால் ஞானத்துக்குச் சாதனம் எங்ஙனம் வேண்டப்படுமோ அங்ஙனமே பக்திக்குஞ் சாதனம் அவசியம் வேண்டப்படும் என்றறிகின்றேன்''.

''ஒ கார்த்திகேயனே! இச்சரீரத்தினுள் இருதயகமலத்தின் கண்விளங்கும் இரண்மயனும் இரண்யபாஹுவும் பரமேஸ்வரனும் விஸ்வேசனும் உமாசகாயனும் ஆகிய பரமேஸ்வரனை எப்பொழுதுந்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தானாகத் தியானிக்கவேண்டும். இந்த இருதயவாசியாசியாகிய உமா சகாயன் ஆன்மாக்கள் வேண்டும் போகமோக்ஷங்களை அளித்ததற்குச் சகுண நிர்க்குண சொரூபம் உடையவனாகலான் ஒருவன் ஓர் இஷ்ட காமியத்தைக் கருதி அவ்விறைவனைச் சகுணனாய் ஓர் கணநேரம் தியானிப்பானாயின் அவன் எண்ணியதினும் லக்ஷம் பங்கு அதிகமாய்ப் பெறுவன். நிர்க்குண சொரூபனாய் ஒருவன் தியானிப்பானாயின் அவன் நிர்க்குணனாகிய சிவனேயாகின்றான்''.

''காமங்களைக் கருதிப் புண்ணியபாவங்களைச் செய்வோன் வாசனாவசத்தனாய்ச் சுவர்க்கநரகங்களை யடைகின்றான். ஞானவான் சிவஞானத்தான் சிவத்வம் அடைகின்றான்''.

''ஒருவன் சகுண நிர்க்குணமென்பதை உணராது சிவம் என்கிற ஞானமொன்றை மாத்திரமுடையனாய்ப் பக்திசெய்வானாயின் அதனாற்றானே வேண்டப்படும் போக மோக்ஷங்கள் எல்லா மடைகிறான்''.

''இங்ஙனம் பரிபாகத்துக்கேற்பப் போக மோக்ஷங்களை அளிக்க வல்ல அந்த மகாதேவனே நிர்க்குணன்; அவனே பிரஹ்மா; அவனே ருத்திரன்; அவனே இந்திரன்; அவனே அக்ஷரன்; அவனே பரமேஶ்வரன்; அவனே விஷ்ணு; அவனே பிராணன்; அவனே காலன்; அவனே அக்னி; அவனே சந்திரன்; அவனே உள்ளதா யிருப்பதும் உண்டாவதுமாகிய எல்லாப் பொருளுமாம். அவனைப் பக்திஞானத்தால் அறிந்தவன் மிருத்யுவைக்கடந்து செல்கின்றான்''.

''ஆகலான் அச்சம்புவாகிய பகவானையே கீர்த்தனங்களாலும் புராணங்களாலும் சிரவணமும் மனனமுஞ் செய்யவேண்டு மன்றோ'' வென்று கூறினார். இங்ஙனங்கூறிய வசனத்தைக் கேட்ட மயூரநாதன் சிவபக்த சிரோமணியாய் விளங்கும் அச்சிவபக்தரையும் அங்குள்ள கணங்களையுந் தனது அறுமுகங்களினுமுள்ள திருக் கண்களால் அன்புடனோக்கித் தனதுள்ளத்தில் சிவபெருமானைத் தியானித்துக் கூறுகின்றார்.

முதலாம் அத்தியாயம் முற்றிற்று.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

மஹேஸ்வராய நம:

இரண்டாம் அத்தியாயம்

சாம்பவர் மகிமை.

சூதபகவான் சவுனகாதி முனிவர்களைப் பார்த்து, ''சிவபக்த சிரோமணிகாள்! சுப்பிரமணியப் பெருமான் ஜைகிஷவ்யமுனிவரைக் கண்ணுற்று, ''ஒ ஜைகிஷவ்யரே! உம்மால் உரைக்கப்பட்டன வெல்லாம் உசிதமே. சம்புவினுடைய சரித்திரமானது சகல பாவங் களைப் போக்கடிப்பதும், அச்சம்புவை யுபாசிக்கின்றவர்களது சரித்திரம் உபாசியராகிய அவருக்குப் பிரீதியை உண்டாக்குவதுமாம்''.

''ஏனெனின் இறைவனாகிய சிவபெருமான் எத்தன்மையரோ அத்தன்மையர்களே அவரை உபாசிப்பவர்களும் ஆதலால் அவ்விருவர்க்கும் பேதம் யாதுமில்லை. சாம்பவர்களது மகிமையை அறிபவர் சிவபெருமான் ஒருவரன்றி ஏனையோரல்லர். முக்தியை விரும்புவோர் சம்புவையுபாசிப்பவர்களைச் சிவனே என்று நினைத்தல்வேண்டும்''.

''ஒ முனிபுங்கவரே! ஈஸ்வரனுக்குச் சாம்பவர்களே சரமாகிய சரீரமாயிருப்பவர்கள். அசரமாகிய தாவரசரீரத்தினும் சங்கமமாகிய அச்சரசரீரம் சிறந்தது. இது யான்கூறுஞ் சம்மதவசன மாத்திரமே யன்றி என்றந்தையார் கூறும் சம்மதவசனமுமாம்''.

''இங்ஙனங்கூறிய தாவரசங்கமங்களைச் சரீரமாகவுடையோன் மஹேஸ்வரனாகிய பகவானே யாவன். அப்பகவானுக்கு மிகவும் பிரியசரீரமா யுள்ளவர் சாம்பவர்களே. அவர்களைக் காட்டிலும் வேறுயாவருமில்லை. எந்தவிடத்தில் சாம்பவசிரோமணிகளது கூட்டமுளதோ அந்தவிடத்திலும், சிவலிங்கத்தினிடத்திலும், சிறப்புடைய வில்வ விருக்ஷங்களிருக்கும் இடங்களிலும் சிவகதாப்பிரசங்க விடங்களிலும் ஸ்கந்தர் கணேசர்களுடன் பரமேஸ்வரன் அம்பிகாசமேதனாய் எப்பொழுதும் நடனஞ் செய்து கொண்டிருக்கின்றான். அவ்விடமே புண்ணிய ராசிகளுக்கும் இடமாம்; சிவஞானமும் அவ்விடத்தில் தானுள்ளது''.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

‘‘தேவதேவனான இறைவனுக்குச் சாம்பவர்களிடம் எவ்வளவு பிரீதியுள்ளதோ அவ்வளவு பிரியாநாயகியாகிய கவுரியினிடமும், விக்னேசர் ஸ்கந்தர் நந்தி முதலியோர் இடங்களினுமில்லை. சிறந்த ரத்னஹாரம் மனிதனது மனத்தைக் கவர்வதுபோல் ருத்திராக்ஷதாரிகளான சாம்பவர்கள் சம்புவினது உள்ளத்தைக் கவர்கின்றனர். ஆதலின் ஒ முனிவரே! நீர் சாம்பவர்களையடைந்து பூசிப்பீராக. அதனால் சிவபெருமானார் பிரீதியடைவார். சாம்பவர்களே அந்தணர்கள்; அவர்களே முக்தி என்னும் மங்கையுடன்கூடி விளங்குகின்றவர். அவர்கள் பிரீதியடைவார்களாயின் பகவானாகிய பரமசிவனும் பிரீதியடைகிறான்’’.

‘‘மஹேஸ்வரன் தன்னடியார்களைப் பூசிப்பதால் எவ்வளவு பிரீதியடைந்து சுபத்தை அருளுகின்றனனோ அவ்வளவு சிவலிங்கங்களைப் பூசிப்பதால் பிரீதியடைந்து அருளுவதில்லை. ஆதலால் சாம்பவர்களைப் பூசிப்பதே சிவபூஜை என்பதில் நீர் சந்தேகிக்க வேண்டாம்’’.

‘‘சாம்பவர்களாவார் சிவபக்தர்களும், சிவலிங்கத்தையே பூசிப்பவர்களும், சிவாசாரம் உடையவர்களும், பஸ்ம திரிபுண்டரம் மணிந்தவர்களும், ருத்திராக்ஷந் தரிப்பவர்களும், நிர்மலமாகிய மனமுடையவர்களும், உருத்திராத்தியாயத்தை ஜபிப்பவர்களும், பஞ்சாக்ஷர பராயணர்களும், சிவநாமங்களை அநுசந்தானம் செய்பவர்களும், சிவத்தியான பரர்களுமாவார். அவர்களே மிக்க பரிசுத்தமானவர்களும் மற்றவர்களைப் பாவனஞ் செய்கின்றவர்களுமாம். அவர்கள் பிரீதியடைவார்களாயின் பகவானாகிய மஹேஸ்வரர் பிரீதியடைகின்றார்’’.

★□‘‘ஒ முனிவரரே, இவ்வழியானன்றி மற்றெவ்வழியானுந் திருப்தியடைகிறதில்லை. மஹாதேவன் அவாப்தகாம பரிபூரணனாதலால் தன்னைப் பூசிப்பதனால் என்ன திருப்தியடைவான்? தன்னடியார்களைப் பூசிப்பதனாற்றான் பிரீதியடைகின்றான். சாம்பவர்கள் திருப்தியடைந்தால் சம்பு சந்துஷ்டியடைந்து கஷ்டத்தை நீங்கச் செய்கின்றான்’’.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

''எவனாயினும் அடியார்களுக்குத் திருப்திசெய்வானாயின் அஷ்டமூர்த்தியாகிய இறைவன் துஷ்டியடைந்து முத்தியை யளிக்கின்றான். சிவபக்தர் இருக்குமிடத்தில் சிவனிருக்கின்றான். இவர்கள் புசித்தால் சிவன் புசிக்கின்றான். இவர்கள் கஷ்டப்பட்டால் சிவன் கஷ்டப்படுகின்றான். பஸ்மருத்திராக்ஷந் தரித்து சிவனைப் பூசிப்பவன் அந்தணனாயினும் சண்டாளனாயினும் முக்தி யடைவான். இங்கு வருணாஶ்ரம தர்மம் முக்யமல்ல. பக்தி நிஷ்டையொன்றே முக்கியம்''.

''அவனது ஆசாரத்தையும் குலத்தையும் விரதத்தையும் சிவாஶ்ரமத்தையும் பரிசை்ஷ செய்ய வேண்டியது அவசியமன்று. அவனே முனி, அவனே தபஸ்வி, அவனே பரமஹம்சன், அவனே பண்டிதன், அவனே புண்ய தீர்த்தங்களுக்குச் சென்றாடினவன், அவனே உத்தமபாத்திரன், அவனே எல்லோரையும் கரையேற்றுபவன் அவனே அவ்யகவ்யங்களில் தேவபிதுர்க்களைத் திருப்தியடையச் செய்பவன், அவன் போகும் வீடுகளில் பிதுர்க்கள் கூத்தாடுகின்றனர். ஆகலான் சிவபக்தர்களிடமே சிரார்த்தங் கொடுக்கவேண்டியது. அவர் களாலேயே முன்னோர்கள் திருப்தியடைகின்றனர்''.

□''சிவபக்தர்களை விடுத்து அன்னியரிடங் கொடுக்கும் அவிர்ப்பாகமும் போசனமும் தானமும் சாம்பரிற் பண்ணின ஆகுதியேயாம், பரமேஶ்வரனும் அவர்களிடங் கோபங்கொண்டு கஷ்டத்தையே கொடுக்கின்றான்''.

★''அஷ்டமூர்த்தியாகிய இறைவனது கிருபையில் நிஷ்டை பெற்றவர்கள் சிவபக்தர்களே ஆதலால் அவர்களே உத்தம பாத்திரமாம். அவர்களையே எப்போதும் பூசிக்கவேண்டியது. சிவகணங்களும் தேவகணங்களும் முனிகணங்களும் பூவுலகில் சிவபக்தர்களாய் வந்து சிவஞானத்தால் முக்தியடைகின்றனர் ஆதலான் சிவபக்தர்களைச் சாமானியமானிடராக எண்ணாது எப்பொழுதும் பூசிக்க வேண்டும்''.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

''சாம்பவர்களே சிவசம்மதமானவர்கள், சிவபக்தியுடன் சைவாக்ரர்களாய் பஸ்மருத்திராக்ஷ தாரணர்களாய் இருப்பவர் அந்தணர் அரசர் வைசியர் சூத்திரர் மற்ற சங்கரசாதியராயினும் அவர்கள் யாவராயினும் பூசிக்க வேண்டியவர்களேயாவர். பக்தியேபெரிது. இதனினும் பெரிதானது ஒன்றுமில்லை''.

''சிலாதர், சைலாதி, சண்டிகேசர், பிருங்கி, ருடி, தண்டி, சோமநந்தி, மார்க்கண்டேயர், கடோத்பவர், உபமன்யு, ததீசி,துர்வாசர், கௌதமர், கிருஷ்ணர், சதார்ச்சனர், பிருகு, பாணர், சைப்பியர், யான், விநாயகர், கௌரி, விஷ்ணு, பிரஹ்மா, இந்திராதி தேவர்கள், குபேரன், சூரியன், சந்திரன் முதலிய கிரகபதிகள் ஆகிய இவர்களெல்லாம் விரூபாக்ஷனாகிய சிவபெருமானை ஆராதித்தே சிறந்த பதத்தைப் பெற்றிருக்கின்றனர்''.

''நந்திகேச ராதியர் கணத்வத்தையும், பிரம்மவிஷ்ணுவாதியர் சிருட்டி சாமர்த்தியம், சுதரிசனம் இவைகளையும், மற்றும் தாம்விரும்பிய பொருள்கள் எல்லாவற்றையும் சிவலிங்கார்ச்சனை யினாற்றான் பெற்றனர். அநேக அரசர்கள் ராஜ்யத்தையும் முக்தியையும் அவ்வாறே பெற்றனர்''.

''ஒ தவசீலரே, சிவகணங்களும் முனிவர்களும் பிரம்ம விஷ்ணுவாதி தேவர்களும் மஹாதேவனைப் பரமபக்தியுடன் உபாசித்து அவருடைய திருவருளைப் பெற்றதாகிய சரித்திரங் களைக் கூறுகின்றேன். எந்த சரித்திரத்தைக் கேட்ட மாத்திரத்தில் பகவானுடைய பாதாரவிந்தங்களில் மஹா பக்தி யுதிக்குமோ, எந்த சரித்திரத்தின் லேசத்தின் லேசம் சிரவணத்திற்கு ஒருதரம் விஷயமானால் முக்தி கையிற்கிடைத்த பொருளாமோ அப்படிப்பட்ட சரித்திரத்தை இம்முனிகணங்களும் தேவகணங்களும் கேட்டுப் பரமானந்தலஹரியில் விளையாடிக் களிப்பெய்துவாராக'' வென்று ஸ்கந்தமூர்த்தி உபதேசித்ததாகச் சொல்லியருளினார்.

இரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

சம்பவே நம:

மூன்றாம் அத்தியாயம்.

சிலாதமுனிவர் சரித்திரம்.

சூதபகவான் கூறுகின்றார். ''ஒ சைவசீலர்காள், ஸ்கந்தமூர்த்தி பின்னர் ஜைகிஷவ்ய மகாமுனிவரைப் பார்த்து, ''ஒ முனிபுங்கவரே! சுவர்க்க மோக்ஷங்களாகிய சகல ஐஸ்வர்யங்களைக் கொடுப்பதும், சகல ஆபத்துக்களையும் அணுகாவண்ணங் காப்பதும் மஹா தேவனது பக்தியொன்றே யாகலான், அந்த மஹாபக்தர்களுக்குத் தலைவனாய் விளங்கும் நந்திகேசனது தந்தையாகிய சிலாதமுனிவர் தவஞ்செய்து சிவபெருமானது திருவருள் பெற்றதை முன்னர்க் கூறுகின்றேன். அதனைச் சாவதானமாய்க் கேட்பீராக''.

''பூர்வம் மாஹேஸ்வரம் என்னும் பர்வதத்தில் மா பலா முதலிய பல விருக்ஷங்களாலும், நறுமணங்கமழும் அழகியமலர்களின் இனிய மகரந்தங்கள் சிதறும்வண்ணம் வீசும் மந்தமாருதத்தாலும், பக்ஷி ஜாலங்கள் கூவும் இனிய குரலோசைகளாலும், இருடிகள் முனிவர் சித்தர் கந்தர்வர் முதலியவர்கள் வந்து எப்பொழுதும் தீர்த்தமாடப் பெற்ற திவ்யசரசுகளாலுஞ் சிறப்புற்றோங்கும் இந்திரவனத்துக்குச் சமமான ஒர் வனமத்தியில் சிலாதமுனிவர் தமது மனைவியாருடன் நாடோறுந் தமக்குரிய நித்திய நியமங்களையும் அக்னிஹோத்திரம் அதிதிபூஜை முதலியவைகளையும் வழுவின்றி இயற்றி, அவைகளை மனதால் சிவபெருமானுக்கே சமர்ப்பித்தும், இவ்வைதிக நெறியேயன்றி பத்திர புஷ்ப பலங்களை விசேடமாய்ச் சம்பாதித்து பஸ்மருத்திராக்ஷங்களை யணிந்து மிக்கவன்புடன் சிவலிங்கார்ச்சனை செய்தும் வருதலாகிய சைவநெறியையும் மேற்கொண்டு காய் கனிதளிர் சருகு காற்று சலமுதலியவை களையே ஆகாரமாய்ப் புசித்து நாட்களைக் கழித்துவர அவருக்கு விருத்தப்பருவம் சமீபித்துவிட்டது''.

''அப்பொழுது அவரது மனைவியாராகிய சித்ரவதியார் என்பவர் அவர் பாதத்தில்விழுந்து வணங்கி மிக்க விநயத்தோடு,''ஒ சுவாமின்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என் மனதிலுள்ள ஓர் கோரிக்கையை விண்ணப்பஞ் செய்கின்றேன். அச்சிறிய விண்ணப்பத்தைப் பெண் வார்த்தையென்று எள்ளாமல் சீக்கிரத்தில் அருளல் வேண்டும்''.

''அது வென்னையெனின், உலகின்கண் மானுடர் புத்திரனால் நல்ல வுலகையும், பவுத்திரனால் அங்கு நிலைபெறுதலையும் அடைகின்றனர். நாம் புத்திரப் பேறற்றவர்களாய் இருக்கின்றோம். புத்திரப்பேறற்றவர்களின் பிறப்பு உலகநிந்தனைக்கு இடமாயிருக் கின்றது. அபுத்திரவானுக்கும் கதியில்லையென்று சுருதிகளுங் கூறுகின்றன. நாமோ ஜரையால் மூடப்பட்டவர்களாய் இருக்கின்றோம். இது வரையில் நமக்குக் குலவிர்த்திக்கு ஏதுவான சந்தானம் யாதுமில்லை''.

''ஆகலின் இக்குறையை நீக்கிக்கொள்ள நாம் சிவபெருமானைக் குறித்துத் தவமியற்றல் வேண்டும். அத்தவத்தினாலேயே நாம் நம்முடைய வேண்டுகோளைச் சீக்கிரத்தில் சாதித்துக்கொள்ள வேண்டும். தவமொன்றானே போகமோக்ஷங்கள் சித்திக்கின்றன. பூர்வம் முனிவர்களும் தவத்தினாலேயே எண்ணிய எண்ணி யாங்கு எய்தியிருக்கின்றனர். ஆகலின் தாங்கள் தவத்தை உத்தேசித்துப் பரமேஶ்வரனைச் சரணமடையுங்கள்.

''பரமேஶ்வரனைக் குறித்துத் தவமியற்றி வேண்டிய பொருளை யாவர் அடைந்திலர்? சிவசொரூபமாகிய சிவலிங்கத்தை விதிப்படி பூசித்து வழிபடுவோரது கரத்தைவிட்டு முத்திமங்கை எங்கு செல்வாள்?''

''பிரமவிஷ்ணு ருத்திரர், இந்திராதியர், யக்ஷர், கிம்புருடர், சாரணர், சித்தர், கந்தருவர், மனிதர், அசுரர், அரக்கர் முதலியோர் அடைந்திருக்கும் பதங்களெல்லாம் சிவாராதனையால் அன்றி மற்றெதனால் அடையப்பட்டன?''

''ஆகலின், புத்திரப்பேறற்ற நமது குறையைச் சிவாராதனத் தினாலேயே நீக்கிக் கொள்ளல்வேண்டும்'' என்று கூறிய மனைவியின் வசனத்தை முனிவர் கேட்டு மிக்க கிலேசத்துடன், 'ஓ கற்புடையாளே! நீ கூறியதுயுக்தமே எனக்குத் தவத்தில்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

விருப்பமில்லையா? நான் அதனைச் சாதிக்கும் வன்மையுடைய வனே. மக்கட்பேறற்றவனது கிருகந் தனதானியங்களால் நிறையப் பெற்றுளதாயினும் அது வனமாகவும், அஃதுள்ளவன் இருக்குமிடம் வனமாயினும் அது கிருகமாகவுங் காணப்படுகின்றது. இவற்றை இங்கு வசிக்கும் வனவாசிகளிடத்தே நீ காண்பாய். இந்த வனத்திலுள்ளவர்கள் தமது குழந்தைகள் பக்கத்தில் வந்து படுத்து நித்திரைசெய்யப் பரமானந்தத்தையடைந்து சுகிக்கின்றனர்''.

''இவர்களன்றிக் குரங்குகளும் தங்களுடைய இடுப்பில் இறுகக்கட்டிய குட்டிகளைப் பிரேமையுடன் சாக்கிரதையாய்க் கவனித்துக்கொண்டு மரங்களில் தாவித்தாவிச் செல்லுகின்றன.''

''இதுபோலவே பறவையினங்களும் தங்கள் தங்கள் குஞ்சுகளிடத்தில் மிகப்பிரேமையுடன் திக்குகள்தோறுஞ் சென்று வாயினால் அவைகளுக்குரிய உணவுகளைக் கொண்டுவந்து தமது கூட்டையடைந்து அவைகட்கு வூட்டிக் களிக்கின்றன''.

''இவ்வண்ணம் எல்லா வுயிர்களும் விரும்பும் புத்திரப்பேறு இன்றியமையாததே. குலஹேதுவான அப்புத்திரப்பேறு இனி நமக்குப் பக்த பராதீனனாகிய சிவபெருமானைப் பக்தியுடன் ஆராதிப்பதினாலேயே கிடைக்கக்கூடியது. அவரதனைத் தந்தருள்வார் என்பதிற் சந்தேகமில்லை. பக்தபராதீனாகிய சிவபெருமான் அவ்வாறு அனுக்கிரகஞ் செய்வாரென ருத்திரோப நிடதமே கூறுகின்றதென்று மனைவிக்குக்கூறி, பஸ்மருத்திராக்ஷ தாரணஞ் செய்துகொண்டு மௌனியாய்ப் பஞ்சாக்ஷரத்தை ஜபித்தும், உருத்திரத்தை ஆவர்த்திசெய்தும், அங்கோர் சிகரத்தி லுள்ள சிவலிங்கமூர்த்தியைப் பூஜித்தும், கனி கிழங்கு சல முதலியவற்றை முறையே ஓரோர் வருடம் புசித்து மனவாக்குக் காயங்களை அடக்கிச் சிவபெருமானிடஞ் சித்தத்தை லயிக்கச் செய்தும், பின்னர் காய்கனி முதலியவைகளையும் விட்டுக் கல்லையே பத்துவருடம் புசித்துச் சிவத்தியானஞ் செய்தும் வந்தனர்''.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

''சிவபெருமான் அவரது தவத்தைக்கண்டு மிக்கப் பிரீதி யடைந்து உமாசகாயராய் விஷ்ணு பிரஹ்மாதி- தேவர்களும் மற்றைய யக்ஷ கந்தர்வ கின்னர கிம்புருட சித்த வித்தியாதர சாரணர்களும் சிரமேற் கைகூப்பித் தோத்திரஞ்செய்ய அம் முனிவருக்கு எதிரில் தோன்றினார்''.

சிலாதமுனிவர் சிவபெருமானைத் துதித்த துதிகள்

தோன்றவும் முனிவர்பெருமான் சிவபெருமானைத் தரிசித்துப் பேரானந்தம் அடைந்தவராய்ச், ''சதுர்ப்புஜனாகிய விஷ்ணுமூர்த்தி யினது புதல்வனான மன்மதனைக் கொளுத்திய சாம்பரைத் தரிப்பவரும், சதுர்வேதங்களால் துதிக்கப்பெற்ற பாதுகையை உடையவரும், சதுர்வித புருஷார்த்தபோகங்களைத் தருபவரும், சதுர்த்திக்குகளை ஆடையாக வுடையவரும், சதுர் முகனால் துதிக்கப்பட்டவரும், சிவ பெருமானாரும், சதுர்த்த (துரீய)ரும், எப்பொழுதும் அத்வைத (இரண்டற்றவ)ரும் ஆகிய தேவரீரை நமஸ்கரிக்கின்றேன்''.

''பஞ்சகோசத்துக்குள் இருக்கும் ஈஸ்வரரும், பஞ்சபூதமயமாகிய பிரபஞ்சத்தை யழிப்பவரும், பஞ்சபாணனது மனவிருளைத் தொலையச் செய்பவரும், பரமசிவனாரும், பஞ்சாக்ஷரவுரு வுடையவரும், பஞ்சமகாபாதகத்தைப் போக்கடிப்பவரும், பஞ்சாக்ஷர மந்திரத்துக்கு எப்பொழுதும் பிரசன்னரும் ஆகியதேவரீரை நமஸ்கரிக்கிறேன்'' என்று துதித்தனர்.

முனிவர் இவ்வண்ணம் செய்ததோத்திரங்களால் சிவபெருமான் பரமபிரீதியடைந்து முனிவரைநோக்கி, ''ஒ வைதஹவ்யனே! நீ வேண்டும்'' வரங்களைக் கேட்பாயாகில் அவைகளை யாமளிக் கின்றனம் எனத் திருவாய்மலர்ந்தருள, முனிவர், ''எம்பெருமானே! தேவரீரது சரணாரவிந்தங்களில் உண்டாகும் பக்தியே சகல கர்மங்களையுங் கொடுத்தலால் அச்சரணாரவிந்தங்களினின்றும் அகலாத பக்தியும், அடியேனுடையவம்சம் விர்த்தியாவதற்குத் தீர்க்காயுளையுடைய ஓர் புத்திரனையும் அருள்செய்ய வேண்டும்'' என்று பிரார்த்திக்க, சிவபெருமான் புன்னகையரும்பி, ''ஒ

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முனிவனே! உனக்கு இப்பொழுது விருத்தபருவம் வந்து விட்டமையால் இனிப் புத்திரனுண்டாதலரிது. ஆதலால் சர்வதேவஸ்வரூபனும், யஜ்ஞேஸ்வரனுமாகிய என்னைக் குறித்து யாகஞ்செய்யத் தொடங்குவாய். நீ அந்த யக்ஞசாலையின் நிமித்தம் பூமியை உழும்பொழுது அவ்விடத்தில் அயோனிஜனாகிய ஓர் சத்புத்திரன் கிடைப்பான். அவன் எனக்குச் சமானமானவன். ஒ தவசீலனே! நீ கல்லைப்புசித்துத் தவஞ் செய்தமையால் மஹாயோகியாய் சிலாதன் என்னும் பெயருடையனாய் வாழ்ந்து பின்னர் நம்முலகில் கணாதிபனாய் இருக்கக் கடவாய்'' என்றருளித் திருவுருக்கரந்தனர்.

உடனே அம்முனிபுங்கவர் தமது பத்தினியுடன் தமக்குக் காட்சிகொடுத்த சிவபெருமானது திருவுருவத்தை நினைந்து பரவசராய்த் திக்குநோக்கி அநேகமுறை நமஸ்கரித்து, அவ்விறைவர் ஆணையை மனதில் நினைந்து, தமதிருப்பிடஞ்சென்று யஜ்ஞத்துக்கு வேண்டிய சம்பாரங்களைச் சேகரிக்கமுயன்று மிக்க பெரியோர்களாகிய அந்தணர்களுடன் ஆலோசித்து, அம்மலையின் மீது பெருக்கெடுத்து வரும் புண்ணிய நதிக்கரையில் யாகஞ்செய்ய நிச்சயித்தனர் என்று திருவாய் மலர்ந்தருளினர்.

மூன்றாம் அத்தியாயம் முற்றிற்று.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

பிநாகிநே நம:

நான்காம் அத்தியாயம்

நந்திகேசர் உற்பத்தி.

சூதமுனிவர் மகருஷிகளைப் பார்த்து, ''ஒ சாம்பவர்காள்! ஷண்முகக்கடவுள் ஜைகிஷவ்யருக்குச் சிலாதருடைய தவநிலையைச் சொல்லிமுடித்தவுடன், அம்முனிவர் அடிபணிந்து, ஒ பன்னிருகையனே! இதுகாறும் வைதஹவ்ய முனிவர் தவமியற்றிச் சிவானுக்கிரகம் பெற்று யாகஞ்செய்யத் தொடங்கியதைக் கூறியதுபோலும், இனி அவரது ஏனைய சரித்திரங்களையும் விரிவாய் உரைத்தருளவேண்டும்'' என்று பிரார்த்தித்தனர்.

அறுமுகக்கடவுள் கிருபைகூர்ந்து, ''ஒ முனிவரே! வைதஹவ்ய முனிவர் பூர்வத்தில் தாம் தவமியற்றிய மாலனகிரியில் சிவபெருமான் அனுக்கிரகித்த வண்ணம் யாகத்தால் அப் பெருமானைத் திருப்திசெய்ய வெண்ணி, பர்க்ககர்ப்பகுலத்திற் பிறந்தவர்களாகிய வைநச வாலகில்யர்களை ருத்விக்குகளாகவும், குணி என்பவரைப் பிரம்மாவாகவும், பார்க்கவரை ஹோதாவாகவும், தும்புருவை உத்காதாவாகவும், அநமித்ரரைச் சதசியராகவும் இருக்கப் பிரார்த்தித்துக்கொண்டு, விதிப்படி மிகச்சிறப்புடன் அளவிறந்த தக்ஷணையோடு அன்னதான முதலியவைகளையும் நடத்த, தக்க பெரியோர்களை நியமித்து, பின்னர் தாம் நான்குநாள் தீக்ஷா நியமத்துடனிருந்து, அந்தயஞ்ஞுத்துக்குரிய பூமியைக் கலப்பையால் உழும்பொழுது அக்கலப்பை வாயினின்று பொன்மயமாகிய ஓர் பெட்டிகிடைக்க அதனை அளவற்ற ஆனந்தத்துடனெடுத்துச் சதசியரிடங் கொண்டுபோய்த் திறந்தனர்''.

திறக்கவும் அதனுள் திவ்வியாபரணங்களோடு பூரண சந்திரனைப் போலும் பிரகாசிக்கும் ஓர் குழந்தை சயனித் திருத்தலைக்கண்டு பத்தினியை அழைத்துக்காட்டிப் பரமாச்சரியம் உற்றிருக்கும்பொழுது ருத்விக்குகளாயுள்ள முனிசிரேஷ்டர்கள் அவரைப் பார்த்து, ''ஒ முனிபுங்கவரே! இக்குழந்தை உங்களுக்குச்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிவபெருமானால் கொடுத்தருளப்பெற்ற புத்திரனாகும். உம்முடை பாக்கியமே பாக்கியமென்று புகழ்ந்தனர். பிரஹ்மேந்திராதி சகலதேவர்களும் வித்தியாதரர் முதலாயினாரும் நாரதாதி மஹாமுனிவரும் புஷ்பவருஷம் வருஷித்தனர். தேவதுந்துபி முழங்கிற்று''.

''இந்த வைபவங்களையெல்லாம் வைதஹவ்ய முனிவர் கண்டு களித்து தமது கையால் அக்குழந்தையை வாரியெடுத்துத் தன் பத்தினியினிடங்கொடுத்து ஸ்தன்யபானஞ் செய்வித்து, பின்னர் ஜாதகர்மத்துக்குரிய சகல சுபங்களையும் முறையாய் நடத்திக் கோதான பூதான சுவர்னதான முதலிய பற்பலதானங்களை அந்தணர் வேண்டுமளவுங்கொடுத்து அங்கு வீற்றிருந்த பிரஹ்மேந்திராதி சகலரையும் அவரவர் முறையறிந்து பூசித்து நின்றனர்''.

''அப்பொழுது பிரமன் இந்திரனைப் பார்த்து இப்புதல்வன் யாவருக்கும் ஆனந்தம் அளிப்பவனாய் விளங்குகின்றமையால் நந்தீசன் என்னும் பெயரான் வழங்கப்பெறுவான் என்றனன், ஏனைய முனிவரெல்லாம் இப்புதல்வன் சிலையை அசனஞ்செய்தவரின் புதல்வனாதலால் சைலாதி என்னும் பெயரானும் வழங்கப் பெறுவான்'' என்றனர்.

இவ்வண்ணம் யாவரானும் நந்தீசர் என்றும் சைலாதி என்றும் நாமகரணஞ் செய்யப்பெற்ற பின்னர் வைதஹவ்ய முனிவர் மனமகிழ்ந்து வந்திருந்த யாவரையும் இனியசொல்லுடன் உபசரித்து யாகத்தைச் செய்துமுடித்து மிகுந்திருந்த பொருள் எல்லாவற்றையும் தானஞ்செய்து சகல அந்தணர்களாலும் ஆசீர்வதிக்கப்பெற்று மனையாளுடன் தமது ஆச்சிரமத்தை அடைந்தனர்.

அவரது புதல்வராகிய நந்தீசரும் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து பாலப்பருவத்தையடைய, தந்தையார் அவரது பொலிவைக்கண்டு பெறுமவற்றுள் பெறுதற் கரிய இம்மக்கட்பேறு நம்பெருமானாகிய சிவபெருமான் தந்தபேறல்லவா வென்று நினைத்துப் போற்றிப் புகழ்ந்து, இனி நம்புதல்வனுக்கு ஆதிபகவன்றாளைத் தொழுதற்கு இன்றியமை

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

யாத கல்வியைக் கற்பிக்கவேண்டுமென்று வித்தியாரம்பஞ்செய்து வைத்தனர்.

அப்புதல்வரும் சந்திரகலாதரனது அருளால் சகலகலைகளையுங் கற்றுணர்ந்து மாதாபிதாக்களை மகிழ்வித்தனர். இவரது கலை ஞானத்தைக் கண்டுகளித்த தந்தை, இனி நம் புதல்வனுக்கு வேதவேதாந்தங்களையும் அறியும் வண்ணம் செய்யவேண்டு மென்று உபநயனச் சடங்கு மியற்றி சதுர்வேதங்களையும் வேதாங் கங்களையும் நன்றாய் ஓதுவித்தனர். முன்னர் வேதநாயகனாகிய என்றந்தைபால் நான்கு வேதங்களையுங் கற்றுணர்ந்துபிரமன் வேதாவெனப் பெயர்பெற்றது போலும், அப்புதல்வரும், வேத சாரங்களை நன்குணர்ந்து வேதாந்தியென வேதியர்களால் போற்றப்பெற்றனர்.

ஓ ஜைகிஷவ்யரே! பின்னர் அப்புதல்வனார் நாம் கற்றதனாலாய பயனென்கொல், என்று தம்முள்ளத்தெண்ணி வாலறிவனாகிய சிவபெருமானை உபாசனைசெய்ய ஆசைகொண்டனர். அவரது ஆசையைக்கண்ட அவர் தந்தை இதுவல்லவோ கல்வியறிவினுக்குப் பயனென்று மகிழ்ந்து பஞ்சாக்ஷர மந்திரோபதேசஞ்செய்து சிவபூஜா விதியையுங் கற்பித்தனர்.

நந்தீசர் பஞ்சாக்ஷர மந்திரோபதேசமும் சிவபூஜாவிதியும் கைவரப்பெறவே பேரானந்தப் பெருங்களிப்படைந்து தாய்தந்தை யரிடம் விடைபெற்றுக் குருகுலவாசஞ்செய்து தினந்தோறும் தன்னொடு ஒத்தவரோடு பத்திரபுஷ்ப பலாதிகளைச் சேகரித்து நித்தியகர்மானுஷ்டானங்களையும் முடித்துக்கொண்டு, பின்னர் தம்மோடுள்ள பிள்ளைகளையெல்லாம் பஸ்மருத்திராக்ஷ மணிந்து பரமேஶ்வரனைப் பூசைசெய்யும்படிச் செய்வித்துத் தாமும் அப்பரம சிவனை வேதாகம விதிப்படி பக்தியுடன் பூசித்து ஆனந்தக்கடலில் மூழ்கி, ''பிரமனது கபாலத்தை மாலையாகக் கட்டியணிந்தவரும், திரிசூலத்தைக் கையிலேந்தினவரும், சந்திரகலையால் விளங்கும் முடியுடையோரும் கங்காளசிவனுமாகிய உம்மை நமஸ்கரிக் கின்றேன்''.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

''மகாமேருவின் சிகரத்தில் வசிப்பவரும், காலவளவையைக் கடந்தவரும், விநாயகரால் பூஜிக்கப்படுகின்றவரும், கஜாசுரனை வதைத்து அவனது தோலைப் போர்த்தவருமாகிய ஒ இறைவனே! திடபத்தியுடைய பெரியோர்களால் தேடப்பட்டவனே! மனது ஒருமைப்பட்டுச் செய்யும் பாவனை ஒன்றினாலேயே பார்க்கப்படும் பரமனே! வேதவேதாந்தங்களாலும் தேடப்பெறும் விமலனே! உம்முடையகருணை அடியேனிடம் எப்பொழுது உதிக்குமோ? என்று எப்போதுந் துதி செய்துகொண்டு, பதக்கிரமத்தோடு வேதங்களல்லாம் ஓதியுணர்ந்து, பன்னிரண்டு வருடம் குருகுல வாசஞ்செய்து, அவர்மகிழுமாறு குருவின்கருத்துக்கு இசைந்த தக்ஷணையைக் கொடுத்து விடைபெற்று, தமது கிருகத்திற்கு வந்து தாய்தந்தையர்களை நமஸ்கரித்து நின்றனர்.

அவ்விருவரும் தம்மரிய புதல்வனைப்பார்த்து ஆனந்த பரவசராய், ''ஒ எங்கள் நந்தீசா! உன்னுடைய ரூபலாவண்ணியங் களுக்குத் தக்க ஓர் கன்னிகையை உனக்குக் கலியாணஞ் செய்வித்துக் களிக்கவேண்டுமென்று எண்ணங் கொண்டிருக் கின்றனம்'' என்ன, நந்தீசர் அவர்களை வணங்கி, ''ஒ அம்மையப்பர் களே! யான் ஊனமடைந்த உடம்பின் பிறவியைப் புனிதமாக்கிக் கொள்வதற்கு ஜகதீசனான சம்புவைக்குறித்துத் தவஞ்செய்ய விரும்புகின்றேன் ஆதலின் அடியேனுக்கு விடையளித்தல் வேண்டும். விடையளிப்பீராயின் யானெண்ணியபடி தவஞ்செய்து மஹாதேவனது திருவருள் கிடைக்கப்பெற்றுப் பின்னர் உங்கள் அபீஷ்டத்தை நிறைவேற்றுகின்றேன்'' என்று கைகூப்பி நிற்க, வைதஹவ்யமுனிவர், ''அப்பா! புத்திரா! மலர் போன்ற மெல்லிய உனது தேகமெங்கே தவமெங்கே இப்பொழுது நீ யவ்வன பருவத்தை உடையவனாதலால் உனது சித்தம் சஞ்சலிக்கும் சுபாவத்தைப் பெறுமே, தேவர்களும் தவத்துக்கு இடையூறு செய்வார்களே, தவத்துக்குரியகாலமும் இதுவல்லவே, இப்பருவங் கடந்தால் தவத்துக்கு ஒருவிதத்தானும் இடையூறு வாராது. அப்பொழுது நீ எண்ணியவாறு தவத்திலிருக்கலாம். உனக்காக யான் நெடுங்காலந் தவமியற்றியுள்ளேன். நீ எனக்குப்பரம்பொருளின்

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

அருளால் கிடைக்கப்பெற்ற அரும்பெரும் புதல்வன். நீ என்னிடத்தில் வேறுவிதமான சாகசஞ்செய்ய வேண்டாம். உன்தாயானவள் நீ தவத்துக்குப் போகிறேனென்று சொல்லியதைக் கேட்டு உனது பிரிவையெண்ணித் துயரமெய்துகின்றனள். ஆதலால் நீ எங்கள் அருகிருந்து எங்களைக்களிக்கச் செய்வதே உனக்குப்பெருந்தவம் என்றெண்ணுவாய்'' என்றனர்.

அதற்கு நந்திதேவர், ''ஒ எனது தாய் தந்தையர்களே! சகல ஜகதீசனும், கருணையே திருமேனியாக்கொண்டவனும், கறைக் கண்டனும், கலாதரனும், கபர்த்தியும், காலகாலனும், கைலாச நாதனுமான இறைவனது கருணை இருக்குமாயின், என்னைக் காமம் என்செய்யும். அவன் காமதகனனன்றோ. அவன் சாத்தியனாயின் அசாத்தியமானது யாதுளது''.

''யான் தேவபதத்தை விரும்பினாலன்றோ தேவர்கள் எனக்கு இடையூறு செய்யலாம். யான் வேண்டியது திரிலோசனனது பாத பக்தியே. அந்தப் பக்தியொன்று இருக்குமாயின் கிடைக்காதது யாது. இது நிச்சயம் என்றறிமின். என் விஷயமாய்க் கொண்டகவலையை யகற்றிவிடுமின்'' என்று கூறி, அம்மலையில் ஓர் ஆச்சிரமமியற்றி அதிலிருந்து பஸ்மருத்திராக்ஷ மணிந்துகொண்டு மஹாசாம்பவராய்ப் பஞ்சாக்ஷரம் உருத்திரமுதலியவைகளைச் செபித்துப் புண்ணிய கரமாகிய வில்வமுதலியவற்றால் சிவலிங்கமூர்த்தியைப் பூசித்து வந்தனர். இவரது சைவதவத்தைக் கண்டதேவரும் பரம சந்தோஷத்தை யடைந்தனரென்று உபதேசித்ததாகக் கூறினார்.

நான்காம் அத்தியாயம் முற்றிற்று.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

உ

சசிசேகரராய நம:

ஐந்தாம் அத்தியாயம்.

நந்தீசர் சிவபெருமானைத் துதித்தல்.

சூதபகவான் சவுனகாதியர்களைப் பார்த்து, ஒ பாசுபதர்களே! மயூரவாகனனாகிய சுப்பிரமணியக்கடவுள் ஜைகிஷவ்யமுனிவருக்கு நந்திப்பெருமானது தவநிலையைக் கூறியபொழுது அம்மகா முனிவர் ஆராவன்புடையராய், ''ஒ சத்திதரனே! அந்நந்திப் பெருமானது தவநிலைமையை இன்னமுங் கேட்கவிரும்புகிறேன்'' என்று பிரார்த்திக்க ஷண்முகக்கடவுள் கூறுகின்றார்.

''ஒ ஜைகிஷவ்யரே! நந்தீசர் என்றந்தைபால் மனதைச் செலுத்தி ஆகாராதிகளையொழித்து பஞ்சாக்னி மத்தியினின்று இரவும் பகலும் சோம்பல் நித்திரையின்றி நூறுவருடம் இடைவிடாது அதிவுக்கிரமாய்த் தவமியற்றி வந்தனர்''.

இவரது தவநிலைமையை முனிவர்களும் பிரஹ்ம விஷ்ணுவாதிதேவர்களுங் கண்டு இதுகாறும் இங்ஙனமான அரிய தவமியற்றினார் யாவரென்று மிகவும் ஆச்சரியம் அடையச் சிவபெருமானும் மகிழ்ந்து இடபாரூடராய்ச் சகலதேவவிருடிகளுடன் அவரெதிரிற்றோன்றி, ''ஒ நந்தீ! உனது தவத்துக்கு மிக்க பிரீதி அடைந்தேன். உனக்கு வேண்டும் வரங்கள் யாவை? அவற்றைத் தந்தருள்கின்றேம்'' என்று திருவாய் மலர்ந்தனன்.

நந்தீசர் உடனே கண்விழித்துக் கண்டுகளித்து ஆனந்த பரவசராய் நமஸ்காரஞ்செய்து அஞ்சலியஸ்தராய் நின்று தோத்திரஞ்செய்து மீண்டும் பணிந்தெழுந்து ஆனந்தக்கண்ணீர் பொழிந்து பகவானை நோக்கி,

நந்தீசர் சிவபெருமானைத் துதித்த துதிகள்

''ஒ சுவாமி! அந்தகாசுரன், வேள்வி, திரிபுரம், மாரன், கஜாசுரன் ஆகிய இவர்களை அழித்த அரனே ஜய ஜய'',

Digitization by Hindu-Heritage-Foundation-of-America, HHFA(USA)

''சண்முகன் விக்னேசன் இவர்களிடம் வாத்சல்யத்துடன் விளங்கும் அழகிய புந்நகையுடைய முகமுடையோனே ஜயஜய'',

''பிரணவாதி வேதாந்தவசனங்கட்கும் எட்டாத ஐயனே! ஜய ஜய'',

''விஶ்வாதிகனும் விமலனும் சர்ப்பாபரணனும் ஆகிய சர்வேஶ்வரனே ஜய ஜய'',

''மஹாமேருவை வில்லாகவும், மஹாவிஷ்ணுவைப் பாண மாகவும் தரித்த மஹாபாகுவே ஜய ஜய'',

''சகல ஜகங்களுக்கும் ஆதாரனும், சந்திர சூடனுமாகிய கடவுளே, மஹா நடனஞ்செய்வோனும் மந்தரகைலாசனும் ஆகிய மஹேசனே ஜய ஜய'',

''தீனதாயாளுவும், உபாசிப்பவர்கட்கு மோக்ஷத்தை யளிப் பவனும், ஏனையோர்களைப் பாசபந்தங்கட்கு உட்படுத்தி வருத்து வோனும், தன்னைப் பிரார்த்திக்கின்றவர்களுக்குச் சகல கலியாண பரம்பரைகளைத் தந்தருள்வோனும் ஆகிய சம்புவே ஜய ஜய'',

''மாயையைக் கடந்தானும், பிரமாத்ரு பிரமேயங்களுக்கு எட்டாதவனும், சிவமந்திரத்தினால் அடையக்கூடியவனும், ஜகங்களின் தோற்றமாதிகளைச் செய்கின்றவனும் ஆகிய ஜகதீஶ்வரனே ஜய ஜய'',

''சாமகானஞ் செய்யுமிடத்தில் சந்தோஷத்துடன் வந்து விளங்கும் சர்வஞ்ஞனே ஜய ஜய'',

''சகல சராசாரங்களையும் புசிப்போலும், சகலதேவர்களுக்கும் ஈசனும் ஆகிய சர்வனே! காலகாலனே! விஷ்ணு இந்திராதியர்களால் வணங்கப்படும் பாதாரவிந்தமுடைய பரமனே! பசுபதியே! ஆலால முண்ட கண்டனே! அகிலலோசனனே! அடியேனிடம் அருள் புரியும்'' என்று துதித்தனர்.

ஐந்தாம் அத்தியாயம் முற்றிற்று.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

வாமதேவாய நம:

ஆறாம் அத்தியாயம்.

நந்தீசருக்குப் பட்டாபிஷேக திருக்கலியாணம்.

ஒ ஜைகிஷவ்யரே! இவ்வண்ணம் நந்தீசர் செய்த தோத்திரத் திற்குப் பரமேஸ்வரன் மகிழ்ந்து, "ஒ நந்தீ! தவத்தால் மிகவும் வாட்டமுற்றிருக்கின்ற வுனக்கு யாதுவேண்டும். அதனைச் சொல்வாயாக" என்று வினவ, நந்தீசர், "ஒ இறைவனே! தேவரீரது பாதாரவிந்தத்தில் நீங்காதிருக்கும் பக்தியும், சிவலிங்கார்ச்சனமும், ருத்திரசெபமும், பஸ்மதாரணமும், இவைகளில் உறுதியான அன்பும் இருத்தல் வேண்டும்" என்று பிரார்த்தித்தனர்.

அதற்குச் சிவபெருமான், அவரது அரியவரத்துக்கு அகமகிழ்ந்து "அவ்வண்ணமே ஆகுக" என்றருள் புரிந்து திருவுருக்கரந்தனன். இறைவன் மறைந்துபோயின பின்னர், நந்தீசர் உருத்திரத்தைச் செபித்து, சிவலிங்கார்ச்சனை செய்து, ஜலம் வாயு இவைகளைப் பட்சித்து, முன்போல் நூறுவருடம் தவஞ்செய்து வந்தனர்.

சிவபெருமான் பிரத்தியக்ஷமாய், "ஒ நந்தீ! நீ ஏன் அடிக்கடி தவஞ்செய்து வருந்துகின்றனை? இப்பொழுது உனக்குக் கணேந்திரத்வத்தையும், என்னுடைய ஆணை எங்கும் நடப்பது போல் உனைதாணையும் நடக்க ஓர் அதிகாரசத்தியையும் அநுக்கிரகஞ் செய்தோம்" என்றனன்.

நந்தீசர் இறைவனை நமஸ்கரித்து, "எம்பெருமானே! ஆன்மாக்களுடைய இருவினையின்வழி யாண்டுஞ் செல்கின்ற உனதாணையிருக்க அவ்வாணையிலுஞ்சிறந்ததோ யான் செலுத்தப் போகும் ஆணை. ஆயினும் அடியேன்பால் தேவரீர் வைத்திருக்குங் கருணையை யாவருமறிய இவ்வண்ணம் அனுக்கிரகஞ் செய்தமையான் அடியேனுக்களித்த ஆணையானது சிவ லிங்கார்ச்சனம், உருத்திர ஜபம், பஸ்மருத்திராக்ஷதாரணம் ஆகிய இவைகளுக்கு அன்னியமான அர்ச்சனையும், ஜபமும், தாரணமும்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

எவராயினுஞ் செய்வாராயின், அவர்கள்பால் சென்று அவர்களை அழிக்கவும், சிவலிங்கார்ச்சனை செய்வார்பாற் சென்று அவர்களைக் காக்கவுமான ஆற்றலுடையதாயிருத்தல் வேண்டும்'' என்று பிரார்த்திக்க, இறைவன், அவ்வாறே ஆகுக என்றுகூறி மறைந்து போயினன்.

பின்னரும் நந்தீசர் ஓராகாரமுமின்றி முன்போல் அதியுக்ரமான தவஞ்செய்து கொண்டிருந்தனர். நூறுவருடமுடிந்தவுடன் இறைவன் இடபாரூடராய்வர நந்தீசர் சாஷ்டாங்கமாய்ப் பூமியில்வீழ்ந்து நமஸ்கரித்துக் கைகூப்பி நின்று, ''மஹாவிஷ்ணுவின் கண்மலரால் அர்ச்சிக்கப்பட்ட சரணாம்புஜஉடையோரும், நீலகண்டரும், சந்திரசேகரரும், சூரியசந்திர அக்னிலோசனரும், மங்கைபாகருமாகிய மஹேசரே! தேவரீரை வணங்குகின்றேன்''.

''பொங்கிப்புரண்டு ஆர்ப்பரித்துவந்த கங்காப்பிரவாகத்தை ஓர் சிறிய கர்ப்பூரகண்டம் போல் சடைமுடியில் அடக்கியவரும், அரவாபரண மணிந்து அற்புதநடனஞ்செய்பவருமாகிய இறைவனே! தேவரீரைப் பூஜிக்கின்றேன்''.

''கணேச சண்முகர்களை அன்புடன் நோக்கும் அழகிய கடாக்ஷமுடையோரும், யானைத்தோலைத் தரித்தவரும், மஹேசரும், தேவதேவரும், சிதானந்தருமாகிய தேவரீரை வணங்குகின்றேன்''.

''அசங்கரும், சுயம்பிரகாசரும், ஆத்மராமரும், வாமதேவாதி களால் அடையப்பெற்றவரும், ஆனந்தஸ்வரூபருமாகிய தேவரீரைப் பூஜிக்கின்றேன்''.

''ஒ ஜகதீஶ்வரா! தேவரீர் சரணார விந்தங்களையே எப்பொழுதும் உள்ளத்தில் சிந்தித்துக் கொண்டிருக்கும் அடியேனிடம் அபாரகருணை புரிதல் அவசியமன்றோ'' என்று இவ்வண்ணமான தோத்திரங்கள் அநேகமாய்ச் செய்யவே, மகாதேவர் மிகவும் பிரீதியடைந்து, ''ஒ குழந்தாய்! நீ செய்துவரும் அரிய தவத்துக்கு யாம் என்ன செய்யப்போகின்றேம். நீ எம்மைப்போலும் நித்தியனாக விருந்து யாவரானும் தோத்திரஞ் செய்யப்பெறுவாய்'' என்று அருகிலழைத்து இந்திராதியர்களைப் பார்த்து, ''நாம் நந்திக்கு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திவ்யரூபமும், சடைமுடியும், சந்திரகலையும், நீலகண்டமும், திரிநேத்திரமும், சதுர்ப்புஜமும், மான் முதலியனவும், யானைத் தோலும் அளித்தேம். பட்டாபிஷேகமுஞ் செய்கின்றேம்'' என்று பத்திராசனத்தில் இருக்கச் செய்து, விஷ்ணுமுதலிய தேவர்களைப் பார்த்து, ''ஒ தேவர்காள்! யாம் இவனைச் சகல கணாதிபர்களுக்கும் அதிபனாகச் செய்தேம். விநாயகர் ஸ்கந்தர் முதலியோரைப்போல் எமக்கும் அம்பிகைக்கும் இவனொருமகன். சகலதேவராலும் எம்மைப்போல் பூசிக்கத்தக்கவன். இனிச் சிவஜ்ஞானத்தைப் போதிப்பதற்கு இவனே ஆசிரியன். எமக்கு இவனே சரீரம்'' என்று வாயார அன்புடன் திருவாய்மலர்ந்து, பின்னர் அப்சரஸ்திரீகள் நடனஞ்செய்ய, தேவதுந்துபிமுழங்க, சகலதேவர்களும் புஷ்ப வருஷம் வருஷிக்க, பிதுர்த்தேவரது மனதினின்றுந் தோன்றிய சுயஜ்ஞை என்னும் கன்னிகாரத்தினத்தைக் கலியாணஞ் செய்வித்தனர். தேவியும், அச்சுயஜ்ஞையை, ''ஒ மருமகளே!'' என்றழைத்துத் தழுவி ஆசீர்வதித்தனள். உடனே சிவபெருமான் மகனாராகிய நந்தீசரை மருமகளோடு அழைத்துக்கொண்டு விநாயகர் யான் முதலியவர்களுடன் கயிலாயகிரியைப் போய்ச் சேர்ந்தனர் என்று திருவாய்மலர்ந்தருளிய வண்ணம் கூறினார்.

ஆறாம் அத்தியாயம் முற்றிற்று.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

உ

விரூபாக்ஷாய நம:

ஏழாம் அத்தியாயம்.

சண்டீச உபாக்யானம்.

சூதபகவான் கூறுகின்றார். சிவபூஜா துரந்தரர்களாகிய சவுனகாதியர்களே! சுவாமிநாதர் திருவாய்மலர்ந்த நந்தீசரது மகிமா விலாசத்தைக் கேட்ட ஜைகிஷவ்யர் கார்த்திகேயரைப் பணிந்து, ''பரமாத்புதமாகிய நந்தீசர் சரித்திரங்கேட்டுப் பரமானந்தமடைந் திருக்கின்றேன். இனி மகாயோகியாகிய சண்டீசர் தனது தந்தையைக் கொன்ற மஹா பாதகத்துக்குத் தலைவராயிருக்க அவரைச் சிவபெருமான் கணத்தலைவராகச் செய்த அற்புதம்யாது? அதனை அடியேனிடங் கருணைகூர்ந்து உரைத்தருளல் வேண்டும் என்று பிரார்த்திக்க; சுப்பிரமணியக்கடவுள் கிருபைகூர்ந்து முனிவரை நோக்கி, ''ஒ முனிவரே! மிக்க புண்ணியகரமாகிய அச்சரித்திரத்தைக் கூறுகின்றேன் சாவதானமாய்க் கேட்பீராக''.

''பூர்வம் கர்க்க குலத்திற்றோன்றிய கணபத்திரன் என்னும் ஒரந்தணன் மாலியவானென்னும் பர்வதத்தில ஒர் பர்னசாலை யியற்றிக்கொண்டு தனது வருணாஸ்ரம தருமங்களை வழுவாது அநுஷ்டித்து வந்தனன்''.

''அவனுக்கு மனைவியாயிருந்த சுநீதை என்பவள் துறந்தார்ப் பேணலும், விருந்தயர்தலும், வறியார்மாட்டு அருளுடைமையுமாகிய நற்குணங்களானும், வாழ்க்கைக்குவேண்டும் பொருள்களறிந்து கடைப்பிடித்தலும், அடுதற்றொழில்வன்மையு மாகிய பிறசெய்கை களானும், அவனை மனமகிழ்வித்து அவன் வேண்டும் பணிகளும் செய்து, தேவபூஜை, அதிதிபூஜை முதலியவற்றிற்குத் துணை யாயும் இருந்தனள்''.

''அவ்வந்தணன் நற்குண நற்செய்கை வாய்ந்த மனைவியுடன் நாம்நடத்தும் இல்லறத்தால் அடையத்தகும்பயன் சிவனருளன்றி வேறென்னையென்று நிச்சயித்துப் பஸ்மருத்திராக்ஷதாரணம்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிவபூஜை முதலிய சைவதருமங்களை இடைவிடாது அநுட்டித்துக் கொண்டு காலங்கழித்துவருநாளில், ஒர்நாள் விதர்ப்பதே சத்தரனாகிய அனமித்திரன் என்பவன் இரதமேறி அம்மலைவழியாய் வருவதைப் பார்த்து எதிர்சென்று அதிதிக்குச் செய்வதாகிய சத்காரங்களைச் செய்ய, அவ்வரசன் அம்முனிவனடியில் வீழ்ந்து வணங்கி, 'சுவாமிகாள்! இவ்வனத்திலுள்ள முனிவர்களும் விலங்குபறவைகளும் ஒர் குறையுமின்றிக் குசலமாயிருக்கின்றனவா' வென்று கேட்டுப் பின்னர், 'ஒ முனிபுங்கவரே! அடியேன் சிவபெருமானை யாகத்திற்சிறந்த அஸ்வமேதத்தாற் பூசிக்க விரும்பி அதற்குத் தாங்கள் ஹோதாவாயிருப்பதற்கு அழைத்துக் கொண்டுபோக இன்று நகரத்தைவிடுத்து இவ்விடம் தங்களது பாதாரவிந்தங்களைத் தெரிசிப்பதற்கு வந்தனன்' என்றனன்.

அதனைக் கேட்ட அந்தக் கணபத்திர முனிவனும், 'ஒ அரசனே! உனது நாடுநகரங்களெல்லாம் செழிப்படைந்திருக்கின்றனவா? வருணாச்சிரமதருமங்கள் வழுவாமல் நடந்து வருகின்றனவா? நீ உலகைக் கொடுங்கோலொழித்துச் செங்கோலால் நடத்தி வருகின்றனையா? அம்பிகாபதியின் பக்தி அனைவருக்கும் உண்டாக்கி வருகின்றனையா?' என்று குசலவினாக்களை வினவ, அரசனும், 'ஒ சுவாமி! தேவரீரது அருளால் அவ்வாறே நடத்தி வருகின்றேன்; யாதொரு குறைவுமில்லை. தேவரீர் அருள் கூர்ந்து யாகத்துக்கு வரவேண்டும்' என்றுப் பிரார்த்திக்க, முனிவனும் அதற்கிசைந்து யஞ்ஞசாலையை அடைந்தனன்.

பின்னர் அரசன் ருத்விக்குகளால் தீக்ஷிக்கப்பெற்று யாகத்துக் குரிய லக்ஷணமுள்ள ஒர்சிறந்த குதிரையை விதிப்படி அலங்கரித்துப் பூஜித்துவிடுத்தனன். அந்தக் குதிரையும் வெளியே சென்று யாவராலும் தடைப்படாது மீண்டுயஞ்ஞ சாலையை வந்தடைந்தது.

பின்னர் அவன் அஸ்வமேததத்தை விதிப்படி நடத்திக் கோதான, பூதான, சுவர்னதான, அன்னதான முதலியவைகளை அளவில்லனவாகச் செய்து அவபிருதுஸ்நானமுடித்துச் சகல அந்தணர்களையும் சந்தோஷத்துடன் அனுப்பி, கார்க்கியனாகிய

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

கணபத்திரமுனிவனையும் அளவிறந்த கோதானமுதலிய பற்பல தானங்களால் திருப்தி செய்வித்துப் பரம சந்தோஷத்தை அடைந்தனன்.

கணபத்திரமுனிவனும் அரசனிடம் விடைபெற்று அவனால் கொடுக்கப்பட்ட சுவர்ணமுதலியவைகளைத் தனது புதல்வர்களும் சீடர்களும் முன்னே எடுத்துக்கொண்டு போகும்படி செய்து, தான் கோக்களை ஓட்டிக்கொண்டு தனதிருப்பிடம் வந்து சேர்ந்து அக்கோக்களைச் சீடர்களால் மேய்த்துவரும்படிச்செய்து அவை களுக்கோர் குறைவுமின்றிப் பரிபாலித்து வந்தனன்.

அந்நாளில் அவன் மகனாகிய சண்டன் என்பவன் பிரமசர்யாஸ் ரமத்துக்குரிய தருமங்களில் வழுவாதவனாயும், சர்வசாஸ்திரசம் பன்னனாயும், சிவார்ச்சனையின் மிக்க பிரியமுடையவனாயும், கோவானது சர்வதேவதாசொரூபம் என்பதை நன்குணர்ந்தவ னாயும் இருந்தவனாதலால் கோக்களைப் பாதுகாப்பது சிவதருமம் என்றெண்ணிச் சீடர்களோடு தானுஞ்சென்று மேய்த்து வரும் நாளில் கோக்களெல்லாம் நாளுக்குநாள் செழுமை யுடையனவாய்க் கன்றுகள் ஊட்டுங்காலமே யன்றி இச்சண்டனைக் காணுந்தோறும் இவனதுபரிசம் உண்டாகுந்தோறும் பால் சொரியத் தலைப்பட்டன.

அதனைக்கண்ட சண்டன், ‘ஆவினில் ஐந்துகந்தாடும் நமதிறைவனுக்கு இவ்வாக்களெல்லாம் பயன்படாது போதற்கோ நான் இவ்வாக்களை மேய்ப்பது, இதுவென்ன பாவம்’ என்று மனம் நைந்து, ‘இனிநான் இப்பசுக்களிடத்தில் பாலைக்கறந்து பசுபதியாகிய சிவபெருமானுக்கு அபிடேகஞ் செய்யவேண்டும்’ என்றெண்ணிக் கோக்களை வனத்திற்குக் கொண்டு வந்தவுடன் அவைகளை ஓர் பக்கத்தில்நிறுத்திப் பெரியசுரைகளாகிய பாத்திரங்களில் பால் கறந்து, அவ்வனத்திலுள்ள சிவலிங்கமூர்த்தி களுக்கும் தான் ஆன்மார்த்த மாய்ப் பூசிக்கத்தொடங்கிய சிவலிங்கத்துக்கும், மிக்கபக்தியுடன் அபிடேகஞ் செய்து வந்தனன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இவ்வண்ணந் தினந்தோறும் வனத்தில் பாலைக்கறந்து கொள்வதனால் வீட்டில் பாலைக்கறக்கும் பொழுது அக்கோக் களிடத்திற் பால்குறைந்துபோயிற்று. குறைந்துபோகவே, கார்க்கியன் தனது புதல்வனாகிய சண்டனை நோக்கி, "நீயும் கோக்களோடு போகின்றனையல்லவா, அவைகளிடத்தில் பால்குறைந்து போவதற்குக் காரணம் யாது?" என்று வினவினான்.

அதற்குச் சண்டன் உண்மையைக் கூறாமல் "தந்தையே! கோக்களுடைய கன்றுகள் முதிர்ந்துவிட்டமையால் பால்வற்றிப் போயிற்று" என்றனன். அவன் தந்தை அச்சொல்லை உண்மையென்றுகொள்ளாமல் மற்றப்பிள்ளைகளைத் தனித்தனியே விசாரித்து உண்மையை அறிந்து அதனை நேரே தான் பார்க்க எண்ணி அவ்வனத்திற் சென்று ஓர் மரத்திற்பதுங்கி ஒருவரும் அறியாவண்ணம் பார்த்திருந்தனன்.

சண்டன் கோக்களை யெல்லாம் நன்றாய் மேய்த்து அவை களை நீராட்டி ஓர் குளிர்ந்த சோலையில் நிறுத்தி மாத்தியான்னிக ஸ்நானஞ்செய்து அநுட்டான நியமங்களை முடித்துக் கொண்டு சிவநாமஸ்மரணையோடு பசுக்களிடம் வந்து பெரிய சுரைக் குடுக்கைகளில் பாலை நிரம்பக் கறந்து வரிசை வரிசையாய் வைத்துவிட்டு நாடோறுஞ்செய்துவருவதுபோல் சிவலிங்க ஸ்தாபனஞ்செய்து அவ்விலிங்கமூர்த்தியின் முடியில் ருத்திர சூக்தங்களையோதி ஒவ்வொரு சுரைக்குடுக்கைகளாய் எடுத் தெடுத்து க்ஷீரத்தை யபிடேகித்த பின்னர் சுத்தோதகத்தினாலும் அபிடேகித்து, திருவொற்றாடைசாத்தித்தும்பை முதலிய பல வனமலர்களால் அருச்சித்துக் கனிவகைகளைக் குன்றுபோற் குவித்து நிவேதனஞ்செய்து, ஏனைத் திரவியங்கள் அனைத்தையும் மந்திரபூர்வகமாய் மனத்தாற் சிந்தித்து அர்ப்பணஞ்செய்து, ஆனந்தக்கூத்தாடி, யோகத்திலிருந்து தோத்திரஞ் செய்தனன்.

செய்தலும், சிவனருள் கலக்கப் பெறாதவர் ஓதினாராயினும், ஓதியுணர்ந்தாராயினும், ஓதியுணர்ந்து பிறர்க்கு உரைத்தாயினும், அவரதுசெயல் அருளிற்கலவாத அரும்பாவச் செயலாம் என்றும்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிவனருள் வேண்டினவர், கற்கவேண்டுவனவற்றைக் கசடறக் கற்கப் பெறுவர் என்பதும், கற்றபின்னர் அவ்வருள் நிரம்புதற்குரிய அருட்சாதனத்தில் நிற்கப்பெறுவர் என்பதும், யாவரும் நன்குணர்ந் துய்யக் கணபத்திரன்பாலும் அவன் மகனாகிய சண்டன்பாலும் திருவருண்முயற்சி முன்னிற்கப் பெற்றதனால், சண்டனது தந்தை இவன் செய்துவந்த செயலைக்கண்டு தமோகுணவயத்தவனாய்ப் புண்ணியச்செயலை மறந்து பாவச்செயலை மேற்கொண்டு அதிககோபத்தோடும் ஓடிவந்து தோத்திரஞ் செய்யும் மகனைப் பார்த்து, ''அடா மூடா! கன்றுகள் முதிர்ந்துவிட்டன, பசுக்களுக்குப் பால் குறைந்துவிட்டன, என்று என்னிடம் பொய்மொழி கூறினாயல்லவா? யாகாதிதருமங்களால் சகல தேவர்களுக்குந் திருப்தி செய்யவல்ல அந்தணர்களது குக்ஷியில் விழத்தக்கதாகிய இந்த நல்ல ஆவின்பாலை அனியாயமாய் இந்த மண்ணில் கொட்டுகின்றனையே, இந்தமதி உனக்கெப்படி வந்தது''.

''அறிவிலிகளாகிய சிறுவர்கள் விளையாடுவதுபோல் விளையாடுகின்றனையே, நீ இந்த மணலாற் கட்டிய கோயில் கோயிலாகுமா? இந்த மணலாற்பிடித்த இலிங்கம் இலிங்கமாகுமா? நீ சிவனைக் கண்டதுபோலும் தோத்திரஞ்செய்கின்றனையே நீ கண்டனையா? அவன் வேதங்களாலும் அறியப்படாதவனல்லவா? இன்னமும் வேதவித்துக்களாயிருக்கின்ற மஹாமுனிவர்கள் காணப்பெறவில்லையே என்று கதறிக்கதறி ஓய்ந்து போகின்றன ரல்லவா?''.

''இங்ஙனமான அரிதற்கரியசிவம் உனது அற்பவறிவாற் காணப் பெறுமோ? இப்பொழுது நீ செய்த இச்செயலாற்கண்டது பாவமொழிய வேறு எந்தப் புண்ணியத்தைக் கண்டனை?'' என்று சண்டனைப் பலவாறாய்வைது மனம் போனவாறு அடிக்க, அந்தச்சண்டன் சந்திரகலாதரனைத் தோத்திரஞ் செய்வதினின்றும் நீங்கினானல்லன்.

நீங்காமற் போகவே அந்தமூடன் முன்னயினும் அதிககோபங் கொண்டு வேகமாய் மந்திரலோபமின்றி அன்பேவடிவமாய்

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

அமைத்திருந்த அன்புருவான ஆலய முதலியவற்றைக் கையாலும் காலாலும் அழித்துப் பாற்குடங்களையும் இடறினான்.

இப்பாவச்செயலைக்கண்ட அந்தச் சண்டன் மகா சங்கார மூர்த்தியைப் போலும் மகாஆங்காரனாய், 'என்றந்தைக்கு இனியபாலை இடறிக்கவிழ்த்த இப்பாவியை இனிஉயிருடன் விடுவேனா' என்று சமித்துக்களைக் கொய்வதற்கு வைத்திருந்த கோடரியால் அவனது கால்களில் இரண்டையுஞ் சேதித்தெறிந்து அதனால் அவன் துடிப்பதைக்கண்டுஞ் சிறிதேனும் இரக்கங் கொள்ளாது அதி வைராக்கியசீலனாய்ப் பரமேஶ்வரனைப் பரமபக்தியுடன்,

சண்டேசர் சிவபெருமானைத் துதித்த துதிகள்

''ஜகத்திற்குத்தந்தையே! சங்கரா! பிரமதநாதா! விஸ்வாதிகா! ஹரா! ஹவ்யயா! ஈசா! பிரபோ! விடமுண்டவனே! முக்கண்ணனே! வேதங்களால் தேடப்பெற்றவனே! அடியேனிடம் கருணைக்கூர்ந் தருளும்'',

''யானைத்தோலைத்தரித்தவனே! சூலமும் மானும் பிடித்தகையனே! கங்காதரனே! சந்திரகலாதரனே! விருஷபத் வஜனே! விஶ்வேசனே! தேவரீரைப் பிதாவாகக் கொள்ளாத அறிவில்லாதவர் என்னைப்பிதுர்ஹத்தி செய்தவனென்று நிந்திப்பர். ஒ ஸ்வாமி! அதனை மாற்றியருள்வீராக''.

''வாமபாகத்தில் மங்கையுடன் கூடியமஹேசனே, இலக்குமி நாதனது கண்ணாகிய தாமரைமலரால் அர்ச்சிக்கப்பட்டவனே! தேவரீரது திவ்விய நாமங்களை யுச்சரிப்பதினாலே யான் சகல பாதங்களினின்று நீங்கிப் புநிதனாயினேனென்று கூறத் தடையுளதோ?''

''சூரியசந்திரஅக்கினி நேத்ரனும், ஜ்வலிக்கும் சூலச்சுடரால் காலனைத்தகித்தவனும், ஹாலாலவிஷத்தைப் புசித்ததனால் கறுமையாகிய வடுக்கொண்ட கண்டமுடையோனும், சகல தேவ சக்கரவர்த்தியுமாகிய சர்வேஶ்வரா! அடியேனைக் காப்பாற்றும்''.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

''பவ! பர்க்கா! மஹேசா! பீமா! சம்போ! தேவேஸ்வரா! சர்ப்பமாலாதரா! தேவரீரதுகருணை என்னைச் சகலபாபங்களி னின்றும் நீங்கச் செய்து புநிதனாக்குக''.

''ஓ புரஹரா! ஹரஹரா! சம்போ! சந்திரசூடா! கருணை செய்தருளும்! ஓ கிரிவாஸா! தேவமுனி கணங்களால் போற்றப் பெற்றவனே! கோவிந்தரால் பூசிக்கப்படும் பாதாரவிந்த முடையோனே! சநந்தரால் சேவிக்கப்படுவோனே! பந்நக குண்டலனே! சூரியமண்டலத்துள் விளங்கும் இறைவனே! தாண்டவப்பிரியனே! முராரியைப் பாணமாய்க் கொண்டவனே! பஸ்மோத்தூளிதனாய் முப்புண்டரமணிந்த விமலனே! மஹேசனே! எனக்கு நீரேசரண்யர். உம்மைச் சரணடைகின்றேன். நீரேசரணம் நீரே சரணம். தஹராகாசத்தில் விளங்கும் தயாமயமூர்த்தியே! என்னைக்காப்பாற்றியருளும்'' என்று துதித்தனன்.

ஏழாம் அத்தியாயம் முற்றிற்று.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

கபர்த்திநேநம:

எட்டாம் அத்தியாயம்.

சண்டீச கணாபத்யதானம்.

ஒ முனிபுங்கவரே! தாதையைத்தாளற வீசிய சண்டன் சிவபெருமானைத் தோத்திரஞ்செய்ய அந்த அற்புதமாகிய அவனது துதியால் பரமேஸ்வரன் பரமப்பிரீதியடைந்து அந்தக்ஷணமே அவ்விலிங்க மூர்த்தியினின்றும் அம்பிகாசமேதனாய் இடபாரூட னாய்ச் சகலதேவ முனிகணாதிபர் எல்லாந் தோத்திரஞ்செய்ய ஆனந்தநடனஞ் செய்து கொண்டே வெளிவந்து கார்க்கியன் கால் வெட்டுண்டு கதறுவதையும், சண்டன் தந்தையைத் தந்தையென்று எண்ணாது அவன்றாளை அறுத்துத் தமதுதாளை நினைந்து ஆனந்தமுற்றுத் தோத்திரஞ் செய்வதையும் பார்த்து வியந்து தேவியை நோக்கி, ‘‘ஒ தேவியே! சண்டனுடைய பக்தியைப் பார்த்தனையா? தன்னைச் சீராட்டிப் பாராட்டிய தந்தையினைத் தாளறவீசி நம்மைச் சீராட்டிப் பாராட்டிப் பாடுகின்றனன். இவனுக்கு நாம் என்செய்யக்கடவோம். இவன் செய்தது செய்தற்கரிய செயலல்லவா’’ என்று வியந்து கூறும் பொழுது தேவியும் தம்பெருமானைப் பார்த்து, ‘‘நானென் சொல்கேன். இவனுக்கிணை யான பக்தன் உண்டென்று கேட்டதுமில்லை கண்டதுமில்லை, ஆகலின் செய்தற்கரிய செயலைச் செய்த இவனுக்குத் தேவரீரும் இதுகாறும் யாவருக்குஞ்செய்யாத அநுக்கிரகத்தைச் செய்தருளல் வேண்டும்’’ என்றனள் .

அதுகேட்ட எம்பெருமானும் மகிழ்ந்து, ‘‘ஒ பார்வதி! உனது கிருபாநோக்கத்தால் காலற்று வீழ்ந்துகிடக்கின்ற இவனை உய்யும் வண்ணஞ் செய்வாயாக’’ வென்றனர். அம்பிகையும் அப்படியே அவனை நோக்க அவன் தூங்கி விழித்தவன்போல் எழுந்துநின்று ஆனந்தக்கண்ணீர்பொழிந்து அடிபணிந்து யான் செய்த பாக்கியமே பாக்கியம். ‘ஒருவன் பெறும்பேறுகளுள் அறிய வேண்டுவனவற்றை அறிதற்குரிய மக்களைப் பெறுவதல்லது பிறபேறுகளை யாம் மதிப்பதில்லை’ என்ற பெரியோர் வாக்கியத்தை இன்று கண்டொழிந்தேன் என்று அவன் அதிசயத்து நிற்ப, கைலைநாதர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

தமது திருக்கரங்களால் சண்டனைத்தடவி, ''அப்பா! உனக்கிணையான பாக்கியவான் எவனிருக்கின்றான். நீ செய்த இவ்வருஞ்செயலுக்கு எம்மால் கொடுக்கப்படும் பொருள் யாதுளது? எம்முடையதெல்லாம் உன்னுடையதே என்று அவனுடைய உடம்பைத் தடவி திவ்விய சரீரமாக்கித் திரிநேத்திரம், சதுர்ப்புஜம், சர்ப்பாபரணம், வியாக்ரசர்மம், நீலகண்டம் முதலியவற்றோடு கூடி விளங்கும் தமதுரூபத்தையளித்து, ''ஒ சண்டா! உனக்கிணையான கோபமுள்ளவனை யாம்கண்டிலம். இப்படியும் கோபிப்பதுண்டா? எமது கோபத்தில் கருணைகலந்திருப்பது போலும் உன்கோபத்தில் பக்தியல்லவோ கலந்திருக்கிறது. ஆகையால் இன்றுமுதல் நீ சண்டிகேசன் என்றுவழங்கப்பெறுவாய். நீ பிதாவைக் கொல்வதற்கு எம்மிடமுள்ள பக்தியே காரணமாயிருந்ததனால் உன்னைப்பாபம் அணுகவில்லை. மாத்துருத்துரோகம், பித்ருத்துரோகம், குருத்துரோக முதலாகச் சொல்லப்பட்ட பஞ்சமகா பாதகங்களும் எம்மிடம் பக்தியுடையோரை வந்தணுகாவென்பதற்கு உன்னைச் சாக்ஷி யாக்கினேம். இதுவன்றியும் எமது பொற்கோயிலையும் மணி முடியையும் மாலையையும் எம்முடைய நிவேதனத்தையும் நீ செய்த பாதகத்துக்குப் பரிசாகவுந் தந்தேம். இவ்வளவில் அடங்குமோ நீ செய்தசெயலுக்குப் பரிசு? இன்னமுந் தருகின்றேம்''.

''நீ தொண்டர்க்கெல்லாம் நாயகனாய் இருக்கவும், எம்மை ஆலயத்தின்கண்வந்து பணிந்து பிரார்த்திப்போர் எல்லாம் உன்னைப் பணிந்து பிரார்த்திக்கவும், அவர்கட்கெல்லாம் நீ எம்முடைய தெரிசனபலனை அளிக்கவும், யாம் சகதீசனாயிருப்பது போல் நீ சண்டீசனாய் இருக்கவுந் தந்தேம்'' என்று தமக்குடையன வெல்லாம் அவனுக்கே ஆக்கினார்.

இங்ஙனமாகச் சிவபோகத்தையும், சிவாதிகாரத்தையும் சண்டனுக்கு அனுக்கிரகஞ் செய்ததை அவன்றந்தை கண்டு பேரானந்தப் பெருங்கடலில் மூழ்கி, ''என்னப்பனே!'' என்று அவனைத் தழுவி உச்சிமோந்து சிவபெருமானைப் பார்த்து, ''ஒ பக்தவற்சலனே! ஒ கருணைவள்ளலே! எனதுமகன் உமதுமகனாயினான். இனி நான் மகனில்லாமல் இவ்வுலகில் எங்ஙனம் வாழ்வேன். ஆகலின் என்னுடைய வம்சம் விருத்தியாகும் வண்ணம் தேவரீர் எனக்கோர் புத்திரனைத் தரல்வேண்டும்'' என்று பிரார்த்திக்க,

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

சிவபெருமான் அம்முனிவனை நோக்கி, ''ஒ முனிவனே! அங்ஙனமே ஆகுக''வென்று கூறியதேயன்றி, ''நீ சிலகாலம் இவ்வுலகில் வசித்துப் பின்னர் உனதுமனைவியாளுடன் எமதுபதம் வந்து சேருவாயாக. ஏனெனின் எமது கைலாயம் எமது அன்பர்களது தாய்தந்தையர்களும் இருக்கவிடமாகும். அவர்கள் வேண்டும் எல்லாப் பொருளும் அளிப்பதற்கு எம்மாற்ற டையுமில்லை. எமது மகனாகிய சண்டன் இனி எமது ஆலயங்கடோறும் கோயில்கொண்டு வீற்றிருப்பான். பிரம விஷ்ணுவாதிதேவர்களாலுந் துதிக்கப் படுவான். எம்முடைய தரிசனாந்தத்தில் அவனைத் தரிசனஞ் செய்த வருக்கே எம்மைத் தரிசிப்பதனாற் கிடைக்கும் பயனுண்டாகும்'' என்று திருவாய்மலர்ந்து தமதுஅருகிலிருக்கும் சண்டீசனைப்பார்த்து, ''ஒ சண்டீசா! எம்மிடம் பக்தியுள்ளவனைப் பெற்ற தாய் தந்தையர் களும் அவர்களுடைய தாய் தந்தையர்களும் அவர்கள் வம்சத்தினர் களும் அவர்களது பந்துவர்க்கங்களும் சம்சாரமாகிய கடலினின்றுங் கரையேறுவார்கள்''.

''இதில் ஐயமில்லை. கோஹத்தி, மாத்ரு பித்ருக்களுடைய ஹத்தியாகிய இவைகளைச் செய்தவனாயினும், பாபசோரனாயினும், எமது சொரூபமாகிய சிவலிங்கத்தைப் பூசிப்பானாயின் அவனுக்கு நிகரான தன்யன் எவனுமில்லை. பஸ்மருத்திராக்ஷதாரியாய், பரமபக்தியுடன் சிவலிங்கார்ச்சனை செய்யப்பெற்றவன் சண்டாளனாய் இருந்தாலும் அவனே சகலராலும் பூஜிக்கத் தகுந்த வனாவன். நான்கு வேதங்களையும் ஓதியுணர்ந்த அந்தணனாயினும் எம்மிடம் பக்தியற்ற சித்தமுடையோனாயின் அவன் பூபார நிமித்தமாய் வந்த கார்த்தபம் என்று இகழத்தக்கவனாவன்''.

''ஒ சண்டீசா! நீயே தன்யன், நீயேபூஜ்யன், ஆகையால் எம்மை உபாசித்துப் பூசிப்பவர்க்கு யாம் எந்தப் பயனை அருள்வேமோ அந்தப்பயனை உன்னைத் தரிசிப்போர்க்கு நீயே கொடுத்து வருவாயாக'' என்றருளி யெழுந்தருளினார் என்ன, ஜைகிஷவ்ய முனிவர் பரமானந்தமெய்தினர்.

எட்டாம் அத்தியாயம் முற்றிற்று.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

உ

நீலலோகிதாய நம:

ஒன்பதாம் அத்தியாயம்.

பிருங்கி கணாபத்திய பிரதானம்.

சூதமுனிவர் கூறுகின்றார். ''ஒ மகருஷிகாள்! மீண்டும் கங்காசுதராகிய காங்கேயர் பரமானந்த முற்றிருந்த ஜைகிஷவ்ய முனிவரைப் பார்த்து, ''ஒ சைவசிகாமணியாரே! பூர்வம் மந்தர கிரிச்சாரலில் மகாபரிசுத்தமாகிய புண்ணிய அருவிகளாலும், புஷ்பவனங்களாலும், பல விசித்திரமாகிய பசுபக்ஷி மிருகாதிகளாலும் மனோரம்மியமாய் விளங்கும் ஒ ரரிய வனப்பிரதேசத்தில் பிருங்கி என்னும் ஓர் மஹாமுனிவன், முதுவேனிற் காலத்தில் பஞ்சாக்கினி மத்தியிலும், மாரிக்காலத்தில் சலத்திலும், பனிக்காலத்தில் வெளியிடத்திலுமிருந்து ஆயிரந் திவ்யவருடம் அதிவுக்ரமான தவமியற்றி வந்தனன். பின்னர் பதினாயிரம்வருடம் ஒருமையுளாமை போல் ஐம்புலன்களையும் அடக்கி மனக்குரங்கை யலையவிடாது ஒருவழிப்படுத்திச் சுத்தசாத்வீகனாய்த் தவஞ்செய்து வந்தனன்.

''வந்தும் சிவபெருமான் பிரத்தியக்ஷம் ஆயினாரில்லை. அதனால் பிருங்கிமுனிவன் துக்காக்கிராந்தனாய் இனி நாம் செய்யக்கடவதாகிய தவம் யாதோ அது நமதுணர்ச்சிக்குத் தோன்றவில்லையே என்று ஏங்கியிருக்குந் தருணத்தில், ஆகாய வாணி, ''ஒ மகாமுனிவனே! நீ பரமேஸ்வரரது பக்தனல்லவா! உனக்குச் சிவபெருமான் பிரசன்னராகாமற் போவரா? யானுனக்கோர் உபாயங் கூறுகின்றேன். அதுபோற் செய்வாயாகில் தேவதேவ னாகிய சிவபெருமான் சீக்கிரத்தில் உனக்குப் பிரசன்னமாவர். இப்பொழுது நீ கொண்டிருக்கும் பிரஹ்மசரியாஸ்ரம தருமத்தி னாலும், இவைகளை யங்கமாகக் கொண்டு சிவபக்தியைச் செய்வதானாலும் யாதொரு பயனுமில்லை''.

ஆகையால் அவைகளைக் கைவிட்டுச் சித்தத்தைச் சிவனிடத்தினும், நாவை ஸ்ரீபஞ்சாக்கரத்தினும், தலையை அவனடி வணங்குவதினும், கைகளை அஞ்சலிசெய்வதினும், அறிவை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அன்பினும், நிலைபெற்றிருக்கும் வண்ணஞ்செய்து, உனது காயத்தைக் கோயிலாகவும், உன்மனத்தை அடிமையாகவும், உன்வாய்மையைத் தூய்மையாகவும், உன்னுயிரை இலிங்க ரூபமாகவும் கொண்டிருக்கும், இறைவனுண்மையை அறிந்து உள்ளே வழிப்பட்டு அங்ஙனம் வழிபடப்பெற்ற அப்பெருமானைப் பாஹ்யத்திலும் வேதசிவாகமவிதிப்படி அர்ச்சித்து, எப்பொழுதும் வண்டுபோற்சுழன்று பிரதக்ஷண நமஸ்காரம் செய்துவருவையாயின் பரமேஸ்வரன் பிரசன்னராய் நீ விரும்பியபொருளைத் தந்தருளுவர். இதிலையமில்லை'' யென்றுகூறி ஓய்ந்துநின்றது.

அசரீரியின் வாய்மொழியைக் கேட்டமுனிவன் ஆனந்த பரவசனாய் அந்நெறியைக் கடைப்பிடித்துப் பேரன்போடு உள்ளும் புறம்பும் வழிபட்டுச் சிவபெருமானை ஸ்ரீ ருத்திரத்தால் தோத்திரஞ் செய்து கொண்டு மலரைக்கண்டு சுழன்று சுழன்றுவரும் வண்டுபோற் சுற்றிச்சுற்றி வலம்வந்து நமஸ்கரித்துத் தோத்திரஞ் செய்யத் தொடங்கினான். ஒ ஜைகிஷவ்யரே! அத்துதியைக் கேட்பீராக''.

பிருங்கி முனிவர் சிவபெருமானைத் துதித்த துதிகள்

''ஒ சம்போ! மங்கைபாதியனே! சந்திரசூடனே! வ்ருஷப வாகனனே! பிரமதகணங்களால் போற்றப் பெற்றவனே! சகல சராசரங்களாலும் அர்ச்சிக்கப்பட்டவனே! மாரனதுகணையின் வலியகற்றினவனே! கருணைகூர்ந்து அடியேனைக் காப்பாற்றும்''.

''இராவணனது புஜபராக்கிரமத்தையகற்ற கைலாயகிரியைச் சிறிதழுத்தினவனே! தேவகங்கையின் மஹாகர்வத்தையடக்கிய சடைமுடியனே! மஹாதேவா! ஸ்வாமி அடியேனைக் காத்தருளும்''.

''பூமியை ரதமாகவும், வேதங்களைக் குதிரைகளாகவும், சர்ப்பத்தை நாணாகவும், மகாவிஷ்ணுவைப் பாணமாகவும், சூரிய சந்திரர்களை ரதாங்கமாகவும், விதியைச் சாரதியாகவுங்கொண்டு திரிபுரத்தைத் தகித்தருளிய விமலனே! யோகிகளின் சித்தத்திற்கும் லட்சியமாகாத முழுமுதலே! உமது மகிமையை என்னவென்று கூறுகேன்''.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

''ஒ சங்கரா! பிரம்ஹவிஷ்ணுக்களைக் கிங்கரராய்க் கொண்ட கடவுளே! வ்ருஷபாரூடனே! தக்ஷயஞ்ஞ சிக்ஷகனே! சர்ப்ப கங்கணனே! விஷமுண்டு சகலசராசரங்களையுஞ் சுகிக்கச் செய்தவனே! அடியேனைக் காப்பாற்றியருளும்''.

''அடியேனுக்கு உம்மையன்றி வேறு கதியுண்டோ'' என்று இங்ஙனஞ் செய்யும் துதியை அருள்வள்ளலாகிய சிவபெருமான் கேட்டு, சூரியன் மேருமலையை ஒருநாளுமொழியாது சுற்றி வருவதுபோல் ஒருகணமுநில்லாது தம்மைப் பிரதக்ஷணஞ் செய்வதைக் கண்டு திருவுளமிரங்கிச் சிவகணங்களெல்லாம் சத்திர சாமரதுவஜ முதலியவைகளை யேந்தியும், நந்தீசர், சண்டீசர், மகாகாளர், பாணர், காளாமுகர், சங்குகர்ணர், வீரபத்திரர், மயூரகர், கஜகர்னர், தாம்பிரவக்திரர், பிருகத்சேனர், விடூரதர், சோமநந்தி, மஹாநந்தி, குகண்டர், கண்டகர் முதலிய கணாதிபரெல்லாங் குடமுழா முதலிய வாத்தியங்களை முழக்கியும் வர, இடபாரூடராய்த் தேவியார் இருகரங்களாலும் தம்மைத் தழுவியிருப்ப, கணபதி முதலிய பெருமக்கள் இருபுறத்திலும்நிற்ப அழகிய கோலத்துடன் காட்சி கொடுத்தனர்.

அக்காட்சியைக் கண்ட பிருங்கி ஆனந்தபரவசமுற்று ஆனந்தக்கண்ணீர் பொழிந்து சிவபெருமானருகே நின்று மீண்டும், ''அலை திரை குமிழி முதலியவைகளோடு திரண்டு புரண்டு பொங்கிவந்த கங்கையின் கர்வத்தையடக்கியவனே! ஜடிலனே! நிடாலநயனனே! தூர்ஜடியே! முச்சூலமேந்தியவனே! கண்டபரசோ! சசிகண்டசூட! ஆகண்டலாதிசுரசேவிதனே! புண்டரீகசர்மாம்பரா! குண்டலீசகிருதகுண்டலகண்டா!'' என்று தோத்திரஞ்செய்ய,

சிவபெருமான் மிகவும் மகிழ்ந்து உலகமாதாவாகிய தேவியைப் பார்த்து, ''ஒ பார்வதி! உனது கடைக்கண்ணால் பிருங்கிக்கு நமதுசாரூபந்தருவாய்'' என்ன, அம்மையார் சம்புவைநோக்கி,''ஓ ஸ்வாமி! தேவதேவா! மஹேசா! சர்வஞ்ஞா! கருணாநிதே! இந்தப் பிருங்கி நாடோறும் உம்மையே பூசித்து ஓயாது பிரதக்ஷணஞ் செய்து வந்தவனாகவிருக்க, இப்பொழுது தேவரீர் என்னுடன் பிரத்தியக்ஷமாய் வந்திருக்கின்றபொழுது பிரதக்ஷணத்தில்

Digitization by Hindu-Heritage Foundation of America. HHFA(USA)

ஆசையுள்ளஇவன் பிரதக்ஷணஞ் செய்யாமலே உமது பக்கலில் நின்று தோத்திரமாத்திரஞ்செய்கின்றனனே இஃதென்னை? இதன் காரணம் சர்வஜ்ஞராகிய தேவரீர் அறியாததன்றே. ஆயினும் இங்குள்ளாரறியும் வண்ணம் யான் கூறுகின்றேன். என்னையெனின், இந்தப் பிருங்கி தேவரீர் நானாகவேஇருக்கும் உண்மையும், யான் தேவரீராகவேயிருக்கும் உண்மையும் அறியாமல் உம்மில் என்னை வேறாக வெண்ணி என்னைச் சிறிதும் எண்ணாது தேவரீரை மாத்திரம் எண்ணி, தேவரீரையே பிரதக்ஷணஞ்செய்து வந்தவனா தலால் இன்றுயான் உம்மைத்தழுவியிருக்குங் கோலத்துடன் தேவரீர்காட்சி கொடுத்தமையால் அவன்பிரதக்ஷணஞ் செய்வதை விட்டுத் தேவரீரைத் தோத்திரஞ்செய்யத் துணிந்தனன். அவனெண்ணம் இவ்வண்ணம் இருக்குமாயின் உமதுசாரூபத்தை யான் அவனுக்குக் கொடுக்குஞ் சக்தியுடையவளாவனோ? ஆகலின் உமது சாரூபத்தை தேவரீரே அவனுக்குக் கொடுக்கலாம்'' என்றனர்.

அதற்குச் சம்பு, ''ஒ சாம்பவி! நீ இந்தப்பிருங்கியினுடைய உண்மையைக் கூறியது போலும் உன்னுண்மையையுங்கூறிய நீ இப்பொழுது கூறியவிது உண்மையாமோ, எம்மைத்தோத்திரஞ் செய்யும் அவனுக்கு நாம் சொல்லியபடி எமது சாரூபத்தை நீ அநுக்கிரகஞ்செய்யக்கூடாத தென்னை? எம்மை எவ்விதத்தில் எவன் வழிப்பட்டாலும், அவன் உன்னையும் வழிபட்டவன் ஆவனன்றோ? ஆகவே, அவனுக்கு அநுக்கிரகஞ்செய்ய வேண்டிய கடமை உன்னுடையது தானே. அன்றியும், ஒருநாமம் ஒருருவமற்ற நாம் நாமரூபத்தோடு உபாசகர்கட்குவருவது உன்னாலன்றி எம்மாலோ? ஆகலின் எம்மைச் சரணமடைந்த இவனிடம் நீ கோபங் கொள்ளாது அநுக்கிரகஞ் செய்வாயாக'' என்று கூறினர். கூறியும் தேவி முன்போலவே உரைக்க இறைவன் மீண்டும் கூறுகின்றார்.

''ஒ தேவி! யான் சர்வேஶ்வரனாய் உள்ளவன். நீசகலபுவனமா உள்ளவள். யான் சூரியன் சந்திரன் அக்கினி முதலானவர் களாயிருப்பவன், நீ பூதசமூகமாயிருப்பவள், யான் பஞ்சாவரணத்தில் உள்ளவன், நீ நவாவரணமுடையவள். நம்மிருவருக்கும் வேற்றுமை யாதுளது. சகலமும் நாமிருவருமே''.

Digitization by Hindu-Heritage-Foundation of America - HHFA(USA)

''அத்திமரத்திற் பழங்கள்போல் நமது சரீரத்திலுள்ள ரோம கூபங்களில் சகல அண்ட கோடிகளும் இருக்கின்றன. நம்மிட மிருந்தே சராசரங்களோடு ஹரி ஹரன் பிரமன் முதலியோர் தோன்றுகின்றனர். எம்மையே உபநிடதங்கள் சகலத்திற்கும் ஜனகனான விஸ்வேசனென்று கூறுகின்றன. ஒ பர்வதராஜ புத்திரியே! நீ இந்தப் பிருங்கியினிடத்தில் திரோதானசத்தியாய் இருப்பதைவிட்டு அநுக்கிரகசத்தியாய் இருப்பாய்'' என்று கூறினார்.

கூறவே பனிவரையரையன்றவப் பயனார், தமக்கும் இறைவனுக்கும், தம்மிருவருக்கும் உலகிற்கு முள்ள அத்வைதப் பொருளைக் கேட்டு அப்பிருங்கியைக் கருணையுடன்நோக்கி, ''ஒ புத்திரனே! நீ சிவோபாசகனாதலால் நீ எனக்குப் புத்திரனாகின்றனை, என்னை நீ சிவனினும் அன்னியை என்று நினையற்க. சந்திர கிரணமானது சந்திரனைவிட்டுத் தனியேயுளதோ? சூரியகாந்தி சூரியனைவிட்டுத் தனியேயுளதோ? அதுபோல் என்றறிவாய். யான்பிரகிருதியாகிய மாயை, மாயா சொரூபிணியாகிய என்னையுடையவன் மஹேஸ்வரனும் சர்வேஸ்வரனும் விஸ்வாதீஸ் வரனும் விஸ்வஜனகனும் விஸ்வாதீத னும் விஸ்வமுக்தனுமாகிய சிவபெருமான் ஒருவனே. ஏனைய இந்திரன் பிரமன் நாராயணன் முதலியோர் கால கலாவிலாசம் பொருந்தியவர். மஹேஸ்வரனும் பரனுமாயுள்ள மிருத்தியுஞ்சயன் ஒருவனே கால கலனாதீதனா யுள்ளவன். இங்ஙனமான காலாதீதன் உலகானுக்கிரக நிமித்தமாய் என்னுடன் கைலாயத்தில் வசிக் கின்றனன்''.

''ஒ புத்திரா! சிவப்பிரபாவத்தை வேதமும் அறிந்ததில்லை. ஸ்வாத்மாவும் அத்வைதனும் சகலேந்திரியங்களை ஆள்பவனும் சகலஆதாரனுமாகிய அப்பரமபுருஷனை அறிவார்யார்? சநாதனனாகிய அவனேதான் அவனையறிவான்''என்று கூறினார்.

ஒன்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

உ

சங்கராயநம:

பத்தாம் அத்தியாயம்.

பிருங்கிஸ்தவம்.

பிருங்கிமுனிவர் சிவசத்தியைத் துதித்த துதிகள்

சிவகதாஸ்ரவண ஆனந்தமுடைய மஹருஷியே! இங்ஙனம் தேவியின் உபதேசத்தைக்கேட்டு, பிருங்கிமுனிவன் இருவரையும் பிரதக்ஷணஞ்செய்து பரமபக்தியுடன், "யான் குரூரனும், கொடுஞ் செயல் உடையோனும், வஞ்சகனும், லச்சையற்றவனும், கிருபணனும், செய்ந்நன்றிமறந்தவனும், அசுசியுடையவனும், ஹிம்மைசெய்வோனும், ஆசாபாசங்களிற் சிக்குண்டவனும், மஹாஅபகீர்த்தி உடையோனும், ஜடனுமாய் இதுகாறும் இருந்து கெட்டு விட்டேன். ஓ இறைவனே! கருணைக்கடலே! எந்தையே! பசுபதே! தோஷநிதியாகிய அடியேனைக் காத்தருள்வாய்".

"மஹா அற்பனாய் விரதங்களைவிடுத்து மனோச்சையின் வழிச்சென்று பயத்தால் வருந்தியவனும், டம்பமே குடிகொண்டு எல்லையற்ற விசனத்தையடைந்து மலைபோன்ற பாவத்தினைச் செய்து மனோதேக வியாதிகளால் வாடிப் பதராய்த் திரிந்தவனும், பெரியோர்களால் நிந்திக்கப்பட்டவனுமாகிய என்னை ஒ கருணைக்கடலே! பசுபதே! காத்தருள்வாய்".

"பாலர் போன்ற புத்தியுடையோனாயிருந்து எனது தர்மத்தைவிடுத்து காமத்தால் குருடனாய்க் கண்டவிடத்தில் மனஞ்செலுத்தித்திரிந்து அசத்திற்கு இருப்பிடனாய்க் கொடியனாய்க் குற்றத்துக்கிடனாய்க் கெட்டலைந்த என்னை ஒ கருணைக்கடலே! என்றந்தையே! பசுபதே! காத்தருள்வாய்".

"எப்போதும் ஆசைமிகுதியால் பாவங்களையே செய்து கொண்டு குருத்ரோகியாயும், தூர்த்தனாயுமிருந்து எப்பொருளையும் எனக்கு எனக்கென்று விரும்பி அவலமாய்லைந்த அடியேனை ஒ கருணைக்கடலே! தந்தையே! பசுபதே! காத்தருள்வாய்".

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

''சுவப்பனத்திலாவது சிவார்ச்சனை செய்யாதவனும், த்யானம்த்யேயம் என்னுஞ்சொல்லையுங் கேட்காதவனும், தாரித்திர நிதியனும், தனக்கேசத்ருவும், தாபத்திரயங்களுக்கு இடமாயிருப் பவனுமாகிய அடியேனைக் கருணைக்கடலே! தந்தையே! பசுபதே! காத்தருள்வாய்''.

''சத்ங்கத்திற்கு விரோதியும், துஸ்ஸங்கப் பிரியனும், காமபரனும், திருடனும், சிவக்யான பராமுகனும், மூர்க்கரது சகவாசனுமாகிய அடியேனைக் கருணைக்கடலே! ஒ தந்தையே! பசுபதே! காத்தருள்வாய்''.

''வரம்புகடந்த கொடுஞ்செயலிற் றலைப்பட்டுப் பெரியோரைச் சிறிதுங்கவனியாது கொடியவனாய் அவர்களைத் துன்பஞ் செய்து கொண்டு அவலமாய்க் கெட்ட அடியேனைக் கருணைக்கடலே! தந்தையே! பசுபதே! காத்தருள்வாய்''.

''என்னையே போற்றிப் பரனை நிந்தித்து மனோவிகற்பங் கொண்டு மஹாபாவங்களில் மூழ்கி மகாவிபத்துக்களைப் பெற்று யாதும் வழியின்றி அந்தோயாது கருணைக்கடலே! தந்தையே! பசுபதே! காத்தருள்வாய்!''

''விதிவிலக்கு என்ற விசாரமற்றவனும், விரதமற்றவனும், மதம் மானம் மாச்சர்யம் உடையோனும், போலிஞானமுடையோனும், மூவுலகாலும் நிந்திக்கப்பட்டவனுமாகிய என்னை ஒ ஸ்வாமி! கருணைக்கடலே! பசுபதே! காத்தருள்வாய்''.

''கெட்ட கருமங்களால் குலைந்தமனமுடையோனும், எண்ணிறந்த கிலேசங்களுடையோனும், நாஸ்திகனும், க்ருபணனும், மனைவி மக்கள் முதலாயினாரிடத்தில் பேராவலுடையோனும், காம்பீரியமும் உறுதியுமற்றவனும், குற்றத்திற்கு இருப்பிடமுமாகிய என்னை ஒ கருணைக்கடலே! பசுபதே! என்னப்பனே! காத்தருள்வாய்''.

''ஆத்மக்யான மற்றவனும், சர்வமும் சிவம் என்னும் பாவனைக்கு விரோதியும், எண்ணிறந்த சங்கற்பங்களால் சிதைவுற்ற

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சித்தமுடையோனும், எப்போதும் உனக்கு வேறாகியிருப்பதிலேயே விருப்பமுடையோனும், வஞ்சனையாய் வசனிப்போனும், கடூரசித்த முடையோனும், மித்ர துரோகியுமாகிய என்னை ஒ கருணைக் கடலே! என்தந்தையே! பசுபதே! காத்தருள்வாய்''.

''மனதைக்கலங்கச் செய்வோனும், மனைவியையே மதிப்போனும், சாராசாரம் இன்னதென்று பகுத்தறியும் அறிவற்ற வனும், நீசகர்மஞ் செய்வோனும், மத்தோன்மத்தனாய்க் கொடிய செயலைச் செய்வோனும், அவலமாய்ப் புலம்புவோனும், குற்றத்திற்கிடமுமாகிய என்னை ஒ கருணைக்கடலே! என் தந்தையே! பசுபதே! காத்தருள்வாய்''.

''சத்யம் தியாகம் தயை பொறுமை அடக்கம் இவைகளை இன்னதென அறியாதவனும், தேவர் அந்தணர் பசு அதிதி பிதுரர் இவர்களைப் பூசிப்பதில் சிறிதேனும் அறிவற்றவனும், லோக வஞ்சகர்களோடு சிநேகிப்பவனும், எவருக்கும் அடங்காத துஷ்டனுமாகிய என்னை ஒ கருணைக்கடலே! என்றந்தையே! பசுபதே! காத்தருள்வாய்''.

''அதர்மத்தையே விரும்புவோனும், எனக்கெதிர் யாரென்று பலவாறாய்ப் பிதற்றுவோனும், கெட்டதேகமுடையோனும், பாபியும், அரக்கத்தன்மை பெற்றவனும், கண்ணிற் கண்ட சுகத்தையே பெரிதென்று எண்ணிச் சிவாராதனத்தை விடுத்தவனு மாகிய என்னை ஒ கருணைக்கடலே! என்றந்தையே! பசுபதே! காத்தருள்வாய்''.

''தூராதகுழியாகிய எனது உதரத்தைப்பூரணஞ் செய்வதிலேயே வாழ்நாளைக் கழித்தவனும், தாசி ஆடு கழுதை இவைகளின் சுபாவத்தையுடையவனும், ஒன்றுமற்றவனும், பின் வருவதை யறியாதவனும், சத்துக்களுக்குக் கண்டகனுமாகிய என்னை ஒ கருணைக்கடலே! என்றந்தையே! பசுபதே! காத்தருள்வாய்''.

''பூனை எலி நாய் கோழி குரங்கு பன்றி பாம்பு இவைகளின் விருத்தியை யுடையோனும், தீர்த்தக்கரைக் காக்கையாயுள்ளவனும், எப்பொழுதும் கெடுதியையே விளைவித்துக் கொள்பவனும்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சுத்தத்தில் விருப்பமற்றவனும், சபலனுமாகிய என்னை ஒ கருணைக்கடலே! என்றந்தையே! பசுபதே! காத்தருள்வாய்''.

''ஸ்பரிசிக்கத்தகாதவனும், குற்றங்களாலேயே தழுவப்பட்டவனும், கலகஞ்செய்வோனும், சிந்தைசோக முதலியவைகளோடு கூடிய சித்தமுடையோனுமாகிய என்னை ஒ கருணைக்கடலே! என்றந்தையே! பசுபதே! காத்தருள்வாய்''.

''பெரியோர்களது சத்யாக்னியால் கொளுத்தப்பட்டவனும், நாஸ்திகனும், எப்போதும் வஞ்சனைக்கிடந் தேடுவோனும், குருடன் ஊமை செவிடன் என்று சொல்லத்தக்கவனும், விஸ்வாத்மாவாகிய சம்புவினது மாகாத்மியத்தைச் சிரவணஞ்செய்யாதவனுமாகிய என்னை ஒ கருணைக்கடலே! என்றந்தையே! பசுபதே! காத்தருள்வாய்''.

''பிரஷ்டனும், சகலராலும் திக்கரிக்கத்தக்கவனும், அன்னியர் இதத்திற்கு இடையூறு செய்பவனும், மஹா தாமஸனும், மயக்கங்கொண்டவனும், விசாரத்துவேஷியும், ஹேசம்போ! உமது பாதாரவிந்த பக்தியற்ற மனமுடையோனும், மூடனும், ஆன்ம வைரியுமாகிய என்னைக் ஒ கருணைக்கடலே! என்றந்தையே! பசுபதே! காத்தருள்வாய்''.

''சுவப்பனத்திலும் பரனுக்கு அபகாரத்தையே செய்வோனும், சத்துக்களால் வெறுக்கப்பட்டவனும், எப்போதும் துக்கத்தையே யனுபவிக்க ஹேதுவாய் இந்திரிய வியாபாரமுடையோனுமாகிய என்னைக் ஒ கருணைக்கடலே! என்றந்தையே! பசுபதே! காத்தருள்வாய்''.

''ஒ பகவனே! யான் எவ்வளவு விரித்துக்கூறியும் பயனென்னை? எனக்குச் சமானமான மனிதன் உலகில் இதுகாறும் இருந்திரான். இப்போதுமிரான். இனிமேலும் பிறவான். இப்படிப்பட்ட துர்ப்பாக்கிய சூடாமணியனும், என்னையே வஞ்சித்துக் கொண்டவனுமாகிய என்னை திரைலோக்கிய ரக்ஷாமணே! ஒ கருணைக்கடலே! என்றந்தையே! பசுபதே! காத்தருள்வாய்''.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

''மலமூத்திர கிருமி மாம்ச ரத்தமயமும், கொழுப்பு எலும்பு மச்சை முதலியவையுங் கூடியதும், துர்க்கந்தத்திற்கிடமும், ஜரை எனுங் குற்றத்தோடுகூடியதும், வாதாதி தோஷங்களால் வருந்துவது மாகிய இப்பாழுஞ் சரீரத்தை நன்றாய்ப் பார்த்துக் கொண்டிருந்தும் சிறிதும் விவேகமற்றவனும், பசுப் போன்றவனுமாகிய என்னைக் கருணைக்கடலே! என்றந்தையே! பசுபதே! காத்தருள்வாய்''.

''விஷ்டை கிருமி முதலிய துர்ஜந்துக்களுக்கு இடமானதும், மஹாஅசுத்தமும், இயற்கையில் சக்தியற்றதும், குஷ்டம் க்ஷைணியம் விசூசிகை ஜ்வரம் சிரச்சூல முதலிய ரோகங்களுக்கு இடமாயுள்ளதும் இச்சரீரம் என்றறிந்தும் இதனையே பெரிதாக நினைத்துத்திரியும் பசுவாகிய என்னைக் கருணைக்கடலே! என்றந்தையே! பசுபதே! காத்தருள்வாய்''.

''பால்யம் யௌவனம் வார்த்திகமுதலிய சகலபருவங்களிலும் ஆன்மாவுக்குத் தேகம் ஆதாரமாத்திரமாய் இருப்பதைக்கண்டுந் தேகவிகாரங்களைத் தனதுவிகாரமென நினைத்து அதனிடம் மிக்க அபிமானத்துடன் வாழ்நாளைக் கழித்துத் திரியும் பசுவாகிய என்னைக் கருணைக்கடலே! என்றந்தையே! பசுபதே! காத்தருள்வாய்''.

''உலகத்தில் மிக்கபரிசுத்தத்தை உண்டுபண்ணும் பஞ்சகவ்ய முதலியவும் தேகத்திலுள்ள கபம் அஸ்தி ரோமம் உதிரம் ஸ்நான முதலியவைகளின் சம்பந்தத்தால் அசுத்தமாகின்றவானால் இத் தேகத்தின் குற்றத்தைக் கூறவுமுடியுமோ? எனின் அத்தேகத்தி லேயே மிக்கப்பிரியமுற்றவனும், பசுப்போன்றவனுமான என்னைக் கருணைக்கடலே! என்றந்தையே! பசுபதே! காத்தருள்வாய்''.

''நெய் பால் மது முதலியவைகளை ஏராளமாய்ச் சாம்பவர் களுக்கு உதவி ஆனந்திக்காம7ல் துச்சமாகிய விஷயசுகத்தில் பேராவல் உடையோனும், பசுப்போன்றவனுமாகிய என்னைக் கருணைக்கடலே! என்றந்தையே! பசுபதே! காத்தருள்வாய்''.

''மறுப்பிரதேசத்தில் திவ்ய தீர்த்தத்தை விரும்புவோனும், கற்றூணில் தைலத்தை விரும்புவோனும், கொடியவரிடத்தில் சிநேகத்தை விரும்புவோனும், முக்குணமயமும் மலநிதியுமாகிய

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இச்சரீரத்தில் சுகத்தை விரும்புவோனும், பசுவுக்குச் சமமாகியும் மிருக்கின்ற என்னைக் கருணைக்கடலே! என்றந்தையே! பசுபதே! காத்தருள்வாய்''.

''வேதவாக்குகளுக்கும் எட்டாததாகிய இடம் யாதோ அவ்விடத்தில் விளங்கும் பாதாரவிந்தத்தில் என்மனஞ்சென்று ஆனந்தபரவசமாகாமல் வீணாய்க் கெட்டு மிருகம்போல் திரிகின்றது. ஒ ஸ்வாமி! அறிவு பரிபாகம்பெற்ற இப்பிறவியெடுத்தும் மிருகம் போலான என்னைக் கருணைக்கடலே! என்றந்தையே! பசுபதே! காத்தருள்வாய்''.

''அகிலவேதங்களாலும், வேதாந்த சாஸ்திரங்களாலும், சர்வவியாபியென்றும், சிந்மயன், ஏகன் ஈஃஸ்வரன் என்றும் கூறப்பட்டவர் யாவரோ அப்படிப்பட்ட தேவரீரது பாதாரவிந்தத்தில் எனது சகல சங்கல்பங்களையுநீக்கிச் சித்தத்தை வைத்து ஆனந்திக்காமல் பசுப்போலான என்னைக் கருணைக்கடலே! என்றந்தையே! பசுபதே! காத்தருள்வாய்''.

''ஞானம் அஞ்ஞானம், தயை, நிர்த்தயை, சமம் தமம், சம்மோகம் மோகம், க்யாதி அக்யாதி, பயம் அபயம், அசுகம் சுகம், ஹிம்சை மனோசந்தோஷம் இவைகளுள் சுபமானவை சத்துக் களுக்கும், அசுபமானவை ப்ராந்தர்களிடத்திலும் ஏற்பட்டது உமது ஆக்ஞையினாலேயே யன்றோ? தேவரீரது ஆக்ஞையின்படி நன்மைபெறுவதற்கு எத்தனிக்காத என்னைக் கருணைக்கடலே! என்றந்தையே! பசுபதே! காத்தருள்வாய்''.

''யோகசித்தி தானசித்தி சிரத்தை திடபக்தி வைராக்யம் இவைகள் ஒ மஹேசா! உமது பிரசாதம் பெற்றவர்களிடத்திலேயே விளங்குகின்றன. இவைகளின் வாசனை சிறிதுமற்ற என்னைத் தேவரீரது திருவருளுக்கு ஆளாக்கிப் பாக்கியவானாகச் செய்தருளும். ஒ கருணைக்கடலே! என்றந்தையே! பசுபதே! காத்தருள்வாய்''.

''ஒ சம்போ! உமதாக்ஞையின்றி ஓர் துரும்பையேனும் வாயு அசைக்க வல்லனல்லன். அக்னியும் அதனை எரிப்பதற்குச்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சத்தனல்லன். இந்திரனும் வஜ்ரவாளால் அதைச் சேதிப்பதற்கு ஆற்றலுடையவனல்லன். ஓ பிரபோ! இறைவனே! இவையெல்லாம் உமது ஆக்ஞாவசமே. உமதாக்ஞா வசத்தால் ஒருசிறிதுந் திடமற்ற என்னைக் கருணைக்கடலே! என்றந்தையே! பசுபதே! காத்தருள்வாய்''.

''சித்தம் தாராமயமாவதும், மனஞ்சங்கல்பிப்பதும், அகங்காரம் சகலபொருள்களையு அபிமானிப்பதும், இந்திரியங்கள் தத்தம் விஷயங்களிலேயே செல்வதும் உமது ஆக்ஞையினாலேயே. ஓ மஹாதேவா! கருணைக்கடலே! என்றந்தையே! பசுபதே! காத்தருள்வாய்''.

''பிரமன் சிருட்டிப்பதும், ஹரி ரக்ஷிப்பதும், காலருத்திரர் சங்கரிப்பதும், ஸ்ரீலக்ஷ்மி சம்பத்தைத்தருவதும், காயத்திரி நரகத்தினின்றும் பாபிகளைக்கரையேற்றுவதும் தேவரீரது ஆக்ஞையினாலேயே ஆயின், தேவரீரது ஆக்ஞையின்றி என்னால் யாதுசெய்யக்கூடும்? ஓ கருணைக்கடலே! என்றந்தையே! பசுபதே! காத்தருள்வாய்''.

''ஓ இறைவனே! வாயு உமது ஆக்ஞையினாலேயே தன்றொழிலை நடத்துகின்றான். சூரியசந்திரர் உலகை விளக்குகின்றனர். அக்னி சகலப்பிராணிகளின் தேகத்தினின்று பசனஞ் செய்கின்றான், வெளியிலிருந்து தேவர்களுக்கு அவிசையளிக்கின்றான், மனைதோறும் பாகஞ்செய்கின்றான். உன்ஆக் ஞையை யென்னால் கூறமுடியுமோ? ஓ கருணைக்கடலே! என்றந்தையே! பசுபதே! காத்தருள்வாய்''.

''பூதங்களுள் ஜலம் சீவனஹேதுவாகின்றதும், பிருத்வி ஆதாரமாவதும், ஆகாயம் இடந்தருவதும், வாயு சீதோஷ்ணங்களுக்கு ஏதுவாவதும் எவனது ஆக்ஞையினாலேயோ அப்படிப்பட்ட கருணைக்கடலாகிய என்றந்தையே! பசுபதே! காத்தருள்வாய்''.

''இந்திரன் முதலிய சகலதேவர்களும் உமது ஆணையினால் நிலைபெற்றிருக்கின்றனர். சகலான்மகோடிகளும் பிரமாண்ட

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

முழுவதும் நிறைந்திருப்பது உமது ஆக்ஞையினாலேயே. மகத் முதலியவும் உமது ஆக்ஞையினாலேயே உலகத்துக்கு ஹேதுவா கின்றன. அப்படியே காலம் பிரகிருதி பரன் புரு புருஷன் இவை யெல்லாம் எப்போதும் உமது ஆக்ஞையினாலேயே''.

''தேவா! இனியுண்டாவதும் உண்டாகின்றதும் உண்டானது மாகிய சகலமும் உமதாக்ஞையினாலேயே. தேவரீர் தமசைக்கடந்து நிற்பவர். தேவரீராலேயே லீலார்த்தமாய் தமசுதரிக்கப்பட்டது. சகலஜகத்தின் துக்கத்தைத் தொலைப்பவரும் நீரே. பந்தத்தைத் தொலையச்செய்யும் விஷயத்தில் சமர்த்தர் தேவரீர் ஒருவரே யன்றோ? தேவரீரே பாசத்தைத் தருகின்றவர்''.

''ஹே சம்போ! உம்மைச் சரணமடைந்தவரை எந்தக் கருணையால் காப்பாற்றுகின்றீரோ அந்தக் கருணையால் என்னை ஒ கருணைக்கடலே காத்தருள்வாயாக'' என்று தோத்திரஞ் செய்து,'யான்செய்த அபராதத்தை க்ஷமிக்கவேண்டும்' என்றுகூறி அஞ்சலிசெய்து நிற்க, அத்தோத்திரத்தினால் மிகப்பிரீதியடைந்த பரமசிவன் பிருங்கிக்குக் கணாதிபத்தியமளித்து அவனோடு கைலையங்கிரி யடைந்தனர்.

''ஒ ஜைகிஷவ்யரே! யாதொருவன் இத்துதியால் பரமேஸ்வரனைப் பக்தியுடன் துதிக்கின்றானோ அவன் உடனே பிருங்கியைப் போல் பக்த ஸ்ரேஷ்டனாகின்றான்'' என்றருளினர்.

பத்தாம் அத்தியாயம் முற்றிற்று.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

சூலபாணிநே நம:

பதினோராம் அத்தியாயம்.

உபமன்யு தபஸ்சரணம்.

சூதபகவான் கூறுகின்றார். தவநிலையிற் றவறாத தன்னியர்காள்! நமது பரமபதியாகிய சுப்பிரமணியக்கடவுள் ஜைகிஷவ்ய முனிவரைப் பாரத்து, ''ஒ சிவபக்தாக்ரரே! மஹாத்மாவாகிய உபமன்யுவின் பரமபுண்ணியகரமான அற்புத சரித்திரத்தைக் கூறுகின்றேன் கேட்பீராக''.

''அவ்வுபமன்யு முனிவனிடம் தேவதேவனாகிய சிவபெருமான் கருணைகூர்ந்த அற்புத விலாசத்தைச் சொல்லவெண்ணும் பொழுதே எனக்குண்டாகும் ஆனந்தத்தை யான்சொல்ல முடியுமோ? இவ்வானந்தப் பெருக்காகிய அவனது சரித்திரத்தைக் கேட்பதனால் உண்டாகும் புண்ணியத்தைப்போலும் வேறொரு புண்ணியமு முண்டோ!''

''பூர்வம் த்ருமன்யு என்னும் ஒர் முனிபுங்கவன் யாவராலும் செய்தற்கரிய உக்ரமாகிய தவத்தால் சிவபெருமானை உபாசிக்கும் நியதியிற் சிறந்தவனாய் இருந்தனன். அவனது மனைவியும் அவனைத் தெய்வமாக எண்ணியுபாசிப்பதில் வன்மையுடைய வளாயும், அவ்வன்மைக்கேற்பச் சகல நற்குண நற்செய்கைகளிலுஞ் சிறந்தவளாயும் இருந்தனள். இருவரும் உடலுயிர்போல் வாழ்ந்து இல்லறத்துக்குரிய தருமத்தை நடத்தி வரும்நாளில் சிவபெருமான் திருவருளால் ''எழுபிறப்புந் தீயவை தீண்டாப் பழிபிறங்காப் பண்புடை'' மகனைப் பெறுதலாகிய புத்திரப்பேற்றையு உடையராயினர்''.

''மனையாட்சியாகிய மங்கலத்தையும் நன்மக்கட்பேறாகிய நன்கலத்தையுமுடைய த்ருமன்யுமுனிவன், உடற்கு இன்பமாக அவனைத் தழுவியும் செவிக்கு இன்பமாக அவனது மழலைச் சொல்லைக் கேட்டும் இன்பமுற்று இவ்வரும் புதல்வனை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உத்தேசித்துச் செய்யவேண்டிய சடங்குகளெல்லாம் வேதவிதி தவறாமற் செய்யவேண்டுமென்னும் ஆவலுடையவனாகித் தனக்கமைந்துள்ள தரித்திரத்தையெண்ணிச் சிறிது மனவருத்த முற்றுப் பின்னர் ''ஒல்லும்வகையா னறவினையோவாதே செல்லும்வா யெல்லாஞ்செயல்'' என்னும் நீதியை எண்ணி உஞ்சவிருத்திசெய்து வைத்திருந்த ஒர்கை தானியத்தைக் கையிலெடுத்து இது ஓர் தினையளவாயினும் சிவஞானச் செயலுடையோர் கையில் தானஞ்செய்தால் அது நிலம்போற்பரந்து மலைபோல் வளர்ந்தோங்கி எல்லாப் பயனையுந் தருமன்றோ வென்று சிவார்ப்பணமாக ஒர் சிவஞானிக்குத் தானஞ்செய்து, குழந்தையின் முகத்தைநோக்கிப் பரமசந்தோஷமடைந்து, ஜாதகர்மம் நாமகரண முதலிய கர்மங்களுமியற்றி, உபமன்யு வென்று பெயரிட்டனர்''.

''இச் சுபவிதிகளை முடித்தபின்னர் அக்குழந்தையின் தாய் தன்மகன் வளர்வதற்கான பால் தன்னிடத்தில் இல்லாமையைக் கண்டு மிகவும் மனம்வருந்தி அரிசியைமாவாக அரைத்து அதிற்சர்க்கரை கலந்து இதுதான் நல்லபால் அப்பா வென்று இனிமையுடன் கூறி ஊட்டிவருவாளாயினள். அக்குழந்தையும் அதனையே பாலென்றெண்ணி ஐந்துவயதளவும் உண்டு வளர்ந்தது. அவ்வைந்தாமாண்டில் தாய் தன்னுடன் பிறந்தவராகிய வசிட்டரிடஞ் சென்று ஓர் மாதம் வசித்திருந்தனள். அங்கு வசித்திருக்கும்பொழுது கற்பிற்சிறந்த அருந்ததி நாடோறும் ஓமஞ்செய்து மிகுந்ததாகிய காமதேனுவின் பாலை அக் குழந்தைக்கு ஊட்டி வந்தனள். ஒரு மாதங்கழித்து அக் குழந்தையின் தாய் தனது நாயகனிடம் வந்துசேர்ந்து குழந்தைக்கு மாவின் பாலை முன்போலூட்டினள்.

அதனையுண்ட உபமன்யு 'இதுவென்னபால், எனது அத்தையார் ஊட்டி வந்த பால்போலில்லையே. எனக்கு இந்தப்பால் வேண்டாம். அந்தப்பாலைக் கொண்டுவா' என்று ரோதனஞ் செய்தனன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அதற்கு அவ்வன்னை, 'ஓ குழந்தாய்! நம்முடையவீட்டில் அந்தப்பாலேது! இந்தப்பால்தானே யுள்ளது' என்று வேண்டிவேண்டி ஊட்டத்தலைப்பட்டனள். அதற்கு உபமன்யன் கையால் தலையில் மோதிக்கொண்டு கீழே வீழ்ந்து புரண்டு புரண்டழுதனன்''.

''அன்னை என்செய்வாள்? தனக்குள்ள தரித்திரக்கொடுமையை நினைந்து மனம்புழுங்கிப் புத்திரனைப்பார்த்து, 'ஓ அப்பா! யாவரிடத்துந் தரித்திராததாகிய தாரித்திரம் எங்களிடத்தில் நெடுங்காலமாய்த் தரித்திருக்கின்றதே. ஆவின்பாலுக்கு நாங்களெங்கு போவோம். யாதோ ஓர் புண்ணியவிசேடத்தால் உனதுமாமன் காமதேனுவைப் பெற்றிருக்கின்றனன். நாங்கள் அரிசிமாவைப் பெற்றிருக்கின்றோம். இது இப்பொழுதுதேடிய பாவமல்ல. இப்படிப்பட்ட பாவிகளாகிய எங்களுக்குப் புத்திரபாக்கியம் எங்கிருந்ததோ தெரியவில்லை. இதனை எடுத்துச் சொல்வதனால் என்னபயன்? என்னை ரோதனஞ் செய்யற்க''.

''முற்பிறப்பில் போகத்தை விரும்பிச் சிவபெருமானைப் பூசித்தவர்க்கே இப்பிறப்பில் தனம் தானியம் பசுமுதலிய செல்வங்கள் நிறைந்திருக்கும். நாங்கள் அப்படிச் சிவபூஜை செய்யவில்லை யாகலின், அப்பனே! ரோதனஞ்செய்வதை விடுத்து ஆவின்பாலையுமறந்து இந்த மாவின்பாலை யருந்துவாய்'' என்றுகூற, அதற்கு அப்பாலன், 'இப்பால் வேண்டாம், அந்தப்பாலே வேண்டும். இதனை யொருபொழுதும் உண்ணேன் உண்ணேன்' என்று கூறவே, அதற்கு அன்னையானவள், 'ஓ புத்திரா! நாங்கள் முற்பிறப்பில் போகத்தைவிரும்பிச் சிவனைப் பூசிக்காத தாரித்திரத்தால் உஞ்சவிருத்தியைச் செய்வதாய் இருக்கின்றோம். நமக்கு ஆவின்பால்கிட்டாது, நமக்குக் கிட்டியது இம்மாவின்பாலே என்று சொல்லியும் உனது பிள்ளைப்பருவத்தால் அதனை யுணராமல் என்னை வருத்துகின்றனையே, இதற்கு நான் என்செய்வேன்' என்று புலம்பியபொழுது, அன்னையின் புலம்பலைக் கண்ட உபமன்யு தான் புலம்புவதைவிட்டு;

'ஓ அம்மா! சிவபெருமானைப் பூசிக்கவில்லையென்று கூறினையே அச்சிவபெருமான் என்பவர் யார்? அவரெங்கே

Digitization by Hindu-Heritage-Foundation of America HHFA (USA)

யிருக்கின்றார்? அதனைக்கூறினால் அவரையான் பூசித்து அக்காமதேனுவின் பாலினுமினிய பாலை வேண்டுமளவும் பெறுகின்றேன்' என்றனன்.

அதனைக்கேட்ட அன்னை அருந் துயரத்தினின்று நீங்கிப் பரமாச்சரியமடைந்து, 'ஓ குழந்தாய்!எவனை பிரஹ்ம விஷ்ணுவாதி தேவர்கள் அறியவில்லையோ, எவனது உருவத்தை வேதங்களாலும் அறிதல் அரிதோ அவனை நீ எவ்விதமறியமுடியும்? யானும் உனக்கு எங்ஙனம் கூறவியலும்? அவன் எங்கும் பரிபூரணனாய், அணுவினும் அணுவாய், மகத்திலும் மகத்தாய், மனோவாக்குகளுக்கு எட்டாதவனாயுள்ளவன், அப்பரம் பொருளிருக்கும் இடத்தையுனக்கு என்னெனஎன்றுரைப்பேன்' என்று கூறினாள்.

அதனைக் கேட்ட உபமன்யு கண்ணீர் விட்டழுது ஓவென்றலறி, 'என்தாயே! எனக்குப் பால்தான் கொடுக்கமுடியாது என்றனை, சிவபிரானையாவது அவரிருக்கும் இடத்தையாவது சொல்லக் கூடாதா, கூடாதாயின் சிவபிரானென்றும், அவரைப் பூசித்தால் எல்லாங்கொடுப்பர் என்றுங் கூறினையே, அதுபொய்யா! மெய்யா! மெய்ம்மையாயின் முன்போல் அணுவென்றும், மஹத்தென்றும் என் மனத்திலமையாத ஏதோ சிலவாக்கியங்களைக் கூறினையே, அப்படிக்கூறாமல் நானறியும் வண்ணங் கூறுவாய். கூறாவிடில் யான் இனி உயிர்தரித்திரேன்'என்றனன்.

அதனைக்கேட்டு குழந்தையின் உறுதியை நினைந்து வியந்து, 'ஓ குழந்தாய்! சிவபிரானையும் அவரிடத்தையுங் கூறமுடியா தென்பது உண்மையே. நீ வேண்டுகின்றபடியால் கூறுகின்றேன். அவன் கருணையால் கங்கையைத் தரித்தும், சந்திரனையணிந்தும், நாகாபரணம் பூண்டும், கண்டத்தில் காளகூடத்தை வைத்தும், இடப்பாகத்தில் மங்கையைவைத்தும் விளங்குவதான ஓர் திருவுருவத்தை உபாசகர்கட்குக் காட்டுகின்றனன்''.

'அவ்வுருவத்தில் உபாசகர் மனதை நிலையாக நிறுத்தி இருதயகமலத்தில் தியானஞ்செய்வாராயின் அவர்கட்கு அவன் சுலபமாய் வெளிப்பட்டு அருளுகின்றனன். ஆகையால் அவனை நீ

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

உபாசனை செய்வையாயின் வேண்டியதை யளிப்பான். அம்மகாதேவனையே ஆராதனை செய்து தேவர் முனிவர் முதலிய யாவரும் வேண்டிய வரங்களைப் பெற்றனர். அவ்விறைவனார் பிரசன்னம் ஆவாராயின் கிடைக்காதது யாது?'' என்றனள்.

அதனைக் கேட்ட உபமன்யு, 'ஒ அம்மா! சிவபெருமானாரை நான் ஆராதிக்கின்றேன். அந்த ஆராதனை செய்யவும் கிரமம்யாது?' என்று வினவினன்.

அதனைக்கேட்டிருந்த அவனது தந்தையாகிய த்ருமன்யு முனிவன் குழந்தையின் பரிபாகத்தை நினைந்து மனமுருகிக் கண்ணீர்ததும்ப இறைவனது திருவருள் இப்படியும் உளதோ என்றெண்ணி அகமகிழ்ந்து தனது அருமைப் புதல்வனுக்குச் சிவதீக்ஷைசெய்து பஞ்சாக்ஷர மகாமந்திரத்தையும் பூஜா விதியையும் உபதேசித்தனன்.

அந்தவுபமன்யு தாய்தந்தையர்களின் பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்துத் தவத்துக்கு உத்தரவளிக்கவேண்டுமென்று பிரார்த்தித்தனன்.

அதற்கு அன்னை குழந்தையை யெடுத்துத் தழுவி முத்தமிட்டு ஆசீர்வதித்து, ''என் கண்மணியே! உன்னைக் கீழ்த்திசையில் சம்புவும், தென்திசையில் நீலலோகிதனும், மேற்றிசையில் வாமதேவனும், வடதிசையில் பிநாகதரனும், மேலிடமாகிய ஆகாயவெளியில் ஈசானனும், பூமியில் பூதரனுங் காப்பாற்றுக''.

''இவர்களேயன்றி பிரம விஷ்ணு ருத்திரர்கள் வசுக்கள் மருத்துக்கள் ஆதித்தர் அஸ்வனிதேவதைகள் ஏகாதசருத்திரர் யமன் சூரியன் அக்கினி சந்திரன் கந்திருவர் கருடர் யக்ஷர் வித்தியாதரர் நாகர் கிம்புருடர் மாத்ருகர் என்றெண்ணப்பட்ட இவரெல்லாம் அருந்தவம் இயற்றும் பாலகனாகிய வுன்னைக் காத்தருள்க''.

''உன்னை எப்போதும் சங்கரனே காக்கக்கடவன்'' என்று மீண்டும் ஆராவன்பால் குழந்தையையெடுத்துத் தழுவி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHF (USA)

உச்சிமோந்து கண்களிலிருந்து பெருகும் ஆனந்தக்கண்ணீராலும், ஸ்தனத்திலிருந்து பெருகும் ஸ்தன்னியத்தாலும், அவனது மேனிமுழுதும் நனைத்து, 'அப்பனே! எங்களுடைய செவிக்கு மழலைச் சொல்லாகிய அமுதத்தைப் புகட்டி மகிழ்விப்பதுபோல் சிவபெருமானை நீ செய்யும் பூசனையால் மகிழச் செய்வாய். அவன் உனக்குவேண்டிய அநுக்கிரகஞ்செய்வான்' என்று அன்போடு கூறினள்.

உபமன்யு அன்னையை யடிபணிந்து, 'ஒ அம்மணி! நான் சிவபெருமானைப் பூசித்து அதனால் அவரை மகிழ்வித்து அவரது திருவருளைப் பெற்றிடுவேன். நீ ஐயுறவேண்டாம்'என்றனன். இவ்வண்ணங்கூறிய மகனது முகமாகிய முழுமதியைப் பார்த்து, 'நான் இவனை எப்படிபிரிந்திருப்பேன். பிரிவதற்கு அஞ்சுவே னாயின் இவன்மனம் வாடுமே' என்று கருதி, 'அப்பா! நீ சீக்கிரத்தில் திருவருள் பாலிக்கப்பெற்று மனமகிழ்ந்து வந்து சேருவாயாக' வென்று கூறி மடியிலிருந்த குழந்தையை இறக்கிவிட்டனள்.

ஒ ஜைகிஷவ்யரே! அவ்வன்னையின் பரிபவத்தை யான் என்னென்று சொல்லுகேன், த்ருமன்யுமுனிவன் பாலனையெடுத்துத் தழுவிக்குழந்தையின் மழலைச்சொல்லையும், அன்னையின் பிரிவாற்றாமையையும், அவனது பரிபாகத்தையுங் கண்டுவியந்து, ''என்பிராணனே! என் கண்மணியே! என்னிஷ்ட தெய்வமே! யான்செய்த நற்றவப்பயனே! உனக்கு இதமானது ஒன்றைக் கூறுகின்றேன். அதனைக் கேட்பாயாக''.

''பிரமாதிதேவர்களுக்கும் துர்லபனாகிய சிவன் தனது பாதாரவிந்தங்களில் நிலைபெற்ற மனமுடைய அன்பர்களுக்குச் சுலபன்; அவனை வசப்படுத்துவதற்குப் பஞ்சாக்ஷரம் பரமசாதனம். என்னப்பனே! நீ நல்லபரிபாகியாகையால் உனக்கு உபநயனஞ் செய்கின்றேன்''.

''அர்த்தசந்திரகலாதரா! காமனையெரித்த கடைக்கண் நெருப்புப் பொறியுடையோனே! சூரியமண்டல மத்தியில் விளங்கும் இறைவனே! அசங்கனே! உம்மை வணங்குகின்றேன். கஜசர்மத்தை

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வஸ்திரமாய்த் தரித்தவனே! விபூதிபூசிய மேனியரின் உள்ளத்தில் விளங்குவோனே! ஸ்ரீ ஹரிக்குச் சக்ராயுதந்தந்த ஜகதீசா! என்னைக் காப்பாற்றுவாயாக. அந்தகனையுதைத்தவனே! திரிபுரங்களை யெரித்தவனே! காலகாலனே! இந்திரநீலம்போன்ற கண்டமுடை யோனே! சூலமேந்தினவனே! அவ்யயா! வ்யோமகேசா! லோகாதிபா! என்றனை ரக்ஷிப்பாயாக'' வென்று "இத்தோத்திரத்தினால் தேவ தேவனாகிய மகேஸ்வரனைத் தினந்தோறும் துதிசெய்து வருவாய்" என்று அதனை உபதேசித்தனன்.

என்று இங்ஙனம் பிதாவினால் கூறப்பட்ட தோத்திரத்தை உபமன்யு ஆவர்த்திசெய்துகொண்டு, தாய்தந்தையர்களும் அவர்களது கண்களும் வெகுதூரம்வரையில் வழிகொண்டுவிட பின்னர் வனத்தில் மறைந்து, சிவபெருமானது திருவுருவத்தையே மனதிற் சிந்தித்து திரிகூட பர்வதம் வந்து சேர்ந்தவனாய், அங்கு மனதொருமையப்படுவதற்கு ஏதுவாய்விளங்கும் வனத்தைப் பார்த்து மனமகிழ்ந்து, 'இங்கு சிவோபாசனை செய்வோம்'என்று நினைத்து அங்குள்ள புண்ணியதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து பஸ்மருத்திராக்ஷமணிந்து மற்றபாவனைகளை நீக்கிச் சிவபாவனை யொன்றேசெய்து ஒர் திவ்வியலிங்கத்தைப் பூசித்துக் கொண் டிருந்தனன்.

பதினோராம் அத்தியாயம் முற்றிற்று.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

கட்வாங்கினே நம:

பன்னிரண்டாம் அத்தியாயம்.

உபமன்யு வரப்பிரசாதம்.

''ஒ முனிவரே! மஹாமகிமை பொருந்தினவனும், பரிபக்குவ முற்ற சித்தவிருத்தியுடையவனுமான உபமன்யு வென்னுங் குழந்தை திரிகூடபர்வதத்தைப் போய்ச் சேர்ந்தபின்னர் சோணநதிக்கரையில் தனதுபெயர் விளங்க உபமன்யேஸ்வரர் என்று ஒர் சிவலிங்கத்தைத் தாபித்துச் சிவார்ச்சனை செய்து வந்ததேயன்றி, அதிவுக்ரமாய் ஒரு வருடம் இலைகளைப் புசித்தும், ஒருவருடம் நீரையுண்டும், ஒருவருடம் வாயுவைப் புசித்தும், இரண்டுவருடம் அதனையும் விட்டும் இவ்வாறு ஐந்து வருடம் ஏகாக்ரமனமுடையோனாய் அரிய தவஞ்செய்து வந்தனன்''.

இவனது தவத்தைக் கண்ணுற்ற முனிவர்கள் சந்நியாசிகள் ருஷிகள் முதலியசகலரும் ஆச்சரியமடைந்து தாங்கள் தாங்கள் செய்துவந்த தவங்களையெல்லாங் கைவிட்டு அந்த உபமன்யுக்கு எதிரில்வந்திருந்து அவனது பருவத்தின் நிலைமையும், அவனது சரீரத்தில் பிரகாசிக்குந் தவாக்கினியையுங் கண்டு, ''இதுவென்ன ஆச்சரியம்'' என்று இமைகொட்டாது பார்த்திருந்தனர்.

இமைகொட்டாதவராகிய பிரமன் முதலிய தேவர்களும், நாரதாதிமகரிஷிகளும் அவனைப்பார்த்து, ''இவனது தவமுந் திருமேனியும் சூரியன்போல் பிரகாசிக்கின்றவே! ஸ்தன்ய பானஞ்செய்யத்தக்க இக்குழந்தைப் பருவத்தில் சிவமஹோபாசனை எப்படிச்செய்யவந்தது? இவனல்லவோ தன்யன். இவனைப் பெற்றவர்களல்லவோ தாய்தந்தையர்கள்''.

''இவன் பூர்வத்தில் என்ன புண்ணியஞ்செய்தவனோ! எத்தனைகோடி சன்மங்களில் சிவனை ஆராதித்தவனோ! இவனது மனம் விஷயங்களிற் செல்லாது சிவனது பாதாரவிந்தங்களில் எவ்விதம் லயித்ததோ! இந்த மஹாமகிமையுள்ள குழந்தையை நாம்

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

தரிசிக்கப் பெற்றோமாதலால், அநாதியாகிய சம்சார சஞ்சிதங்களான பாபராசிகளெல்லாம் நம்மைவிட்டுப்பறந்து போயின''வென்று அவனது தபோமகிமைகளைக் கூறி ஆனந்தபரவசராய் அசைவற்று இருந்தனர்.

தவத்தைக் கெடுத்துத் தம்வசப்படுத்தும் அரம்பையரும், ஆடவரைக்கண்டு மயங்கத்தக்க மங்கையருங் கண்ணுற்று மயக்குவதையும், மயங்குவதையும் விட்டு அன்புடையராய் ஆராமை கொண்டனர்.

அவன் இவ்வாறு தனஞ்செய்கையில் கருணையங்கடலாகிய கைலைநாதரும் பிரீதியடைந்து உமாசகிதராய், சுத்தஸ்படிக சங்காசராய், நீலகண்டராய், முக்கண்ணுந்தோன்ற சகலாபரண பூஷிதராய், சகலதேவர்களும் போற்ற அவ்வுபமன்யுவின் எதிரில் எழுந்தருளினர்.

உபமன்யு முனிவர் சிவபெருமானைத் துதித்தது

அவனுந் தவத்தை விட்டெழுந்து கண்களினின்றும் ஆனந்தபாஷ்பம் பெருகத் தன்னையும் தானிருக்குமிடத்தையும் மறந்து ஆடியும் பாடியும், ''என்னிறைவனே! ஈசானனே! கஜசர்மனே! உமாபதியே! என்னீசனே! வேதாந்தவேத்யனே! பிரம விஷ்ணுக்களுக் கெட்டாதவனே! புராணனே! புண்ணியனே! பரமானந்தனே! ஹிரண்யபதியே! ஹிரண்யபாகுவே! ஹிரண்ய கேசனே! ஆதித்யமணியே! அந்தணர் இறைவனே! சர்வேஶ்வரனே! சதாசிவனே! கருணைக்கடலே! காலகாலனே! கலாதரனே! கைலைநாதனே! யஞ்ஞேசனே! அஷ்ட மூர்த்தியே! அகிலேசனே! துரீயனே! பரம்பொருளே! சோதியே! எனது செல்வமே! சிந்தாமணியே! பரமனே! பஞ்சாக்ஷரவசியனே! உபநிடத நிலையனே! ஆனந்தக்கடலே! அம்பிகாநாதனே!'' என்று தோத்திரஞ்செய்து கொண்டு நிற்ப;

''எனது ஐயன் தனது இருகரங்களாலும் அவனை எடுத்துத் தழுவி முத்தமிட்டு, ''என் கண்மணியே! தாமரை மலர்போன்ற மென்மையாகிய உனதுதேகம் நீ கொண்ட தவநியமங்களால்

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

வாட்டமுற்றுப் போயிற்றே'' என்று உடம்பைத் தடவ, அச்சிறுவனும் தனது இருகரங்களாலும் பெருமானைக் கட்டிக்கொண்டு, ''என்னப்பனே! என்னிடத்தில் வரவுனக்கு இத்தனைநாள் சென்றதோ? பிறரால் அறியவொண்ணாத தன்மையுடைய தலைவனே! இங்கு என்னை நோக்குவார் யார், நான் என்செய்கேன், என் தாயே'' என்று கண்ணீர் பொழிந்து நாத்தழும்ப ஆராவன்பு கொண்டு போற்றத் தொடங்கினன்.

''ஐயசங்கரபார்வதீபதே! ம்ருடசம்போ! சசிசேகரா! மதனாந்தகா! பக்தவத்ஸலா! கைலாசவாசா! தயா சமுத்திரமே! உம்மைச் சரணமடைகின்றேன், எங்கும் வியாபித்துள்ள மகாதமசைத் தொலைப்பதில் சூரியன்போல் விளங்குவதுதேவரீரது தேஜஸே. அதனை எனதுசர்மக்கண்ணால் எப்படிப் பார்க்கக்கூடும்? ஒ ஜகதீஸ்வரரே! கிருபை கூர்ந்து அபயதானஞ் செய்யுங்கண்ணால் அடியேனைப்பார்த்து அருள்புரியுங்கள்''.

''உமது தியானமொன்றே சகலதுக்கங்களையுந் தொலையச் செய்வதாகும். நெய் சர்க்கரை பால் முதலியவை இயற்கையில் மதுரமானவை, அவை விஷத்தோடு கலந்தாலும் மதுரமேயன்றோ? சவமுண்டங்களை ஆபரணமாக உடையவராயினும் லோகபாவனம் செய்யுந்தன்மை தங்களிடமேயுள்ளது.''

''சம்சாரத்திற்கு அந்தகர் தாங்களே, முக்கண்ணராயினும் தேவரீரே சம திருஷ்டியுள்ளவர். தேவரீரது ஸ்மரணமே சகல அபீஷ்டங்களையுந் தருவதாம். கற்பகவிருக்ஷத்தின் அடியிற்சென்று கேட்ட மாத்திரத்தில் வேண்டும் பொருளைப் பெறலாமன்றோ?!''

''ஒ இறைவனே! இப்போதே அடியேனைக் காத்தருள வேண்டும். இச்சமயம் உபேக்ஷைசெய்தால் உயிர்துறந்த பிறகு ஔஷதங்கொடுத்ததாகும், விஷயங்களெனும் விஷசர்ப்பங்களால் அடியேனை ஏன் வருத்துகின்றீர்கள், அடியேனை அமுதத்தை ஒத்த நேத்திரங்களால் பார்த்தருளுங்கள்''.

''அத்தகைய கடாக்ஷத்தால் எத்தனையோ முனிவர் நற்கதி பெற்றனர். ஒ இறைவனே! அபயப்பிரதராகிய உம்மைச் சரணடை

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

கின்றேன். ஒ ஜகதீசா! நீரே சரணம் நீரேசரணம். எனக்குப் பரலோக விஷயத்தில் பெரும்பயமுள்ளது. இச்சம்சாரத்தால் நடுங்குகின்றேன். ஹர! ஹர! பவ! பீம! பர்க்க! சம்போ! திரிநயந! சங்கர! ஹர ஹர! விஸ்வசம்போ! திரிசூலபாணே! சிவசங்கரா! கிங்கரனாகிய என்னைக் காப்பாற்றுவாயாக''வென்று துதித்தனன்.

இவ்வண்ணந் தோத்திரஞ்செய்வதைக் கேட்ட அம்மையப்ப னாகிய பரமேஸ்வரன், ''நீ செய்த தோத்திரத்தினால் நாம் மிகவும் திருப்தியடைந்தேம். இத்தோத்திரத்தை எவன் எமது சந்திதானத்தில் செய்கின்றானோ அவன் எம்முலகத்தை யடைந்து எம்மோடு ஆனந்தித்திருப்பான்'' என்றுகூறி, தேவியினுடைய திருமுகத்தைப் பார்த்து, ''இவன் கந்தனைக்காட்டிலும் நமக்கு இனியனாயிருக் கின்றான். இவனை நீ கருணையுடன் பார்ப்பாயாக'' வென்றருளி, ''ஒ குழந்தாய்! உனக்கு வேண்டியதைத் தருகின்றேன், நீ கணாதிபதிகளுக்குப் பதியாவாய். நீ வேதசிவாகமங்களோடு சகலவித்தைகளையும் ஒதாதுணரப்பெறுவாய். உனக்குமேலொரு ஆசிரியனுமில்லை. இன்னமும் உனக்கு வேண்டியவையாவை? அவையெல்லாந் தருகின்றேம்'' என்று கூறவே,

உபமன்யு சிந்திப்பரியனவாகிய திருவடிகளை வணங்கி, ''என்னையனே! பசுவின்பாலை விரும்பியவெனக்கு உன்னைக் காணும் வண்ணம் உபதேசித்த எனது தாய்தந்தையர்களுக்கு நானென்ன கைம்மாறு செய்யப்போகின்றேன். நீ அவர்களுக்கு அருள்பாலிக்க வேண்டும். அவர்கள் உஞ்சவிருத்தியினால் அனுபவித்துவரும் கஷ்டத்தை யென்னவென்று சொல்லுவேன். அந்தவருத்தமொழிந்து அவர்கள் க்ஷீரான்னம் புசித்துவரவும், நான் காமதேனுவின் பாலினுமினிய பாலுண்டுகளிக்கவும் அருள் செய்யவேண்டும்'' என்றனன்.

எம்பெருமான், ''ஒ உபமன்யுவே! நீ வேண்டியபடி உனது தாய்தந்தையர்களுக்குப் பாலன்னமும் உனக்குத் திருமால் பள்ளிக்கொண்டிருக்குந் திருப்பாற்கடலையுந் தந்தேம். இப்பொழுது எவ்வளவு பக்திவைராக்கியத்தோடு சிவலிங்கார்ச்சனை செய்து

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

வந்தனையோ அதனை என்றும் உடையவனாயும், என்றும் மரண துக்கமின்றி நித்தியனாயும் இருப்பாய், உன்னை வழிபடுவோர்க்கு யாம் புத்திமுத்திகளை அளிக்கின்றேம்'' என்றருள் புரிந்து தேவியுடன் கைலைக்கு எழுந்தருளினர்.

உடனே உபமன்யனும் தாய்தந்தையரிடஞ்சென்று நமஸ் கரித்துச் சிவபெருமான் செய்த திருவருளைக்கூறி இன்புற்றனன்.

அதனைக் கேட்டு அவர்களும் பரமானந்தக்கடலில் மூழ்கி, ''எங்கள் செல்வமே! நாங்கள் உன்னை மகனாகப் பெற்ற பேற்றால் இம்மைமறுமைக்குரிய எல்லாப்பேற்றையும் பெறலானோம்'' என்றவனை முத்தமிட்டு வாழ்ந்திருந்தனர்.

உபமன்யு பகவானும் திருப்பாற்கடலையுண்டு அப்பாற்கடல் நாதனாகிய திருமாலுக்குப் பரமாசாரியராய் ஸ்ரீ கைலையின் கண்ணும் மற்றெவ்விடத்தும் பக்திஞான வைராக்கியத்தை யுபதேசித்துக் கொண்டு யாவர்க்குந் தீக்ஷா குருவாய் விளங்கினன் என்றருளினர்.

பன்னிரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

உ

விஷ்ணுவல்லபாய நம:

பதின்மூன்றாம் அத்தியாயம்.

மார்க்கண்டேய சரிதம்.

சூதபகவான் கூறுகின்றார். "சிவஞானச் செல்வர்களாகிய மஹருஷிகாள்! ஜைகிஷவ்யர் ஸ்கந்தமூர்த்தியை வணங்கி, 'ஒ சுவாமின்! உபமன்யுபகவானது சரித்திரத்தைக்கேட்டு என்மனம் பரமானந்த மெய்துகின்றது. இவ்வானந்தம் நீங்காதிருக்க மார்க்கண்டேயரது திவ்யசரித்திரத்தையும் அடியேனுக்கு அருள்புரிய வேண்டும். சிவபக்தியுடையவர்களுக்குச் சிவபக்தர்களது சரித்திரத்தைக் கேட்பதில் அதிருப்தி உண்டாகுமா?"

"அச்சரித்திரமானது பரமசிவனிடத்தில் அன்பையும் அவனது திருவருளையும் விளைவிக்கின்றதல்லவா? இவ்விரண்டையும் விளைவிப்பதற்கன்றோ தாங்களும் எழுந்தருளியிருப்பதென்று கூற, ஸ்கந்தர், 'ஒ முனிவரே! நீர்கேட்ட சிவோபாசகராகிய மார்க்கண்டேயரது சரித்திரத்தைச் சிரவணஞ்செய்தால் மரணபயஹரணமாம்".

"பூர்வம் பிரமனுடைய மானசீகபுத்திரரான மிருகண்டு முனிவன் காஞ்சனம் என்னும் ஓர்பர்வதத்தில், தவஞ்செய்யும் முனிவர்கட்கு மனோகரமாயும், பசுபக்ஷிகளுக்குச் சுகசாதனமாயும், சகல விருக்ஷசாதிகளுக்கும் லதைகளுக்கும் ஆதாரஸ்தானமாயு முள்ளவோர் புண்ணியவனத்தில், கோதாவிரி தீரத்தருகில் ஓராஶ்ரமம் அமைத்துக்கொண்டு விசாலையென்னு மனைவியுடன் வசித்து மூன்றுபோதும் ஸ்நானஞ்செய்து பஸ்மருத்திராக்ஷமணிந்து பஞ்சாக்ஷர ருத்திர முதலிய ஜபங்களை ஜபித்துப் பரமேஶ்வரனைப் பரமபக்தியுடன் பூஜித்துக் கொண்டு நித்தியமுந் தோத்திரஞ்செய்து அதிவுக்ரமான தவஞ்செய்து கொண்டிருந்தனன்".

"ஒர்நாள் நாரதமுனிவன் தனது ஆஶ்ரமத்தைச் சமீபித்து வருதலைக் கண்ணுற்று எழுந்தெதிர்சென்று அர்க்கிய பாத்ய ஆசமனாதிகள் தந்து ஆசிரமத்துக்குள் அழைத்து வந்து ஒரரிய ஆசனத்தில் வீற்றிருக்கச் செய்து மிக்க விநயத்தோடு

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

''ஒ ஸ்வாமிகாள்! எங்கிருந்து தேவரீர்வருகின்றீர்? இனி எவ்விடம் போகவேண்டியது? தாங்கள் மூவுலகிலும் சஞ்சரிப்பவரன்றோ, சர்வஜ்ஞராகிய தங்களுக்குத் தெரியாத விஷயம் யாதுமில்லையே? ஏதேனும் விசேடமுளதாயின் அதனை எனக்குக் கூறவேண்டும்'' என்று கேட்க,

அதற்கு நாரதன், அநேகசரித்திரங்களைக் கூறிவந்து, ''ஒ மிருகண்டு முனிவரே! ஓர் விசேடமுளது. நீர் எனக்கு நல்ல தோழராகலின், அதனைக் கூறவேண்டுமென்று எண்ணுகின்றேன். அது ஹிதமானதேயாயினும் இடையே அஹிதமொன்று இருக்கின்றது. அதனைக் கேட்டு நீர் மனவருத்தமடைதல் கூடாது. அது யாதெனின் உமது மனைவி இன்று முதலாக வெண்ணப்படும் ஒன்பதாமாண்டில் அதிக சுந்தரமான ஓர் புதல்வனைப் பெறுவாள். அப்புதல்வன் பதினாறு வருடமே சீவித்திருப்பான். ஆகையால் ஆயுர்த்தானஞ் செய்வோனாகிய மஹேஸ்வரனைப் பூஜைசெய்யும். ஆயுளைத் தருவோன் பரமேஸ்வரனே என்று சகலசுருதிகளுங் கூறுகின்றன. உமதுபுத்திரனையும் அவ்வாறு சிவபூஜை யியற்றச் செய்யும். அங்ஙனஞ் செய்வீர்களாயின் பின்னர் அப்பரமேஸ்வரன் ஆணையின்படி வருவதுவருக. ஒ முனிவரே! இச்செய்தியை யொருவருக்குங் கூறாதிரும்'' என்று கூறிச் சென்றனன்.

பின்னர் மிருகண்டுமுனிவனது பத்னியாகிய விசாலையும் கர்ப்பவிருத்தியடைந்து சர்வலக்ஷணங்களும் பொருந்திய ஓர் புத்திரனைப் பெற்றனள். முனிவனும் புத்திரனைக் கண்ணுற்று அவனது பேரழகிற்கு மனமகிழ்ந்து பற்பலதானங்கள் செய்து உடம்பு முழுவதும் விபூதியைப்பூசித் திரிபுண்டரமணிந்து அக்குழந்தை யின் கையில் தீர்த்தமும், பில்வபத்திரமுதலிய சிறந்த பூஜாத் திரவியங்களையுங் கொடுத்து, பின்னர் அவைகளைத் தமதுகையில் வாங்கிக்கொண்டு நாரதமுனிவர் சொல்லிய வசனத்தையும் சிந்தித்து மிருத்யுஞ்சனைப் பூசித்து மார்க்கண்டேயன் என்று நாமகரணமுஞ் செய்தனன்.

அப்புதல்வனும் பாலசந்திரன்போல் வளர்ந்து கிரமமான வயதுவர மிருகண்டுமுனிவன் அவனுக்கு உபநயனஞ்செய்து

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பஞ்சாக்ஷர மஹாமந்திரத்தையும் உபதேசித்து மூன்றுகாலமும் ஸ்நானஞ் செய்யவும், 'அக்னிரிதி' என்றற் றொடக்கத் தனவாகிய மந்திரங்களால் விபூதிதூளனமும், 'த்ரியாயுஷம்' என்னும் மந்திரங்களால் நெற்றி கைகள் மார்பு முதலிய விடங்களில் திரிபுண்டரம் அணியவும், உருத்திராக்ஷ தாரணஞ்செய்யவுங் கற்பிக்க, அப்புதல்வனும் அவ்வாறே நியமத்துடன் அனுட்டித்துக் கொண்டு வேதங்களையுமோதி வருணாச்சிரம தருமங்களினும் வழுவாது மூன்றுகாலமுஞ் சிறப்புற்ற சிவலிங்கமூர்த்தியைப் பில்வபத்திர முதலியவைகளால் அர்ச்சித்தும் உபாசித்தும் துதித்தும் வந்தனன். அத்துதியைக் கேளும்.

மார்க்கண்டேயர் துதித்த சிவபெருமானது துதிகள்

''மகாமேருவைத் தநுசாய் உடையோனும், வெள்ளிமலையின் சிகரத்தில் வசிப்போனும், சர்ப்பத்தை நாணாகச் செய்து கொண்டவனும், ஹரியையும் அக்னியையும் பாணமாகக் கொண்டவனும், ஓர் நொடிப்போதில் முப்புரமெரித்தவனும் தேவாதிகளால் நமஸ்கரிக்கப் பட்டவனுமாகிய சந்திரசேகரனை நமஸ்கரிக்கின்றேன். யமன் யாது செய்வான்''.

''ஐந்து தேவவிருக்ஷங்களின் மலர்களால் பரிமளகந்தமுடைய பாதாரவிந்தங்களால் விளங்குவோனும், நெற்றிக்கண்ணினின்றுந் தோன்றிய தீயால் எரித்த மன்மததேகத்தை உடையோனும், பூதி பூசிய மேனியனும், பவனாசஞ்செய்வோனும்,பவனும், அவ்யயனு மாகிய சந்திரசேகரனை நமஸ்கரிக்கின்றேன். யமன் யாது செய்வான்''.

''மதயானையின்றோலை உத்தரீயமாகக்கொண்டு விளங்கு பவனும், பிரமவிஷ்ணுக்களால் பூஜிக்கப்பட்ட பாதாரவிந்த முடையோனும், கங்கையின் அலைத்திவலையான் நனைந்த ஜடையுடையோனுமாகிய சந்திரசேகரனை நமஸ்கரிக்கின்றேன். யமன் யாதுசெய்வான்''.

''குண்டலமாய்ச் செய்யப்பட்ட அரவத்தையுடையோனும், விருஷபவாகனனும், நாரதாதிமுனிவர்களால் துதிக்கப்பட்ட

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வைபவமுடையோனும், புவனேஸ்வரனும், அந்தகாந்தகனும், ஆச்ரயித்தவருக்குக் கற்பகவிருக்ஷம் போன்றவனும், மயனுக்கும் அந்தகனாகிய சந்திரசேகரனை நமஸ்கரிக்கின்றேன், யமன் யாதுசெய்வான்''.

''யக்ஷேசனாகிய குபேரமித்னும் பகாக்ஷரனைத் தொலைத்த வனும், புஜங்காபரணனும், பார்வதியோடுகூடிய வாமபாகத்தை யுடையவனும், விஷத்தாற் கறுத்தகண்டமுடையோனும், பரசுவைக் கையிலேந்தினவனுமாகிய சந்திரசேகரனை நமஸ்கரிக்கின்றேன். யமன் யாது செய்வான்.''

பவரோகிகளுக்கு வைத்தியனும், தக்ஷயஞ்ஞத்தை யழித்தவனும், முக்குண ஸ்வரூபனும், முக்கண்ணனும், போக மோக்ஷங்களைத் தருபவனும், சகலபாபராசிகளைத் தொலைப்பவனு மாகிய சந்திரசேகரனை நமஸ்கரிக்கின்றேன். யமன் யாது செய்வான்.

''பக்தவத்ஸலனும், அர்ச்சிப்போர்களுக்கு அழிவற்ற பெருநிதி யாயுள்ளவனும், திகம்பரனும், சர்வபூதபதியும், பராத்பரனும், அப்ரமேயனும், நிகரற்றவனும், அஷ்டமூர்த்தி சொரூபனுமாகிய சந்திரசேகரனை நமஸ்கரிக்கின்றேன். யமன் யாதுசெய்வான்.''

''விஸ்வசிருஷ்டி ஹேதுவானவனும், பாலனை செய்பவனும் சங்கரிப்பவனும், கணத்தலைவர்களுடன் கூடி இரவும்பகலும் விளையாடுபவனுமாகிய சந்திரசேகரனை நமஸ்கரிக்கின்றேன். யமன் யாது செய்வான்? சிவபக்தர்களுக்கு ஏவலையே செய் கின்றான்.''

இவ்வாறு துதித்துவருநாளில அவனுக்குப் பதினாறாவது வயது சமீபித்தது. சமீபிக்கவே அவனது தாய்தந்தையர்கள், தமதரும் புதல்வனுக்கு பூர்ணசந்திரனைப் பழித்த திருமுகமானது பிரகாசிப் பதையும், அத்திருமுகத்தில் திரிபுண்டரமாய் விபூதிபிரகாசிப் பதையும், சிரம் கண்ட முதலிய ஸ்தானங்களில் ருத்திராக்ஷமணிகள் ஆபரணம்போற் பிரகாசிப்பதையும், இங்ஙனமான அழகுக்கேற்ப யௌவனபருவம் வந்திருப்பதையும், அதனை அழகுபெறச் செய்வதாகிய பிரமசரிய ஆஸ்ரம தருமங்கள் வன்மை பெற்றிருப்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பதையும், அவ்வன்மைக்கு இயலச் சகல சாஸ்திர ரகஸ்யங்களையு மறிந்து பக்திவைராக்ய ஞானங்கள் மேலிட்டிருப்பதையும் பார்த்து, 'அந்தோ! இவ்வளவு நற்குண நற்செய்கைகளோடு நல்லழகும் வாய்க்கப்பெற்ற புதல்வனை யிழக்கும்படியானகாலம் வந்து விட்டதே! யாம் யாது செய்வோம்' என்று நினைந்துருகி மனத் துயரத்தால் கண்களில் நீர் ததும்ப மகனைப்பார்ப்பர், பார்க்குந் தோறும் கண்ணீர் பெருக்கெடுத்துவருந்துவர், அப்பெருக்கால் பார்ப்பதற்குக் கூடாமற்போக, அதனை அவர்கள் உணராது சீக்கிரத்தில் இறக்கத்தக்கவனான புத்திரனுடைய முகத்தைப் பார்ப்பதனா லென்னபயனென்று விதிதான் நமதுகண்களை மறைக்கின்றதோ என்றெண்ணிச் சோகராகத்தில் மூழ்கியுழன்று கலங்குவர்.

இவர்களது பரிபவத்தைக் கண்ட மார்க்கண்டேயன், தாய் தந்தையர்களைச் சாஷ்டாங்கமாகப் பணிந்து, "யான் முன்னேயறியப் பட்ட தெய்வமாயிருக்கின்ற ஒ தாய்தந்தையர்களே! நீங்கள் என்னைப்பார்த்து மனத்துயரத்தால் கண்ணீர் பெருக்கித் துக்கிப்பதற்குக் காரணம் யாது? அதனை யெனக்குக் கூற வேண்டும்" என்றுப் பிரார்த்திக்க;

அதற்குத் தாய்தந்தையர்கள், "அந்தோ! இச்செய்தியை நமது அருமைப்புதல்வனுக்கு எவ்விதந் துணிந்து கூறுவோம். கூறினால் நமது புதல்வன் மனம் என்னவிதமாய் வருந்துமோ? கூறாமல் இருப்போமானாலும் நாம்கேட்டும் இவர்கள் கூறவில்லை யாது காரணமென நினைந்து வருந்துவனே! ஆதலின் அவன் வினவியதைக் கூறுவோமா, அல்லது கூறாதுவிடுவோமா" என்று சிறிதுநேரஞ் சிந்தித்து ஒன்றுந்தோன்றாமல் மனம்வாடிப் பின்னர் "நாம் கூறாமல் இருப்பதினும், உண்மையைக் கூறுவதே நலம். உள்ளபடி வருவதுவருக. நமது புத்திரனும் நாம்கேட்டுங் கூறவில்லையே என்கிற வருத்தத்தையடையான்" என்று நிச்சயித்துத் துணிந்து, "எங்கள் கண்மணியே! எங்கள் பாக்கியமே! பூர்வம் நாரதமுனிவர் நமது ஆச்சிரமத்துக்குவந்து ஒன்று கூறினர்" என்னுமது வரையிலுமே அவர்கட்குப் பிரக்ஞையிருந்தது. பின்னர் மூர்ச்சையடைந்து கீழேசாய்ந்தனர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சாயவே மார்க்கண்டேயன் தனது தாய்தந்தையரைத் தூக்கி மெதுவாய்த் தனது மார்பின்மீது அணைத்துக் கொண்டு அவர்களது கண்களை மிகக்குளிர்ந்த தண்ணீராற்றுடைத்து மெல்ல மெல்ல விசிறியால் விசிறினான்.

சற்றுநேரங்கழித்துத் தந்தையார் மூர்ச்சைதெளிந்து ''ஒ புத்திரா! யான் எங்கிருக்கின்றேன், இதுபகலா! இரவா! நீயார்''என்று வினவித் திக்பிரமைகொண்டு பிதற்றத் தொடங்கினான்.

அதனை மார்க்கண்டேயன் கண்டு, ''இதுவென்ன கொடுங் காலம், இடுஞ் எந்தபாவத்தின் பயனோ? யான் யாதுசெய்வேன்? சொல்லத்தொடங்கிய சொல்லைச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே சோகத்தால் மூர்ச்சையடைந்து விழுதற்குக் காரணம் யாதோ!''வென்று நினைத்துச் சிவபெருமானது பாதாரவிந்தங்களை நினைத்துத் தனது அன்னைக்கும் அப்பனுக்கும் சைத்யோபசாரஞ் செய்து மூர்ச்சைதெளியச்செய்து இருவரையும் நோக்கி, ''என்னன்னையே! என்தந்தையே! நீங்கள் ஏன் சோகக்கடலில் மூழ்கி வருந்துகின்றீர்கள்? அதனைக் கூறினால் அச்சோகந் தொலையு மார்க்கத்தை நான் சொல்லுகின்றேன். கருணைக்கடலான கைலாயநாதனுடைய அருளிருக்குமாயின் எதைத்தான் செய்ய முடியாது'' என்று கூறி, சிவபிரானது திருவடியை நினைந்து திண்ணிய மனமுடையனாய், ''அச்செய்தியை அடியேனுக்கு உரைத்திடுக''வென்று புதல்வன்கூறவே,

மிருகண்டு சிறிது மனந்தெளிந்தவராய்த் தழுதழுத்த வார்த்தையோடு, ''அப்பா புத்திரா! பூர்வம் நாரதமுனிவர் நமது ஆச்சிரமம்வந்தனர். அவர் எங்களைப் பார்த்து உங்களுடைய புதல்வன் பதினாறுவயதே சீவித்திருப்பனென்று கூறிச் சென்றனர்'' ன்று கூறி மீண்டுங் கண்ணீர் விட்டனர்.

ஒ ஜைகிஷவ்யரே! பிதா கூறிய வசனத்தைக்கேட்டு மார்க்கண்டேயன் கதிரவனைக் கண்ட கமலம்போல் களிப்பெய்திய மனத்துடன் முகமலர்ந்து தனது தாய்தந்தையரைநோக்கிப் பின்வருமாறு கூறலாயினர் என்றருளினர்.

பதின்மூன்றாம் அத்தியாயம் முற்றிற்று.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

சிபிவிஷ்டாய நம:

பதினான்காம் அத்தியாயம்.

மார்க்கண்டேய வரப்பிரசாதம்.

மிருத்தியுஞ்சயன் மகனாராகிய முருகப்பெருமானார் முனிவரை நோக்கி, ''ஓ முனிபுங்கவரே! மார்க்கண்டேயன் தனது தாய் தந்தையர்களை நோக்கி அறிவிற்சிறந்த எனது அன்னையப்பர்களே! சர்வமங்களையுடன் கூடிக் கருணையே திருமேனியாகக் கொண்டுவிளங்குஞ் சங்கரனாகிய ஹரனிருக்கும்போது நீர் அந்தகனைச் சிந்தித்துக்கலங்குதல் உசிதமோ எந்த இறைவனை நினைத்த மாத்திரத்தில் சனனமரணபயம் நீங்குமோ அந்த இறைவனை என்னுள்ளத்திலேயே கவர்ந்து கொண்ட நான் யமனுக்கு அஞ்சுவேனா? எவனையர்ச்சித்துப் பகவான் விஷ்ணுத்வத்தை யடைந்தானோ, எவனைத் தியானித்து உருத்திரன் சர்வசராசரங் களையும் சங்கரிக்கின்றானோ, எவனை வழிபட்டு இந்திராதி தேவர்கள் தத்தம் பதங்களைப் பெற்றனரோ, அந்தத்திரியம்பகனும், விரூபாக்ஷனுமாகிய இறைவன் என்னைக் கவர்ந்துகொண்டிருப்பக் காலன் என்னைக் கவர்வது எவ்விதம்? இனி என்னைக் கைவல்யஸ்ரீ என்னுங் கன்னிகையொருத்தியே கவரத்தக்கவள். ஆகையால் நீவிர் அஞ்சுதல் ஒழிக, யான்இறைவனது கருணையால் காலனைச் செயித்துவிடுகிறேன்'' எனக்கு விடைகொடுங்கள் என்று கூறி;''

அம்மையப்பர்களை நமஸ்கரித்து அவர்களைத் தைரியப்படுத்தி விடைபெற்றுக் காலஞ்சரம் என்னும் வனத்தையடைந்து திரிகாலமும் ஸ்நானஞ்செய்து பஸ்மோத்தூளிதனாய்த் திரிபுண்டரந் தீட்டி ருத்திராக்ஷாபரணம் பூண்டு பில்வபத்திரங்களாலும், ருத்ரம் சூக்தம் பஞ்சாக்ஷரம் பஞ்சப்பிரம்ஹ முதலிய மந்திரங்களாலும் சிவபெருமானைப் பூசித்து வந்தனன்.

அங்ஙனம் பூசித்து வருநாளில் நாரதர் கூறிய தினத்தில் காயமலை போலுங், கிருஷ்ணபக்ஷவிருள் போலுங் காணும் மேனியனும் குரூரனுமான காலன், கோரமாகிய பாசங்களைக் கையிலெடுத்துக் கொண்டு கருங்கடாவின் மேலேறி, மிருத்யு,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஜ்வரம் முதலிய பரிவாரங்கள்சூழ மார்க்கண்டேயனைச் சமீபித்துப் புருவங்களைநெறித்துப் பற்களைக் கடித்துக் கண்களினின்றும் விஷப்பொறிசிதற உறுத்துப்பார்த்துத் தொங்கவிட்ட நாவினுனியி லிருந்து தாரைதாரையாய் நீரொழுகப் பயங்கரமாய் அதட்டிக் கொண்டு, தன்னோடு சூழ்ந்துவரும் உலக்கையேந்திய கைகளாலும், ஈட்டி போன்ற கேசங்களாலும், குகைபோன்ற விரிந்தவாய்களாலும், பயமென்பதற்கும் பயத்தை விளைப்பவர்களாகிய படர்களையும் அருகில்வரச்செய்து;

கண்களைமூடிக் கொண்டு சிவபெருமானைத் தியானித்துக் கொண்டிருக்கும் மார்க்கண்டேயனைப் பார்த்து, 'ஒ பாலா! நான் வருவதையறிந்து கண்களை மூடிக்கொண்டு எதனையோ பாவிப்பவன்போல் பாவனைகாட்டி என்னைப் பயமுறுத்து கின்றனையோ? அடா! உனது வஞ்சனைக்கு நான் பயப்படுவேனா! நான் யாருக்காவது பயப்பட்டதுண்டா? அடா! எனது பாசத்திற் கட்டுண்டவர்களுக்குக் கதி ஏது? அடா! இப்போது நீ விசாரப்படுவதால் அடையும்பயன் யாது? அநாதியாகிய சம்சாரத்தில் இதுகாறும் எத்தனைகோடி ருஷிகள் முனிவர்கள் தேவர்கள் அரக்கர்கள் அரசர்கள் முதலியசகலப் பிராணிகளும் எனது பாசத்திற் கட்டுப்பட்டுக் கதியாதுமின்றி விழிப்பவர்களாக இருக்கின்றனர். எனது தூதர்களைக் காண்பதினாலேயே சராசரமாகிய சகல பூதங்களும் நடுங்கி யொடுங்கி வருகின்றன. அங்ஙனமாகிய யான் உன்னைக் கூப்பிடும்போது வீணாக எதனையோ நினைப்பதிற் பயனென்னை? என்னிடம் வருவாயாக. அடா! இப்போது நீ என்னிடம் அகப்பட்டவனா? அல்லவா? அகப்பட்டவுன்னை ரக்ஷிப்பவனுமுண்டா? என்றுகூறி, ஆலகால விஷம் போன்ற தனது பாசத்தை மார்க்கண்டேயனது கண்டத்திற் சுற்றி வலிவாய் இழுத்துக் கொண்டு அண்டகடாகம் வெடிப்பட்டதுபோல் தனதுவாயைத் திறந்து கர்ஜனை செய்யவே,

மார்க்கண்டேயன் பயந்து நடுங்கி, "இனி யாது செய்வோம், இந்தப் பெரிய ஆபத்தில் அகப்பட்டுக் கொண்டோமே, நமக்குக் கதியாது? ஒன்றுமில்லையே, இவ்வாபத்தினின்றுங் காப்போர் யாரு மில்லையே, ஈஶ்வரா! கருணைக்கடலே! கயிலைநாதனே! நீலகண்டனே! விரூபாக்ஷா! புரஹரா! காமஹரா! கஜஹரா!

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வியாக்ரஹரா! சராசரஹரா! ஜகதீஸ்வரா!'' என்று சிவலிங்கமூர்த்தியை இரண்டு கைகளாலும் இறுகப்பற்றிக் கொண்டு கண்களினின்றும் நீர் தாரைதாரையாய்ப் பெருக்கெடுத்துவரக் கதறிக்கொண்டிருப்ப, மிருத்யுஞ்சயனாகிய சங்கரன் அந்த லிங்கமூர்த்தியினின்றும் நீலகண்டனாய், விருபாக்ஷனாய், கபர்த்தியாய், சந்திரசேகரனாய் வெளிவந்து பெரிய ஓர்சூலத்தைக் கையிலேந்தி அண்டகடாகம் வெடித்திட ஹுங்காரஞ்செய்து இடதுகாலைத் தூக்கி ஆகாயத்தி லெழும்பி காலன் மார்பில் உதைத்தருளினன்.

அந்தகன் மல்லாந்து பூமியில் வீழ்ந்து ஆகாயத்தைப் பார்த்த வண்ணமாய் ரத்தத்தைக் கக்கிக்கொண்டு மூர்ச்சித்துக் கிடந்தனன். அங்ஙனம்வீழ்ந்த காலனையும், காலாந்தகனையுங் கண்ணுற்றுத் தூதர்கள் கலங்கித் திசை தெரியாமல் தடுமாறி யோட்டம்பிடித்தனர்.

உடனே காலகால மூர்த்தியாதிய கைலாயநாதன்மேல் பிரமன் விஷ்ணு முதலிய சகலதேவர்களும், நாரதாதி தேவருஷிகளும், வசிட்டராதி பிரஹ்மருஷிகளும், அசுரர்களுஞ் ''ஜயஜய''வென்று கோலாகலத்துடன் மலர்மாரி பொழிந்தனர். அவர்கள் பொழியும் மலர்களெல்லாம் நீலலோகிதனாகிய சிவபெருமானது மௌளிக்குச் சராசரங்களால் காத்தப்படும் மாலைபோல் ஆகாயமார்க்கத்தினின்றும் வீழ்ந்தன.

காலகாலனாகிய கைலைநாதன் தமதடியில் வீழ்ந்து அஞ்சலி செய்து கொண்டு நிற்கும் மார்க்கண்டேயனைத் தமது திருக் கரங்களாற் தடவிக்கொடுத்து, ''மார்க்கண்டேயா! நீ யாதொரு ரோகமுமின்றி என்றும் பதினாறு வயதுடையவனாய்ச் சனனமரண மற்று எப்பொழுதும் எம்மைப் பூசித்துக் கொண்டு ஆனந்தத்துடன் வாழ்வாயாக. ஒ அன்பனே! யாமிப்போது கூறப்போகும் வாக்கியங் களைக்கேட்டுச் சகலதேவரும் உய்வாராக.''

''ஒ தேவர்காள்! எமது பாதாரவிந்தத்தில் பரமபக்தியுடைய வராய்ச் சிவலிங்கபூஜை செய்வாரிடம் இனி அந்தகன் யாது செய்யலாம். பிரம விஷ்ணு இந்திராதியர்களாகிய நீங்கள் தாம் என்ன செய்யலாம். அவரிடம் எவ்வண்ணம் பாவங்களணுகும். அவருக்கு எவ்விதத்தாலும் ஓர்அபாயம் இன்றென்று அறிமின்கள். அவர் முத்திகாந்தை யென்னும் மங்கையின் கரம்பற்றி நித்யகல்யாணராய்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வாழ்வர்'' என்று கூறி மீண்டும் மார்க்கண்டேயனைப் பார்த்து,''பிரம விஷ்ணுவாதி சகலதேவர்களும் கற்பந்தோறு நாசமடைவார் களேயன்றி நீ நாசமடையாய், நீ திவ்வியசரீரத்துடன் எமது கைலைமுதலிய எவ்விடங்களிலும் சுகமாய் வாசஞ்செய்து கொண்டிருப்பாய்'' என்று அனுக்கிரகித்துத் திருவுருக் கரந்தனர் என்றருளினர்.

பதினான்காம் அத்தியாயம் முற்றிற்று.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

உ

அம்பிகாநாதாய நம:

பதினைந்தாம் அத்தியாயம்.

யமானுசாஸனம்.

சூதமுநிவர் கூறுகின்றார். "ஒ முனிவர்காள்! பக்தர் அனுக்கிரக னாகிய பரமேஸ்வரனது ஆனந்தஸ்வரூபராகிய ஷண்முகனார் முனிவரை நோக்கி, ஒ ஜைகிஷவ்யரே! சிவபெருமானது இடது காலால் உதையுண்டு உதிரத்தைக் கக்கிக்கொண்டு உயிரிழந்த யமனது சரீரத்தைத் தேவர்கள் பார்த்து இறைவனை நோக்கி யஞ்சலி செய்து நின்று, "ஒ ஸ்வாமின்! சகலபிராணிகளுள்ளும் அந்தர்யாமி யாய் அவரவர்களை யேவிக் கொண்டிருப்பவரும், எல்லாம் அறிந்தவருமாகிய தேவரீரது ஆணையினாலேயே சகலகிருத்தி யங்களும் நடந்தேறி வருகின்றனவாயினும், தமதுகரணங்களை அசுபவாசனையிற் செல்லவிடாது சுபவாசனையிற் செல்லவிட்டுச் சிவபதங்கள் ஒழிந்த ஏனையபதங்களெல்லாம் அழிவுடையன என்றும், சனன மரணமாகிய மஹா துக்கங்களுடயனவென்றும் உணர்ந்து அவைகளை அவாவாமல் துச்சமென்று ஒழித்துச் சகலசத் கருமங்களையும் பயன்விரும்பாமற் செய்யும் வைராக்கியசீலராய்த் தேவரீரை யுபாசித்து இம்மையினும் அம்மையினும் சுகமுடையவ ராய்ச் சிவானந்தம் அனுபவிக்கும் சாம்பவரொழிந்த ஏனைய ஆன்மகோடிகளுக்கு ஜனனமரணம் என்பன இங்குவீழ்ந்துகிடக்கும் காலனை நிமித்தமாய்க் கொண்டன்றோ நிகழ்ந்துவருகின்றன."

"இக்காலன்கதி யிவ்வாறாயின் உலகவியாபாரங்கள் நடை பெறுவது யாங்ஙனம்? ஆதலால் தேவரீர்கருணைகூர்ந்து இக் காலனை ஜீவிக்கச் செய்யவேண்டும்"என்று மிகவும் பிரார்த்திக்க, இறைவன் அவர்கள் வேண்டியவாறு அந்தகன் உயிர்பெற்றெழத் திருவுளங்கொள்ள, அவன் நித்திரைசெய்து எழுந்தவன் போலெழுந்து சாஷ்டாங்கமாக வணங்கி இறைவன் அருகிலிருக்கும் மார்க்கண்டேயரைக் காண நாணமுற்றுத் தலைகுனிந்து விஸ்வேஸ் வரனாகிய இறைவனை வணங்கி, "ஒ சம்போ! சகலஜகதீஸ்வர

Digitization by Hindu-Heritage-Foundation of America: HHFA (USA)

பிரபோ! அடியேன் அஞ்ஞானத்தால் செய்த பெரும்பிழையைக் கருணைக்கடலாகிய தேவரீர் பொறுத்தருளல் வேண்டும்''.

''ஒ ஸ்வாமின்! சகல வேதாகமங்களாலும் அறியவொண்ணாத சிவோபாஸகர்களது மஹிமையை அடியேனது சிற்றறிவினால் எப்படியறியக் கூடும்? ஆதலின் யான் அறியாது செய்தபிழையைத் தேவரீர் பொறுத்து அருளாவிடில் அடியேனுக்குக் கதியாய் உள்ளார் எவர்?''

''ஒ இறைவனே! பிரகிருதிசம்பந்த மற்றவரும் முழுமுதற் கடவுளுமாகிய தேவரீரது திவ்வியசோதியின் அடிமுடிகளை, அன்று தேடத்தொடங்கிய அரிபிரமருக்குக் காட்டாதொளித்து, இன்று உமது பொன்னடியை ஆஸ்ரயித்திருக்கும் சாம்பவரை வெகுண்டுவந்து மாறுசெய்த எனக்கு அவ்வரிய பொன்னடியைக்காட்டி அதனாற்றாக்கி வீழ்த்திய கருணைக்கு யான் என்செய்வேன்? என்னிலும் பாக்கியவான் இவ்வுலகில் எவனிருக்கின்றான்?''

''சநகர் முதலிய மஹாயோகிகளும் ஸ்பரிசிக்கப் பெறாத நித்தமுத்த நிர்மலமூர்த்தியாகிய தேவரீரது பாதாரவிந்தத்தை எனது இருகண்களுங்காண மார்பினில் உதைக்கப் பெற்ற அடியேனது பாக்கியமே பாக்கியம்.''

''இவனை நமது திருவடியால் உதைத்தருளவேண்டும் என்று திருவுளத் தெண்ணிய எம்பெருமானே! என்னையுதைத்து மறக் கருணை காட்டியதுபோலும் அறக்கருணையைக்காட்டி என்னை ரக்ஷித்தருளல்வேண்டும்.''

''சத்தியகாமரும் சத்தியசங்கற்பருமாகிய தேவரீரும் என்னை உய்விப்பான் எண்ணி உய்வித்தபடியால் அடியேனுக்கு அருள்புரியா திருத்தல் தக்கதாமா? வேதாகமங்களாலும் அறியவொண்ணாத தேவரீரது அன்பர்மஹிமையைச் சிக்ஷையுடன் நன்றாய் உணர்த்தப் பெற்ற அடியேனுக்குச் சன்மானஞ்செய்ய வேண்டாமா?''

''அன்றியும், தேவரீரது கோபப்பிரசாதத்துக்கு ஆளாகிய அடியேனை விடுத்து, ஏனையோரிடம் அருட்பிரசாதத்தைக் காட்டுவது தருமமாமா?''

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

''கருணையே திருமேனியாய்க் கொண்ட தேவரீரது பொன்னடி சம்பந்திக்கப்பெற்றும் அடியேன் மனம் மகிழ்ச்சி பெறாவிடில் இனி வேறெதனால் யான் மகிழ்ச்சி பெறுவேன்?''

''தேவரீருக்கு இயல்பாயுள்ள அரியநாமங்களைக் கூறும் வேதங்களிடம் எப்பொழுதும் கருணைகூர்வதுபோல, நாமத்தைக் கற்பிக்கும் அடியேனிடமும் தேவரீர்கருணைகூர்தல் அவசியமே யாகும்.''

''என்னையெனின், தேவரீரிடம் அநாதியாய் வழங்கிவரும் ''கால''எனுஞ் சொல்லை வேதங் கூறுகின்றது. ''காலகால'' என்னும் அரியநாமமுண்டாகியதற்கு யான் இன்று நிமித்தமாயினேன்.''

''அதுவேயுமன்றி ஒ ஸ்வாமின்! யான்செய்த பிழையை ஆராய்ந்து பார்க்குங்கால் சிவோபாஸனை செய்வோர்க்கு யமபய மில்லை யென்கின்ற வுறுதிபயக்கும் ஓர் நற்கருமத்தைச் செய்தவனாயும், சிவோபாசனையின் பயனைச் சகலருக்கும் நன்கறிவிக்கும் காரியத்தை முடித்தவனாயுன் ஆயினே னாதலால் யான் புண்ணியஞ் செய்தவனே யாகின்றேன்.''

''புண்ணியஞ்செய்த என்னிடம் தேவரீர் அருள் புரிய வேண்டியது அவசியமன்றோ? ஒ ஸ்வாமின்! இனி யான் தேவரீரது அடியவரை யணுகேன். தேவரீரது அருள்வழங்குந் தலத்தையும் அணுகேன்.''

''ஆகலான் ஒ ஸ்வாமின்! தேவரீரைப் பூசிப்பவர் இன்னா ரென்றும், தேவரீரது திவ்யக்ஷேத்திரங்கள் இவையென்றும், சர்வஜ்ஞமூர்த்தியாகிய தேவரீர் அருளுவீராயின் அம்மகான்களைப் பூசித்தும், க்ஷேத்திரங்களை யணுகாமலும், கிருதார்த்தனாவேன்'' என்று பிரார்த்திக்க,

மார்க்கண்டசகாயனாகிய மஹாதேவன் இயமனை நோக்கி, ''ஒ காலனே! எவர் தினந்தோறும் நியமங்களுடன் மூன்றுகாலமாவது, இரண்டு காலமாவது, ஓர் காலமாவது எம்மைப்பக்திசிரத்தையுடன் பூஜிக்கின்றனரோ, எவர் விபூதியைத் தேகமுழுவதும் பூசித்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

திரிபுண்டரமாய் அணிந்து, கழுத்து மார்பு கை காது முதலிய அங்கங்களில் உருத்திராக்ஷங்களைத் தரிக்கின்றனரோ, எவர் பஞ்சாக்ஷரத்தையே முக்யமாய் நாடுகின்றனரோ, எவர் சதருத்திரீயத்தை ஜபஞ்செய்கின்றனரோ, எவர் எமது திவ்யசரித்திரங்களைப் படிக்கின்றனரோ, எவர் சிரவணஞ் செய்கின்றனரோ,''

''எவர் தேவதேவா! ஜகஜ்ஜநகா! விஶ்வாதீதா! த்ரிணயனா! காமாரே! கண்டபரசோ! குண்டலீசகுண்டலா! வேதாதீதா! சூலபாணே! பர்க்கா! த்ரியம்பகா! சதாசிவா! காலகாலா! உமாசகாயா! பரமேஶ்வரா! மன்மதாந்தகா! மஹேசா! பிநாகபாணே! வேத குலாவதம்ஸா! வரதா! சிவா! வைகுண்டநேத்ரஸரஸீபவ பூஜ்யபாதா! கஜசர்மதரா! கருணாரத்னாகரா! தேவரீரையே நம்பியிருக்கின்றோம். தேவரீரேகதி, மற்றெவரையும்நினையேம் அடியேமைக் காத்தருளும்'' என்று மனவுருக்கத்துடன் பிரார்த்தித்துக் கூறுகின்றனரோ, அவர்களெல்லாம் மஹாபாதகஞ்செய்தவராயினும் எவராலும் அறியவொண்ணா மஹிமையை யுடையோராவர்.''

''அவர்கள் இவ்வுலகில் சகலபோகங்களையும் புசித்து, எமதுபதமடைவர். ஆகலான் நீ அவர்களைக் கண்டால் வணங்கியஞ்சலிசெய்து நிற்கவேண்டும். இதுதான் யாம் உனக்குச் செய்யும் அருளென்று அறிவாயாக'' என்று அனுக்கிரகஞ் செய்தனர்.

பதினைந்தாம் அத்தியாயம் முற்றிற்று.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

ஸ்ரீ கண்டாய நம:

பதினாறாம் அத்தியாயம்.

இதுவுமது.

சூதர் கூறுகின்றார், ''ஒ மஹாபாசுபதவிரதிகளாகிய மஹருஷிகாள்! சேவலங்கொடியோனாகிய சண்முகக்கடவுள் ஜைகிஷவ்யரை நோக்கிக்கூறுகின்றார்''. ''ஒ முனிபுங்கவரே! பிறகு மார்க்கண்டேயபதியாகிய சிவபெருமான் மீண்டுங் காலனை நோக்கி ஒ காலனே! எமது க்ஷேத்திரங்களைக் கேட்டனையன்றோ, அவைகளைக் கூறுகின்றேன் கேட்பாயாக.''

★''எமக்குக் கண்ணாயுள்ள ஆனந்தவனம், ருத்திரகோடி, ஓங்காரம், புஷ்கரம், திரியம்பகம், கேதாரம், ஸ்ரீசைலம் இவ்வேழும் மகா நகரங்கள் என்று கூறுவர்.''

★''இவைகளும் கோகர்னம், கன்னியாகுமரி, கங்காசாகரம், கெயை, பிரயாகை, மகாகாளம், நருமதாதீரம், நாகேஸ்வரம், பவஹரம், குருவனம், அகஸ்தியாசலம், ஸ்ரீகாளஹஸ்தி, ஸ்ரீ காஞ்சி, சிதம்பரம், விருத்தாசலம், கோபர்வதம், நீலகண்டம், ஸ்ரீகண்ட பர்வதம், காயத்திரிபர்வதம், த்ரிணேசபர்வதம், மாத்ருசிகரம், (தாயுமானஸ்வாமி மலை) பாலவனமாகிய திருவானைக்கா, திரிவனம், (இளங்காடு-திருக்காட்டுப்பள்ளி-திருக்கானூர்), க்ருதத்தானம் (திருநெய்த்தானம்), திருவையாறு, கும்பகோணம், மத்யார்ச்சுனம், விதிவனம், வடபூதரம், வில்வகேசம், ஶ்வேதாரண்யம், காவேரிசங்கமம், வல்மீகேசம், வேதாரண்யம், சேது, துவாதசாந்தம் (மதுரை), மகேந்திரபருவதம், காவேரியின் இருகரையிலுள்ள ஸ்தலங்கள் முதலியனவுமாம்.''

★''ஒ யமனே! இனி யுனக்குச் சிலவிதிகளைக் கூறுகின்றோம், அவையே நமதாணையுமாம், இந்த க்ஷேத்திரங்களில் பஸ்ம ருத்திராக்ஷமணிந்த சாம்பவ சிரோமணிகளாய் எவர் பில்வமுதலிய விருக்ஷங்களைப் பயிர்செய்து வளர்க்கின்றனரோ, எவர்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிவாலயதருமங்களைக் காக்கின்றனரோ, எவர் சிவோற்சவாதிகளை நடந்துகின்றனரோ, எவர்சிவாலயத்தில் தீப முதலிய கைங்கரியங் களைச் செய்கின்றனரோ, எவர் இவைபோலும் எமக்குப் பிரீதியான மற்றும் பலகாரியங்களைச் செய்கின்றனரோ அவர்களையெல்லாம் யான் புத்திர மித்திர களத்திராதிகளுடன் தனதான்ய முதலிய சகலபோகங்களையும் புசிக்கச்செய்து இறுதியில் எமது லோகத்தைச் சேரச்செய்வோம் ஆகலின் நீயேனும் உனது தூதர்களேனும் அவர்களிடத்தில் சிறிதேனும் கொடுமையை நினைத்துப் பூஜிக்க வேண்டிய புத்தியைவிட்டு வேறு புத்தியுடன் சென்று பய முறுத்துதல் ஒழிவீர்.''

''இங்ஙனங்கூறிய புண்ணியகாரியங்களைச் செய்யாமல் சிவத்திரவிய அபஹரண முதலிய கொடுமைகளைச் செய்கின்றவர் களை யுன்வசப்படுத்திக் கொடியநரகங்களிற்றள்ளி மீளாத் துன்பங்களுக்கு உட்படுத்துவீர்'' என்றார்.

பதினாறாவது அத்தியாயம் முற்றிற்று.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

பக்தவத்சலாயநம:

பதினேழாம் அத்தியாயம்.

இதுவுமது.

ஒ ஜைகிஷவ்யரே! அன்பர்க்கு இனியனாகிய இறைவன் மீண்டும் தண்டதரனைப்பார்த்து, ''ஒ காலனே! எவன் விபூதிருத்திராக்ஷம் அணியாமலும், பஞ்சாக்ஷர முதலியவைகளை ஜபஞ் செய்யாமலும், எம்மை வணங்காமலும், சுருதி கூறிய தருமங்களைச் செய்யாமலும், சிவபூஜையைச் செய்யாமலும், பூமிக்குப்பாரமாய் மாத்திரம் இருக்கின்றானோ அவனையும், எவன் தப்தமுத்திரை யணிந்தும், ஊர்த்துவ புண்டரந்தரித்தும், இவ்வரியமனிதப்பிறப்பை யவலமாக்கிக் கொள்ளுகின்றானோ அவனையும், விஷம், தேள், தீ, வறுத்தமணல், கொதிக்கும் எண்ணை இவைகளினும் அஸிபத்திர வனம், கும்பீபாகமுதலிய கொடிய நரகங்களினுந் தள்ளி இறுத்துவாய்.''

★''ஒ அந்தகா! மார்ச்சாலவிருத்தியுடைய அறிவிலிகளாய் சூரியனோடு மின்மினிப்பூச்சியைச் சமமாகக் கூறுவார்போன்று எவர்கள் எம்மைத் திருமாலுக்குச் சமானனாக எண்ணுகின்றனரோ, பூசிக்கின்றனரோ, அவர்கள் உன்னால் செய்யப்படுங் கொடிய தண்டனைக்குட்பட்டு நீங்காத் துயரத்தை யனுபவிக்கக்கடவர்.''

★''ஒ காலனே! சிவாலயத்தை யழிக்கின்றவனையும், சிவாலய தீப தைலத்தைக் களவுசெய்கின்றவனையும், பழுக்கக்காய்ச்சிய வாளினால் கண்டங்கண்டமாய் அறுப்பாய்.''

★''சிவசொத்தை யபகரிக்கின்றவனைக் கண் காதுமுதலிய உறுப்புகளில் பற்பல ஆயுதங்களைச் சொருகிக் கொழுந்து விட்டெரியும் நெருப்பிற்றள்ளி உனது மனம்போனபடி எல்லாக் கொடுமைகளையும் நடத்திவிடுவாய்.''

''எம்மை யுபாசிக்கும் பக்தர்களை நிந்திக்கின்றவர்களையும், வஞ்சகத்தன்மை பொருந்திய ஆசாரமுடையவர்களையும், வேதாந்த விசாரத்தினால் உண்டாகும் ஞானத்தையும், வேதமறிந்த அந்தணர் களையும், வேதத்தையும், விபூதி தாரணத்தையும், ருத்திரத்தையும்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பஞ்சமகாபாதகங்களைத் தொலைக்கும் பஞ்சாக்ஷரத்தையும், ருத்திராக்ஷங்களையும், எம்மிடம் பக்தியுண்டாகச் செய்வதாகிய புராணங்களையும், அப்புராணசாரங்களையும், சிவக்ஷேத்திரங் களையும், சகலபாசங்களையும் அகற்றும் எமது திருநாமங்களையும் நிந்திக்கின்றவர்களையும் நீ சிறிதுமஞ்சாமல் அவர்களது நாவைக் கண்டங்கண்டமாய் அறுத்துக் காய்ச்சிய அரக்கை வாயிலூற்றிக் கொடிய செந்துக்களாற் கடிக்கச்செய்து செக்கினிலிட்டுத் திரித்துக் கற்பகோடி காலம் நரகயாதனைக்கு உட்படுத்துவாய்.''

''எமதுக்ஷேத்திர புராணங்களில் உதாசீனபாவமுடையாரது காதுகளில் பழுக்கக் காய்ச்சிய இருப்பூசிகளைச் சொருகிவிடுவாய்.''

''ஒ காலனே! ஓர் கால் நீ எம்மைச் ''சஹமானன்'' என்று உபநிடதங்கள் போற்றுகின்றனவே, இவரிடத்தில் சகிக்குந் தன்மையிருக்குமாயின் இங்ஙனமான கொடியதண்டங்களை யெப்படி செய்யச் சொல்வாரென்று எண்ணுவாய்?.

⋆நன்றி மறத்தல், பொன்திருடல், பிரமஹத்தி, சுராபானம், பிறன்மனை விரும்பல், இவைகளைச் செய்வாரோடிணங்களில் முதலிய பசுத்ரோகங்களைப் பொறுத்தக் கொள்வோமேயன்றி எம்மாற்கூறிவந்த சிவத்துரோகங்களை யன்று.''

⋆⋆''ஒ கூற்றுவனே! சிவத்துரோகம் அற்றவர்களாய் எமது ஆலயசேவை முதலிய சிவபுண்ணியங்களைக் கைக்கொள்பவர் நீசராயினும் ஸங்கரசாதியராயினும் மஹாபாதகங்களைச் செய்தவ ராயினும் அவர்களெல்லாம் புண்ணியலோகவாசிகளாய்த் தேவர்களாலும் பூஜிக்கப்படும் புண்ணியசீலராய் எமது சிவபதத்தில் சிவானந்தத்துடன் வாழுந்தன்மை உடையவராவர்.''

''அவர்களைப் பெற்றவர்களே புண்ணியவான்கள். ஆகவே நீ அவர்களைச் சிவமென்று பாவித்துக்கொள்; அவர்களருகில் அணுக வேண்டாம். இவ்வாணையைக் கனவினும் மறவாமல் இருப்பாய்'' என்று ஆக்ஞாபித்தனர்.

அவ்வாணையை யமன் சிரமேற்கொண்டு அஞ்சலிசெய்து சந்திரசூடனாகிய ஜகதீஸ்வரனை நோக்கிப் பற்பல தோத்திரஞ் செய்தனன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிவபெருமான் அவனது துதிக்குப் பிரீதியடைந்து அவனுக் கருள்புரிந்து உடனே மார்க்கண்டேயரைப் பார்த்து, ''மார்க்கண்டேயா! எமது அனுக்கிரகத்தினால் என்றுஞ் சுகமுற்று இருப்பாயாக'' என்று ஆசிபுகன்று பிரமன்முதலாயினார் போற்றி போற்றி யென்று நிற்பத் திருவுருக்கரந்தனர். யமனும் இறைவனது ஆணையைப்பெற்று சிவோபாசனையின் மஹிமையை நினைந்து வியந்துகொண்டே தனதிருப்பிடம் போய்ச் சேர்ந்தனன்.

மார்க்கண்டேயர் இயற்கையிலேயே வாய்ந்த மிக்க அழகுடனே இறைவனதருள் பாலிக்கப்பெற்றமையால் கோடிசூரியனுக்கு நிகராய்ச் சொலித்துப் பார்ப்போர்க்குக் கோடிசந்திரனைப்போல் ஆனந்தத்தை விளைவித்துத் தமது தாய்தந்தையரைக் கண்டு வணங்கி நின்றனர். அவ்விருவரும் மகனது தபோபலத்தையும் சிவபெருமான்பால் அவர் பெற்றபாக்கியங்களையுந் தெரிந்து கொண்டு பரமானந்தமுற்று அவர்பால் கலியாணகோலத்தை விரும்ப, அவர், 'அவ்வண்ணமே ஆகுக' வென்று நற்குணம் வாய்ந்த ஒர் கன்னிகாரத்தினத்தை மணஞ்செய்துகொண்டு இல்லறத்தோடு சிவார்ச்சனையை விடாதுஇயற்றிச் சகல வேள்விகளாலும் யக்ஞேசனாகிய சிவனைத் திருப்திசெய்வித்துச் சிவத்தத்துவாசாரியராய்ச் சகலதேவ ருஷிகளும் முனிவர்களும் வணங்கப் பெற்றுச் சுகமாய்யாண்டுஞ் சஞ்சரித்துக் கொண்டு சர்வஜ்ஞசிகாமணியாய் யாவர்க்கும் ஆசிரியராயினர்.

ஒ ஜைகிஷவ்யரே! காலனைவென்று கயிலைநாதனது கருணையைப்பெற்று மஹாமஹிமையுடையவராகிய மார்க்கண்டே யரது இச் சரித்திரத்தைக் கேட்பாரும், படிப்பாரும், பரமேஶ்வர னுடைய கருணையால் சகலபுண்ணிய போகங்களையும் புசித்து, இறுதியிற் சிவபதஞ்சென்று சிவானந்தம் அநுவிப்பார். இதில் யாதும் ஐயமில்லை என்றருளினர்.

பதினேழாம் அத்தியாயம் முற்றிற்று.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

பவாய நம:

பதினெட்டாம் அத்தியாயம்.

கவுதமமுனிவர் அன்னதாதாவாகியது.

சூதமுனிவர் கூறுகின்றார். ஸ்கந்தமூர்த்தி சிவபெருமானால் விதிக்கப்பட்ட யமானுசாஸனங்களைக் கூறியபின்னர் ஜைகிஷவ்ய முனிவரைப் பார்த்து, 'ஒ முனிபுங்கவரே! இனிப் பரமசாம்பவராகிய கௌதம முனிவரது சரித்திரத்தைக் கூறுகின்றேன் கேட்பீராக'.

பூர்வம் கௌதமர் குசாவர்த்தம் என்னும் க்ஷேத்திரத்தில் ஓராச்சிரமம் அமைத்துக்கொண்டு அதில் அருந்தவ மியற்றிவரும் நாளில் அவரது மனைவியாகிய அகலிகை என்னும் அழகிற்சிறந்த மங்கை இந்திரனது மாயையால் அவனைப் புணர்ந்தவளாயிருப்ப, அதனை அம்முனிவர் அறிந்து மிக்ககோபத்தால் அவளைச் சபித்தும் அடித்தும் பலதுன்பங்களைச் செய்து, பின்னர் அக்கோபத்தினால் தமது தபோபலங் கெட்டதையும் மனைவிக்குண்டாகிய குற்றத்தையும் நினைந்துவருந்தி அவைக்குக் கழுவாயாதற் பொருட்டுச் சிவபெருமானைக் குறித்து அதிதீவிரமான தவத்தை அநேககாலம் இயற்றி வந்தனர்.

கௌதம முனிவர் சிவபெருமானைத் துதித்த துதிகள்

தவமியற்றியும் இறைவனார் பிரசன்னராகாததுகண்டு மனம்வருந்தி வாட்டமுற்று, ''சந்திரகலையைத் தரித்தவனும், கமலக்கண்ணனால் அர்ச்சிக்கப்பெற்ற பாதாரவிந்தமுடையவனும், உபநிடதங்களால் சநகாதியோகிகளால் துதிக்கப்பட்டவனும், நந்திகேசரிடம் மிக்கப்பிரியமுள்ளவனுமாகிய இறைவனே! உம்மைச் சரணமடைகின்றேன்.''

''முருகக்கடவுளுக்கு அப்பனும், சகலபுருஷார்த்தங்களையுந் தருவோனும், சுந்தரமேனியனும் சகலசராசரங்களையும் சரீரமாய்ப் பெற்றவனும், ஒப்பற்றவனும், வாமதேவனும், வ்யோமகேசனு மாகிய ஒ சம்போ! அடியேனைக் காத்தருளும்.''

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

''சனந்தனரால் வணங்கப்பெற்றவனும் சந்திரன் முல்லை முதலியனபோல் வெண்ணிறம் பொருந்திய மேனியனும், திவ்ய கிரீடந்தரித்தவனும் விந்துநாதங்களைக் கடந்தவனும், பிரணவத் திற்கு இருப்பிடமானவனுமாகிய சம்புவை வணங்குகின்றேன்'' என்று விபூதிபூசியமேனியனும், பவபயத்தை நீங்கச் செய்வோனும், பவானிநாதனுமாகிய இறைவனைத் தோத்திரஞ் செய்ய, அத்தோத்திரங்களால் பரமேஸ்வரன் பிரீதியடைந்து அம் முனிவருக்கு எதிரில் எழுந்தருளிவந்து,

''ஓ முனிவனே! உனது தவத்தால் மிக்க திருப்தியடைந்தேம்; உனக்கு வேண்டிய வரங்களைப் பெற்றுக் கொள்வாய்''என்றருள, முனிவர் அஞ்சலிசெய்து நின்று, ''ஓ ஸ்வாமின்! எனது மனையாட்டி யினது கற்பும் எனதுதவமும் சுத்தியடையும் வண்ணம் அருள்புரிய வேண்டும். அதுவேயுமன்றிச் சாம்பவர்களான பெரியோர் களுக்கு எப்போதும் அன்னதானஞ்செய்யும் விருப்பமுள்ளவனாய் இருக்கின்றேனாகலான் அவ்வரியதானமுஞ் செய்யும் வண்ணம் அருள்பாலிக்கவேண்டும்'' என்று பிரார்த்திப்பச் சிவபெருமான் அவரது பிரார்த்தனைக்கு இரங்கி அவர் வேண்டியபடியே சுத்தி யுண்டாதற்குத் தனது சடைமுடியினின்றும் கங்கையைக் கௌதமியென்னும் பெயருடன் பிரவகிக்கும்படி அருள்புரிந்தனர்.

கங்கையும் வெளித்தோன்றிக் கோதாவரி என்னும் பெயருடனும் ஏழுபிரிவாய்ப் பிரிந்து ஸமுத்திரசங்கமமாயினள். அந்தக்கோதாவரி தோன்றியகாலம் குரு சிம்ஹத்தில் இருக்கும்போது மாகமாசமுங்கூடிய மகாபுண்ணியகாலமாய் இருந்ததனால் கௌதம மாமுனிவர் அக்காலவிசேடத்தையறிந்து அந்நதியில் தனது மனைவியுடன் ஸ்நானஞ்செய்து பரிசுத்தமாயினர். தேவர்களும் ஏனையரும் அந்நாளிலேயே அங்குவந்து ஸ்நானஞ் செய்தனர்.

பின்னர் பரிசுத்தமெய்திய கௌதமமுனிவர் சித்த சுத்தியுடைய வராய் ஐம்பொறிகளையும் வென்று பஸ்மருத்திராக்ஷந்தரித்து திரியம்பகம் என்கிற மலைச்சாரலில் உமாசகாயனை ஆராதித்துக் கொண்டு அவனருளால் கிடைக்கும் அளவிறந்த அன்னத்தை யாவர்க்குமளித்து மனமகிழ்ந்து வசித்துக் கொண்டிருந்தனர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA).

இவர் அன்னதானஞ் செய்வதை ஆங்காங்குள்ள அந்தணர்கள் கேள்வியுற்று அவரிடம் வந்து சேர்ந்து சுகமாய்ப் போஜனஞ்செய்து காலங்கழித்து வந்தனர். அப்படியிருக்குங் காலத்தில் எந்தத் திசைகளிலும் துர்ப்பிக்ஷம்வர, அதனால் புசிப்பதற்கு அன்னமும், அருந்துவதற்குத் தீர்த்தமுமின்றிப் பரத்துவாசர், வீதஹவ்யர், ஆங்கிரசர் முதலிய மகாமுனிவர்களும் எண்ணிறந்த அந்தணர் குழுக்களும் வருந்திக் கௌதமர் இருக்குமிடத்திலுள்ள தீர்த்தத்தின் சௌக்கியத்தையும், அன்னதானத்தையுங் கேள்வியுற்று வந்து சேர்ந்தனர்.

அப்படியே மற்றத்தேயங்களிலுமுள்ள அக்கினி ஹோத்திர முடையோரும், அஃதில்லாதவரும், விதுரர்களும், அவிதுரர்களும், கிருகஸ்தர்களும், வானப்பிரஸ்தர்களும், எதிகளும், பிரமசாரிகளு மாகிய அந்தணர்களெல்லாம் இவ்வளவினவென்று எண்ணக்கூடாத பெருங்கூட்டத்துடன் அத் திரியம்பகமலையை யடைந்து புண்ணிய நதியாகிய கோதாவரியில் ஸ்நானஞ் செய்து விபூதிருத்திராக்ஷ மணிந்து புண்ணியகரமாகிய பில்வங்களையும் மலர்களையுங் கொய்துவந்து சிவபெருமானா (திரியம்பகேஶ்வர)ரை அர்ச்சித்து நமஸ்கரித்துத் தோத்திரஞ்செய்து போற்றிக் கவுதமரையடைந்து நமஸ்கரித்து அவரால் முறையே அதிதிபூஜை செய்யப்பெற்றுப் பின்னர் அம்முனிவரைக் குசலப்பிரஶ்னஞ் செய்தனர்.

உடனே கவுதமர் அவ்வந்தண சிகாமணிகளை நோக்கி, "ஒ மகாமுனிவர்களே! சாம்பவசிரோமணிகளாகிய உங்களனைவரையும் யான் தெரிசிக்கப்பெற்றதனால் எனது மனோரதஞ் சித்திபெற்றது. சிவபக்தசிரோமணியாகிய ஒருவரைப் பார்ப்பதனாலேயே வரும் புண்ணியத்தைக் கூறவியலாது என்றால் எண்ணிறந்த சாம்பவ சிரோமணிகளாகிய உங்கள் அனைவரையுங் காணப் பெற்றதனால் எனக்குவரும் புண்ணியத்தை இவ்வளவினது என்று எங்ஙனங் கூறுவேன்? அதற்குமளவில்லை; அதனால் யான் இப்போது அடைந்திருக்கும் சந்தோஷத்துக்கும் அளவில்லை. ஆதலால் நீவிர் எல்லோரும் இவ்வாச்சிரமத்திலேயே வசித்திருந்து என்னைக்

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

களிக்கச் செய்யவேண்டும்'' என்று பிரார்த்திக்க, கவுதமரது அன்பார்ந்த வார்த்தையை அவர்கள் எல்லோருங் கேட்டுப் பரம சந்தோஷம் எய்தினவர்களாய் அம்முனிவரை நோக்கி,

''ஒ மஹாமுனிவரே! தாங்கள் அன்னபதியாகிய பரமசிவனது பாதாரவிந்தத்தில் மனதைச் செலுத்தி யர்ச்சித்து அவனருளால் அன்னதாதாவாய் இருக்கிறபடியால் பசியினால் பீடிக்கப்பட்டு வருந்துகின்ற நாங்கள் எல்லோரும் சிவப்பிரஸாத பரிபூரணராகிய தங்களைக் கண்களாற்கண்டு சுகமுறலாம் என்றும், சம்புபக்தர்களது அன்னத்தைப் புசித்தால் அது சகலபாபங்களையுந் தொலைக்கும் என்பதனால் அநாவிருஷ்டியாகிய துர்ப்பிக்ஷம் இருக்குமளவுந் தங்களிடம் இருக்கலாமென்றும் நினைக்கின்றோம்''என்றனர்.

அவர்களது வேண்டுகோளைக் கேட்ட முனிவர், ''ஒ அந்தணர்களே! நீங்களெல்லோரும் அவ்வாறெண்ணி வந்தது யான்செய்த தவப்பயனும் பரசிவப்பிரபுவினது பேரருளுமன்றோ? இனி நான் கிருதார்த்தனாயினேன். சிவபுண்ணியசீலர்களாகிய நீங்களனைவரும் எண்ணியவாறு இருப்பதற்குத் தடையாதுளது? அப்படியே இருக்கலாம்'' என்று அவர்களுக்குக் கூறி அன்னபதி யாகிய சிவபெருமானைப் பிரதி தினமும் அகலிகையுடன் பூசித்து அவரருளால் கிடைக்கும் அளவிறந்த அன்னத்தைத் தன்னோடு வசிக்கும் முனிவர் குழாங்களுக்குச் சிரத்தையோடும் அளித்துக் களித்திருந்தனர்.

பதினெட்டாம் அத்தியாயம் முற்றிற்று.

Digitization by Hindu-Heritage-Foundation-of-America, HHFA(USA)

உ

சர்வாயநம:

பத்தொன்பதாம் அத்தியாயம்.

அந்தணர்களுக்குக் கவுதமமுனிவர் சாபமிட்டது.

ஸ்கந்தர் கூறுகின்றார். ''கவுதமரிடம் வந்து சேர்ந்த அந்தணரெல்லோரும் பன்னிருவருடத் துர்ப்பிக்ஷம் இத்தன்மையாய் இருக்குமென்பது அறியாமல் அதிக்ஷேமகரமாய் வசித்து, நாடோறுங் கோதாவரியில் ஸ்நானஞ்செய்து ருத்திர பஞ்சாக்ஷராதிகளைச் செபித்துப் பக்தியுடன் சிவபூஜைசெய்தும், அறுசுவையோடுகூடிய அன்னம்புசித்தும், சிவபுராணங்களைச் சிரவணஞ் செய்தும் சந்தோஷமெய்தி தங்கள்தங்கள் புத்திரமித்திர களத்திராதிகளுடன் அக்கவுதமரது விளைநிலங்களைப் பாதுகாத்துக் கொண்டிருந்தனர்.''

''கவுதமரும் அப் பன்னிருவருடமும் அவ்வந்தணர்களிடம் நாளுக்குநாள் சிரத்தை யதிகரித்தவராய் மிகவும் அற்புதமான அறுசுவைப்பதார்த்தங்களுடன் அவரவர் வேண்டியாங்கு அன்னமளித்து வந்தனர். அவ்வாறிருக்குங் காலத்தில் இறைவனது கருணையால் எங்கும்மழை பெய்யப்பெற்று துர்ப்பிக்ஷந்தொலைந்து எங்கும் பயிர் செடி கொடி முதலியவை யெல்லாம் செழிப்புற் றோங்கின.''

''ஓங்கவே, அதிதிகளாய் வந்திருந்த அந்தணர் எல்லோரும் கௌதமரை நமஸ்கரித்து, ''ஒ சுவாமின்! எங்களை யிதுகாறும் மிக்க சிரத்தையுடன் அறுசுவையோடு கூடிய உண்டிகளால் காப்பாற்றி வந்தீர். இப்பொழுது மழைபெய்யத் தேசமெங்கும் சுபிக்ஷமாய் இருக்கின்றமையால் இனி நாங்கள் எங்களுடைய தேசங்களுக்குச் சென்று வசிக்க விரும்புகின்றோம். தாங்கள் அன்போடு உத்தரவளிக்கவேண்டும்'' என்று பிரார்த்தித்தனர்.

''அப்போது கவுதமர் அம்முனிவர்கள் கூறுவதைக்கேட்டு சாதுக்களாகிய இவ்வந்தணர்களை விட்டுப் பிரியவருகின்றதே என்று மனத்துயரங்கொண்டு அந்தணர்களை நோக்கி, ''சாம்பவர்

Digitized by Hindu Heritage Foundation of America, HHFA(USA)

களது கூட்டுறவானது முக்திக்கேதுவென்றும், அவர்களது தேகத்தைப்பற்றின காற்றின்சம்பந்தமும் அபாரமான புண்ணிய ஹேதுவென்றுங் கூறப்படுதலால் ஒ முனிவர்களே! இன்னுஞ் சிலகாலம் இங்கிருந்து பின்னர்ப்போகலாம். எனது வேண்டுகோளை மறுக்காது நிறைவேற்றவேண்டும்'' என்று பிரார்த்திக்க, முனிவரெல் லோரும் தங்களது பிரயாணத்துக்கு விக்னஞ்செய்கின்றாரேயென்று சிறிது மனம்வருந்தினவர்களாய்க் கவுதமரைப் பார்த்து,

''ஒ மஹாமுனிவரே! இதுகாறும் நாங்கள் தங்களால் மிக்க ஆதரவுடன் உபசாரத்தோடு அன்னமளிக்கப் பெற்றிருந்தனம். நாங்களெல்லாம் இவ்விடம்வந்து வெகுகாலமாய்விட்டது. நாங்கள் எங்களுடைய மனை பசுக்கள் பந்துக்கள் க்ஷேத்திரங்கள் ஆகிய இவைகளைப் பார்க்க விரும்புகின்றோம். உலகமெங்கும் க்ஷாம மொழிந்து க்ஷேமமாய் இருக்கின்றது. இனி எங்களுடைய இடம் போகவேண்டியது அவசியமாதலின் தாங்கள் தடைசெய்யாமல் எங்களை யனுப்பவேண்டும்'' என்று மிகவும் பிரார்த்தித்தனர்.

அவர்களது பிரார்த்தனையைக் கேட்ட கவுதமர் ''ஒ முனிவர்காள்! இப்போது தனுர்மாதமாய் இருத்தலால் இம்மாத முழுவதுஞ் சிவபெருமானை விசேஷமாய் வழிபட்டு அன்னங்களை நிவேதனஞ் செய்து அவ்வன்னங்களைச் சாம்பவசிரோமணிகளுக்கு அளிக்க விரும்புகின்றேன். அச்சாம்ப சிரோமணிகள் நீவிர்களன்றி வேறு யாவர்? ஆகலான் நீங்கள் இவ்வொருமாதமிருந்து சிவப் பிரசாதத்தைப் புசித்துப் பின்னர்ச் சென்மின்கள். இம்மாதத்தில் மிகுதியாகிய நெய்யுடன் கூடிய பயறு அன்னத்தைச் சிவபக்தர் ஒருவருக்கு அளித்தால் அதனால்வரும் புண்ணியம் அளவிறந்த தென்றால் உங்களெல்லோருக்கும் அளிப்பேனாயின் அதனால்வரும் புண்ணியத்தை யான் என்னென்று கூறுவேன். மஹாமஹிமை யுடைய நீவிர் மஹாபுண்ணியகரமாகிய இவ்வொரு சிவபுண்ணி யத்தை யெனக்களித்தல் வேண்டும்'' என்று பிரார்த்தித்தனர்.

முனிவரது வேண்டுகோளைக் கேட்ட சில வந்தணர்கள் தமதுள்ளத்தில் வெகுளியடைந்தவர்களாய், ''ஒ ஒ இதென்ன!

Digitization by Hindu-Heritage-Foundation America. (USA)

இக்கவுதமர் நம்மைச் சாப்பாட்டாட்கள் என்றெண்ணி விட்டனர் போலும் தேசமெங்குந் துர்ப்பிக்ஷமாய் இருந்தமையால் நல்லதீர்த்தம் இருக்குமிடந் தேடிவருந் தருணத்தில் இம்முனிவரைக் கண்ணுற்றோம். அப்போது இவர் இங்கிருக்கவேண்டுமென்று வேண்டிக் கொண்டனர். அவ்வேண்டுகோளுக்கு இணங்கி இதுகாறும் இவ்விடந்தங்கியிருந்தோம். நாம் நமதிடத்தை விட்டுவந்து எவ்வளவுகாலமாய்விட்டது. முன்னொரு முறை கேட்டோம். இப்பொழுதும் ஊருக்குப் போகவெண்ணி விடை தாரும் என்று கேட்டோம். இம்முனிவரை இருமுறை அநுமதி கேட்டும் அதற்கு உடன்படாமல் சகுனத்தடைபோல் போகக்கூடாது போகக் கூடாது என்கின்றனர்.''

''நமக்கு மனைவிமக்கள் பசு தனம் தானியம் நிலம் சுற்றத்தார் முதலியவையில்லையா? இவர் நம்மைப் பரதேசிகளென்று நினைத்துவிட்டார் போலும்! இம்முனிவர் இவ்வாறு எண்ணு வதற்குக் காரணம் யாது? இவரிடமுள்ள சிறப்பு யாது? நிலம் தானியம் தனம் முதலியன தன்னிடமே விசேடமாயுள்ளன என்றெண்ணிய சிறப்பினாலுண்டான கர்வமே காரணமாகும். அந்தக்கர்வத்தைத் தொலையச் செய்வோமாயின் இம்முனிவர் அடங்கிவிடுவார்''என்று நினைத்து, அவருள் ஓரந்தணன் தனதுதபோபலத்தால் மிகவும் இளைத்துத் துர்ப்பலமாய் அக்கணமே மரிக்கத்தக்க ஓர் பசுவை யுண்டாக்கிக் கவுதமமுனிவர் கண்ணெதிரில் ஓர் வயலிலுள்ள பயிரில் அப்பசுமேயும்படிச் செய்தனன். அதனைக் கண்ணுற்ற கவுதமமுனிவர் ஓர் சிறுதுரும்பை எடுத்துக் கொண்டோடிவந்து அதனை யதட்ட அவ்வதட்டலினால் அது அப்புறம்போகாதது கண்டு ஓர் நாரெடுத்துப் போபோ வென்றடித்தனர். அப்பசு அந்நாரடியால் கீழே விழுந்து உயிரிழந்தது.''

கவுதமமுனிவர் அதுகண்டு, 'அந்தோ! நாம் பசுவைக் கொன்றுவிட்டோமே இனியாது செய்வோம். மீளா நரகிற்கு ஆளாய்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

விட்டோமே'யென்று ஏங்கி மனம்புண்பட்டு வாடிக் கண்களினின்று சோகபாஷ்பம் பெருக மஹாபாதகம் வந்துவிட்டதேயென்று தமதாஶ்ரமம் வந்து சேர்ந்தனர்.

அவ்வஞ்சகச்செயலுக்கு உரியவர்களாயிருந்த அந்தணர் எல்லோரும் ஒருவரோடொருவர் ''ஒ அந்தணர்களே! கவுதமர் கோஹத்தி செய்துவிட்டார். கொடும்பாவியாயினர். இனி அவரது அன்னத்தைப் புசிப்போமாயின் அது மஹாபாதகம் விளைவதற்கு ஏதுவாகும்'' எனக்கோலாகலமாய்ப் பலபலவாய்க் கூறிக்கொண்டு திரிந்தனர்.''

''கவுதமமுனிவர் அந்தணர்கள் சிறிதுமஞ்சாமலும், இரக்க மென்பது இல்லாமலும் நிந்தித்துக்கூறும் தீமொழிகளைக் கேட்டு மனம்புழுங்கி, 'இது சிவச் செயலாகாது, சீவச் செயலாம்' எனத் துணிந்து அதனையறிவோமென்று தமது ஞான திருஷ்டியால் நாடிப்பார்த்து அந்தணர்களது வஞ்சச் செயலை யறிய வந்தவராய்க் கோபங்கொண்டு அவ்வந்தணர்களைச் சபித்தனர்.''

''ஒ முனிவரே! அச் சாபத்தைக் கூறுகின்றேன் கேட்பீராக. ஒ விப்பிராதமர்களே! நீவிர் கொடியவஞ்சனையாகிய பாவத்துக்குச் சிறிதும் அஞ்சாது துர்ப்புத்தியால் எனக்குக் கோஹத்தியை விளை வித்து என்மனம் புண்படும்படியாகவுஞ்செய்து சிவோபாசனைக்கு இனியான் செய்யவேண்டியதாய்க் கருதிய சிவநைவேத்திய அன்னதானத்துக்கு இடையூறும் செய்தமையால் இனி நீங்க ளெல்லோரும் சிவபக்தியீனர்களாய் விஷ்ணுபக்தியுடையோர் என்னும் வியாஜத்தால் சிவபெருமானை நிந்தித்து அதோகதியடை வீர்களாக.''

★''ஒ பிராமண அதமர்களே! நீங்கள் தப்தசக்கிர முத்திராங்கிதர்களாய் ஒருவரையொருவர் தூஷித்துக் கொண்டு பெருந்துயரத்துக்கு ஆளாவீர்களாக.''

★''நீங்கள் விஷ்ணுபக்தர்கள் என்று இறுமாந்து சிவதூஷணை செய்து கொண்டு விஷ்ணுவின் கருணைக்கும் உரிமையாகாமல் அவராலும் அங்கீகரிக்கப்பட்டவராகாமல் அருநரகிற்கு ஆளாவீர்களாக.''

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

★''உங்களுடையதேகத்தில் கோபிசந்தனத்தைப் பூசி, வெள்ளை மண்ணையுந்தடவி, எப்பொழுதுந் துஷ்டர்களாய்த் துராசாரங்களாய்ப் பிராம்ஹண அதமர்கள் ஆவீர்களாக.''

★''ருத்திரபஞ்சாக்ஷராதி மஹாமந்திரங்களிலும், சிவலிங்கங் களிலும் உதாசீனராவீர்களாக, சிவலிங்கத்திற்குச் சமமாய்த் திருமாலையும் பூசித்து மகாபாதகம் பொருந்தினவர்களாய்ச் சிவசரித்திரங்களிலும், சிவபுண்ணியங்களிலும் பற்றற்றவர்களாய் வம்சத்தோடு நரகமடைவீர்களாக.''

★''ஒ அந்தணஅதமர்களே! சிவோபாசனை, விபூதிதாரணம், வேதம், வேதாந்தங்களிலும் குருவினிடத்திலும் பக்தியில்லாத வம்சமுடையோராய்ச் சபலத்தன்மையுடையோராய்ப் பற்பல துக்கங்களை யனுபவித்துக் கொண்டு காக்கைகள் போலலைந்து திரிவீர்களாக.''

★''இடபாரூடனும் உமாசகாயனுமாகிய சிவபெருமானை ஏனைய தேவருடன் சமமாகநினைந்து வேறுபுண்டரந் தரித்து மகாபாவங்களைச் செய்து மகாதுக்கங்களை யநுபவித்துக் கொண்டு இறுதியில் மீளாநரகத்துக்கு ஆளாவீர்களாக''என்று கொடுஞ்சாப மிட்டனர்.

''ஒ முனிவர்களே! அங்ஙனம் கௌதமரால் சபிக்கப்பட்டவரே இப்பொழுதுஞ் சிவத்வேஷிகளாய்ப் பாவங்களைச் செய்து கொண்டு தப்தமுத்திரைகளைத் தரித்தவர்களாயும் மகாப்பிராந்தர்களாயும் மனைவி மக்கள் அன்னம் இவைகளையே விரும்பினவர்களாயும் உஞ்சவிருத்தி செய்கின்றவர்களாயும் ரோகவான்களாயும் உழன்றுதிரிந்து நரகத்திற்கு ஆளாகின்றனர்.''

பத்தொன்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

திரிலோகேசாய நம:

இருபதாம் அத்தியாயம்.

சுகமஹிமாப்பிரகாசம்.

ஜைகிஷவ்யமகாமுனிவரர், ''ஓ குமாரக்கடவுளே! கவுதம முனிவரது சைவவுண்மையின் திண்மையைக் கேட்டு என்மனம் பூரிக்கின்றது. இனி சாம்பவசிரேஷ்டராகிய அகஸ்தியரைக் கடோத்பவர் என்பதற்குக் காரணம் யாது? அவரெப்படி சமுத்திரத்தைப் பானஞ்செய்தனர்? வேதவியாசரது புதல்வராகிய சுகர் கர்ப்பவாசஞ் செய்யும்பொழுதே எப்படி சிவஞானம் எய்தினர்? அவைகளைக் கருணைக்கூர்ந்து அடியேனுக்கு உரைத்தருள வேண்டும்'' என்று பிரார்த்திக்க ஸ்கந்தமூர்த்தி கூறியதை சூதர் சொல்லலாயினர்.

''ஓ ஜைகிஷவ்ய முனிவரே! பரமபாவனராகிய அவ்விருவர் சரித்திரங்களையுங் கூறுகின்றேன். அவற்றால் சாம்பவர்களது மஹிமை உமக்கு நன்றாய் விளங்கும். சம்புபக்தசிரேஷ்டராகிய அகத்திய மகாமுனிவர் யாவரெனின், பூர்வம் மித்திராவருணர் ஓர் காலத்தில் மேனகையென்னும் தேவமங்கையைக் கண்ணுற்று காமவசத்தராய்ப் போக, அவரது வீரியம் கீழேநழுவி வீழ்ந்தது. அதனை அவர் ஓர் குடத்திலிருத்த, அக்குடத்தினின்றுந் தோன்றினவர் ஆதலால் அகஸ்தியர் கடோத்பவர் எனப் பெயர் பெற்றனர்''.

''மஹருஷியாகிய வஸிஷ்டரும் அக் குடத்திற்றானே றோன்றினர். அவ்வஸிஷ்டருக்குச் சக்தி என்னும் புத்திரர் உளரானார். அவரைக் கன்மாடபாதன் கொல்ல அதனை வஸிஷ்டமுனிவரறிந்து துக்கசாகரத்தில் மூழ்கி மனம்வருந்திப் பின்னர் சிவபெருமானை யுபாசித்து அவரருளால் பராசரர் என்னும் புதல்வர் கிடைக்கப் பெற்றனர். அவருக்கு வேதவியாஸர் பிறந்தார். அந்த மகாஞானியாகிய வேதவியாஸர் அபாரமான பக்தியோடு பஸ்மருத்திராக்ஷதாரணராய்ப் பதரிகாச்சிரமத்திலிருந்து பரமசிவனை

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

யுத்தேசித்துப் பதினாறுவருடம் தீவிரமாகிய தவஞ்செய்து அவரருளால் பரமஜ்ஞானம் உதித்தவராய்ச் சுகமுனிவரைப் பெற்றனர்.''

''அச்சுகமுனிவரது சரித்திரத்தை முன்னர்க்கூறுகின்றேன். கேட்பீராக. அம்முனிவர் கர்ப்பவாசஞ் செய்யும்பொழுதே சிவபெருமானைத் தனதான்மாவாய் அறிந்து பரமானந்த நிலையை யடைந்தவராய் மிக்க பத்திவைராக்கியத்துடன், ''ஒ ஜகதீசா! உனதுமஹிமையை அடியேன் என்னவென்றறிவேன்! நீ திரிபுர தகனஞ்செய்யத் தொடங்கிய காலத்தில் நாணோ அரவம், அம்பராத்தூணியோ சாகரம், ரதமோ பூமி, சாரதியோ பிரமன், சக்கரங்களோ சூரியசந்திரர்கள், குதிரைகளோ வேதங்கள், தனுசோ மேருபர்வதம், யுத்தஞ்செய்ததோ புன்னகை, அதினின்றும் வெளிவந்ததோ தீப்பொறி, பாணமோ திருமால், அப்பாணத்தின் நுனியிலுள்ள கூர்மையோ அக்கினி, அச்சிறுதீப்பொறியோ முப்புரங்களை யெரித்தது.''

''ஒ இறைவனே! அமானுஷ்யமாகிய இந்தத் திவ்ய லீலையானது மனிதர் உனதுமகிமையை ஒருவாறு அறிந்து கொள்வதற்கு ஏதுவாயிற்று. திரிபுரத்தையெரித்தது புன்னகை யாயின் உனக்கு முற்கூறிய சாதனங்களால் யாது பயன்?''

''ஒ தராதர! குமாரிநாதா! கபாலபரனே! ஓ ஹரா! பரமேஶ்வரா! ஸ்மரஹரா! கங்காதரா! பாற்கடலிற்பள்ளி கொண்ட பாணதரனே! விஷதரனே! ஒ தராதரணதரனே! அடியார் இதயகமலத்தை யண்ணினவனே! பிரணத ஹ்ருத்பதோஜாந்திகனே! அநாதஜன நாதனே''

''விஷயவாஸனை மேலிட்டு அல்லற்படும் அடியேனை உனது சூரியசொரூப(திவாநாத)மாகிய நயனத்தினால் பார்த்தருள் புரிக''வென்று தோத்திரஞ் செய்தனர். சிவபெருமான் சுகரது தோத்திரத்தினால் மிக்கபிரீதியடைந்தவராய் கர்ப்பத்தில் வசிக்கும் அம்முனிவருக்கு அபாரமாகிய தமது சொரூபமகிமையை உபதேசித் தருளினார்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பின்னர் சுகமுனிவர் இறைவனருளால் கர்ப்பவாசத்திலேயே சிவஞானம் பெற்று ஓர் சுபதினத்தில் ஜனித்து வெளிவந்தனர். அவ்வாறு தோன்றியவுடன் சகலசம்சாரத்தையுந் துச்சமென்றுதள்ளி வனத்திற்குப்போய் மஹாவைராக்கியம் உடையோராய் சிவபெருமானையே நினைந்து மனமுருகி,

''ஓ இறைவனே! இச் சம்சாரமானது துக்கம் என்பதற்கு ஏதேனும் ஐயமுண்டா? இத்துக்கம் தேவரீரது சூர்யனாகிய கண்ணால் சற்று நோக்கப்பெறின் இருக்குமிடந்தெரியாது தொலைந்து யான் முத்தியடையப் பெறுவது நிச்சயம்.''

''ஓ இந்து நயனனான இறைவனே! சம்சாரமென்னும் மஹாஜ்வரத்தைக் கருணாமிர்தவருஷியாகிய தேவரீரது கண்ணால் நோக்கி யருள்புரியும். சந்திரகலைதரித்தவனே! கங்காசோபித சடாமகுடனே! வச்சிரபாணிஸேவ்யனே! தேவரீரது பாதாம்புஜத்தை எனது ஹ்ருதயகமலத்தில் உறுதியாய்நிறுத்திப் பூஜிக்கின்றேன்.''

''ஓ உமாஸஹாயனே! அடியேனைக் காத்தருளும். ஹ்ருதய புண்டரீகத்தில் பிரகாசிக்கின்றவனும், விருஷபாருடனாய்ச் செல்வோனும், சகலபூதங்களுள்ளும் விளங்குவோனும் சாதுக் களைப் போஷிப்பவனும், சர்வகாமபரிபூரணனும், முக்திநாதனு மாகிய தேவரீரது பாதபத்மங்களையே விரும்பிப் பூஜிக்கின்றேனே யன்றி மற்றுயாதொன்றையுங் கருதிப் பூஜிக்கவில்லை''

''ஓ வியோமகேசா! சம்பரவைரிஹரா! திரிபுரஹரா! ஆசாம்பரா! முரஹரசரகர! கரிமுகசரவணபவநாதா! என்னையாட்கொள்ளும். எனது இருதயகமலத்திலேயே வசித்திரும்.''

★ ''பிருதிவ்யாதி பஞ்சபூதங்களாகிய இப்பிரபஞ்சத்தைச் சற்று விசாரித்துப் பார்த்திடில் கானல் நீர்போலும் இப்பிவெள்ளிபோலும் மண்ணிற்குடம் போலும் தோன்றிமறையும் நிலையற்ற பொருளா தலின் பொய்யாய்ப் போமென்பதில் ஐயமேயில்லை. சத்தியமாயுள்ள சிவசொரூபம் யானாகின்றேன். இச்சகமானது சொன்மாத்திரமாய்க் காரியகாரணமற்றுளது. அங்ஙனமாகிய எனது ஆன்மாவாகிய அவனது ஜோதியால் சகலமும் விளங்குகின்றது. சூரியன் அக்கினி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வாயு முதலியவைகள் அவனிடம் பயந்து விளங்குகின்றன. சோதிக்கெல்லாம் பரமாயுள்ள என்னை அறிகின்றதில்லை.''

''சராசரமாகிய இப்பிரபஞ்சத்தைத் தன்னிடங் காண்போர்க்கு மோகம் யாதுளது? அவர்களுக்குப் பேதஞான ஹேதுவாகிய இவ்வஞ்ஞானம் தொலைவது உண்மையே. ஈசனே இச்சகமெலா மென்று எண்ணிறந்த ஶ்ருதிகள் கூறுவதாயிருக்க ஈசனுக்கும் சகத்துக்கும் பேதத்தை நினைத்து அல்லற்படுவதேன்?''

''இப்படிப்பட்ட பேதஞானமானது உம்மிடம் பக்தி செய்யாதவர் களுக்கு எப்படித் தொலையும்?''

''உம்மிடம் பக்திசெய்யாதவன் வைராக்கியம் பெறுவதும் மோக்ஷத்துக்கு யத்தனிப்பதுமில்லை. உம்மிடம் பக்தியின்றி வீணாகவே சம்சாரத்தில் உழன்று துக்கமடைகின்றனர். மஹாபுத்தி மான்களாயினும் வாழ்நாள்களை வீணாளாகக் கழிக்கின்றனர்.''

''ஒ இறைவனே! பரமாத்மாவாகிய தேவரீரே ஸீமா (உலகிற்கு எல்லை) ஆகியும் பூமா (நித்யானந்தன்) ஆகியும் அபாரமான மகிமையோடு கூடினவராயும் ஈசானராயும் விளங்குகின்றீர் ''அங்ஙனமான தேவரீரது பாதாரவிந்த பக்தியில் மஹாபாக்கியவான் களாகிய யாரோசிலர் நிலைபெறுகின்றனர். தியானத்துக் கெட்டாத தேவரீரை யாரொருவன் தியானிக்கின்றானோ அவன் தேவரீரேயா கின்றான். தேவரீரே பரமான்மா.''

''திரிபுடி ஞானத்தோடு தியானித்தால் அவன் உம்மைக் காண்பதில்லை. திரிபுடியிருந்தாலும் பின்னர் அது நீங்கித் ததாகாரப்பட்ட சித்தமுடையோனே உம்மைக் காண்பான். ஒ நிடாலநயனனாகிய என்னிறைவனே! காணக்கூடாத தன்மையரா யினும் லக்ஷணாவிருத்தியினால் காணக்கூடிய தன்மையர் அன்றோ? அங்ஙனங் காண்டலாவது உம்மை நீர் அறிகின்றதே யாம்.''

''ஒ இறைவனே! அப்படிப்பட்ட இறைவனாகிய உமது பாதாரவிந்தத்தைச் சேவிக்கின்றவர்கட்கே உபநிடதங்கள் சுலபமாய் விளங்கும். அவ்வாக்கியங்களைத் தெளிவாயுணர்வதால் நீரே

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

நானாகின்றேனென்ற அபேத ஞானம் உதிப்பதாம். தந்திர யந்திரங்களுடன் கூடிய மந்திரஆடம்பரங்களால் நாம் மந்திரவாதி, எமக்கு இணையாருளார் என்ற டம்பமானது முத்தியின் பொருட்டாவ தல்ல. பேதத்தோற்றத்தைப் பற்றி ஆராய்ந்து விசாரியாததினால் இப்பசுக்கள் சிவபெருமானாகிய உம்மை யறிந்திலர்.''

''சகல சராசரங்களையும் நன்றாய் யுக்தியுடன் விசாரிப்போனா யினும், நல்ல சதாசாரம் பொருந்தினவனாயினும் நற்குணங்கள் அமைந்தோனாயினும் முக்கியமாய் உம்மிடம் பக்தியுடையோனே மோக்ஷானந்தம் எய்திமகிழ்வனென சுருதி வாக்யமானது தத்வமஸி வாக்கியத்தினால் உண்மையுரைக்கின்றது.''

''ஆதலின் ஒ இறைவனே! உமது பாதாரவிந்தத்தில் பக்தியுடை யோருக்கே அவ்வுண்மைவிளங்கும். மனிதர்கள் பலவென்றும் ஒன்றென்றுங்கூறிப் பிரமித்தலாகிய வனத்தில் உழன்று வாடு கின்றனர்.''

''ஒ இறைவனே! வேதத்திலுள்ள வாக்கியங்களுள் அர்த்தத்தை நன்கறிந்து பார்த்தால் (ஏகத்வம்) ஒன்றென்பதும் (துவித்வம்) இரண்டென்பதும்இல்லை; பந்தமுமில்லை மோக்ஷமுமில்லை; பரமுமில்லை அபரமுமில்லை; நித்யானந்தனும் பரப்பிரும்மமு மாகிய சிவனொருவனே உளன்''.

''பொன்னாசையையும் மண்ணாசை யையும் சித்தத்தினின்று நீக்கி ஆன்மவித்தையினால் கர்த்திருத்வத்தையும் போக்திருத்வத் வத்தையுந் தொலைத்து அந்தவித்தையின் சாரமாகிய ஆன்மாகார விர்த்தியைச் சம்பாதித்துப் பின்னர் அந்த விருத்தியையும் ஆன்ம மாத்திரத்திலொடுங்கச் செய்து உமது நிஷ்டைபெற்றுப் பரமானந்தம் எய்தினவனுக்கு மற்று யாது சுகமாகத் தோன்றும்.''

''ஒ உமாநாதரே! தேவரீரின்றி யாதாவதொரு பொருளுண்டா?

சிவபஜனங்களாலும் ஆராய்ச்சியாலும் ஆன்றோரது உபதேசத்தாலும் உமக்கு அன்னியமான பொருள்யாதொன்றையும் காண்கிலேன். ஜனனமரணமற்று விளங்கும் உமதருளாற்கிடைத்த

Digitization by Hindu-Heritage-Foundation of America HHFA(USA)

எனது சிவானந்தத்திற்கு ஏனையதேவசுகம் மனிதசுகம் முதலானவை எவ்வளவு?''

''ஒ இறைவனே! தேவரீரே தமது மகிமையில் நிலை பெற்றுள்ளவர். இஃதெல்லாம் தேவரீரே. இப்பொருளெல்லாம் மகா அவித்யாமோகத்தால் தோற்றிக்கொண்டிருக்கின்றன. பராத்பரனாகிய உம்மைக் கண்டால் இஃதெல்லாம் தோற்றுவனவல்ல. அங்ஙன ாகிய தேவரீர்காணப்படும் பொருளுமல்ல. யானுந் தேவரீரைக் காண்பவனுமல்ல.''

''ஒ இறைவனே! அகண்ட போதவடிவமாகிய தேவரீரைக் காண்பது எவ்விதம்ஒவ்வும்? அறியப்படுவதெல்லாஞ் சடமே. புத்திகரணங்கள் பிண்டாண்டங்களைச் சாருவனவன்றோ? அதுபற்றி வந்த சாஸ்திரம் சிவக்யானத்தை யளிப்பது எவ்விதம்?''

''மனோவாக்குகள் ஜடங்களே. அடிக்கடி தவறுதல் உடையனவே. ஆதலின் குதர்க்கங்களால் நானாவிதமாய்த் தோன்றுகின்றீர். அங்ஙனமாகிய உம்மையுள்ளபடி அறிதலென்பது பக்தியொன்றினாலேயே சுலபம். சுருதியும் தேவரீரிடம் சிரத்தைவேண்டும். அது அவசியமென்பதை ''ஸோம்ய'' என்று கூறுகின்றதன்றோ?''

''அங்ஙனமான பக்தியானது நிர்க்குணனும் ஸாம்பனுமாகிய உம்மிடமிருந்தாற் பயன்படுமேயன்றி, ரூபகுணங்களுடன் கூடி மனோவாக்குகளுக்கு விஷயர்களாகிய ஏனையோர்களை அர்ச்சிப்பதனால் யாது பயன்?''

''ஒ இறைவனே! உம்மிடம்பக்தியில்லாத சிலர் (குடிலம்) வக்கிரமாயும் நியாயமற்றனவுமாகிய சப்ததர்க்கவாதங்களினால் வீணாய்ப் புலம்பித்திரிவோர்கள் வாக்குக்கு ஶ்ரமமாய்க் குலைக் கின்றவர்களே யன்றோ?''

''ஒ இறைவனே! வீணே பொய்மொழிகளைப் புலம்பிக் கொண்டு தங்கள் தங்களறிவுக்கு எட்டியபடி இதுதான் பரம் அதுதான் பரம், இஃதே உண்மை அஃதே உண்மையென்றும்,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இங்ஙனங்கூறினால் இது குற்றம் அங்ஙனங்கூறினால் அது குற்றம். இவைகள் இவ்வாக்கியங்களோடு முரணுகின்றனவென்றும் கூறுவதற்கு ஏதுவாய்ப் பற்பலவாய்க் கூறும் சாஸ்திரங்களால் உம்மிடம் பக்தியில்லாத அபரிபாகிகளே வஞ்சிக்கப் படுகின்றார்கள்.''

''ஒ இறைவனே! தேவரீர் பாதாரவிந்தத்தில் பக்தியில்லாத வர்கள் ஜனனமரணமாகிய பெருந்துக்கத்துக்காளாகி பற்பல குதர்க் கஞ்செய்துகொண்டு அல்லறப்படுகின்றனர்.''

''ஒ ஸ்வாமின்! தத்தம் அறிவின் பரிபாகத்துக்குத் தக்கபடி சாஸ்திரத்தில் இதுதான் பொருளென வைத்துக்கொண்டு தங்களறி விற்கு முரணுவதாய்த்தோன்றும் வேதசாஸ்திரங்களை நிந்தித்துப் புலம்பித்திரிந்து தங்களுக்குத் தோன்றியவாறு சென்றுழன்று பலன்யாதுமின்றி அல்லற்படும் அதமர்கள் எல்லோரும் உமதுமாயா பாசத்தால் கட்டுப்பட்ட மூடர்களேயன்றோ?'' □

★★''ஒ இறைவனே! உமதுமாயாபாசத்தாற் கட்டுண்டு திரியும் அதமர்களாகிய சிலர் மதுமாம்சாதிகளைப் புசிக்கவிரும்பிப் பின்னலிட்ட சடைமுடிகளைத் தரித்தும் யாமே சகலத்தையும் அறிவோமென்றுங் கூறிக்கொண்டு சக்கரமுத்திரைதரித்தும், சிலர் யாமே ஞானிகள் எமக்கு யாதுமில்லை யென்றுகூறிக் கொண்டு தலையை முண்டனஞ்செய்துகொண்டும், சிலர் புத்தம் சமணம் முதலிய சமயங்களே சத்தியமானவை என்று கூறியும், சிலர் பரமேஶ்வரனது லிங்கத்தைத் தரிக்காதிருப்பவர்களுக்கு முக்தியெங்ஙனங் கிட்டுமென்று கூறிக்கொண்டு லிங்கந்தரித்தும், சுவர்க்கத்தைவிரும்பிக் கொடுஞ்செயலைச் செய்து கொண்டிருப் பவரும், பற்பல பாவங்களைச் செய்வோரும், காமவைரியாகிய தேவரீரது பாதாரவிந்தத்தில் சிறிதும் பக்தியற்றவர்களுமாய் முக்தி என்பதைக் கருதாமல் நரகிற்கு ஆளாகின்றனர்.''

''சிலவந்தணர் வருணாஶ்ரம தருமங்களும் சொர்க்கமுமே பரமென்று நினைத்து இம்சை செய்துகொண்டு வாழ்நாளை வீணாய்க் கழிக்கின்றனர்.''

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

''ஓ இறைவனே! ஹ்ருதயதகரத்தில் உமாசகாயரும் திரிலோசனரும் நீலகண்டருமாய்த் திருவுருவங்கொண்டு விளங்கிக் கொண்டிருக்கும் உம்மை ஓர் கணமேனுஞ் சிந்தியாது பிறத்தலும் இறத்தலுமாகிய பெருந்துக்கத்துக்கு உட்பட்டுக் கலங்குஞ் சீவர்களை யான் என்னென்று உரைப்பேன்!''

□''ஓ இறைவனே! பேதிக்கமுடியாததும் ஒப்புயர்வற்றதும் சச்சிதானந்தமும் ஆகிய உமது சொரூபமானது சகலப்பிராணிகளின் உள்ளத்திலும் விளங்குவதாம். அதனைக் காணாது ஏனைய தேவர்களையும் உலகங்களையும் பரமென்றுகருதி தேவரீரது மாயையால் மனவிருள் அடைந்தல்லவோ அல்லற் படுகின்றனர்.''

□''ஓ இறைவனே! பாஞ்சபௌதிகமான இவ்வுலகத்தில் சகலரும் இதுவே சுகம் இதுவே சுகம் என மயங்கும், புத்திரன் களத்திரம் தனந் தேடும் இவை முதலிய பொருள்களெல்லாம் நஶ்வரம் என்பதில் ஐயம்யாதுமில்லை.

⋆அநாதியாய் ஸம்ஸாரத்தில் செய்யப்பட்டு சஞ்சிதமாய் உள்ள கர்மங்கள் பிராரத்தவுருவமாய் வந்து சுகதுக்கங்களைக் கொடுக்காமல் நசிப்பதில்லை. அங்ஙனம் பிராரத்தவுருவமாய் வருங் கருமங்களை அநுபவித்துக் கொண்டிருக்கும்பொழுது இடையிலேயே புதிதாய்ச் செய்து விளைவனவாகிய ஆகாமியகருமங்களும் சஞ்சிதமாய்ச் சேர்ந்து பிராரத்தமாய் வந்து மீண்டும் மேன்மேலும் ஆகாமியம் விளைவதற்கு ஏதுவாக்கின்றன.

⋆இப்படிப் பிராரத்தம் ஆகாமியம் சஞ்சிதம் எனும் மூவகைக் கருமங்களுக்கு ஹேதுவாகிய பாசங்களிற் சிக்குண்டு பரவசப்பட்டு அநுபவிக்குந் துக்கங்களைக் கூறமுடியுமோ?

⋆இம் மனிதசன்மம் ஒழிந்த ஏனையபுல் பூண்டு பறவை விலங்கு முதலிய சன்மங்களெல்லாம் வினைப்பயன்களை அநுபவிக்க வந்தனவேயன்றி அவ்வினைகளைத் தொலைக்க ஹேதுவாகிய செயலைச்செய்யச் சக்தியுள்ளன வல்லவே.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

★மனிதப்பிறப்பொன்றே அவ்வினைகளைத் தொலைப்பதற்கும் புதிதாய்ச் செய்வதற்கும் இயல்புடையதாம். எத்தனையோ கோடி பாவகர்மங்களின் பயனாகிய புல் பூண்டு பறவை விலங்கு முதலிய திரியக்ஜன்மங்களைப் பெற்று அச்சன்மங்களிலுள்ள பற்பலகஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும்பொழுது யாதோ ஓர் புண்ணியகர்ம விசேடத்தால் இம்மனிதசன்மம் வருவதாம். அங்ஙனம் வரப்பெற்றும் முற்கூறிய திரியக்ஜன்மங்களைப் போலவே நல்வழி தேடாதிருந்தால் அத்திரியக் சன்மங்களுக்கும் இம்மனிதப் பிறப்பிற்குமுள்ள வித்யாசம் யாதுமில்லையன்றோ?

☐ அதுமட்டுமன்றி மற்றப்பிறப்புகளில் சம்பவிக்காத புதிய வினைவிளைவும் இம்மானுடப் பிறவியிலேயே ஏற்படுகின்றது. அந்தோ, எத்தனையோ கோடிபாவகர்மங்களுள் தவறிவந்த ஓர் புண்யகருமத்தின் பயனாகிய இம்மனிதப்பிறவியைப் பெற்ற இத்தருணத்திலேயே இனிக் கஷ்டத்தை யனுபவிக்காமல் இருக்கவேண்டிய மார்க்கத்தைத் தேடாமல் இருக்கின்றோமே!

☐ இனி இறப்போமாயின் எத்தனைகோடி பாப கர்மங்களின் பயனை அனுபவிக்க வேண்டிய திரியக்பிறவிகளைப் பெறும் படியாகுமோ? அந்தோ யாது செய்வோம்!

☐ இனி மரணத்திலுள்ள துக்கத்தை இவ்வளவென்று துணிந்து ஓதமாளுமா? எந்தரோகத்தால் மரணமோ? எக்காலத்தில் மரணமோ? பூமியிலோ நீரிலோ நெருப்பிலோ காற்றிலோ மலையிலோ இல்லத்திலோ வனத்திலோ நதியிலோ கடலிலோ ஏனைய மற்றெவ் விடத்தில் மரணமோ?

☐ சர்ப்ப முதலிய ஊர்வனவால் மரணமோ அல்லது, புலி முதலிய துஷ்டமிருகங்களால் மரணமோ, சாக்கிரத்தில் மரணமோ, அல்லது சொப்பனத்திலோ, சுழுத்தியிலோ, புசிக்கும்பொழுதோ, நீரருந்தும் பொழுதோ, தாம்பூலந்தரிக்கும் பொழுதோ, திட்டும் பொழுதோ, ஓடும் பொழுதோ, நிற்கும் பொழுதோ, பேசும் பொழுதோ, பால்யத்திலோ, யௌவனத்திலோ, வார்த்திகத்திலோ, எவ்வித மரணமோ யாமறியோம்''.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

□ ''இக்கொடிய மரணப்பிணியின் பின்னர் காலதூதர்கள் எந்தநரகில் தள்ளுகின்றனரோ?

★★கத்திகளையே இலையாகக் கொண்ட மரங்களால் அடர்ந்த பெருங்காடாகிய அசிபத்திரவனத்தில் நம்மைப்புகச் செய்து அங்குபுகும்போது அக்காட்டில் அடர்ந்துள்ள இலைகளாகிய கத்திகளால் தேகமுழுதுவதும் வெட்டுண்டு உதிரம் பெருகச் செல்லுவதற்கும் வழியில்லாமல் தயங்கித்தவிக்கும் தருணத்தில் பழுக்கக்காய்ச்சிய மெல்லிய இரும்புச் சங்கிலிகளைச் சாட்டைவாராகக் கையிலெடுத்துப் போபோவென அண்டகடாகம் வெடித்திட அதட்டுவோர்களாய் நெருப்புப்பொறி போன்ற விழிகளோடும் கோரப்பற்களோடும் வாட்டிவதைக்குங் கருமலை போன்ற காலதூதர்களது கொடிய தண்டனைக்கு உட்படும் படியாவோமோ?''

□ ''வைதரணி மஹாவைதரணி கும்பீபாக முதலிய கொடிய நரகங்களில் அநுபவிக்குந் துக்கங்களைக் கூறமுடியுமா?''

''அங்ஙனம் பன்னெடுங்காலம் நரகங்களை யனுபவித்து கர்மங்களுக்கேற்ப பற்பல அறிவிலாப் பிறவிகளைப் பெற்றுப் பின்னர் கர்ப்பவாசம் பண்ணும்பொழுது கர்ப்பகோசத்திலுள்ள நமக்கு ஓர்புறம் கூர்மையாகிய என்புகள்குத்த, மற்றோர்புறம் சடராக்கினி கொளுத்த, மற்றோர்புறம் மலமூத்திரம் வருத்துவதா யிருக்க, மற்றோர்புறம் கிருமிமுதலியவைகள் பீடிக்கச் சலிப்பதற்கு மிடமின்றிக் கொடிய வுபத்திரவத்தைச் சகிக்கமுடியாமல் ஓ ஈச்வரா! இக்கஷ்டத்தை இன்னம் எத்தனைகாலம் அனுபவிப்பேன்?''

''என்னை இக்கருப்பையினின்றும் வெளி வரச்செய்யுமே, இனிநான் சைவயோகஞ்செய்வேன். இனியான் உம்மையுபாசித்து வேதசாஸ்திரங்களையறிந்து உமது சொரூபத்தை நல்லாசிரியர் வாயிலாய்க் கேட்டுணர்ந்து இனி இக்கர்ப்பவாசத்திற்கு ஆளாகேன்'' என்று கூறிப்புலம்பிப் பின்னர் அதனினின்றும் வெளிவந்து எண்ணிறந்த துக்கங்களை யநுபவித்துக் கொண்டு இத்துக்கங்களைத் தொலைக்க வழிதேடாமலும் உண்மைநூலின் வழிசெல்லாமலும்

Digitization by Hindu-Heritage Foundation of America. HHFA(USA)

நல்லாசிரியர் உபதேசம் பெறாமலும் உம்மை ஒழிந்தமற்றப் பொருள்களைப் பரமென்று உள்ளமாகிய ஹ்ருதயகமலத்தில் உமாசகாயனும் பரமேஸ்வரனும் சர்வக்ஞனும் சர்வசக்தனும் கருணையே திருமேனியாகக் கொண்டவனும் உபாசிப்போர்க்குச் சகல துக்கங்களையுமாற்றிப் பேரானந்தமளிக்கும் திருவுருவனுமான தேவரீரை யுபாசிக்காத மாந்தரைத்தவிர அதமன் எவனுளன்? அவன் புழுக்கள் முதலியவைகள் போன்றவன் அன்றோ?

''ஒ இறைவனே! சகல சீவரது இருதயகமலத்தில் வசிக்கும் உமாசகாயனாகிய உம்மை உபாசிப்பவருக்கன்றோ ஞானமுதிப்பது? அவ்வாறு ஞானம் உதித்தவனது அநாதியாகிய சம்சாரத்தில் சம்பாதிக்கப்பட்ட கர்மங்களெல்லாம் நெருப்பிலகப்பட்ட பஞ்சுப் பொதிபோல் ஓர் கணப்போதில் உருவமில்லாமற் போகின்றன''.

''ஒ உமாகாந்தா! சனனமரணப்பிணியைத் தொலைப்பவர் எவரோ அவர்களே யன்றோ தேவரீரை யுபாசிப்பவர்கள்? எண்ணிறந்த பலகோடி சன்மங்களில் செய்த புண்ணியங்களி னாலேயே தேவரீரது பாதாரவிந்தத்தில் பக்தியுதிப்பது''.

''ஆதலின் பஸ்மருத்திராக்ஷந் தரித்துப் புலன்களையடக்கி ஒருவழிப்பட்டமனத்துடன் காமனைவென்றவனும் கருணைக் கடலும் கலாதரனுமாகிய தேவரீரைத்தியானஞ் செய்வோனது பாக்யமே பாக்யம். அவனே தன்யன். சத்யக்ஞானானந்தராகிய உமது சொரூபத்தைவிடுத்து அசத்யமும் ஜடமும் துக்கமுமாகிய இப்பிரபஞ்ச வாழ்க்கையால் யாது பயன்?''.

''இங்ஙனம் எப்போதும் உமது சொரூபத்தையே தியானிப்பவர் தாமே அசங்கர்களாகின்றனர்'' என்று இவ்விதமாக சுகமுனிவர் கர்ப்பத்திலேயே சிவனைத் தன்னுடைய ஆன்மாவாய் அறிந்து சீவன் முக்தராய் வெளிவந்தனர். அங்ஙனஞ் ஞானியாய்வந்த தமது புத்திரனைக் கண்ணுற்று வேதவியாசர் பரமானந்தமெய்தி மகிழ்ந்திருந்தனர்.

இருபதாம் அத்தியாயம் முற்றிற்று.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

சிதிகண்டாய நம:

இருபத்தோராம் அத்தியாயம்

அகஸ்திய சரிதம்.

ஸ்கந்தர் கூறுகின்றார். ''ஒ ஜைகிஷவ்யரே! இனி அகத்திய முனிவரது மஹிமையைக் கேட்பீராக. அவர் மித்ராவருணரது வீரியம்வாய்ந்த குடத்தினின்று அங்குஷ்டபரிமாணராய் வெளிவந்து லோபாமுத்திரைக்குக் கணவனாய் அவிமுக்தம் என்னும் வாரணாசியை அடைந்து அங்கு அகஸ்தியேஶ்வர் என்கிற நாமத்துடன் ஓர் மகேசலிங்கத்தைப் பிரதிஷ்டைசெய்து பரம பக்தியுடன் பில்வ முதலிய புண்ணியசாதனங்களால் அர்ச்சித்துக் கந்தமூலபலங்களை நிவேதனஞ்செய்து''

''ஒ இறைவனே! நமோ நமோ என்னுஞ்சொல் வேதாந்த வாக்கியங்களால் நீரே பதியென்று உம்மிடம் அரிதாகிய பக்தியை யுடையவர்களுக்கும் நமஸ்காரத்தைக் கூறும் ருத்ரவாக்யத்தால் சகலபதி தேவரீர் என்றே இனிது விளங்குகின்றது''.

''ஒ சிவனே! சிவ பவ முதலிய சொற்களாலும் தேவர்கள் உம்மையே போற்றுகின்றனர் அன்றோ? தேவரீருக்குச் சமானமா யாரிருக்கின்றனர்?''.

''ஒ இறைவனே! ஏனைய சகலதேவர்களும் தேவரீருக்கு அடங்கியவர் என்றே துணிந்தோதப்பட்டது அன்றோ?''.

''பிரம்மா விஷ்ணு ருத்திரர் இந்திரன் சூரியன் திசைத்தலைவ ராகிய தேவர்கள் கிரி நதி சமுத்திரங்கள் கிருக முதலிய சகலர்களும் தேவரீராலேயே உண்டாக்கப்பட்டவரன்றோ?''.

''சகலசராசரங்களுக்கும் ஆதாரம் தேவரீரன்றோ? சிவதரனும் மஹேசனுமாகிய தேவரீரிடம் மகாபூதங்களோடு கூட சகலமும் ஒடுங்குகின்றனவன்றோ?''.

''திவ்யசரீரம் பெற்று ஆகாயத்தில் விளங்குவோனும், யோகி களது சித்தத்தினால் அடையக்கூடியவனும், சச்சிதானந்தம் என்னுஞ்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சொற்களால் போதிக்கப்படுவோனும் மேதாவிகளால் அஹம் அஹம் என்று வருகிற ஞானத்தில் காணக்கூடியவனு மன்றோ? அங்ஙனமாகிய உம்மை நமஸ்கரிக்கின்றேன்''.

''காரியாகாரண பரம்பரையால் பரவியவரும், பார்வதிசகாயராய் விளங்குபவருமாகிய தேவரீருக்கு அன்னியமான பொருளும் ஒன்றுளதோ? மரம் கிளை இலை தளிர் பூ பிஞ்சு காய் கனி முதலியவைகளுடன் கூடி விஸ்தாரமாய்ப் பரவிய விருக்ஷமானது அதன் வித்துக்கு அன்னியமாய் இல்லாததுபோல பிரபஞ்சமும் தேவரீருக்கு அன்னியமாயில்லை. தேவரீரே பற்பலவுருவத்தைப் பெற்று பிரபஞ்சமாய் இருக்கின்றவர். உமதுமகாமஹிமா விலாசத்தை யெங்ஙனம் அறியக்கூடும்'' என்று இவ்வாறு துதி செய்துகொண்டு உபாஸித்திருந்தனர்.

இவ்வாறு உபாசித்துக் கொண்டிருந்த அக்காலத்தில் தேவர் களுக்கும் அசுரர்களுக்கும் யுத்தம்நேரிட்டு இருவரும் அதிகோரமாய் அநேககாலம் யுத்தஞ்செய்து, முடிவில் தேவர்கள் தோல்வி யடைந்தனர். அடையவே தேவருலகமும் தேவபோகங்களும் அசுரர் வசமாயின.

சிலகாலஞ்சென்றபின்னர் தேவர்கள் ஒருங்குசேர்ந்து அசுரர் களைச் செயிக்கவேண்டுமென்று ஆலோசித்து யத்தனஞ் செய்து கொண்டிருக்கும்போது அதனை அசுரர்கள் கேள்வியுற்று தேவர்கள் தகுந்த பலத்துடன் முயற்சி செய்கின்ற வராதலின் அவர்கள் நம்மைச் செயித்து விடுவார்கள் என்றெண்ணி நாம்அவர்களைச் சமயம் பார்த்து வஞ்சனையாய்ச் செயித்துவிட வேண்டுமென்று கடலிற் பதுங்கியிருந்து ஒவ்வோர் தருணத்தில் கடலினின்றும் வெளிவந்து ஆங்காங்குள்ள தேவர்களை வஞ்சனையால் அடித்து ஹிம்சித்து வந்தனர்.

இவ்வஞ்சகச் செயலையறியாத தேவர்கள் அசுரர்களைத் தேடித்தேடிக்காணாமல் பிரகஸ்பதியை வணங்கி, ''ஒ ஸ்வாமின்! அசுரர் எங்கொளித்திருக்கின்றனர் என்பதையும், அவர்களை வெல்லுதற்குரிய உபாயங்களையும் உரைத்தருளவேண்டும்'' என்று பிரார்த்திக்க, தேவகுரு ''ஒ தேவர்காள்! நீவிர் சிவபிரானைக்குறித்துத்

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

தவமியற்றுங்கள்'' என்றுகூற அவ்வண்ணமே அவர்கள் தவமியற்றிவர அப்போது சிவபெருமான் வெளிப்பட்டு அவர்களை நோக்கி, ''ஒ தேவர்காள்! அகத்தியமாமுனிவன் காசியில் தவமியற்றி வருகின்றனன். அவனைச் சரணமடையுங்கள்'' என்று கூறி மறைந்தனர்.

உடனே தேவர்கள் கடோத்பவராகிய அகத்தியரையடைந்து நமஸ்கரித்து அசுரர்களால் தாங்களடையுந் துன்பத்தையும், அவர்கள் ஒளித்திருப்பதையும் விண்ணப்பித்தனர்.

உடனே அகத்தியமுனிவர் சிவாக்ஞையை நினைந்து ஆனந்தமெய்தி இறைவனது பாதாரவிந்தத்தில் மனமுடையோராய்த் தேவர்களுடைய க்ஷேமத்தின் பொருட்டு அசுரர்கள் மரிக்க வெண்ணிக் கடலருகிற் சென்று அக்கடனீரைத் தமது உள்ளங் கையில் அடக்கி ஆசமனஞ்செய்வது போல் அருந்தத்தொடங்கிய காலத்தில் கோலாகலமாய் முழங்கி ஆரவாரிக்கும் அப்பெருங்கடல் சிவபிரானது திருவருளால் துளிபோலாக, அதனை யாசமனஞ்செய்து தேவர்களின் குறையை நீக்கிப் பின்னர் அக்கடலைச் சுக்லமாய் வெளிவிட்டு ஆனந்தவனம் என்னுங் காசியை வந்தடைந்து விஶ்வேசரைப் பலமுறை பூசித்து ஒப்பிலாதவலியைப் பெற்றவராய் முக்குண வயத்தினின்றும் நீங்கி முக்கண்ணர் மயமான மனதுடைய வராய் விளங்கியிருந்தனர்.

பின்னோர் காலத்தில் விந்தியகிரியை யடக்கவேண்டுமென்று சகலதேவராலும் பிரார்த்திக்கப்பட்டு அங்கிருந்து விந்தியகிரிக்கு வந்துசேர்ந்து தேவர்கள் வேண்டுகோளின்படி அம்மலையை யடக்கிய பின்னர் சிவாக்ஞையால் ருத்ரகணங்களோடு தென்றி சைக்கு வந்து மஹேந்திரசைலத்தில் இருந்தனர்.

சூதமுனிவர், ''சௌனகாதியரே! இனி முருகக்கடவுள் ஜைகிஷவ்ய முனிவருக்குக் கூறியவண்ணம் ததீசிமுனிவர் சரித்திரத்தைக் கூறுகின்றேன் கேட்பீராக'' வென்று சொல்ல லுற்றனர்.

இருபத்தோராம் அத்தியாயம் முற்றிற்று.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

சிவாப்பிரியாய நம:

இருபத்திரண்டாம் அத்தியாயம்.

ததீசி முனிவர் சரிதம்.

ஸ்கந்தர் கூறுகின்றார். ''ஒ ஜைகிஷவ்யரே! இனித் ததீசி முனிவரது சரிதம் கூறுகின்றனன் கேட்பீராக. பிருகுவம்சத்திற் றோன்றிய துந்துமுகர் என்னும் ஒர் மஹாமுனிவர் சூரியனுக்கொப் பாகிய தேஜஸுடன் சிவபெருமானைக் குறித்து இயற்றுதற்கரிய தவத்தைச் செய்து கொண்டிருந்தனர். அவருக்குச் சிவானுக் கிரகத்தால் ததீசர் என்னுமோர் புதல்வர் பிறந்து பாலபருவத்திலேயே சிவபக்தியுடையோராய் உபநயனாதி சடங்குகளைப் பெற்று வேதாத்தியயனஞ் செய்து கொண்டிருந்தனர்''.

''சூரியவம்சத்திற்றோன்றிய சையாதி என்னும் ஓர் அரசனுக்கு க்ஷுபன் என்னும் ஒர் புதல்வன் இருந்தனன். அப்புதல்வன் தனக்கு உபநயனாதிசடங்குகள் நிறைவேறிய பின்னர் ததீசி முனிவரது தந்தையிடம் அத்யயனஞ் செய்யவெண்ணி ஒர் திவ்யரதத்திலேறி துந்துமுகர் தவமியற்றும் வனத்துக்குவந்து அவரது ஆச்சிரமத் தருகில் ரதத்தை விட்டிறங்கி அம்முனிவரடியில் வீழ்ந்து அஞ்சலி செய்து நின்று, 'ஒ சுவாமின்! யான் சூரியவம்சத்திற் றோன்றியவன். க்ஷுபனென்னும் பெயருடையேன். அடியேனைத் தேவரீரது புதல்வருடன் வேதாத்தியயனஞ் செய்யும்படி கட்டளையிட்டருள வேண்டும். பிரமசரியாதி நியமங்களுடன் தேவரீரிடம் வசிக் கின்றேன்'' என்று முனிவரை நோக்கிப் பிரார்த்திக்க, அம்முனிவரும் ''அங்ஙனமே ஆகுக'' என்றருளித் தமதுபுதல்வராகிய ததீசியை யழைத்து அவருடன் க்ஷுபனையுங் கூட்டி அத்தியயனஞ்செய்து வைத்து வந்தனர்.

பின்னர் இருவரும் தோழத்தன்மையுடையராய் வேதங்களே யன்றி தனுர்வேதம் காந்தர்வவேதம் வேதாங்க முதலிய சகலவித்தை களையும் ஓதி அவற்றின் ரகஸ்யங்களையும் அறிந்து கொண்டிருந்தனர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அவ்வாறிருக்கும்போது ஒர் நாள் ததீசி க்ஷுபனை நோக்கி, 'எனது தோழனே! உன்னிலும் எனக்குற்றதோழன் யாருமில்லை. நாமிருவரும் ஒர் குருவினிடம் அத்தியயனஞ் செய்கின்றவர் களாகலின் சகோதரர்களேயாகின்றோம். எனது நன்மையை நீயும் உனது நன்மையை நானும் கருதவேண்டியது அவசியமன்றோ?

நீ அரசன் புதல்வனாதலால் இனி ராஜ்யாதிபதியாவாய் ஆகலான், நீ ராஜ்யபரிபாலனஞ் செய்து கொண்டிருக்குங் காலத்தில் யான் உன்னிடம் வந்து என்னால் மிகவும் விரும்பப்பட்டுள்ளனவும் உன்னால் கொடுக்க இயலுவனவுமாகிய பசு தனம் தான்யம் வஸ்திரம் முதலியவைகளைக் கேட்பேன். அவைகளை அப்போது உதவுகின்றனையோ'' என்று கேட்க, க்ஷுபன் 'ஒ மித்திரா! அன்புடன் நீ கேட்ட பொருள்களை யுதவுவதில் தடையாதுளது? யானடையுஞ் சுகம் உனதும், நீ அடையுஞ்சுகம் எனதுமேயன்றோ'' வென்று கூறினன்.

குருகுலவாசஞ் செய்தபின்னர் க்ஷுபன் ததீசி முனிவரது தந்தையாகிய தனதாசிரியரை வணங்கி அவருக்குக் கோ, வஸ்திரம், பூமி, யானை, தனம், தானிய முதலியவைகளைச் சமர்ப்பித்து அவரடியில் வீழ்ந்து வணங்கி விடைபெற்றுக் கொண்டு தனது நகரஞ் சேர்ந்தனன்.

அவன் தந்தையாகிய சையாதியும் தனது புதல்வன் சகல வித்தைகளிலும் பாரங்கதன் ஆயினனென்று கண்டு அவனது உருவத்துக்கு இணங்க அங்கதேசத்தரசனது மகளாகிய மாலினி என்னுங் கன்னிகையை மணம் புரிவித்தனன்.

துந்துமுகரும் தனதுபுத்திரராகிய ததீசி முனிவருக்குக் கர்க்கமுனிவரின் குமாரியாகிய மித்திராணி யென்பவளைக் கலியாணஞ் செய்வித்தனர். அத் ததீசிமுனிவரும் வனத்தில் விதிவழுவாது இல்லற தருமங்களை நடத்திக் கொண்டிருந் தனர்.அரசனும் தகுந்த பருவத்தில் தகப்பனால் பட்டாபிஷேகம் பெற்று மநுநீதி வழுவாமல் ராஜ்யபரிபாலனஞ் செய்து வந்தனன்.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

இங்ஙனம் பாலனஞ்செய்துவந்த சிலகாலத்துக்குப்பின் ததீசியினுடைய தந்தையும் க்ஷுபனுடைய தந்தையும் மரணமடைய அவ்விருவருடைய புத்திரர்களும் தத்தமக்குரிய இடங்களில் தத்தமக்குரிய தர்மங்களைப் பாதுகாத்து நடத்திவருநாளில் ஓர் தருணத்தில் ததீசிமுனிவர், முன்னர் நம்முடன் அத்யயனஞ் செய்துவந்த அருந்தோழனாகிய க்ஷுபன் இத்தருணம் அரசு செய்து கொண்டு இருக்கின்றானல்லவா? அவன் முன்னர் நம்மிடம் உறுதிமொழி கூறியிருக்கின்றான் அல்லவா? ஆகலான் இத்தருணம் நாம் அவனிடஞ்செல்வோமாயின் வேண்டிய பொருளைப் பெறலாம் என்றுநினைத்து க்ஷுபமகாராஜனிடஞ் சென்றனர்.

க்ஷுபனும் இவர் தன்னிடம்வருவதைக் கண்ணுற்று அர்க்கிய பாத்ய ஆசமனியங்கொடுத்து உபசரித்து மிக்க களிப்புடன் க்ஷேமங்களை விசாரித்துக் கொண்டிருந்தனன்.

முனிவரும் அங்ஙனமே க்ஷேமங்களை விசாரித்துப் புன்னகையுடன், ''ஓ அரசனே! முன்னர் நாமிருவரும் அத்தியயனஞ் செய்து கொண்டிருக்கு நாளில் நான் கேட்டதற்கு நீ எனக்குச் செய்துகொடுத்த வாக்குறுதி நினைவிலுளதா?'' வென்று வினவ அதற்கரசன் சிரித்துத் தலையசைத்து ''ஓ முனிவரே! இதுவென்ன விந்தை! நானொன்றும் வாக்களித்திலனே'' யென்றனன்.

அதற்கு முனிவர் மிகவும் காலமானதினால் மறந்து விட்டானோ என்றெண்ணிப்பின்னும், 'ஓ அரசனே! வெகு காலமானமையால் மறந்தனையோ'வென்றுகூற அரசன் 'ஓ முனிவரே! யான் கூறியிருந்தால் மறந்திரேன். எனக்கொன்றும் நினைவில்லை. ஏன் வீண் வார்த்தை கூறுகின்றீர்' என்னவே முனிவர், 'ஓ அரசனே! பரிகாசஞ் செய்ய வேண்டாம்; யான் வந்து காலதாமதமாகின்றது; முன் செய்த வாக்குதத்தத்தை நிறைவேற்று வாயாக. அங்ஙனஞ் செய்யாவிடில் உன்னிடம் சத்தியம் நிற்பது எவ்விதம்? சத்தியத்தை மீறுதல் மகாபாதகமன்றோ?''

''சகலசராசரங்களும் சத்தியத்திலேயே நிலைத்திருக்கின்றன. பிரமாதிதேவர்களும் சூரிய சந்திர நக்ஷத்திரங்களும் சத்தியத்திற்குப்

Digitization by Hindu-Heritage-Foundation of America - HHFA(USA)

பயந்தல்லவோ இரவும் பகலும் தத்தந்தொழில்களை நடத்திக் கொண்டிருக்கின்றனர். கடலும் கரைகடவாமல் இருக்கின்றது. இப்பூமி அநேகமலைகளை சோராமல் வகித்திருக்கின்றது. நீ எல்லாமும் வாசித்திருக்கின்றபடியால் உனக்கு நானதிகங்கூற வேண்டியதில்லை. பரமேஸ்வரனை ருதம்சத்தியம் என்றேயன்றோ வேதங்கள் கூறுகின்றன. ஆகலின் நீ சத்தியத்தைமீறுதல் உசிதமல்ல'' என்றனர்.

கர்வமென்னும் பர்வதசிகரமேறிநிற்கும் க்ஷுபன் அதனைக் கேட்டு சினந்து கைகொட்டி ஆர்ப்பரித்து மிக்க கம்பீரமாய், ''ஒ முனிவரே! உம்முடைய வார்த்தை மிகவும் வியக்கத்தக்கதே. நீர்இதுகாறும் சத்தியத்தினின்று வழுவாதேயென்று உண்மையில் சத்தியம் இழந்தவனுக்குக் கூறுவதுபோல் எனக்குக் கூறியிருக் கின்றீரே''.

''அந்தணராகிய உமதுபுத்திக்கு நான் மிகவும் ஆச்சரியப்படு கின்றேன். உமக்கு எப்போது வாக்குறுதி செய்தேன்? எப்போது உம்மோடுமித்திரத்வம் பெற்றேன்? தனிகன் தரித்திரனோடு மித்ரத்வம்பெறுவனோ? நீர் கூறிய இது நம்பத்தக்கதாகவில்லை. இதுபோலும் நீர் கனவுகண்டீர் போலும்! அதனைக் கனவென நினையாது உண்மையென நினைந்து என்னிடம் வந்தீரோ?''.

'அந்தோ! மதிமயங்கி வாயில்வந்தபடி கூறுகின்றீர். பார்ப்பார் களுக்குப் பின்புத்தியென்ற பழமொழி சிறந்ததே! இப்பழமொழியை உம்மிடம் நன்குபரீக்ஷித்தாயிற்று.

''ஒ அந்தணரே! இனி நீர்இந்த மூடத்தனத்தாற் கூறும் இம்மொழிகளை விட்டுவிடும். மந்திரி பிரதானி முதலிய அரசியலுடையோரால் சேவிக்கப் பெற்றும், மண்டலாதிபதிகளால் போற்றப்பெற்றும் இருக்கின்ற என்னை நோக்கி மிகவுந் தகாத மொழிகளைக் கூறினீர், இனியாவது புத்தியை நிதானஞ்செய்து கொண்டு பேசுவீராக'' வென்றனன்.

அதுகேட்ட ததீசிமுனிவர் கோபத்தால் கண்களில் நீர்ததும்ப 'ஒ அரசனே! தன்யனும் நீயே கிருதகிருத்யனும் நீயே! உன்னிடமே

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

தருமம் நிலைபெற்றுளது! உனதுகொடுமை யென்னால் என்னென்றுரைக்க முடியும்? உனது மொழியைக் கேட்க எனது செவி அஞ்சுகின்றது. உன்னோடு யான் இனிப்பேசுவது தகுதியன்று''.

''எதனைக் கோரிக்கொண்டு உன்னிடம் வந்தேனோ அதனையினிச் சிவோபாசனையாற் பெறுகின்றேன். நீ என்னிடம் வாக்குதவியபடி கொடுத்தாலும் அப்பொருள் அற்பமேயாகும். எக்காலத்தும் அழியாதிருக்கும்படி விரும்பிய பொருள் எல்லா வற்றையும் அளிக்கும் இறைவனாகிய சம்புவைப்பூசித்து யான் போகமோக்ஷங்களைப் பெறுகின்றேன். உன்னால் அற்பமான பொருள்களைத்தான் கொடுக்கமுடியும். அது உன்னிடம் வாங்கினாலும் பாபங்களையே விளைவிக்கும். நீ ராஜ்யகர்வத்தினால் அறிவிழந்திருக்கின்றனை. உலகாதிபத் தன்மைபெற்ற உனக்கு இவ்வற்பபுத்தி நிகழ்தல் கூடாது. நீ அற்பபூமிக்கு அதிபனாயும் அறிவாராய்ச்சியற்ற அற்பபுத்தியுள்ளவனாயும் இருக்கின்றாய் உன்னையோர் பொருளாக மதித்தல் என்போன்றவர்க்கு அழகாமோ?''

''சிவபெருமானை உபாசித்தால் சகலலோகங்களுக்கும் பதியாந்தன்மை பெறுவது திண்ணம். ஆகலின் கலாதரரும், கண்ணன், கமலபவன் முதலியோரால் உபாசிக்கப்படுபவருமாகிய சிவபெருமானாரையே தவத்தால் ஆராதித்து வேண்டும் பொருள்களைப் பெற்று மகிழக்கடவேன். அன்றியும் பிராமணர் களாகிய எங்களுக்கு இறைவன் சங்கரரேயாவர்''.

''வேதங்களும் சிவபெருமானாரையே பிராமணதெய்வமென்று கூறுகின்றன. ஆதலின் நான் அப்பெருமானை உபாசிப்பதே யுசிதமாகும். க்ஷத்திரியர்களுக்குத் தெய்வம் ஹரியாவர். அவர் சங்கரருக்குக் கிங்கரர். இங்ஙனமான அரியபிரபுத்தன்மை வாய்ந்த எங்களிறைவனைப் பூசித்து யான் மகிழ்கின்றேன்''.

''நீ இவ்வற்பஇராச்சியமே பெரிதென்று நினைத்துப் பற்பல துக்கங்களை யநுபவித்துக்கொண்டு அல்லற்படுவாயாக''.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

''நான் ஈஸ்வரப்ரசாதத்தினால் போகமோக்ஷங்களைப் பெற்றுப் பரமானந்தம் எய்துவேன். அற்பமேனுந் தயவற்ற அரசனாகிய உனதுபிறப்பு சுடத்தக்கதே'' என்று க்ஷுபனைக் கடிந்துகூறித் தவத்துக்குச்சென்று ஓர் புண்ணியதீர்த்தக் கரையில் ஆச்சிரமமியற்றி அங்குமுக்காலமும் முழுகி விபூதிருத்திராக்ஷந் தரித்துப் பொறிகளை வென்று மனதை ஒர்வழிப்படுத்திச் சிவலிங்கார்ச்சனை செய்து கொண்டு பரமபக்தியுடன் தோத்திரஞ் செய்தனர்.

இருபத்திரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

உக்ராய நம:

இருபத்துமூன்றாம் அத்தியாயம்.

இதுவுமது.

ஸ்கந்தர் கூறுகின்றார். "ஒ ஜைகிஷவ்யரே! முனிவர் இவ்வாறு தோத்திரஞ்செய்து கொண்டிருக்குஞ் சமயத்தில் கைலைபோன்ற மகா விருஷபத்தின்மீது மகாதேவியுடன் சகலகணங்களுஞ் சேவித்துத் தோத்திரஞ்செய்யச் சிவபெருமான் பிரசன்னராய் வெளிவந்தனர்".

"உடனே ததீசமாமுனிவர் சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்துத் தோத்திரஞ் செய்து நிற்ப, இறைவன் பரமசந்தோஷ மடைந்தவராய், "ஒ ததீசியே! நீ விரும்பிய பொருளெல்லாம் உனக்குச் சித்திக்கவருள்புரிந்தனம், எவ்வண்ணமாய்ச் சரீர விருத்தியை விரும்புகின்றனையோ அவ்வண்ணமேயாகும் சுதந்திரத்தை யுனக்களித்தனம்" என்று கூறி மறைந்தருளினர்.

முனிவரும் பெருமானது பெருங்கருணையை நினைந்து அகமழிந்து தமதுஆச்சிரமஞ் சென்று கோக்கள் தனம் தானியம் கிருகம் ஆபரணம் வஸ்திரம் நல்லபோஜன முதலிய இவையாவும் தாம் விரும்பியதினும் மிகுதியாய்ப்பெற்று அனுபவித்துத் தமது சுகத்துக்கு எவரும் எதிரின்றி வாழ்ந்து அச்செல்வமிகுதியால் தவத்தைமறப்ப தொழிந்து தவமியற்றிக்கொண்டு வசித்துவந்தனர்.

பின்னர் ஒர் சமயத்தில் ததீசி முனிவர் முன்னர்கர்வங்கொண்டு வாயில் வந்தபடி பிதற்றிய அரசனைச் செயிக்கவேண்டுமென்று கருதி க்ஷுபனிடஞ்சென்று, "ஒ க்ஷுபனே! உன்னிடம் யான் கூறியபடி வேண்டும்பொருள்களையெல்லாம் சிவபெருமானாரிடம் பெற்றுச் சுகமேயிருக்கின்றேன். நீயோ அற்பபூமியையாண்டு அதனால் அகம்பாவங்கொண்டு கலங்குகின்றனை. நீ என்னுடைய ஆச்சிரமம்வந்து எனதுபோகங்களைப் பார்த்துவருவையாயின் உனது கர்வம் நீங்கும்" என்று கூறவே அதனைக்கேட்டு க்ஷுபன் மிக்க

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

கோபங்கொண்டவனாய் அத் ததீசிமுனிவர் மார்பில் தனது வச்சிராயுதத்தினால் ஓங்கிப் புடைத்துத்தள்ளி, 'இவன் பெற்ற செல்வத்தைப் பார்ப்போம்' என்று அவரது ஆச்சிரமம் வந்து அங்குள்ளச் சுகபோகங்களைக் கண்ணுற்று, 'அந்தோ நாமடைந் திருக்கும் அரசபலம் எம்மாத்திரம்! தபோபலமே பலம்' என்று பெருமூச்செறிந்து பொறாமைமேற்கொண்டு விஷ்ணுமூர்த்தியை நோக்கித் தவஞ்செய்து இவன்பெற்றசெல்வத்தினும் மேலாய்ப் பெறுவோம் என்றெண்ணி ஹரியைநோக்கி இயற்றுதற்கரிய தவத்தை அநேககாலம் இயற்றியவர ஹரி பிரத்தியக்ஷமாய் அவனைப் பார்த்து, ''ஒ க்ஷுபா! உனக்கு யாது விருப்பம்? அதனைத் தருகின்றேன்'' என்று கூறவே க்ஷுபன், 'ஒ ஸ்வாமி! யான் நிகரற்ற சுகபோகங்களைப் புசித்துக் கொண்டு எவரையுஞ் செயிக்கக்கூடிய அஸ்திர பலமும் பெற்று வாழ வேண்டும்' என்று வேண்ட ஹரியும் 'அவ்வாறே ஆகுக' வென்று பற்பல அஸ்திரங்களையும் அளித்துப் போயினர்.

இவ்வாறு வரபலத்தையடைந்த க்ஷுபன் அவ்வஸ்திரங்களை எடுத்துக்கொண்டு ததீசிமுனிவர் மகிழ்ச்சியை அடக்கவேண்டும் என்று கருதி அவரிடம்வந்து தனது தபோவலியை வியந்து பேசித் தான்பெற்ற அஸ்திரங்களையெல்லாம் காட்டினன்.

முனிவர் புன்னகைகொண்டு, ''ஒ அரசனே! உனது ரதகஜதுரக பதாதி சைனியங்களும் உனது அஸ்திரங்களும் எமதுகையிலுள்ள ஒர் தருப்பை முஷ்டிக்கு நிகராகுமா?'' வென்றனர்.

உடனே அரசன் இவனுக்கு என்ன அகங்காரமென்று சினங்கொண்டு முனிவர்மேல் சைனியங்களைத்தூண்டி அஸ்திரங் களையும் பிரயோகித்தனன். அதைக்கண்ட ததீசிமுனிவர் அஞ்சாது தமது கையிலிருந்த ஒர் பிடிதர்ப்பையை அபிமந்திரித்து விட்டனர். அத்தர்ப்பைகள் சீறிச்சென்று அரசனது அஸ்திரங்களையறுத்துத் துகளாக்கி நால்வகைச் சைனியங்களையும் நாசஞ்செய்துவிட்டன.

அதை விஷ்ணுமூர்த்தியறிந்தவராய் 'அந்தோ! நமது பக்தனுக்கு நாம் கொடுத்த அஸ்திரசஸ்திரங்களையெல்லாம் இந்த முனிவன்

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

அற்பமாகிய தர்ப்பையால் முறிந்தழியும்படி செய்தானல்லவா' எனக் கோபங்கொண்டு சங்குசக்கர கதாதாரியாய்வந்து முனிவரையதட்டி, 'அடா! என்னைமதிக்காது என்னால் கொடுக்கப்பட்ட ஆயுதங் களைப் பொடியாக்கினையல்லவா? உன்னை இப்பொழுதே கொன்று விடுகின்றேன்' என்றுகூறி சாரங்கம் என்னுந் தனுசில் கூர்மையாகிய கடும்பாணங்களைத் தொடுத்து முனிவர்மேல் பிரயோகித்தனர்.

முனிவர் அவரையும் அவர்விட்ட பாணங்களையும் ஓர் பொருளாக மதிக்காது முன்போல் ஓர் தர்ப்பையையெடுத்து ஏவிவிடுத்தனர். அது விஷ்ணுமூர்த்தி விட்ட பாணங்களெல்லாம் துகளாகிப் பறக்கச் செய்தது. மீண்டும் ஹரி இவரது தவவலிமை யெண்ணாது சினங்கொண்டு சக்கிராயுதம் விடுத்தனர். அந்தச் சக்கரம் சராசரங்களையெல்லாம் கவளீகரிப்பதுபோலெழுந்து கோடி சூரியன் உதிப்பதுபோலுதித்துத் ததீசிமுனிவரிடம் வந்தது. அவர் அதனைப் பார்த்து சிவபிரானுடைய பாதாரவிந்தத்தைத் தனது மனதில் தியானஞ் செய்தனர். செய்யவே சக்கரம் முனிவரைப் பிரதக்ஷண நமஸ்காரஞ் செய்து எதிரில் அஞ்சலிபத்தஞ் செய்து கொண்டு நின்றுவிட்டது.

விஷ்ணுமூர்த்தி அதுகண்டு வியந்துநிற்க, ததீசி அவரைப் பார்த்து, ''ஒ சக்கரபாணே! சம்புவின் சரணாரவிந்தங்களைத் தியானித்துக் கொண்டிருக்கும் எனக்கெதிரில் அஞ்சலிசெய்து கொண்டிருக்கும் இந்த சக்கரமானது எமது கருணைக்கடலாகிய சங்கரனடி மலரில் உனது கண்களை நீ மலராக அருச்சிக்கவதனால் சிவபெருமான் திருப்தியடைந்து கொடுத்த சக்கரமன்றோ? இந்தச் சக்கரத்தை அசுரவதஞ்செய்வதற்கு உனக்குகொடுத்ததேயன்றி அவனடியனாகிய என்போன்றவரை வதஞ்செய்வதற்காகக் கொடுத்தது அன்றே?''.

''ஒ ஹரியே! இதனையேன் அறியாதொழிந்தனை? நீ அறியாதொழிந்தாலும் இந்தச் சக்கரம் என்னிடம் என்செய்யும்? எந்தச் சக்கரத்தினால் இதுகாறும் எங்கணும் ஜயம் பெற்று இருந்தனையோ அந்தச்சக்கரத்தின் கதியை இப்போது பார்ப்பாய்.

Digitization by Hindu-Heritage-Foundation of America: HHFA(USA)

ஆதலால் இனி நீ சங்கர பக்தர்களிடம் துவேஷங்கொள்ளற்க. எமது சங்கரனது ஆயுதமாதலால் அது அவனது ஆணையைக்கடவாது என்னை சங்கரபக்தனென்று கண்டு தன்செயலொழிந்து அஞ்சலியுடன் நிற்கின்றது. இதனைக்காணுதி, சக்கரம் யோசனையற்று நிற்கின்றது. நீ யோசனையோடு நிற்கின்றாய். நிற்கின்றதனால் என்னபயன்? இனிச்சிவபக்தரிடம் நிதானித்து நடப்பாயாக'' என்றனர்.

பிறகு முனிவர் தர்ப்பையால் இறந்த அரசனையும், சைனியங் களையும், ஒர் நொடியில் பிழைப்பிக்கின்றேன் என்றுயாவரும் எழுந்திருக்கும் வண்ணம் சிந்திக்க யாவரும் எழுந்தனர். அவர்களை நோக்கி, 'நீங்கள் உங்களிருப்பிடம் போய்ச் சேருங்கள்' என்று கூறி சக்கரத்தைப் பார்த்து, 'நீ விஷ்ணுவினிடம் போய்ச் சேருவாய்' என்று ஆக்கியாபித்தனர்.

க்ஷுபன் ததீசியாரது வளமாகியசெயலையும் சொல்லையுங் கண்டு நாணி முனிவரடிமீது வீழ்ந்து நமஸ்கரித்து ஹரியையும் லச்சையுடன் பார்த்துத் தலைகுனிந்து நின்றான்.

விஷ்ணுமூர்த்தி க்ஷுபனைப்பார்த்து, 'ஒ அரசனே! இனிச் சம்புபக்தர்களிடம் கர்வங்கொள்ளற்க. அவர்கள் என்னாலும் என்பக்தர்களாலும் பூஜிக்கப்படுகின்றனர். ஆகலான், அவர்களை மகாதேவன் எனவே நினைத்தல்வேண்டும்' என்று புத்திகூறித் தாமுந் தமதிருப்பிடம்போய்ச் சேர்ந்தனர் என்றருளினர்.

இருபத்துமூன்றாம் அத்தியாயம் முற்றிற்று.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

கபர்த்திநேநம:

இருபத்து நான்காம் அத்தியாயம்.

ரிடி சரிதம்.

ஸ்கந்தர் கூறுகின்றார். "ஒ ஜைகிஷவ்யரே! இனி மஹா சிவபக்தராகிய ரிடி என்னும் முனிவருடைய சரித்திரத்தைச் சிறிது கூறுகின்றேன் கேட்பீராக".

"பூர்வம் உத்தாலகரின் புதல்வராகிய ரிடி என்பவர் தமது தகப்பனால் கோபித்து அடிக்கப்பட்டு மனத்துயரத்துடன் நீல பர்வதத்தை அடைந்து அங்கு புண்ணியகரமாகிய சிவலிங்கத்தால் பரமபாவனம் பெற்றுள்ள ஒர் வனத்தையடைந்து முப்போதுந் தீர்த்தமாடி பஸ்மருத்திராக்ஷமணிந்து பரமபக்தியுடன் பஞ்சாக்கரத்தைச் செபிப்பவராய் நீலேஶ்வரரைப் பூசித்துவர, சிவபெருமான் அவரது பூசைக்கு மகிழ்ந்து உமாதேவியுடன் பிரத்தியக்ஷமாயினர்".

"அவரைத் தெரிசிக்கப்பெற்ற முனிவர் பரமானந்தமெய்திக் களித்து 'ஒ பகவானே! காமக்குரோத முதலியவைகட்கு வசப்பட்ட மனதோடு இது செய்யத்தகுந்தது, இது செய்யத்தாகதது என்பதையறியாமல் இது சிறந்தது, அது சிறந்தது, இது நன்மை, அது தீமை, இது வேண்டும், அது வேண்டாம் என்பதாதி பாவனைகளால் பாவங்களைச் செய்து உழன்று கண் தெரிந்த குருடனாய்க் கலங்கும் அடியேனைத் தேவரீர் கருணையுடன் நோக்கக் கூடாதா?".

'தேவரீரது மகிமைக்கு இதுவோர் பெரிதானகாரியமா? பூமியை ரதமாகவும், மஹாநாகத்தை நாணாகவும், மாமேருவை வில்லாகவும், திருமாலைப் பாணமாகவும், வேதங்களைக் குதிரைகளாகவும், பிரமனைச் சாரதியாகவும், ஏனைய தேவர்களைக் கிங்கரர்களாகவும் கொண்ட சங்கரனே! தேவரீரைத் துதிப்பதற்கும், அறிவதற்குங் காரணம் தேவரீரது கருணையே. அஃது கிடைக்கப்பெறாத யான்தேவரீரைத் துதிக்க முடியாதன்றோ?'.

Digitization by Hindu-Heritage-Foundation of America: HHFA(USA)

'ஒ மங்கைபாதியனே! காமநாசனனே! சாதுப்பிரியனே! சோமகலாதரனே! வியோமகேசனே! பூமா (பேரானந்த) சொரூபனே! ஸ்வாமின்! தேவரீரைச் சரணமடைந்தோர்க்கு மீண்டும் பிறவி யில்லையன்றோ? அடியேனிடங் கருணை செய்யும்'' என்று செய்த அவரது தோத்திரத்துக்குச் சிவபெருமான் மகிழ்ந்தவராய் ரிடியை நோக்கி,

''ஒ பிள்ளாய்! உனக்குக் காணாபத்தியம் அளித்தனம். நீ தாய் தந்தையர்களிடஞ் சென்று உத்தரவு பெற்று நமது கைலை வந்தடைவாய்'' என்று கூறி மறைந்தனர்.

அவ்வாறே முனிவரும் தாய்தந்தையரை வணங்கி உத்தரவு பெற்றுக் கைலாயசிகரம் வந்து சேர்ந்து சிவசாரூப்பியம் பெற்றுச் சிவசாமீப்பியத்திலிருந்து பரமானந்தத்துடன் சிவோபாசனை செய்துக்கொண்டிருந்த அந்த ரிடியைச் சிவபெருமான் நோக்கி, ''ஒ ரிடி! உனது உபாசனா விதிக்கும் தோத்திரத்துக்கும் மிகவும் மகிழ்ந்தனம். உனக்குப் பிரமவிஷ்ணுக்களாலும் அடைய வொண்ணாத பதத்தை யளித்தனம். நீ பிருங்கி முதலியவருடன் இருந்து, அவர்களைப் போலும் எமது பாதாரவிந்தத்தையே பூசித்துத் தியானித்துக் கணாதிபனாய் விளங்குவாயாக'' என்றருளினர். அந்த ரிடியும் அவ்வாறே பிருங்கிமுனிவர் போலக் காணாபத்தியத்தைப் பெற்று பிரமாதியர்களால் வணங்கப்பெற்றுச் சுகமாய் இருந்தனர்.

இருபத்து நான்காம் அத்தியாயம் முற்றிற்று.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

உ

காமாரயே நம:

இருபத்தைந்தாம் அத்தியாயம்.

கண்வாதி சரிதம்.

ஸ்கந்தர் கூறுகிறார். ''ஒ ஜைகிஷவ்யரே! சிவபக்தர்களது பிரபாவங்களைச் சொல்லி இன்புறுவதிலும் இன்பம் வேறு எமக்கு யாதுளது? ஆதலால் மற்றுமுள்ள பக்த சரித்திரங்களைக் கூறுகின்றேன். உலகில் அறிவிற்சிறந்த பெரியோர் எவரோ அவரே செய்தற்கரிய தவஞ்செய்து சிவபெருமானை மகிழ்வித்து எய்தற்கரிய மகிமையை எய்தி யாவராலும் வணங்கப்பெற்றுள்ளவர்''.

''பூர்வம் கண்ணுவர் என்னும் ஓர் மஹாமுனிவர் குசாஶ்ரமம் என்றவோரிடத்தில் பஸ்மருத்திராக்ஷதாரணராய் ஸ்ரீ ருத்திராத்தியா யத்தைச் செபித்து பஞ்சாக்ஷர பராயணராய் அன்பர்க்கு எளியனாகிய பரமேஶ்வரனைப் பரமபக்தியுடன் அநேகமாயிர வருடம் பூசித்துத் தோத்திரஞ் செய்யவே அத்தோத்திரத்தால் பிரீதியடைந்த இறைவனைப் பிரத்தியக்ஷமாய்க் கண்டு அருள்பாலிக்கப்பெற்று ஞானசிரேஷ்டராயினர்''.

''பூர்வம் விஶ்வாமித்திர மாமுனிவரும் கோரமாகிய தவம்புரிந்து இறைவனைக் காணாமல் பின்னர் சிவோபாசனை செய்து பரமபக்தியுடன் அற்புதமாகிய பலதுதிகளைச் செய்து மகாமஹிமை பெற்றுப் பிரமனைப்போல் சிருஷ்டி சாமர்த்தி யத்தைப் பெற்றனர்''.

''இப்படியே சைவாசாரிய சிரோமணியும் மகாயோகீஶ்வரரு மாகிய கபிலமாமுனிவரும் பூர்வம் மகாபாசுபத விரதமுடையவ ராய்ப் பரமபக்தியுடன் பசுபதியைப் பன்னெடுங்காலம் பூஜித்துத் தோத்திரங்கள் பலவாறாகச் செய்து சகலமுனிவர்களாலும் போற்றப்படும் பெருமைபெற்றனர்''.

''பூர்வம் பிருகு மஹாமுனிவர் பால்யதிசையிலேயே நல்லாசிரியரிடம் உபதேசம்பெற்றுச் சிவோபாசனையே சிறந்தது

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

என்றறிந்து அநேகமாயிரவருடம் சிவாராதனையே புரிந்து பலதோத்திரங்களைச் செய்து இறைவனருள் பாலிக்கப் பெற்றதனால் அன்றோ தமதுமனைவியைத் தேவர்களது சகாயார்த்தமாய்க் கொன்ற விஷ்ணுமூர்த்தியைச் சபிக்கும் பேராற்றலைப் பெற்று மகாப்பிரபாவ முடையவராய் இன்றளவும் யாவராலும் புகழப்பட்டு வருகின்றனர்?''.

அவ்வாறே சநந்தரும் சநாதநரும் பலகோடிவருஷம் தவம் புரிந்து பரமேஸ்வரனை உபாசனை செய்து காணாபத்தியம் பெற்றுப் பலதோத்திரங்களைச் செய்து இறைவன் றிருவருளுக்கு ஆளாயினர்.

'ஒ முனிவரே! இவ்வாறு பற்பலமுனிவர் பன்னெடுங்காலம் பஞ்சாக்ஷரமூர்த்தியான பரமசிவனை ஸ்ரீசைலம் திரியம்பகம் கோபர்வதம் கிருதுசைல முதலிய புண்ணியக்ஷேத்திரங்களில் உபாசித்துச் சகலகாமங்களையும் பெற்று முக்தர்களாய் விளங்கு கின்றனர். ஒ ஜைகிஷவ்யரே! சிவபூஜா மஹிமையை யாவரால் உரைக்க முடியும்' என்றருளினர்.

இருபத்தைந்தாம் அத்தியாயம் முற்றிற்று.

Digitized by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

உ

அந்தகாசுரசூதனாய நம:

இருபத்தாறாம் அத்தியாயம்.

பிரமகர்வஹரண சரிதம்.

சூதமுனிவர் கூறுகின்றார். ஸ்கந்தர், ஜைகிஷவ்யரைப் பார்த்து, ''சிவாபராதமாகிய மஹாபாதகத்துக்கு மாத்திரம் பிராயச்சித்தம் யாதுமிலை இதுசத்தியம், ஐயமேயில்லை. சிவாபராதத்துக்குச் சிவார்ச்சனையே பிராயச்சித்தம் என்பதற்கு ஓர் இதிகாசம் கூறுகின்றேன்''.

''பூர்வம் பிரமதேவன் விதிவசத்தால் இங்ஙனமான சிவ நிந்தையைச் செய்து பிராயச்சித்தம் யாதுமின்றி அநேககாலம் அல்லற்பட்டுப்பின்னர் பரமேஸ்வரனைப் பூசித்து அவனது பிரசாதத்ததால் தூய்மைபெற்றனன்''.

''பிரமஹத்தி, சுராபானம், சொர்ணஸ்தேயம், குருபத்தினி சங்கமம், இப்பாவிகளோடு கூடல் ஆகிய மஹாபாதகங்களையும் பற்பல உபபாதகங்களையும் உடையோராயினும் வேறு பரிகாரங் களை நடத்தாமல் பசுபதியைப் பூசிப்பாராயின் அவர்கள் எல்லோரும் மிகவெளிதாய்த் தூய்மையுடையோராவர்'' என்று கூறியருளவே; ஜைகிஷவ்யர், ''ஒ ஸ்வாமின்! வேதங்களால் தேடப்படுவோனும் தேவதேவேசனுமாகிய சதாசிவமூர்த்தியை யாது காரணத்தால் பிரமன் நிந்தனை செய்தனன்? அதனாலவன் என்னவிதமான துக்கமடைந்தனன்? அதைக்கருணைகூர்ந்து அடியேனுக்கு உரைத்தருளும்'' என்று பிரார்த்திக்க;

ஸ்கந்தர், ''ஒ முனிவரே! முன்னோர் கற்பகாலத்தில் சகலசராசரங்களும் பிரளயத்தில் மூழ்கி ஒரேசலமயமாய் இருக்குந் தருணத்தில் ஐந்துதலைபடைத்த பிரமன்றோன்றி சகல உலகங்களையும் படைத்துப்பின்னர் தான் படைத்தவற்றை தானே பார்த்து அதிசயித்துக் கர்வங்கொண்டு, *'நாமன்றோ இப் பிரபஞ்சத்தை உண்டாக்கினோம். உண்டாக்கிய நாமன்றி*

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

இப்பிரபஞ்சத்துக்குப் பரமகாரண புருஷன் எவனுள்ளான். சிவன் பரமகாரண புருஷன் என்பது சிறிதும் ஒவ்வாது நாமே பரம்பொருள். நமக்குநிகராயொரு பரம்பொருளுமில்லை' என்று இறுமாந் திருந்தனன்''.

''இவனது இறுமாப்பையறிந்த பரமான்மாவாகிய சிவபெருமான் காலாக்கினிருத்திரரை நோக்கி, 'ஒ ருத்திரா! பிரமன், தானே பரமென மயங்கிக் கர்வித்திருக்கின்றான். நீ சென்று அவனது ஐந்தாவது சிரத்தைக் கொய்துவருவாய்'' என்றேவினர்.

அப்படியே காலாக்கினிருத்திரரும் சென்று பிரமனது ஐந்தாந் தலையைக் கொய்ய பிரமன் தலையிழந்து மிக்கதுயரமுற்றுப் புலம்பிக் கொண்டிருக்கும் பொழுது சிவபெருமான் அவன் எதிரிற்றோன்றி, ''ஒ பிரமனே! எம்மை நிந்தித்தனாலன்றோ இவ்வாறு துயரமெய்தப் பெற்றனை'' என்று தேவதேவனாகிய சிவபெருமான் கூறப் பிரமன் அஞ்ஞானம் நீங்கி சகல வேதாசாரமாகிய பற்பல துதிகளைச் செய்தான்.

அதனால் பக்தவத்சலனாகிய சிவபெருமான் பிரீதியடைந்து, ''ஒ பிரமனே! நீ சிவலிங்கார்ச்சனை செய்வாயாயின் பாவம் நீங்கப்பெற்று பரிசுத்தம் எய்துவாய்'' என்றருளினார்.

பின்னர் இறைவன் உருத்திரரை நோக்கி, 'ஒ ருத்திரனே! நீ அலோகனுக்கிரகார்த்தமாய் எனது ஆணையைக் கடவாமல் சக தேவரிடத்தும் இந்தப்பிரமகபாலத்தில் உதிரபிக்ஷையேற்றுப் பன்னிரண்டுவருடம் எங்கும் உலாவி பின்னர் அவிமுக்த (காசி) க்ஷேத்திரத்துக்குப் போய் பஸ்மருத்திராக்ஷ தாரணனாய் என்னைப் பூசித்துப் பின்னர் இக்கபாலத்தையொழித்து விடுவாயாக' வென்றருளினார். மீண்டும் பிரமனை நோக்கி, 'நீ எம்மை நிந்தித்தற்குத் தலைகொய்யச்செய்ததே பரிகாரமென்று எண்ணற்க. அதற்குப் பரிகாரமேயில்லை. அஃகொழிந்த ஏனைய துரோகங்கட் கெல்லாம் அவ்வத்துரோகங்கட்கேற்ப பல பரிகாரமுளது'என்று கூறவே; உருத்திரர், 'ஒ ஸ்வாமின்! சிவத்துரோகம் என்பது யாது? அதனைச் செய்வோனடையுங் கதியாது? அம்மஹாபாதகமாகிய

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிவத்துரோகம் எதனால் நீங்கும்? அதனைக் கருணைகூர்ந்தருள வேண்டும்' என்று பிரார்த்திக்கப் பரமேஸ்வரன் காலாக்கினி ருத்திரையும் பிரமனையும் நோக்கி, ''ஒ பிரமருத்திரர்களே! சிவத்துரோகத்தால் விளையும் துக்கத்தைக் கல்ப கோடிகாலம் கூறினாலும் முடியாது. எமக்குத் துரோகஞ்செய்வோர்களடையுந் துக்கத்தைப் போக்கிக் காப்பாற்ற விஷ்ணு முதலிய உங்கள் மூவராலும், வைரவனாலும் முடியாது. அந்தத்துரோகம் யாதெனின் ஒன்றேயல்ல பலவாம். அவற்றைக் கேளுங்கள்''.

''ஒ பிரஹ்மருத்திரர்களே! எமது பக்தர்களை நிந்தித்தல், ருத்திரத்தை நிந்தித்தல், விபூதியை நிந்தித்தல், பஞ்சாக்ஷரத்தை நிந்தித்தல், எமது நாமோச்சாரணத்தை நிந்தித்தல், எமது க்ஷேத்திரத்தில் வசிப்பவரை நிந்தித்தல், சிவலிங்கத்தின் மஹிமையை யறியாமல் மயக்கவறிவால் நிந்தித்தல், அங்ஙனம் நிந்திப்பதைக் கேட்டல், பஞ்சாக்ஷரத்தை மற்ற மந்திரங்களோடு சமமாய் எண்ணுதல், சிவக்ஷேத்திரங்களை மற்றதேவதா க்ஷேத்திரங்களோடு சமமாய் எண்ணுதல், சிவலிங்கமூர்த்திக்குச் சமமாக விஷ்ணுமுதலிய மூர்த்திகளைப் பூசித்தல், தப்தசக்ர முத்திரை தரித்தவர்களோடு வார்த்தையாடி நட்பாடல், அவர்களுடன் புசித்தல், ஊர்த்துவபுண்டரந் தரித்தல், விபூதிருத்ராக்ஷதாரணமின்றி எம்மைப் பூசித்தல், சிவாலயம் தீர்த்தம் இவைகளையழித்தல், சிவாலயசம்பந்தமாயுள்ள பசு தான்யம் தனம் வஸ்திரம் நெய் எண்ணெய் தேன் மற்றுமுள்ள சிவோபகரணங்களாயுள்ள திரவியங்களைக் கவர்தல், அங்ஙனங்கவர்ந்த பொருள்களை வேறு தர்மங்களுக்கு உபயோகப்படுத்துதல் ஆகிய இவையெல்லாம் மஹத்தாகிய சிவத்துரோகங்களாம். ''இத் துரோகங்களெல்லாம் மீளாநரகங்களிற் சேர்ப்பன என்பதற்கு ஐயமேயில்லை''.

★★''ஒ ருத்திரனே! இன்னமுஞ் சொல்லுகின்றேன். எம்மைப் பிரம விஷ்ணுவாதியர்க்குச் சமமாய் எண்ணுதல், எமது பக்தர்களை மற்றப் பக்தர்கட்குச் சமானனாய்க் காணுதல், பிரதோஷம், சோமவாரம் பூதகாலாஷ்டமி, இக்காலங்களில் எமது பூஜையின்றிப் புசித்தல் முதலியனவுமாகிய இவையெல்லாம் ஒருகற்பமன்றிப் பலகற்பங்களினும் நரகதுக்கங்களை யனுபவிப்பதற்கு ஏதுவாகும்''.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

★★''ஒ பிரமனே! இவ்வண்ணமான துரோகஞ் செய்பவரெல்லாம் யமனால் செய்யப்படும் துன்பத்துக்கு ஆளாகவேண்டுமென்பது சத்தியமே''.

''அவன் செய்யும் தண்டங்களுட் சிலகூறுகின்றேன் கேட்பாயாக. இரத்தம் சீழ் ஊன் தண் என்பு கேசம் நகம் முதலியவைகள் நிறைந்து பயங்கரமாயுள்ள நரகத்திலும், பெரியபானைக் குள்ளே தள்ளிப் புழுக்குதலாகிய மஹாகும்பீபாகத்திலும் இறுத்துவன். பழுக்கக் காய்ச்சிய இருப்புப்பாதையில் புரளும்படிப் புரட்டுவான். வறுத்தமணற்றரையில் வாட்டுவன், கைகால் முதலிய அங்கங்களைத் துண்டந்துண்டமாய் வெட்டுவன், பழுக்கக்காச்சிய இரும்பூசிகளைக் காய்ச்சிக் கண்களில் சொருகுவன், ஈயம் அரக்கு முதலியவைகளைப் பழுக்கக்காய்ச்சிக் காதுகளிலும் மூக்குகளிலும், வார்த்து நிரப்புவன். காய்ச்சிக் கொதிக்கும் எண்ணெயில் கண்டம் வரையில் மூழ்கியிருக்கச் செய்வன்''.

''இவ்வாறு, செய்யுந் துன்பங்களுக்கு உட்பட்டு ஓய்வில்லாமல் அல்லற்படுவதற்கு ஏதுவாவார் சிவத்துரோகிகளாதலின் அந்தத் துரோகங்களுக்கீடான பாதகம் உலகில் யாதுமில்லை'' யென்று கூறி இறைவன் அந்தர்த்தானமாய்விட்டனர்.

உடனே உருத்திரர் காசியாகிய ஆனந்தவனத்துக்குப் போய்ச் சிவாக்ஞையின்படிச் சிவலிங்கார்ச்சனை செய்துபரமானந்த முற்றிருந்தனர். பிரமனும் சீகாழியெனும் பிரமபுரத்தில் வசித்துப் பஸ்ம ருத்திராக்ஷதாரியாய்ப் பரமசிவனைப் பூசித்து பாதகம் நீங்கிப் பரமானந்த மெய்தினன்.

இருபத்தாறாம் அத்தியாயம் முற்றிற்று.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

உ

கங்காதராய நம:

இருபத்தேழாம் அத்தியாயம்.

ருத்திரவிஜயம்.

ஜைகிஷவ்யர் கூறுகிறார். "ஒ ஆறுமுகக்கடவுளே! மஹா மகிமை பெற்றுள்ள காலாக்னிருத்திரர் பிரமசிரச்சேதஞ் செய்ததை சிற்சிலர் ருத்திரரைப் பிரம்மஹத்தி பிடித்துக் கொண்டது. அதனால் பிரமன்றலை அவ்வுருத்திரர் கையினின்றும் நீங்கவில்லை யென்று கூறுகின்றபடியால் அடியேனுக்கு அது ஆச்சரியத்தை விளைவிக் கின்றது. அதன் உண்மையாதோ அதனைத் தேவரீர் அடியேனுக்கு உரைத்தருள வேண்டு" மென்று பிரார்த்திக்க;

ஸ்கந்தமூர்த்தி, "ஒ முனிவரே! உருத்திர மூர்த்தியைப் பிடித்த தென்றால் அவ்வுருத்திரர் அந்தப் பிரம்மஹத்தியினால் பீடிக்கப் பட்டுத் தன்செயலற்று ஏக்கமுற்று வாடி உருமாறித் திரிந்தலைய வேண்டுமன்றோ? அங்ஙனமின்றி அக்காலாக்கினி ருத்திரனார் திகம்பரராயும், ஜடாமவுலியாயும், சகலப் பிரம்மஹத்திகளையும் போக்கவல்ல பஸ்மத்தைத் தலையிலுடையவராயும், சந்திரகலாதர ராயும், நாகயக்ஞோபவீதராயும், நாககர்ணாபரணராயும், தக்ஷிண கரத்திற் கபாலமும் வாமகரத்திற் சூலமும் ஏந்தினவராயும், பாதுகை யணிந்த பாதங்களுடையவராயும், யாவருமஞ்ச வுடுக்கையைத் தட்டிக்கொண்டு வேதங்களெல்லாம் நாய்களாகச் செல்லுமிடந் தோறும் பின்பற்றிவர, பிக்ஷையேற்றல் என்னும் வியாஜங்காட்டி இந்திரலோகம், அக்கினிலோகம், யமலோகம், நிருதிலோகம், வருணலோகம், வாயுலோகம், குபேரலோகம், பிரமலோகம், விஷ்ணுலோக முதலிய உலகங்களிற் செல்வா ராயினர்".

"இங்ஙனம் இவர் வருகையைக் கண்ட அவ்வவ்வுலகிலுள்ள தேவரெல்லாம் நடுங்கி ஓட்டம்பிடிக்க இவர் நாணற்காடுகளில் மதயானை யுலாவுதல்போல் இறுமாந்துலாவி அவ்வுலகிலுள்ள சகலபதார்த்தங்களையும் பக்ஷயவகைகளையும் புசித்துக் கொண்டும்

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

தேவலோக நந்தவனங்களிலுள்ள மலர்களைப்பறித்து அலங்கரித்துக் கொண்டும் மகிழ்ந்து உலாவலாயினர்''.

''அப்போது கோரமுகமும் நீர்வடியும் நாவும் செந்நிறமுடைய கண்களுமுடையதாய்ப் பிரம்மஹத்தி கையிலோர் பெருந்தண்ட மெடுத்துக் கொண்டு அவரைப் பின்பற்றிச் சென்றது'' என்றலும், உடனே ஜைகிஷவ்யமுனிவர் ஸ்கந்தமூர்த்தியைப் பார்த்து, 'ஒ ஸ்வாமி! சிவா என்று எந்த இறைவனது பெயரை நினைப்பதனா லேயும் கூறுவதனாலேயும் பலகோடி பிரம்மஹத்திகள் தொலைவன வாயிருக்கவும், அவ்ஈசாம்சமாகிய அந்த வுருத்திரர் அந்த பிரம்மஹத்தியைச் சற்று நோக்குவாராயின் அஃதிருக்குமிடந் தெரியாது தொலைந்துபோம் என்பதும் உண்மையாமன்றோ?''

''அங்ஙனமிருக்க அவ்வுருத்திரர் அதனைத்தொலைக்காததும் அது பின்பற்றிச் சென்றதும் யாதுகாரணம்பற்றியோ அவ்வுண்மை யைச் சர்வஞ்ஞராகிய தேவரீர் கூறாவிடில் இதனை யடியேன் மற்றியாரிடங்கேட்டுத் தெளியக்கூடும்'' என்று வேண்ட ஸ்கந்த மூர்த்தி ''ஒ முனிவரே! அந்தப் பிரம்மஹத்தியைச் ஸர்வேசராகிய காலாக்கினி ருத்திரர் லோகானுக்கிரகத்தின் பொருட்டு இறைவன் விதித்த ஆணையின் உண்மையை உட்கொண்டு அதனைப் பின்வரபேற்றுக் கொண்டதேயன்றி வேறுயாதறியக் கிடக்கின்றது?''

அச்செய்தி யங்ஙனமிருக்க, ''ஒ முனிவரே! முன்போடிப்போன தேவரெல்லோரும் பிரம்மஹத்தி நாய்போல் யாதொரு செயலற்று ஓடிவருவதையும் உருத்திரமூர்த்தி அதனையோர் பொருளாக மதியாது கம்பீரமாய் உலகந்தோறும் உலாவுவதையுங்கண்டு அஞ்சினவர்களாய் வந்து பிக்ஷா சரணஞ் செய்பவராகிய உருத்திர மூர்த்தியைக் கண்டு ஆராவன்புடன் பூசித்தனர்''.

''அவர்களுடைய பூசைகளையேற்று அப்புறஞ்செல்லும் போது காலகாலரும், கலாதரரும் சங்கரருமான இவரது ரூபலாவண்யத்தை ஆங்காங்குள்ள பேதை முதல் பேரிளம் பெண்ணீறான மங்கையர்கள் கண்டு மனத்தை யவரிடம் போக்கித் தாங்களும் அவர் பின் சென்று

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அவர் செல்லுமிடமெல்லாம் செல்லமுடியாதவர்களாய் ஏங்கி நின்று விட்டனர்''.

''மனத்தாலும் வாக்காலும் தொடர்தற்கு அரியானை இவர்கள் காயத்தால் எங்ஙனந் தொடர்ந்து காணப்பெறுவர்? அவ்வாறு பார்ப்பவர் பார்த்துத் திருப்தியடையப்பெறாத பரமசௌந்தர்ய முடையோராகிய உருத்திரமூர்த்தி எல்லாவுலகங்களிலுஞ் சஞ்சரித்து, கடைசியில் விஷ்ணுலோகஞ் சென்றனர்''.

அங்கு ''சங்குசக்கரகதைகளைத் தரித்த மஹாபலவானாகிய விஷ்வக்சேனன் என்னும் துவாரபாலகன் சூலாயுதபாணியாய் உடுக்கையை யடித்துக் கொண்டுவரும் உருத்திரரைக் கண்ணுற்று அவர் பரமான்மா வென்பதையும் ஸர்வேஶ்வரர் என்பதையு மறியாது உள்ளே வரக் கூடாதென்று தடுத்தனன். தன்னைத் தடுக்கும் விஷ்வக்சேனனை நோக்கி ஒன்றுஞ்சொல்லாது தனது கைச் சூலத்தினால் அவனைக் குத்தி மேலே தூக்கிக் கரகரவெனச் சுழற்றவே அவன் வாயினின்றும் உதிரத்தைக் கக்கிக்கொண்டு உயிர் துறந்தனன்.

அங்ஙனம் உயிரிழந்த அத்துவாரபாலகனோடு உள்ளே செல்ல, இவரைக் கண்ணுற்ற விஷ்ணுமூர்த்தி சரேலெனவெழுந்து உள்ளம் நடுங்கி ஓடோடிவந்து சகலசகத்காரணனாகிய ஈஶ்வரன் என்றறிந்து சரணாகதியடைந்து சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்தெழுந்து, ''ஓ ஸ்வாமின் ஓர் திருக்கரத்தில் கபாலமும், கண்டத்தில் பிரஹ்மமுண்ட மாலையும் மற்றோர் திருக்கரத்தில் மானும், புஜத்திலும் கண்டத்திலும் நாகமாலையும் ஓர் திருக்கரத்தில் சூலமுங் கொண்டு பிரகாசிக்கும் காலகாலகாலனாகிய கைலைநாதனே! இக்கோலத் தோடு விலாஸஞ்செய்யவந்த தேவரீரைக்கண்ட எனது பாக்கியமே பாக்கியம். மதித்தயானைபோலும் அலக்ஷ்யமான பார்வையோடும் பசுபதியின் பாதாரவிந்த சம்பந்தமான மனதோடும் சகலலோகங்களினுஞ் சஞ்சரித்து சுரகணங்கள்ளயருளால் ரக்ஷித்தவனும் எனது கணத்தலைவனாகிய விஷ்வக்சேனனிடம் பிராணலீலை செய்தவனும் காலாக்கினியைக்கக்கும் சூலாயுதந் தரித்தவனுமாகிய தேவரீரைப் பூஜிக்கின்றேன்''.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

''என்னிடம் அருள்புரியும் சர்வஜகதீஸ்வரனும் பராத்பரனு மாகிய தேவரீரால் அநுக்கிரகிக்கப் பெற்றோனாகிய எனது பாக்கியமே பாக்கியம்'' என்று துதிக்கின்ற ஸ்ரீ விஷ்ணுவை நோக்கி உருத்திரர், ''ஒ விஷ்ணு! எனக்குப் பிக்ஷை கொடுப்பாயா'' என்று கேட்க உடனே மகாவிஷ்ணுமூர்த்தி தனக்குள் ஆலோசித்து,

''ஒ பகவானே! அன்னத்தால் தாங்களடையும் திருப்தி போதாது, ஆகையால் என்சரீரத்தையே பிக்ஷையாகவளிக்கிறேன் அதனைக் கொண்டருளும்'' என்று தலைசாய்த்துநிற்ப உடனே ருத்திரமூர்த்தி சூலத்தால் அவரது சிரசைப்பொதித்து அதினின்றும் பெருகிவரும் உதிரத்தை ஓர் பெரியகோஷஞ்செய்து சிரித்துக்கொண்டே கபாலத்திலேந்தி அவரது சரீரத்திலுள்ள உதிரமெலாம் வரப்பெற்று இனி ரத்தமில்லையென்பதைக் கண்டு அக்கபாலத்தைக் கையிலேந்தி முன்போலெங்குஞ் சஞ்சரித்து மீண்டுந்தேவருலகங் களில் சஞ்சாரஞ் செய்யவாரம்பிக்க பிரமவிஷ்ணு முதலிய தேவர்களெல்லாம், 'இனிஎன்செய்வதற்கு வருகின்றனரோ' என்றேங்கி தங்கள் தங்கள் வாகனங்களிலேறி திக்குகள்தோறும் ஓட்டம் பிடித்தனர்.

அப்படியே ருஷிகள் முனிவர்கள் ஏனையோர்கள் வருண லோகம், யமலோக முதலிய வுலகங்களிற்சென்று பதுங்கினர். யமன் ஓர் காக்கைவடிவங் கொண்டோடினன். இவர்களே இவ்வாறாயின் ஏனையோரைக் கூறவேண்டுமா? உருத்திரகணங்களெல்லாந் தோத்திரஞ் செய்துகொண்டு பின்சென்றனர். பின்னர் இறைவன் ஆணையின்படி உருத்திரர் வாரணாசி அல்லது காசி என்னும் புண்ணியநகரத்தை வந்தடைந்து அந்தப் பிரமஹத்தியைப் பார்த்து, 'நீ அலைந்தது போதும் உனக்குக் காலமாய் விட்டது, இனி நீ தொலையக்கடவாய்' என்று ஆக்யாபித்தனர். உடனே அது இருக்குமிடந் தெரியாமல் ஓட்டம் பிடித்தது. பின்னர் பெரியமலை போன்ற அக்கபாலத்தையும் பூமியில் வீழ்த்தினார். அது கபால நாசனம் என்று ஓர் புண்ணியதீர்த்தமாய் ஸ்நானம் செய்பவர்களை மிக்கப்பாவனம் செய்து இம்மை மறுமை இன்பங்களை அளிக்கின்றது.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

''ஓ முனிவரே! பின்னர் காலாக்கினி ருத்திரர் மணி கர்ணிகையில் ஸ்நானஞ்செய்து விஸ்வேஸ்வரனை வணங்கி மோக்ஷத்திற்கேதுவாகிய ஞானத்தையளிக்கும் இறைவனே! உமாஸகாயனாகிய பகவானே! மஹாபஸ்மந் தரித்துள்ள மஹேஸ்வரனே! தேவரீர் கருணை பரிபூரணமாய் இந்த க்ஷேத்திரத்தில் இருப்பதனாலன்றோ பரம புண்ணியகரமாகிய இந் நகரத்தில் எண்ணிறந்த மஹாபாதகங்களைச் செய்தவரும் பிரவேசித்து வசிக்கப்பெறுவாராயின் அவர்கள் அப்பாதகங் களினின்று நீங்கப் பெற்று புண்ணிய நிதிகளாகின்றனர்''.

எந்த நகரத்தில் அன்னாதிபதியென்று வேதங்களாற் கூறப்பட்டவரான தேவரீரும் அன்னபூரணேஸ்வரியாகிய அகிலமாதாவும் தூண்டீரன் என்னும் புத்திரரும் தண்டிக்க வேண்டியவர்களைத் தண்டித்துக் கொண்டிருக்குந் தண்டபாணியும் விளங்கும் மஹிமையுள்ள இறைவனே! பயந்தவர்களுக்கு அபயஞ்செய்தற்கென ஸ்ரீமஹா பைரவரையும் ஏற்படுத்தியிருக் கின்றீரோ, எந்தநகரத்தில் யமபயம் கூடவில்லையோ, யாவரும் திவ்யோங்கார மஹாமந்திரம் உபதேசிக்கப்பெற்று மீண்டுங் கர்ப்ப வாசமின்றிப் பரமானந்த சாம்பிராச்சியமாகிய மோக்ஷத்தையும் அடைந்துய்கின்றனரோ, வேதத்தாற் பிரதி பாதிக்கப்பட்டதான இத்தலத்தினது மகிமையையெவனறிவான்?''

''அம் மகிமையானது சகலவேதசிரசுகளானும் பூசிக்கப்பட்டு பாதார விந்தமுடையோராகிய தேவரீர் அபாரகருணையுடன் எப்பொழுதும் வசித்துக் கொண்டு தாரகோபதேசம் செய்தல் பற்றி யன்றோ என்று இறைவனைத் தோத்திரஞ்செய்து கண்களின்று ஆனந்த பாஷ்பத்தைப் பொழிந்து பரமானந்தமெய்தினர். அக்காரணத்தால் அப்புண்ணியதலம் ஆனந்தவனம் என்று சநந்த முனிவர் முதலிய முனிவர்களால் எப்பொழுதும் போற்றப்பெற்றது. பின்னர் உருத்திரர் வாராணசியை நோக்கி, ஓ முனிப் பற்பல துதிகள் செய்து சிவபெருமானது திருவடிகளிலேயே சென்ற மனமுடையோ ராயிருந்தனர்.

இருபத்தேழாம் அத்தியாயம் முற்றிற்று.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

உ

லலாடாக்ஷாய நம:

இருபத்தெட்டாம் அத்தியாயம்.

பிரம பாபவிமோசனம்.

ஸ்கந்தர் கூறுகின்றார். ''ஜைகிஷவ்யரே! சிவநிந்தை காரணமாய் காலக்கினிருத் திரரால் தலையிழக்கப்பெற்ற பிரமதேவன் மகாதுக்கமெய்தி வெட்கி தலைகுனிந்து இனி யாம் யாதுசெய்வோம். பராத்பரமூர்த்தியும் பரஞ்சோதியுமாகிய பரசிவத்தை நிந்தித்ததனா லன்றோ இத்துன்பமடையப் பெற்றோமென்று நினைந்து மனமுருகி இனி நமக்குப் பரமசிவத்தினது பாதாரவிந்தமே கதியன்றி வேறு யாதிருக்கின்றது'' என்று நினைந்து அவ்விறைவனைக் குறித்துத் தவஞ்செய்து வந்தனன்.

கருணைக்கடலாகிய சிவபெருமான்றோன்றி பிரமனை நோக்கி ''ஒ பிரமனே! நீ எம்மை நிந்தித்த குற்றமகல, காலாக்கினிருத்திரன் உன்னை சிக்ஷித்துவிட்டான். இனி நீ பயப்படவேண்டாம். உருத்திரன் லோகானுக்கிரகத்தின் பொருட்டான எனது ஆஜ்ஞை யால் உனது தலையாகிய கபாலத்தைக் கையிலேந்தித் தேவர் களிடம் பிக்ஷை வாங்கச்செல்ல அத்தேவர்களெல்லாம்பயந்து திக்குவிதிக்கா யோட்டம் பிடித்தனர்''.

''பின்னர் அவ்வுருத்திரன் விஷ்ணுலோகஞ் சென்றபோது அங்கு துவாரபாலகன், இவனாற்றலை யறியாது தடுப்ப அவனைச் சூலத்தாற் குத்திக்கோத்து மேலேற்றிக் கொண்டு விஷ்ணுவினிடம் பிட்சைகேட்க தடையில்லாமல் பிக்ஷையைத் தோத்திரத்துடன் கொடுக்கப்பெற்று அட்டகாசஞ் செய்துகொண்டு கணங்களும் வேதங்களும் சூழ்ந்து தோத்திரஞ்செய்துவர வாராணசியை வந்தடைந்து கையிலுள்ள கபாலத்தையும் விட்டுத் தீர்த்தமாடிப் பரமானந்தமடைந்தனன். இனி உனக்கு யாவராலும் யாதொரு தண்டனையும் வரமாட்டாது. நீ பரமபக்தியுடன் எம்மை விரிஞ்சிகம் என்னும்க்ஷேத்திரத்தில் பூசித்து வழிபடுவாயாகில் பாவம் நீங்கிப் பரமானந்தமெய்துவாய். எமது துரோகத்தான்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

இகழ்ந்த பாவத்தை அகற்றுவோன் யானேயொழிய வேறெவனு மில்லை என்பதை நீ யுறுதியாய் அறிந்து கொள்வாய். வாராணசியிற் செய்யும்பாவம் எவ்விதம் மிக்க கோரமானதோ அதுபோலவே எமது துரோகமு மாதலால் எம்மையே சரணமடைந்து பூசித்திடுவாயாக'' என்றுகூறி மறைந்துவிட்டனர்.

பிரமனும் அவ்விறைவனது ஆணையின்படி கலைமகளுடன் விரிஞ்சிபுரஞ்சேர்ந்து பஸ்மருத்திராக்ஷமணிந்து ருத்திரத்தை ஆவர்த்திசெய்தும், பஞ்சாக்ஷரத்தை ஜபித்தும், பரமசிவத்தைத் தியானித்தும், பில்வமுதலிய நறுமலர்களாலும் பஞ்சாமிர்தத்தாலும் பாத்திய ஆசமனஅர்க்கிய தூப தீப நைவேத்திய நீராஞ்சன முதலியவைகளாலும் முப்பொழுதும் பரமேஸ்வரனைப் பூசித்துப் பன்னெடுங்காலம் வழிபட்டும் இறைவன் பிரஸன்னராகாமை கண்டு, ''அந்தோ! யாம்யாது செய்வோம் இதுகாறும் இறைவன் தோன்றவில்லையே யாம் செய்த துரோகம் அவ்வளவு கொடுமையானதோ, அது அவரது அருளுக்கு நம்மையாளாக்க வில்லையோ, யாம் யாது செய்வோம்''என்று பரமசிவனை விட்டகலாத மனமுடையோனாய்த் தியானித்து வழிபடவே பரமசிவன் உமாசகிதராய் வ்ருஷபாரூடராய் சகலதேவகணங்களுந் தோத்திரஞ் செய்யப்பிரசன்னராய்த் தோன்றி, ''ஒ பிரமனே! நீ பாபத்தினின்றும் விடுபட்டுப் பரிசுத்தமடைந்தனை, இனி உனது இருப்பிடஞ்சென்று உலக வியாபாரத்தைச் செய்து கொண்டிருப் பாயாக'' என்றருளி அந்தர்த்தானமாயினர்.

பிரமன் மனமகிழ்ந்து சத்தியலோகமடைந்து அங்கு தன் சபையிலுள்ள சகலதேவருஷி முனிகணங்களாலும் பூசிக்கப் பெற்றுச் சிவாஞ்ஞையின்படி சிருஷ்டித் தொழிலைச் செய் திருந்தனன்.

''ஒ ஜைகிஷவ்யரே! சிவநிந்தைபுரிந்து மகாபாதகமடைந்த பிரமன் சிவாராதனஞ்செய்தே தூய்மையெய்தினன். எவன் எந்த மஹாபாதகங்கள் செய்தானாயினும் சிவாராதனை செய்வானாயின் அவன் நிர்மலனாவான் என்பது சத்தியம் சத்தியம். எந்த மகா

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

பாதகங்களாயினும் எத்தனையோ கோடி கல்பம் நரகவாதனை யனுபவிக்க வேண்டியவனாயினும் அப்பாதகங்களை யெல்லாம் தொலைப்பது மகாபுண்ணியமாகிய காசிக்ஷேத்திரமொன்றே. எவ்வளவு பாதகங்கள் செய்தவனாயினும் காசியில் மரிப்பானாயின் அவன் கைவல்யம் எய்துவதற்கு ஐயமில்லை'' என்றருளினர்.

இருபத்தெட்டாம் அத்தியாயம் முற்றிற்று.

Digitization by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

உ

காலகாலாய நம:

இருபத்தொன்பதாம் அத்தியாயம்.

இந்திர பிரம்மஹத்தி விமோசதம்.

ஸ்கந்தர் கூறுகிறார். ''ஒ ஜைகிஷவ்யமுனிவரே! பூர்வம் இந்திரன் தேவகாரியநிமித்தமாய் விருத்திராசுரனைக் கொல்ல அதனால் கோரமாகிய பிரம்மஹத்தி இந்திரனையணுகிற்று. அவன் அதனை பிரகஸ்பதியின் உபாயத்தால் நான்கு பங்காக்கிப் பூமி சலம் விருக்ஷம் ஸ்திரீகள் ஆகிய நால்வருக்கும் பகுத்துக் கொடுக்க அதற்குஅவர்கள் இப்பங்கை நாங்கள் பெற்றுக்கொள்ளமாட்டோம்'' என்று மறுப்ப, பிரகஸ்பதி பகவான் அவர்களை நோக்கி, 'நீங்கள் பெற்றுக்கொள்ளவேண்டியது அவசியம்' என்று அறிவுறுத்த அப்பொழுது அவர்கள், இந்தப் பிரம்மஹத்தியைப் பெறுவதனால் நாங்களடையும்பயன் யாது?' என்று வினவினர்.

பிரகஸ்பதிபகவான், 'ஒ பூதேவியே! நீ மானிடரால் வெட்டப் படுவையாயின் வளர்ந்து முன்போலிருப்பாயாக. ஒ வருணனே! நீ இறைக்க இறைக்க முன்போல் ஊற்றம்பெறக் கடவாயாக. ஒ மரங்களே! நீங்கள் வெட்டப்பட்டால் அப்படியே அழிந்து போகாமல் மீண்டும் தளிர்பூ கனிகளோடு சிறந்தோங்குவீர்களாக. ஒ மங்கையர்களே! நீங்கள் கருக்கொண்டிருக்கும் அக்காலத்தும் கணவரோடு கூடி காமரசத்தை பெறுவீர்களாக'' என்றனன்.

இங்ஙனங் கூறவே அந்நால்வரும் மகிழ்ந்து அவைகளை யேற்றுக்கொண்டு, ''இந்தப் பிரம்மஹத்தி எங்களிடத்திலிருந்து எப்படி கழியும்? அதனைச் சொல்ல வேண்டும்'' என்று பிரார்த்திக்க அதற்குஅவர், ''பூமியில் உவர்மண்ணாகவும், நீரில் நுரையாகவும், மரங்களில் பிசினியாகவும், பெண்களிடத்தில் மாதவிடாயாகவும் இருந்துகழியும்'' என்றனர்.

இவன் செய்தி இங்ஙனமிருக்க, இந்திரனால் தன் மகன் கொல்லப்பட்டானென்று அறிந்த திரிசிரன் மனம்பதைத்து ஓர்யாகஞ்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

செய்யத் தொடங்கினன். அதனை இந்திரனறிந்து பிரமனிடம் பெற்ற வச்சிராயுதத்தினால் அவன் சிரங்களைச் சேதிக்கவே சோமபானஞ் செய்யுஞ் சிரத்தினின்றும் தித்திரி என்னும் பக்ஷியும், சுராபானஞ் செய்யும் சிரத்தினின்றும் கலவிங்க பக்ஷியும், அன்னபானஞ் செய்யுஞ் சிரத்தினின்றும் கபிஞ்சலம் என்னும் பக்ஷியும் வெளிப்பட்டன.

பின்னர் பிரம்மஹத்தியானது பேருருக்கொண்டு கறுநிற முடையதாயும் நீண்ட கேசங்களுடைய தாயும் நெருப்பைச் சிந்துங் கண்களையுடையதாயும் கோரதந்தங்களை உடையதாயும் வெளிப்பட்டுக் கையில் ஒருபெரிய தண்டத்தை யேந்திக்கொண்டு ஆஹா என்றுஅதட்டி இந்திரனிடம் வந்தது.

இந்திரன் அதனைக் கண்டோட்டம் பிடிக்க அதுவும் அவனை விடாது பின்பற்றிக் கொண்டு அவன்ஓடுமிடமெல்லாம் பின்சென்று கொண்டிருக்க எங்குமோடி முடிவில் மானஸ ஸரஸிலுள்ள ஓர் தாமரையின் நாளத்தில் ஒளிந்தனன். இவ்வாறு இந்திரன் பிரம்மஹத்தியினால் வெருட்டப்பட்டு ஓட்டம் பிடிக்கவே பிருகஸ்பதியும் தேவர்களும் இந்திரனையும் இந்திரனுக்கு வந்த ஆபத்தையும் எண்ணி எண்ணி ஒருயுகமளவும் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தனர்.

அக்காலத்தில் நகுஷன் இந்திரப்பட்டத்துக்கு வந்து இந்திராணி யிடம் காமங்கொண்டு அவளுடன்கூடிச் சுகிக்கவெண்ணி அங்ஙனம் செல்வதற்கு அகத்தியர் முதலிய மஹாமுனிவர்களை சிவிகையைச் சுமந்துவரச் செய்து அகத்திய முனிவரைக் காலால் உதைக்க அம்முனிவர் கோபங்கொண்டு, 'சர்ப்பமாகக் கடவாய்' என்று சபிக்க, நகுஷனும் மலைப்பாம்பாய்ப் பூமியில் வீழ்ந்தனன்.

பின்னர் இந்திரன் தனது குருவாக்கியத்தால் ஹாலாஸ்ய நாதனையடைந்து, ''இனி இவ்விறைவனையன்றி நமக்குக்கதி யாருமில்லை'' என்று நினைத்துப் பரமபத்தியுடன் அவரது பாதாரவிந்தத்திற் செலுத்திய மனமுடையோனாய்ப் பஸ்ம ருத்திராக்ஷமணிந்து பொற்றாமரைத் தீர்த்தக்கரையில் மிக்க

Digitized by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

நியமத்துடன் நூறுவருடம் சுந்தரேசனைப் பூசைசெய்து வசித்து வந்தனன்.

இப்படியிருந்தும் இறைவன் பிரத்தியக்ஷம் ஆகாமையைக் கண்டு மனவருத்தமுற்றுக் கண்களினின்று நீர்ததும்ப வேத வாக்கியங்களால் தோத்திரஞ்செய்ய சுந்தரேசன் பார்வதிசமேதனாய், நீலகண்டனாய், கங்காதரனாய், இடபாரூடனாய், நந்தியாதி பூத கணங்களோடும் பிரத்தியக்ஷமாய் இந்திரனைப் பார்த்து,

''ஓ இந்திரா! நீ செய்துவந்த பூஜைக்கு நாம் மிகவும் மகிழ்ந்தனம். நீ பிரமஹத்தியினின்றும் விடுபட்டு பரிசுத்தி யடைந்தனை, இனி நீ உனது இருப்பிடஞ்சென்று குரு, தேவர், இந்திராணி ஆகிய இவர்களுடன் சுகமாய் வசித்துக் கொண்டிருப் பாயாக'' என்றருள் புரிந்தனன், அப்படியே இந்திரனும் இறைவன் அருளால் பிரம்மஹத்தியினின்றும் விடுபட்டுத் தன்னுலக மடைந்து அசுரர்களைச் செயித்துத் தனதுராஜ்யத்தைப் பெற்றுச் சுகமாய் வாழ்ந்திருந்தனன்''.

இருபத்தொன்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA (USA)

உ

க்ருபாநிதயே நம:

முப்பதாம் அத்தியாயம்.

விஷ்ணுமுனிசம்வாதம்.

ஸ்கந்தர் கூறுகின்றார். "ஒ ஜைகிஷவ்யரே! பூர்வம் பாத்ம மென்னுங் கற்பத்தில் ஒர் சமயத்தில் தேவாசுரர்களுக்கு யுத்தம்நேர்ந்தபொழுது அசுரர்கட்கு வெற்றியும் சுரர்கட்குத் தோல்வியும்உண்டாக அதனைக் கண்ட லோகபாலகராகிய நாராயணர் தேவர்கட்கு வெற்றியுண்டாக வேண்டும் என்றெண்ணி, "இதற்கு நாமென்செய்வோம், சிவபெருமான் இருவருளன்றி நமக்கொன்றும் முடியாதே. அவன்றிருவருளும் அவனது அர்ச்சனையாலன்றி அமையாதே. அவனையர்ச்சித்தல் மண்ணுலகிலன்றி வேறிடத்தில் சுலபமல்லவே. அவ்விடத்திலன்றோ சிவபெருமான் வேண்டியாங்கு அருள்புரிந்து வருகின்றனன்?"

"ஆகலான் இனி நாம் எவ்விடத்தில் மிகவும் கருணையுடைய வனாய்ச் சிவபெருமான் றோன்றுகின்றனனோ அவ்விடத்தில் அவனை ஆராதித்து அசுரர்களை வெல்லும் வகையைத் தேடுவோம்" என்று நிச்சயித்து லக்ஷுமீசமேதராய்க் கருடாரூடராய்ப் பூவுலகின்கண் வந்து க்ஷேத்திரங்கள்தோறும் பெருமானைத் தெரிசனஞ்செய்து கொண்டு சென்று தேஜினீவனத்தைக் கண்டானந்தமுற்று இவ்வனந்தான் நமக்குச் சிவபெருமான் றிருவருள் செய்யுமிடம் போற்றோன்றுகின்றது.

இதுபோலுஞ் சிவபெருமானுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கத்தக்க க்ஷேத்திரமும் ஒன்றுண்டோ வென்று சந்துஷ்டியடைந்தவராய், "ஒஹோ! இங்குள்ள தேஜனீவனேஸ்வரரைப் பூஜித்தே பூர்வம் புரூரவஸும் முனிவர்கள் முதலியவர்களும் பூசித்துப் பெறுதற்கரிய பேறுகளைப் பெற்று மகிமையுற்றனர். இவ்விறைவனைப் பூசிப்பதற்குரிய ஓர் புண்ணியநதியும் இங்கிருக்கின்றது" என்று மகிழ்ந்து லக்ஷுமியையும் கருடனையும் ஏனைய பரிவாரங்களையும் பார்த்து,

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

''என்னிடத்தில் அன்புடை யவர்களே! யான் இவ்விடத்தில் எம்பெருமானாகிய சிவபெருமானை எனது மனமொழிமெய்களால் பூஜைசெய்ய எண்ணியிருக்கின்றேன். அவ்வெண்ணத்தை நிறைவேற்ற வேண்டியவர்கள் நீங்களே. உங்களுடைய ஸகாய மிருக்குமாயின் யான் சிவபெருமானை மகிழ்வித்துப் பெற வேண்டியவற்றையும் பெற்றுச் சுகித்து அசுரர்களால் துன்ப முற்றிருக்குஞ் சுரர்களையும் சுகிக்கச்செய்வேன். இதற்கு ஐயமில்லை'' என்று அவர்களுள்ளங் களிகூறும் வண்ணஞ் சொல்லிப் பின்னர் தாம்பாசுபத விரதத்தைக் கைக்கொண்டு பஸ்மோத்தூளிதராய், ருத்திராக்ஷ பூஷணராய், பஞ்சாக்ஷர பராயணராய், இந்திரிய விஷய நிக்கிரஹராய், அந்தக்கரணசுத்தராய், ஹ்ருதயபுண்டரீகத்தில் நீங்காதிருக்கின்ற உமாஸகாயனை அன்பின்மிகுதியாற் கண்டு ஆராதித்துச் சோஹம்பாவனை யடைந்திருந்தனர்.

விஷ்ணுமூர்த்தி பின்னர் பகிர்திருஷ்டியுடையவராய், ''எம் பெருமானே! இனி என்னிஷ்டம் நிறைவேறும் வண்ணம் எனது புலன்கள் காணுமாறு வெளியிடத்துங் காட்சிகொடுத்து அங்கு என்னாற்செய்யப்படும் பூஜையையும் ஏற்று அநுக்கிரகஞ் செய்தருளல் வேண்டும்'' என்று பிரார்த்தித்துத் தேவதேவனாகிய தேஜினீவனேஸ்வரரைக் கண்டு, 'என்னுள்ளத்திலிருந்து என்னை இன்புறச்செய்த ஆண்டவனே' யென்று போற்றி வேதாகம விதிப்படி பூசைசெய்யத் தொடங்கினார்.

''ஓ ஜைகிஷவ்யரே! அவர்செய்த பூஜையை இப்பொழுது என்னால் சொல்லமுடியாதெனினும் சிறிது சொல்லுகிறேன். கேட்பீராக. அந்த விஷ்ணுமூர்த்தியானவர் அப்புண்ணியநதியில் முப்பொழுதும் நியமத்துடன் நீராடி பஸ்மருத்திராக்ஷந்தரித்து, தேஜினீவனேஸ்வரரைப் பூஜிப்பதற்குத் தமது கணங்களில் சிலரைப் பாற்கடலிலிருந்து லக்ஷங்குடம் பாலும், தயிர்க்கடலிலிருந்து லக்ஷங்குடந் தயிரும், கருப்பஞ்சாற்றுக் கடலிலிருந்து லக்ஷங்குடங் கருப்பஞ்சாறும், இவைகளைப் போலவே இந்திரலோகத்திலிருந்து தேன் லக்ஷங்குடமும், நெய் லக்ஷங்குடமும், வாழைக்கனி மாங்கனி

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

பலாக்கனி திராக்ஷை முதலிய கனிகளின் சாறுகள் தனித்தனி லக்ஷங்லக்ஷங் குடமுமாகக் கொண்டுவரச் செய்து,

பூதசுத்தி முதலிய பஞ்சசுத்திகளையுஞ் செய்துகொண்டு ஆராவன்புடன் தேஜினீவனேசரைத் தம்மாற் செய்யப்படும் ஆராதனையை ஏற்றுக்கொள்ளும்படிப் பிரார்த்தித்து முன்னர் தைலமுதலியவற்றாலும், அதன்பின்னர் முற்கூறிய பால் முதலிய வற்றாலும் அபிஷேகஞ்செய்தும்,

ஆயிரத்தெட்டு மாற்றுத்தங்கத்தில் அமரருங்காணாத ரத்னங்கள் இழைத்து ஆயிரங்கோடி சூரியர்கள் உதித்தாற்போல விளங்கும் ஆபரணங்களாலும் அற்புத ஆடைகளாலும் அலங் கரித்தும், செந்தாமரைமலர்களை ஆயிரமாயிரமாய் வரவழைத்து ஸஹஸ்ரநாமங்களால் அர்ச்சித்தும், நறுமணங்கமழும் அகில் சந்தனம் பச்சைக்கற்பூர முதலியனகலந்த சுகந்தத்திரவியங்களை ஸமர்ப்பித்தும், ஆவின்நெய்யாற்றீட்டி ஜ்வலிக்கும் ஆயிரங் கணக்கான தீபங்களைக் காட்டியும்,

லக்ஷுமிதேவியால் அறுசுவையுடன் கூடிய பற்பல பக்ஷ்ய போக்கியங்களைச் சமைக்கச் செய்து அவைகளை நிவேதனஞ் செய்தும், பின்னர் நறுமணங்கமழுந் தூபங்களை நுகர்வித்தும், யோசனைகமழும் நானாவித நன்மலர்களாற் அர்ச்சித்தும்,

மத்தளம், முரசு, காஹளி, சங்கம், தாளம், புள்ளாங்குழல், வீணை முதலிய இனிய வாத்தியங்களால் சங்கீதானந்த ரசானுபவத்தைச் சமர்ப்பித்தும், அப்சரஸ்திரீகளை நடனஞ்செய் வித்தும், சத்திரசாமரங்களால் உபசரித்தும், பிரதக்ஷிணநமஸ்கார தோத்திரங்களைச் செய்தும் இவ்வாறு பதினாயிரவருடம் பூசித்து வந்தனர்.

''ஒ ஜைகிஷவ்யரே! அற்புதமாய் அபாரபக்தியுடன் பூஜை செய்து கொண்டு கண்களைமூடி இறைவனைத் தியானித்துக் கொண்டிருக்கும் ஹரியை, தேவர் முனிவர் இருடிகள் முதலிய யாவரும்பார்த்து ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்தனர்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அப்பொழுது சிலமுனிவர் ஹரியினிடஞ்சென்று, ''ஒ ஸ்வாமி! சகலதேவ ருஷிமுனிவர்களால் பூசிக்கப்படும் சர்வலோகநாதனும் ஜகதீஸ்வரனுமாகிய தாங்களும் சிவபூசை செய்வதற்கு யாது காரணம்? தங்களாலும் பூஜிக்கப்படும் இறைவனும் ஒருவனுளனோ? அங்ஙனமாயின் அவரைத் தாங்கள் எதனைவிரும்பிப் பூசிக்கின்றீர்? ஒ ஸ்வாமி! தாங்கள் எங்களிடம் அருள்புரிந்து அதனைப் புகலவேண்டும்'' என்று பிரார்த்தித்தனர்.

அதற்கு ஹரி, ''ஒ முனிவர்களே! யாம் மஹாதேவனையே பூசிக்கின்றோம். அவ்விறைவனே பிரஹ்மமென்று கூறப்படுவோன். அவனேருத்திரன். எமக்கும் பிரமன்முதலிய யாவர்க்கும் சூரியன் சந்திரன் அக்கினி முதலிய ஏனையதேவர்க்கும் அவனே தந்தையாவன். வேதங்களெல்லாம் அவனையே மஹேஸ்வரன் என்று கூறுகின்றன''.

''எவனது இடதுபக்கத்திலிருந்து சர்வலோக ரக்ஷகனாகிய யானும், வலதுபாரிசத்திலிருந்து சர்வலோகங்களையும் படைப்போனாகிய பிரமனும், நெற்றிக்கண்ணிலிருந்து சர்வலோகசங்காரராகிய ருத்திரரும் உண்டானோமென்று சுருதிகளையறிந்து பெரியோர் கூறுகின்றனரோ காரணங்களுக்குக் காரணனாகிய அப் பரமசிவனையே இம்மஹாலிங்கத்தில் செந்தாமரை மலர்களால் யாம் பூசித்து வருகின்றோம்''.

''எவன் உபநிடதங்களால் அறியமுடியாதவனோ, எவனிடம் ஸகலசராசரங்களுத் தோன்றினவோ, அவ்விறைவன் ஈசானனாகிய இவ்விறைவனே. இப்பெருமானை எமக்கும் ஈசனென்றறியாதவர் மாயாவசப்பட்டு மயங்குவர். எந்த ஈசனைப் பூசிப்பதனால் முத்தியைப் பெறுவதற்குச் சமர்த்தராகின்றனரோ, அவ்விறைவன் இவனே''.

''மோஹாந்தகாரத்தால் உண்மையறிவற்ற சிலர் எம்மையே ஸகலஜகங்களுக்கும் காரணனான ஈசானன் என்கின்றனர். அந்தோ! சிலவந்தணர்கள் அஞ்ஞானமாகிய இருளாற் சூழப்பட்டுப் பிறவாதவனும் இறைவனுமாகிய பசுபதியினது பாதாரவிந்தத்தில்

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

உதாசீனர்களாய்ப் பிறப்பிறப்பாகிய பெருந்துக்கத்துக்கு ஆளாகின்றனர்''.

பசுக்களாகிய ஜீவகோடிகளுக்கு எல்லாம் இறைவனும் ஞானானந்தக் கடலுமாகிய அவனே சகலஜகங்கட்குங்கர்த்தா. அவனே சகலகாரணனாகிய பிரபு. யாண்டும் வியாபித்துள்ளவனும் அவனே. அவ்விறைவனே பரமானந்தமயமாகிய திருவுருவத்தை யுடையவனும் பிறவாதவனும் இறவாதவனுமாகிய இறைவனாய்ச் சுரர் அசுரர் நரர் திரியக்முதலிய சரீரங்களில் வஸிப்பவனாய்ச் சகல சுகங்களையும் விளங்கச் செய்யும் மஹாதேவன்''.

★★சில அதமர்கள் மனதை யடக்கிப் பரமசாந்தராய் விஷயங்களிற் செல்லாத மனமுடையோராய் இராமல் விதிவசத்தால் வேதங்களிற் சிரத்தையில்லாதவர்களாய் இருதயகமலத்துள் இருக்கும் தஹராகாசத்தில் உமையோர்பாகனாய் விளங்கிக் கொண்டிருக்கும் எமது நாதனாகிய ஸ்ர்வேஸ்வரனை யறிந்திலர். அந்தோ! இவர்கள் பசுக்களுக்கு நிகராவார்''.

''எவர் பஸ்மருத்திராக்ஷமணிந்து திரிபுண்டரமுந்தரித்துப் பரமபக்தியுடன் பஞ்சாக்ஷரம் ருத்திரம் முதலியவைகளை ஜபித்துப் பரமேஸ்வரனைப் பூசிக்கின்றனரோ அவர்கள் எம்மாலும் பூஜிக்கும் பாதகமலங்களை உடையவரேயார். அவர்களையே எமது மனம் மஹத்தாய்மதிக்கும். அம்மஹா புருஷர்களது தேகத்தில் சம்பந்தித்த காற்றால் வாரியிறைக்கப் பெற்றதூளி எமதுதேகத்தில் சம்பந்திக்கப் பெறுவேமாயின் அதனை மஹாபாக்கியம் என்றெண்ணுவேம்''.

''திரிலோசனனாகிய இறைவனது பாதாரவிந்தத்தைப் பூஜிப்பதற்கு அவரே பாத்திரமாவர். சித்திரமென்பதும் விசித்திர மென்பதும் இவ்விறைவனைப் பூஜிப்பதே யாமென்று வேதாந்த ஞானம் பெற்ற பெரியோர் கூறுகின்றனர்''.

''ஓ முனிவரே! சர்வஞானக்கடலாகிய விஷ்ணுமூர்த்தி இவ்வாறு கூற அதனைக்கேட்ட அம்முனிவர்கள் அவ்விஷ்ணு மூர்த்தியை நோக்கி, ஓ ஜகதீஸா! அபார ஞானானந்தக்கடலே! ஓ பகவானே! இவ்வண்ணம் சிவபெருமானது பாதாரவிந்தபூஜையின்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

மஹிமையைத் தங்களைப்போல் மற்று எவராற் கூறமுடியும்? தங்களதுமனமே பரமேஸ்வரர் பாதாரவிந்தங்களில் மொய்த் திருக்கும் ப்ரமாரமாகும். இவ்வரிய உபாசனையைக் கண்ணுற்ற எங்களது பாக்கியமே பாக்கியம்'' என்று கூறிப் பரமானந்தம்பெற்று மகிழ்ந்தனர்.

முப்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

பீமாய நம:

முப்பத்தோராம் அத்தியாயம்.

விஷ்ணு சக்கரப்ரதானம்.

ஸ்கந்தர் கூறுகின்றார். ''ஓ ஜைகிஷவ்யரே! இவ்வாறு ஸ்ரீ மஹாவிஷ்ணுவானவர் பரமசிவமஹிமையை முனிவர்களுக்கு உரைத்துப் பின்னர் முன்போல் தவத்தின் மனத்தைச் செலுத்தி உலகத்தையுந் தம்மையுமறந்து சிவனது பாதாரவிந்தமாத்திரமாய் அறிவை நிறுத்தி நெடுங்காலம் உபாசித்துச் சிவலிங்கமூர்த்தியைத் தினந்தோறும் முப்பொழுதிலும் ஆயிரஞ்செந்தாமரைமலர்களால் ஆயிரந்திருநாமங்களை உச்சரித்து அர்ச்சித்துவரும் நியதியுடைய ராயினர்''.

''அவரது நியதியையறிந்த அவரது கணங்களாகிய கருடனாதி யோர் அர்ச்சனைக்கென்று மலர்ந்து அழகாய் விளங்கும் ஆயிரஞ் செந்தாமரை மலர்களைக் கணக்கிட்டு அம்மஹாவிஷ்ணுவின் அருகில்வைப்பர். அவைகளையவர் ஒவ்வோர் நாமத்துக்கு ஒவ்வொன்றாயெடுத்து தேஜினீவனேஸ்வரரை அர்ச்சித்துக் கொண்டு வந்தபோது சிவபெருமான் லோக அனுக்கிரகார்த்தமாய் அவரது உள்ளத்தைப் பரிசோதிப்பானெண்ணி, அதற்கு இது நல்லசமயமென்று திருவுளங்கொண்டு அங்குகணக்கிட்டு வைத்திருந்த மலர்களிலொன்று குறையச்செய்ய, பத்தியால் பரமானந்தமெய்தி அர்ச்சித்துவரும் ஸ்ரீமகாவிஷ்ணு ஒர் மலர் குறையக் கண்டு, ''அந்தோ! எனது நாதனையர்ச்சிக்கக் கணக்கிட்டு வைத்திருந்த நறுமலர்களிலொன்று குறைந்துவிட்டதே என்று மனம் வருந்திப் பின்னர் நாம் ஏன் வருந்தவேண்டும்? நமக்குச் செந்தாமரை மலருக்கு நிகரான கண்களிருப்பதனால் அதனைப் பிடுங்கி அர்ச்சிப்போம். அது அர்ச்சனைக்கு உபயோகப் படாமலிருப்பதனால் என்ன பயன்'' என்று நிச்சயித்துத்தமது நகத்தினால் சரேலென ஓர் கண்ணைப்பிடுங்கிக் கையிலெடுத்துக் கண்ணி னின்று உதிரம் தாரையாய்ப் பெருக்கெடுத்தோட

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

அப்பெருமானது பாதாரவிந்தத்திற் சென்ற மனமுடையோராதலால் அவ்வருத்தத்தை யோர் சிறிதும் நினையாமலும், கருடன் லக்ஷுமி முதலியவர்கள் பதற அதனையும் லக்ஷயஞ்செய்யாமலும் மேன்மேலோங்கிய பக்தியினால் மற்றோர் கண்ணினின்று ஆனந்தவெள்ளம்பெருகக் கண்மலரால் அருச்சித்தனர்.

உடனே அவ்விலிங்க மூர்த்தியினின்றும் சிவபெருமானார் உமாஸகாயரராய், கங்காதரராய்,கலாமௌளியாய், கருணைக்கடலாய், நாகாபரண பூஷிதராய், சகலதேவருஷி முனிகணங்களெல்லாம் போற்ற வெளிப்பட்டனர். அவ்வற்புதகோலத்தை விஷ்ணுமூர்த்தி தரிசனஞ்செய்து பரமானந்தமெய்தித் தோத்திரஞ்செய்து நிற்ப அவருக்குச் சிவபெருமான் கோடி சூரியன் உதித்தாற்போன்ற சக்கராயுதத்தைக் கொடுத்தருளி,

''ஒ சகலஜகத்பாலகனாகிய விஷ்ணுவே! நீ செய்யுந் தோத்திரத்தினால் யாம்மிகவுங் களிப்படைந்தோம், அக்கினிமயமான ஆரங்கனோடு கூடிய இச்சக்கரம் தேவர்களை ஹிம்சிக்கின்ற அசுரர்களைக் கொல்லும் வன்மையையுடையது, ஆதலால் அசுரர்களை இதனாற் கொன்று தேவர்களுக்குச் சுகமளிப்பாயாக. இச்சக்கராயுதத்தை ஆயுதமில்லாதவர் மீதும், எமது பாதாரவிந்தத்தில் பக்தியுடையார் மேலும் சான்றோர்கள் மேலும் பிரயோகிக்கக் கூடாது'' என்றருளிப் பின்னர், ''எமதிடம் பக்தியினால் நேத்திரத் தையே தாமரைமலராய் நீ யர்ச்சித்தமையால் இனி யுனக்குப் பத்மாக்ஷன் என்று பெயர் வழங்குக'' என்று கூறித் திருவுருக் கரந்தனர்.

''ஒ முனிவரே! சகலசகங்களுக்கும் இறைவனாகிய உமாபதியைத் திருமால் தமது கண்ணையே தாமரை மலராகக் கொண்டு அர்ச்சித்தே சக்கராயுதத்தையும் புண்டரீகாக்ஷன் என்னும் பெயரையும் பெற்றனர் என்றறியக்கடவீர்''.

முப்பத்தோராம் அத்தியாயம் முற்றிற்று.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA).

உ

பரசுஹஸ்தாய நம:

முப்பத்திரண்டாம் அத்தியாயம்.

கங்காவ தரணம்.

பூர்வம் பகீரதன் என்னுமரசன் கபிலமுனிவரின் நேத்திராக்கினி யினால் இறந்த தனது மூதாதையர்களை உத்தாரணஞ் செய்ய வேண்டுமென்று கருதி ராஜ்யத்தை மந்திரிகளிடம் ஒப்புவித்து இமயமலைக்குப் போய்ப் பரமேஶ்வரனை நோக்கித் தவஞ்செய்தும், அங்குள்ள கேதாரக்ஷேத்திரத்தையடைந்து பஸ்மருத்திராக்ஷதாரியாய் பஞ்சாக்ஷரத்தை ஜபித்து நிராகாரனாய் மிக்க நியமங்களுடன் கேதாரேஶ்வரரைப் பரமபக்தியுடன் பூஜித்தும் வந்தனன்.

இவ்வாறு பதினாயிரம் வருடம் பிரதிதினம் மும்முறை பூஜித்துத் தவம்புரிந்தும் இறைவன் கருணைகூர்ந்து வராமைகண்டு மனமுருகித் தோத்திரஞ் செய்தனன்.

உடனே சிவபெருமான் பிரசன்னராய் எழுந்தருளி, ''யாது வேண்டும்'' என்று கேட்கப் பகீரதன், ''தேவரீரது திருவடியை மறவாத பக்தியும், எனது மூதாதையர்பரமசாம்பவராகிய கபில முனிவரது நேத்திராக்கினியினால் சாம்பராய்விட்டனர் ஆதலால் அவர்களைத் தேவரது சடையிலுள்ள தீர்த்தத்தினால் உத்தராணஞ் செய்யவும் வேண்டும்' என்றனன். இறைவன், ''அவ்வாறே ஆகுக'' வென்று கூறி மறைந்தருளினன்.

பின்னர் பகீரதன் கங்கையைத் தியானிக்கக் கங்காதேவி மகா ஆரவாரத்துடன் உருண்டு புரண்டு ஆகாயமார்க்கமாய் அதி வேகத்துடன் வருவதைப் பார்த்து, 'இக்கங்கை பூலோகத்தில் இறங்கினால் இவ்வுலகமுழுவதும் பிரளயத்திலழிந்து விடும்போற் காண்கின்றதே, அங்ஙனமாயின் உலகநாசத்திற்கு நாமன்றோ நிமித்தமாவோம்? இதற்கு நாம் யாது செய்வோமென் றெண்ணி இப்பொழுது இறைவனைத் தவிர வேறுகதி நமக்கில்லை' என்று சிந்தித்து மீண்டும் பரமசிவனைக் குறித்துத் தோத்திரஞ் செய்தனன்.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஈஃஸ்வரன் வெளிப்பட்டு வந்து, ''ஒ பகீரதா! நீ பயப்பட வேண்டாம்'' என்றுகூறி உடனே பிரளயத்திற் புரண்டுவரும் சமுத்திரம்போன்ற கங்கையைத் தமது ஜடாகோணத்தில் ஓர் பனித்திவலையைப்போல் அடக்கிக்கொண்டனர். அங்ஙனம் ஆரவாரித்துப் புரண்டு வந்த கங்கை யுருத்தெரியாமல் போனதைக் கண்ட பகீரதன், 'இது வென்னசெயல், பலகாலந் தவஞ்செய்து வரப்பெற்ற கங்கையை நமது பிரார்த்தனையின்படி பரமேஃஸ்வரன் சிறிது அடக்காமல் முழுதும் அடக்கிக் கொண்டனரே! இதற்கென் செய்வோம்' என்று மனவருத்தமுற்று மீண்டும் பதினாயிரவருடத் தவம்புரிந்து தோத்திரஞ்செய்ய,

பரமேஃஸ்வரன் ஆவிர்ப்பவித்து, ''ஒ அரசனே! கங்கை மிகவும்கர்வங் கொண்டெழுந்தமையால் அக்கர்வத்தை அடக்க வெண்ணி அவ்வாறுசெய்தனம். இனி அத்தீர்த்தத்தை ஹிமய மலையின் உச்சியிலிருந்து பிரவகிக்கச் செய்கின்றனம். நீ அதனைக்கொண்டு உனது மூதாதையர்களாகிய சாகரர்களை யுத்தாரணஞ்செய்வாயாக''என்றுகூறி முன்னர் கர்வத்தையடக்கச் சடையிலடக்கிய கங்கையைக் கோபங்கொண்டாற் போல உறுத்துப் பார்க்க, கங்காதேவி, 'இனி நாம் யாதுசெய்வோம்?' என்றேங்கித் தபித்துப் பரமேஃஸ்வரனை நோக்கி, 'சுவாமின்! என்னிடம் அருள்புரியவேண்டும். யான் தெரியாது கர்வங்கொண்டேன். அடியாளது கர்வத்தைத் தேவரீரது ஜடாகோணத்திலுள்ள வோர்கேசமே அடக்கிவிட்டது. ஒ சர்வலோகநாதா! என்னைக் காத்தருளல்வேண்டும்' என்று பிரார்த்திக்க, மங்கைபாகனாகிய பரமேஸ்ரவன் அக்கங்காதேவியைப் பார்த்து, ''ஒ நங்காய்! நமதருளால் உலகிற்சென்று உயிர்களை நற்கதியடையச் செய்வாயாக. உனது தோத்திரத்தால் நாம் மிக்க பிரீதியடைந்தோம். நீ அவிமுக்தமாகிய ஆனந்தவனம் என்னுந் க்ஷேத்திரத்தின் வழியாய் சமுத்திரத்தை ஈடைந்து சாம்பராய்க்கிடக்குஞ் சாகரர்களை யுத்தாரணஞ் செய்வாயாக''.

Digitization by Hindu-Heritage-Foundation of America, HHFA(USA)

''நீ சந்திரசூரியர்கள் உள்ளவரையில் உன்னிடம் தீர்த்தமாடுகிறவர்களை எமது சாரூப்பியம் பெறச் செய்து கொண்டு உலகத்தாரைக் கரையேற்றி நற்கதியடையச் செய்வாயாக''.

அன்றியும் நீ ஒரம்சத்தால் இவ்வாறு உலகில் பிரவஹித்தும் மற்ற அம்சத்தால் எமது சடையில் நித்யமாயிருந்தும் பரமானந்தம் எய்துவாயாக'' எனக்கூறித் தமதுசடையினின்றுங் கங்கையை இமயகிரிசிகரத்தில் இறங்கச் செய்து அந்தர்த்தான மெய்தினன். பகீரதமஹாராஜனும் அக்கங்கையினால் தனது மூதாதையரை நற்கதி யடைவித்து உலகத்தாரை நற்கதிபெறுமாறு செய்து இறுதியில் சிவபதமெய்தினன்.

முப்பத்திரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

Digitized by Hindu Heritage Foundation of America. HHFA(USA)

உ

ம்ருகபாணயே நம:

முப்பத்துமூன்றாம் அத்தியாயம்.

விருஷபவரப்பிரதானம்.

ஸ்கந்தமூர்த்தி கூறுகின்றார். ''பூர்வம் தருமமூர்த்தியாகிய விருஷபரும் கோமுக்தீஸ்வரனைப் பூஜித்துக் கொண்டு பதினாயிரம் வருடம் அதிகோரமாய்த் தவஞ்செய்தும், சிவபெருமான் ப்ரத்யக்ஷம் ஆகாமைகண்டு எப்போது ப்ரஸன்னர் ஆவரோவென்று பேராவலுடன் சிவலிங்கமூர்த்தியையே யுற்றுப்பார்த்துக்கொண்டு வெகுகாலம் எதிரிலிருந்தனர்.

அவ்வாறு பலகாலமிருந்தும் இறைவன் பிரத்யக்ஷம் ஆகாமையால் 'இனியாம் இவ்விடத்தைவிட்டு அகலுவதில்லை, இவ்லிங்க மூர்த்தியைத் தவிர மற்றெவற்றிலும் மனதைச் செலுத்துவதில்லை ஈதேநமக்குப் பெருந்தவம்' என நினைத்துப் பஞ்சாக்ஷரத்தை ஜபித்துக்கொண்டு மூன்றுகால்களால் நின்று சிவலிங்கமூர்த்தியைப் பார்த்துக்கொண்டே பல்லாயிர வருடமிருந்தனர்.

அவ்வாறிருந்தும் பிரசன்னராகாமைகண்டு இரண்டுகாலோடு பன்னெடுங்காலம் நின்றனர். பிறகு ஒருகாலுடன் ஆயிரம் வருடம் நின்றனர். அப்போது பரமசிவன் அச்சிவலிங்கமூர்த்தியினின்றும் ஆவிர்ப் பவித்து உபாஸகாயராயும் கலாதரராயும் கங்காதரராயும் நீலலோகி தராயும் நாகாபரணபூஷிதராயும் திவ்யதரிசனந் தந்தருள விருஷப தேவரும் பரமானந்தமெய்தி ஆனந்தக் கண்ணீர் பெருக அடியில்வீழ்ந்து அஞ்சலியத்தஞ் செய்து நின்றனர்.

அம்பிகாநாதர் தமது திருக்கரங்களால் அவரைத் தடவிக் கொடுக்கப் பலகாலஞ்செய்த தவத்தால் மெலிந்த அவரது சரீரமானது பூரணசந்திரோதயத்தில் கடல்பொங்குவதுபோல் பூரித்து ஓர் கணப்போதில் புஷ்டியாய்விட்டது.

Digitization by Hindu-Heritage-Foundation of America: HHFA (USA)

பின்னர் விருஷபதேவர் சிவபெருமானைத் தோத்திரஞ்செய்யப் பெருமான் அத்தோத்திரத்துக்கு மனமிரங்கி, ''ஒ விருஷபனே! யாது வேண்டும்?'' என்ன, அவ்விடபதேவர், 'ஒ ஸ்வாமின்! இந்தத் துச்சமாகிய ஸம்ஸாரதுக்கம் எனக்கு வேண்டாம். ஆனந்த தேஜோ ரூபனாகிய தேவரீருக்கு எதிரில் எக்காலமுமிருந்து தெரிசித்துக் கொண்டேயிருக்கும் பெரும்பாக்கியத்தையும் ஸர்வலோக ஆதாரனாகிய தேவரீருக்கு ஊர்தியாயிருக்கும் பேராற்றலையுந் தந்து என்னைக் கிருதார்த்தனாக்க வேண்டும்' என்று, பிரார்த்திக்க, அவ்வாறே அருள்புரிந்து, ''உனதுவிருஷணத்தை பரிசித்துக் கொண்டே கொம்பிரண்டின் நடுவில் எம்மைத் தெரிசிப்போருக்குச் சகலபாபங்களையும் போக்கிப் பரமானந்தத்தைத் தருகின்றோம்''. என்றுகூறி, நந்தை ஸுபத்திரை காமை ஸுரபி ஸுனந்தை யென்னும் ஐந்துகோக்களை மணம்புரிவித்துத் தம்முடன் அழைத்துக்கொண்டு போய்த் தம்மெதிரில் வசிக்கும் மஹாபதவியைத் தந்தருளினர்.

முப்பத்துமூன்றாம் அத்தியாயம் முற்றிற்று.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

ஜடாதராய நம:

முப்பத்துநான்காம் அத்தியாயம்.

வருணாதிசாபவிமோசனம்.

ஸ்கந்தர் கூறுகின்றார். ''ஒ முனிவரே! பூர்வம் வருணன் கண்ணுவரால் ஜலரோகியாகும்படிச் சபிக்கப்பெற்று அதனால் மகா கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தனன். அவன் அந்தரோகத்தைப் பற்பல பிராயச்சித்தங்களால் நீக்கமுயன்றும் நீங்காமையால் பிறகு ஸ்ரீசைலம் வந்தடைந்து அங்குள்ள ஸோமசைலேசனைப் பூஜித்து அச்சாபத்தினின்றும் விடுபட்டனன்''.

''வாயுதேவனும் மதங்கரது சாபத்தால் பலமற்றவனாயினான். பின்னர் பஸ்ம சப்தகமந்திரத்தால் விபூதியை யுத்தூளனஞ்செய்து பரமபக்தியுடன் கோமதி தீரத்திலுள்ள திரியம்பகக்ஷேத்திரத்தில் திரியம்பகேஶ்வரரைப் பூஜித்துச் சாபத்தினின்றும் விடுபட்டனன்''.

யமனும் மாண்டு முனிவரது சாபத்தால் சூத்ரனாய்க் கோகர்ணேஶ்வரரைப் பரமபக்தியுடன் பூஜித்துப் பற்பல துதிசெய்து சாபத்தினின்றும் விடுபட்டனன்.

குபேரனும் இறைவனது மடிமீதிருக்கும் இறைவியைக் கண்ணுற்று மனோவிகாரமெய்த அதனைத் தேவியறிந்து அப்பாபியைச் சபிக்க, அதனாலவன் வருத்தமுற்றுக் குடும்பத்துடன் கேதாரேசனைப் பலகாலம் பூசித்துச் சாபவிமோசனம் எய்தினன்.

பூர்வம் ரவி தனது பாரியையாகிய சஞ்சிகை என்பவளை தள்ளிவிட்டுச் சாயையென்பவளை அநுபவித்துக்கொண்டுவர, விஸ்வகர்மன் அதனையறிந்துசபிக்க, சூரியன் நிர்வீரியனாய் மிக்கவறிஞன் போல் பூவுலகில் யாண்டும் சஞ்சரித்து ஸ்ரீகாஞ்சிக்கு வந்து பஸ்மருத்திராக்ஷந் தரித்து ருத்திரபஞ்சாக்ஷரங்களை ஜபித்து

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

ஏகாம்பரநாதரைத் துதிக்கச் சாபத்தினின்றும் விடுபட்டுச் சந்தோஷம் எய்தினான்.

சந்திரனும் பூர்வம் தக்ஷசாபத்தால் க்ஷயரோகத்தைப் பெற்று மிக்க துன்பமுற்று சிற்றம்பலம் வந்து பஸ்மருத்திராக்ஷந் தரித்து சிற்சபேசனைப் பூசித்துத் தோத்திரஞ்செய்து சாபத்தி னின்றும் விடுபட்டனன்.

ஈசானரும் பூர்வம் காளஹத்தீஸ்வரனைப் பூசித்து ருத்திராதிபத்தியம் பெற்றனர்.

முப்பத்துநான்காம் அத்தியாயம் முற்றிற்று.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உ

கைலாஸவாஸிநே நம:

முப்பத்தைந்தாம் அத்தியாயம்

விஶ்வாவஸுமுதலாயினார் பேறு.

ஸ்கந்தர் கூறுகின்றார். "ஒ முனிவரே! பூர்வம் விஶ்வாவஸு என்னுங் கந்தர்வன், கானபந்து, ஸுபந்து, நாரதர், பர்வதர், ஹா ஹா, ஹூ ஹூ என்னுமிவர்கள் பன்னெடுங்காலம் பஸ்மருத்ராக்ஷ தாரிகளாய்ப் பரமேஸ்வரனை ஆராதித்து கந்தர்வாதி பத்யத்தைப் பெற்றனர்.

பூர்வம் வஸுக்கள் பிரமனால் சபிக்கப்பெற்று கோபர்வதம் அடைந்து பரமேஶ்வரனை யாராதித்துத் தோத்திரஞ் செய்து சாபத்தினின்றும் விடுபட்டனர்.

அவ்வாறே தண்டு என்பவர் பன்னெடுங்காலம் பரமேஶ் வரனைப் பூசித்துக் காணாபத்யம் பெற்றனன். அஸ்வினி தேவதை களும் பூர்வம் வைத்தியர்களாகையால் தேவர்களால் ஸோம பானத்துக்கு உரியவர்களல்ல என்று தள்ளப்பட்டவர்களாய் ஸ்ரீகர்ணேஶ்வரரைப் பூசித்து அவருடைய அருளால் ஸோம பாகத்துக்கு உரியவராயினர்.

மருத்துக்களும் ஒர்கால் இந்திரனால் புறம்பே தள்ளப்பெற்று சோமபாகமின்றியிருந்து திரிணஜ்யோதீஸ்வரனைப் பூசித்து இந்திரனாலும் அடையக்கூடாத அவிர்ப்பாகத்தை பெற்று மகிழ்ந்தனர்.

ஆதித்தியர்களும் பூர்வம் காவேரிநதிக்கரையில் கிருதேசம் வைத்தீஶ்வரம் ஸ்ரீகண்டம் சம்புகேசம் மாத்ருகேசம் இரத்ன சைலம் இராவதமுதலிய க்ஷேத்திரங்களையடைந்து அங்குள்ள சிவலிங்கங்களைப் பலகாலம் பூஜித்துப் பரமசிவனது அருளால் ஜோதிவடிவமாகிய தேகத்தைப் பெற்றனர்.

ஏகாதசருத்திரர்களும் துர்க்கேசம் க்ஷீரணி மாதவி ஸுந்தர வனம் தேஜினிவனம் கோடிமங்களம் தக்ஷிணாவிரதம்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

வைத்தியநாதம் விதிவனம் காலநாசம் அம்பிகேஸ்வரம் முதலிய க்ஷேத்திரங்களில் பலகாலம் பூசித்து ருத்திரஸாமீப்யம் பெற்றனர்.

ஒ முனிவரே! அவ்விறைவனது ப்ரஸாதமில்லாமல் எவர் எந்த நல்லபதவியை யடையமுடியும்! பிதுர்க்களும் பலகாலம் காவிரி நதிக்கரையிலுள்ள ஸ்தலங்களில் சிவபெருமானைப் பூசித்துச் சகலராலும் பூசிக்கப்படும் பதவியைப் பெற்றனர்.

கிரகநக்ஷத்திரங்களும் அவ்வாறே பூசித்துச் சிறந்தபதங்களைப் பெற்றன. முனிவர்களும் ருஷிகளும் காவிரிநதிக்கரையில் பரமேஸ்வரனைப் பூசித்தே சிறப்படைந்தனர்.

சூரியன் கும்பகோண க்ஷேத்திரத்திலும், சந்திரன் மத்யார்ச்சுனத் திலும், மங்களன் மாயூரத்திலும், புதன் வேதாரண்ணியத்திலும், குரு சாயாவனத்திலும், சுக்ரன் ஸ்ரீவாஞ்சியத்திலும், சனி கமலாபுரியிலும் (திருவாரூரினும்), கேது ஸ்ரீவேதாரண்யத்திலும், ராகு வாதபுரியினும், த்ருவன் ஸேதுவிலும், மற்றுமுள்ள ஸதுர்த்தசமநுக்களும், பிறதலங் களினும் சிவபெருமானைப் பூசித்துத் தோத்திரஞ்செய்தே நற்கதியடையப் பெற்றனர்.

ஒ முனிவரே! இவ்வாறு மஹாபுண்ணியநதியாகிய காவேரி தீரத்திலுள்ள பற்பலசிவலிங்கங்களைப் பூஜித்துப் பேறுபெறாதவர் யாரிருக்கின்றனர்?

''தேவர் முனிவர் முதலிய யாவரும் சிவக்ஷேத் திரங்களிற்சென்று சிவபெருமானைப் பூஜித்தே வேண்டிய போக மோக்ஷங்களைப் பெற்றமையை மாநுடர்களறிந்தும் சிவ பெருமானைப் பூஜிக்க முயலாது வாழ்நாட்களைக் கழிக்கின்ற னர்களே! அவர்கள் நாளை வரும் மரணதுக்கத்துக்கு என்செய்வரோ அறியேன்! ''

நீர் இந்த சிவரகஸ்யத்தை அன்போடும் கேட்டுவந்தீராகையால் நீர்தான் தன்யர், நீர்தான் சிவபக்தர், நீர்தான் உண்மையறிந்த பரமஞானி, நீர் இந்த சிவரகஸ்யத்தைக் கேட்குந்தோறும்

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

உமக்கெப்படி அவாவுண்டகின்றதோ அப்படியே எனக்குச் சொல்லுந்தோறும் உண்டாகின்றது.

''சிவப்ரஸாதத்துக்கு ஏதுவாயுள்ள இந்தநான்காவது அம்சத்தை யாரொருவர் கேட்கின்றாரோ கேட்கச் செய்கின்றாரோ, படிக்கின்றாரோ, படிக்கச் செய்கின்றாரோ, அவர் எமது சிவபதத்தையடைவர் என்று ஸ்கந்தமூர்த்தி ஜைகிஷவ்யருக்கு அருளினார்'' என்று சவுனகாதி முனிவர்களை நோக்கிச் சூதர் கூறினார்.

முப்பத்தைந்தாம் அத்தியாயம் முற்றிற்று.

சிவரகசியம் நான்காம் அம்சம் முற்றிற்று.

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

சிவபராக்கிரம மூர்த்திகள் - விரைவில் தனித்தனி நூல்வடிவில்

1. இலிங்க மூர்த்தி
2. இலிங்கோற்பவ மூர்த்தி
3. முகலிங்க மூர்த்தி
4. ஸதாசிவ மூர்த்தி
5. மகாஸதாசிவ மூர்த்தி
6. உமாமகேச மூர்த்தி
7. சுகாசன மூர்த்தி
8. உமேச மூர்த்தி
9. சோமாஸ்கந்த மூர்த்தி
10. சந்திரசேகர மூர்த்தி
11. இடபாரூட மூர்த்தி
12. இடபாந்திக மூர்த்தி
13. புஜங்கலளித மூர்த்தி
14. புஜங்கத்திராச மூர்த்தி
15. ஸந்தியாந்ருத்த மூர்த்தி
16. ஸதாந்ருத்த மூர்த்தி
17. ஸண்டதாண்டவ மூர்த்தி
18. கங்காதர மூர்த்தி
19. கங்காவிசர்சன மூர்த்தி
20. திரிபுராந்தக மூர்த்தி
21. கல்யாணசுந்தர மூர்த்தி
22. அர்த்தநாரீசுவர மூர்த்தி
23. கஜயுத்த மூர்த்தி
24. ஜ்வராபக்ன மூர்த்தி
25. சார்த்தூலகர மூர்த்தி
26. பாசுபத மூர்த்தி
27. கங்காள மூர்த்தி
28. கேசவார்த்த மூர்த்தி
29. பிட்க்ஷாடண மூர்த்தி
30. சிம்ஹக்ந மூர்த்தி
31. சண்டேசஅனுக்ரக மூர்த்தி
32. தட்சிணா மூர்த்தி
33. யோகதட்சிணா மூர்த்தி
34. வீணாதட்சிணா மூர்த்தி
35. காலாந்தக மூர்த்தி
36. காமதகன மூர்த்தி
37. லகுளேசுவர மூர்த்தி
38. பைரவ மூர்த்தி
39. ஆபதோத்தாரண மூர்த்தி
40. வடுக மூர்த்தி
41. க்ஷேத்திரபால மூர்த்தி
42. வீரபத்திர மூர்த்தி
43. அகோராஸ்திர மூர்த்தி
44. தட்சயக்ஞவத மூர்த்தி
45. கிராத மூர்த்தி
46. குரு மூர்த்தி
47. அசுவாரூட மூர்த்தி
48. கஜாந்திக மூர்த்தி
49. ஜலந்தரவத மூர்த்தி
50. ஏகபாதத்திரி மூர்த்தி
51. திரிபாதத்திரி மூர்த்தி
52. ஏகபாத மூர்த்தி
53. கௌரீவரப்ரத மூர்த்தி
54. சக்ரதான மூர்த்தி
55. கௌரிலீலாசமன்வித மூர்த்தி
56. விசாபகரண மூர்த்தி
57. கருடாந்திக மூர்த்தி
58. பிரம்மசிரச்சேத மூர்த்தி
59. கூர்மசம்கார மூர்த்தி
60. மச்சசம்கார மூர்த்தி
61. வராகசம்கார மூர்த்தி
62. பிரார்த்தனா மூர்த்தி
63. ரத்தபிக்ஷாப்ரதான மூர்த்தி
64. சிஷ்யபாவ மூர்த்தி

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)

Digitization by Hindu-Heritage-Foundation of America. HHFA(USA)



இறைவனால் அருளப்பட்ட சித்தம் சிவமயம் ஞானதான அறக்கட்டளை